d. No. M. 2569

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6 | செந்தமிழ் மாத சஞ்சிகை | இதழ் 1

# HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ரமலான்மீ 1935 ஜனவரிமீ


1. திருமறையின் ஆகர்ஷண சக்தி ... 1
2. நாயக வாக்கியம் ... 4
3. ஈதுல் பித்ரு ... 6
4. திருகுர்ஆன் போதனையின் மகிமை ... 8
5. இஸ்லாமிய உலகின் ஆத்மார்த்த அரசாங்கத்தின் பொதுச்சபை ... 11
6. லைலத்துல் கத்ர் ... 16
7. ஈதுப் பெருநாள் தொழுகை ... 18
8. இஸ்லாமும் ஐரோப்பாவும் ... 20
9. பெண் கல்வி ... 22
10. ஹஜ்ரத் தாரிக்கே அஃலம் (றஹ்) ... 24
11. ஆத்ம சாந்தி எங்கே? ... 28
12. ஷிர்கு ஏன் பொறுக்கப்படுவதில்லை? ... 32
13. காதியானி மதஸ்தர்களின் யுக்தி வாதம் பயன் தருமா? ... 38
14. காலண்டர்கள் வரவு ... 40


சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

# சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆர பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண் மென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமை அநேக சந்தாதார்கள் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத் இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வரு றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளைப நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப் வைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும் சென்ற வருடத்திற்கு எ கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் 1935-ம் ஆண்டுக்குள்ள சந் ரூபாயை முன் பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பா கிறோம்.

---

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,

(439, நார்ட் பிரிட்ஜ் ரோடு) இடமு

---

பினங் வாசிகள்

ஜனப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,

(117, சோலியா ஸ்ட்ரீட்) இடமும்

---

சிலோன் வாசிகள்

ஜனப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குத் தெருவு) இடமும்

தங்கள் சந்தாக்களை செலுத்திவிடுமாறு கோருகிறோம்.

208340

حفاظة الإسلام

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

| மலர் 6 | ஹிஜ்ரி 1353 ரமலான் மீ<br>1935 ளு ஜனவரி மீ | இதழ் 1 |
|---|---|---|

## திருமறையின் ஆகர்ஷண சக்தி

மேலும், இந்தகுர்ஆனுக்கு நீங்கள் சேவிமடுக்காதீர்கள். (அதை ஓதும்போது) அதில் நீங்கள் கூச்சலிடுங்கள். ஏனெனில் (இவ்வாறு போட்டி யாகப் பிரசாரம் செய்வதில்) நீங்கள் மிகைக்கக்கூடும். (ஸூரத்து புஸ்ஸிலத்.)

திருகுர்ஆனின் சொன்னயமும், பொருட் பொலிவும், நடையழகும், இலக்கண இலக்கியச்சிறப்பும் உள்ளங்கை நெல்லிக்கனி போல், பிரசித்திபெற்று விளங்குவது உலக மறிந்த விஷயமாகும். அரியபெரிய அறிவாளி களும், மாபெரும் கல்விமான்களும், விசேஷ கவிவாணர்களும் திருகுர்ஆன் வாக்கிய அமைப் பையும், பொருட்பொலிவையுங் கண்டு பிரமித் துப் போனுர்கள். திருகுர்ஆனுக்குப் போட்டி யாக ஒரு வசனத்தை அமைக்கவேண்டும் என்ற முயற்சியில் அக்காலத்திலிருந்த இஸ் லாத்தின் விரோதிகள் தங்கள் வாணுள் முழு வதும் சிரமமெடுத்தார்கள். பல பெரிய புல வர்களும் வித்துவான்களும் தங்களுடைய முழுத்திறமையையும் உபயோகித்துப் பார்த் தார்கள். ஆனுல், அதற்குப் போட்டியாக அவ் வளவு சிறந்த அழகான முறையில் ஒரு வச னத்தையேனும் அமைத்துக்கொண்டுவர அன் ஞேரால் முடியவில்லை. அரபி தேசத்தில் புல வர்களுக்கும், கவிவாணர்களுக்கும், பாவலர் களுக்கும், பிரசங்கிகளுக்கும் குறைவில்லை. அதி லும் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் தோன்றிய காலத்தில் இத்தகைய புலவர்களும் வித்து வான்களும் ஏராளமாக இருந்தனர். தாங்கள் நினைத்த மாத்திரத்தில் பொது ஜனங்களின் மனதைக் கவர்ந்து யுத்தத்துக்குத் தூண்டி விடவும், கோரயுத்தம் செய்துகொண்டிருக்கும் யுத்த வீரர்களை ஒரு நொடிப்பொழுதுக்குள் யுத்தத்தை நிறுத்திவிட்டுச் சமாதானமாகிப் பாலும் சர்க்கரையும் போல் ஒருவரோடொரு வரை ஐக்கியமாக்கிவிடவும் கூடிய சக்திகளைப் பெற்ற பிரசங்கிகள் ஏராளமாக இருந்தனர். தங்களிடமுள்ள இந்தச் சக்தியால் மமதை கொண்டு, தங்கள் தாம், உலகத்தில் பேசும் திற மையுள்ளவர்கள் என்ற கருத்தில் தங்களை, அறபியர் (பேசும் திறமையுள்ளவர்)கள் என்

றும், அரபியரல்லாத மற்றவர்களை அஜமியர் (ஊமையர்-பேசத்தெரியாதவர்) கள் என்றும் அழைத்துவந்தனர். இவர்களின் இத்திறமை உச்சஸ்தானத்திலிருந்தபோது தான், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அத்தேசத்தில் நபியாக வந்து திருகுர்ஆனைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.

அறபியர்களுக்கு இயற்கையாகவுள்ள பிடிவாத சக்தியினால், நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்துப் பிரசாரம் செய்தார்கள்; திருகுர்ஆனுக்குப் போட்டியாக அறபிப்பாஷையில் வசனங்களை அமைத்துப் பார்த்தார்கள். எவ்வளவோ முயன்றும் திருகுர்ஆனை வெல்ல அவர்களால் முடியவில்லை. பின்னர், திருகுர்ஆன் முற்காலத்தவர்களின் கட்டுக் கதைகளைக் கொண்டது என்றும், சூனிய சக்தியுள்ள மந்திரம் என்றும் இயம்பிப் பொதுஜனங்களிடம் பிரசாரம் செய்து, திருகுர்ஆனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கும்படிச் செய்யப் பிரயாசைப்பட்டனர். அதன் பின்னர், நபிகள்நாயகம்(ஸல்.) அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று நினைத்து (நஊதுபில்லாஹ்) பல சூனியக்காரர்களை நாயகம் (ஸல்.) அவர்களிடம் அனுப்பி வைத்தனர். அவர்களெல்லோரும் நாயகம் (ஸல்.) அவர்களிடம் வந்து திருகுர்ஆன் வசனங்களைக் கேட்ட மாத்திரத்தில், தங்களுடைய மாந்திரீகத் தொழில்களையெல்லாம் விட்டுவிட்டு இஸ்லாத்துக்கு அடிபணிந்தனர். இந்த இடத்தில் இது சம்பந்தமாக நடைபெற்ற இரண்டொருசம்பவங்களைக் குறிப்பிடுவோம்.

லம்மாது அஜ்தீ (றலி) இஸ்லாம் மதத்தைத் தழுவுவதற்கு முன், பெரிய மந்திரவாதியாக இருந்தார். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு ஏதோ ஒரு ஜின் பிடித்திருப்பதாக அவர் கேள்விப்பட்டு, தமது மந்திரச் சக்தியால் அந்த ஜின்னை விலக்கிவிடவும், அதன்மூலமாக நாயகம் (ஸல்.) அவர்கள் செய்துவரும் இஸ்லாமியப் பிரசாரத்தை நிறுத்திவிடும்படிச் செய்துவிடவும் வேண்டும் என்னும் எண்ணங்கொண்டு, நாயகம் (ஸல்.) அவர்களிடம்வந்தார். ஆனால், அவர் தமது மந்திரத்தை உச்சரிப்பதற்குமுன், நாயகம் (ஸல்.) அவர்கள் தங்கள் திருநாவினால் திருகுர்ஆனின் இரண்டு மூன்று வசனங்களை ஓதினார்கள். இதை லம்மாது அஜ்தீ (றலி) செவிமடுத்தார். உடனே, திருகுர்ஆனின் சொன்னயத்தையும் நடையழகையுங் கண்டு ஸ்தம்பித்துப் போய், திருகுர்ஆனுக்குப் பணிந்து, நாயகம் (ஸல்.) அவர்களை விசுவாசித்து, இஸ்லாம் மதத்தைத் தழுவியதுமல்லாமல் "யான் குறி சொல்பவர்களிற் பலரின் வாக்கியங்களைச் செவியுற்றிருக்கிறேன்; சூனியக்காரர்களின் மந்திரங்களையும் பார்த்திருக்கிறேன்; புலவர்களின் செய்யுள்களையும் கேட்டிருக்கிறேன்; ஆனால், நாயகமே! தாங்கள் இப்பொழுது கூறுகிற வாக்கியங்கள் இவைகளைப் போலன்று; இவ்வாக்கியங்கள் வேறு; இவ்வாக்கியங்கள் சமுத்திரத்தி[illegible] பாதாளம்வரை சென்று தன்னுடைய ச[illegible] யைப் பிரயோகிக்கவல்லனவாய் இருக்கின்ற[illegible] என்று நான் பிரமாணம் செய்கிறேன்" என்[illegible] கூறினார்.

இஸ்லாம் மதம் நாளுக்குநாள் வளர்ந்தோங்கி வருவதைக்கண்ட குறைஷிக் காபிர்கள், கவிவாணராகவும், குறி சொல்பவராகவும், மந்திரவாதியாகவுமிருந்த 'அத்பா இப்னு ரபீஆ' என்பவரை நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களிடம் அனுப்பி, அவர்கள் கூறும் திருகுர்ஆன் வசனம் செய்யுளா? அல்லது சூனிய மந்திரமா? அல்லது குறி சொல்வோர்களது வாக்கியமா? என்பதைத் தெரிந்து அறிவிப்பதற்காகவும், நாயகம் (ஸல்.) அவர்களது சத்தியப் பிரசாரத்தைச் சமாதான முறையில் சம்பாஷித்து நிறுத்திவிடுவதற்காகவும் தெரிந்தெடுத்தார்கள். இவர், நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் தர்பாரில் வந்து, குறைஷியருக்கும் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களுக்கும் சமாதானமேற்படுவதற்கான நிபந்தனைகளைப்பற்றி பிரஸ்தாபித்தபோது, நாயகம் (ஸல்.) அவர்கள் அத்பா இப்னு ரபீஆவின் வேண்டுகோளுக்குப் பதிலாக, திருகுர்ஆனிலுள்ள "ஸூரத்து புஸ்ஸிலத்" என்ற அத்தியாயத்திலிருந்து சில வசனங்களை ஓதிக்காட்டினார்கள். சில வசனங்கள் ஓதியவுடன் நாயகம் (ஸல்.) அவர்களின் வாயில் தமது கையை வைத்து, "நீங்கள் உலகில் பெரிய மாறுதலைச் செய்துவிடுவீர்கள் என்று கஃபாவின் நாயன்மீது நான் பிரமாணம் செய்துகூறுகிறேன்; தயவுசெய்து ஓதுவதைநிறுத்திவிடும்படி குறைஷியருக்குள்ள பந்தத்துவத்தை வஸீலாவாக வைத்துத் தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறித் தமது இல்லத்துக்குத் திரும்பிவிட்டார்.

நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் பரம விரோதியும் குறைஷியர்களின் தலைவனுமான அபூஜஹ்லுக்கு இவ்விபரம் தெரிந்தவுடன், அத்பாவின் வீட்டுக்குச் சென்று "முஹம்மது

கொடுத்த விருந்தைச் சாப்பிட்டு அவருடைய மனிதராகி விட்டீரோ?'' என்று வினவினன். அதற்கு 'அத்பா இப்னுரபீஆ' என்பவர், "வீணுக உளராதீர்; என்னுடைய செல்வ நிலைமையைக் குறித்து குறைவாகப் பேசக் கூடியவர் யாரேனுமுண்டோ? என்னைப் பேராசையுள்ளவனென்று நிரூபணம் செய்யக் கூடியவர் யார்? நான் எப்படிப்பட்ட செல்வந்த னென்பது உமக்குத் தெரியாதா? பிறர்பொரு ளின் ஆசை என்னைக் கவர்ந்துகொள்ள முடியுமா? ஆனல், முஹம்மதுவானவர் (ஸல்.) என்னுடைய கேள்விக்குப் பதிலாக என்னிடம் ஓதிக் காண்பித்த வாக்கியம் செய்யுளுமல்ல, குறிசொல்பவர்களின் வாக்கியமுமல்ல, கோடாங்கியுமல்ல; அது சொற்நயமும் இலக்கண இலக்கியச் சிறப்புகளும் சொரிந்த வாக்கிய மாகும்; நான் இதுவரை இம்மாதிரியான சிறந்த நடையழகு பொருந்திய வாக்கியத்தைக் கேட்டதில்லை; அவர் கூறிய வாக்கியத்தில் தெய்வ வேதனையைப்பற்றிய எச்சரிக்கை இருந்தது; ஆகவே, உங்கள்மீது எங்கு தெய்வ வேதனை இறங்கிவிடுமோ என்று நான் அஞ்சு கிறேனென்று கூறினர். இதைக்கேட்டவுடன் அபூஜஹ்லும் அவனுடன்வந்த மற்றவர்களும், முஹம்மது (ஸல்.) தம்முடைய நாவன்மையால் அத்பாவை வசியம் செய்துவிட்டாரென்று கூறினர்கள்.

கஃபுப்னு மாலிக், ஹஸ்ஸானுப்னுதாபித், அப்துல்லாஹிப்னு கைஸ், கஃபுப்னுஜுபைர், ஆமிருப்னு அக்வஉ, துபைலுப்னுஅம்ர், அப் துல்லா ஹிப்னுரவாஹா முதலிய பலர் அரபி தேசத்தில் முதற்றரமான வித்வான்கள் என்று கீர்த்திவாய்ந்தவர்களாகும். இவர்கள் யாவரும் இத்திருகுர்ஆனின் சொல்நயத்தையும் நடை யழகையுங் கண்டு, திருகுர்ஆனுக்குத் தலை சாய்த்து இஸ்லாம் மதத்தைத் தழுவினர். இவை அக்காலத்திலுள்ளவர்களின் விருத் தாந்தமாகும். இக்காலத்திலுங்கூட இத்திரு மறை தன்னுடைய தெய்வீகசக்தியால் மக்க ளின் மனத்தைக் கவர்ந்து, தனக்குக் கீழ்ப்படி யும்படி செய்வதை, நாம் யாவரும் பல இடங்க ளிலும் பார்த்திருக்கிறோம். இந்நாட்டிலுள்ளோ ரிற் சிலரைத்தவிர மற்றையோர் திருகுர்ஆனில் சொல்லப்பட்ட விஷயங்களை நேருக்குநேராகத் தெரிந்துகொள்ள முடியாதவர்கள். ஆயினும், இவர்கள் முன்னிலையில் திருகுர்ஆனைச் சட்டப் படி ஓதக்கூடிய காரிகள் எனப்படுபவர்கள், அதை நிறுத்தி சட்டப்படி ஓதுவராயின், சிறு பிள்ளைகள்முதல் வயோதிகர் ஈருகவுள்ள பிற மதத்தாருங்கூட, தங்களது இதர பேச்சுக்களை நிறுத்தி விட்டு, மிகமரியாதையுடன் காது தாழ்த்திக்கேட்டு, திருகுர்ஆனின் மகிமையைப் போற்றுவதைப் பார்க்கிறோம். அநேகம் பிற மதத்தார் இதனுடைய பொருள் விளங்காம லிருந்தும் இதனை ஓதுவதை அன்றாடகம் செவிமடுப்பதால் திருகுர்ஆனின் மகிமைக்கு அடிபணிந்து இஸ்லாம் மதந் தழுவியதை புத்த கங்களிற் படித்திருக்கிறோம். இவ்வித நிகழ்ச்சி களில் ஒரு சம்பவத்தை மாத்திரம் ஈண்டு குறிப்பிடுவது இந்த இடத்தில் மிகவும் பொருத்தமாகும்.

ஜோட்பூர் என்று ஒரு சமஸ்தானம் மத்திய இந்தியாவில் இருக்கிறது. அங்கு ஒரு ஹைஸ் கூல் உண்டு. சுமார் எட்டு அல்லது ஒன்பது வருஷங்களுக்கு முன்னர் அந்த ஸ்கூலில் வரு ஷாந்திரவிழா நடைபெற்றது. மேற்கு ராஜ புதன சமஸ்தானங்களின் ரெஜிடெண்ட் அவ் விழாவில் தலைமை வகித்தார். ஹிந்துக்களும், பிரபுக்களும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர் களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். மகாநாட்டின் புரோகிராமில், பற்பல மதத்தைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் வேதங்களி லிருந்து சில வசனங்களைப் படிக்கவேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது. இதை அந்த ஸ்கூலிலுள்ள மாணவர்களே நிறைவேற்றினர். இவ்வேற்பாட்டின்படி ஹிந்துக்களின் வேதத்தி லிருந்தும், கீதையிலிருந்தும் பல சுலோகங்கள் பல மாணவர்களாலும் படிக்கப்பட்டன. யாவ ருக்கும் கடைசியில் முஸ்லிம் மாணவர்கள் தங்கள் வேதத்திலிருந்து சில வசனங்களை ஓத வேண்டிய முறை வந்தது. தலைவரான ரெஜி டெண்டின் உத்தரவுப்படி ஒரு முஸ்லிம் மாண வர் அழகிய குரலில் திருகுர்ஆனிலுள்ள ஸூரத்து ஹஷ்ரின் கடைசி 5 வசனங்களைச் சட்டப்படி அதன் முறை தவறுமல் ஓதினர். ஓத ஆரம்பமானது முதல் அந்தச் சபையில் ஒரு விதமான உணர்ச்சி யுண்டாகி விட்டது. ரெஸிடெண்ட் அவர்கள் தமது தலையிலிருந்த ஹாட்டை எடுத்துவிட்டு, மொட்டைத் தலை யாகச் சிரம் வணங்கிக்கொண்டு எழுந்து தலைகவிழ்ந்து, தமது பார்வையைக் கீழே தாழ்த்திக்கொண்டு மிகுந்த அச்சத்துடனும் மரியாதையுடனும் பயபக்தியுடனும் நின்றார். ரெஸிடெண்டு துரை எழுந்து நின்றவுடன்

முதல் வரிசையிலுள்ள யாவரும் எழுந்துநின்று கொண்டார்கள். திருகுர்ஆன்ஓதி முடிந்தது. அந்த சமஸ்தானத்திலுள்ள உயர்தர உத்தியோகம் வகித்துவந்த பார்ஸி கனவான் ஒருவர், தன் உணர்வற்றவராய் "திருகுர்ஆன் உலகில் அருளப்பட்டு இன்று பதின்மூன்று நூற்றாண்டுகள் ஆகின்றன ; திருகுர்ஆனின் அன்றிருந்த ஆகர்ஷண சக்தி இன்னும் கொஞ்சமும் குறையாமலிருந்து வருகிறது ; நாம் அறபிப்பாஷையை அறியாதவர்களாக இருந்தும், நமது மனத்தை அது வசியம் செய்துவிட்டது" என்று கூறினர். என்னே ! திருமறையின் தெய்வீக சக்தின் மேன்மை.

ஆகவே, இவ்வபார வலிய சக்தியுள்ள திருமறையை எதிர்த்துப் பிரசாரம் செய்த குறைஷியர், இதன்மீது தோஷங் கூறுவதற்கு எவ்விதக் காரணங்களையும் பெற்றுக்கொள்ளாமல் தோல்வியடைந்தனர். அத்துடன், அவர்களிலுள்ள சிறியார் பெரியார் ஸ்திரீபுருஷர் யாவரையும திருகுர்ஆன் நாளுக்குநாள் தன் வயப்படுத்திக்கொண்டும், இஸ்லாம் மதம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமும் போல் தினசரி வளர்ந்துகொண்டே வந்ததையும் பார்த்த அவர்கள், பொறாமை மேலீட்டால் புதிய யுக்தி செய்யலானார்கள். அதாவது, "முஹம்மது (ஸல்.) அவர்கள் திருகுர்ஆனை ஓத ஆரம்பித்தால், அவர் ஓதும் சப்தம் மற்றவர்களுக்குக் கேட்காதபடி கூச்சல் போடுங்கள்; இதனால் திருகுர்ஆனின் வஸிய சக்தியில் மற்றவர்கள் மாட்டிக் கொள்ளமாட்டார்கள் ; இந்த யுக்தியின் மூலமாக அதனை எதிர்த்துப் பிரசாரம் புரியும் பணியில் நீங்கள் வெற்றியடைந்து, இஸ்லாம் நாளுக்குநாள் பெருகுவதைத் தடுக்கலாம்" என்று முடிவு செய்து, அவ்வண்ணமே செய்தனர். ஆயினும் இந்தயுக்தியிலும் அவர்கள் வெற்றி பெற்றனரல்லர். இறுதியாக, திருகுர்ஆன் தன்னுடைய ஆகர்ஷண சக்தியால் அரபிகளின் மனத்தைக்கவர்ந்து அவர்கள் அனைவரையும் தனக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டது.

இந்த றமலான், இவ்வளவு சிறப்புள்ள திருகுர்ஆன் உலகுக்கு அருளப்பட்ட மாதமாக இருப்பதாலும், சிறப்பாக "லைலத்துல் கத்ரி" யன்று திருகுர்ஆன் இறக்கப்பட்டதென்று திருமறையே கூறுவதாலும், முஸ்லிம்களாகிய நாம், இத்திருமறையின் சிறப்புகளையும், மகத்துவங்களையும் மனதிற்கொண்டு, அதை மிகுந்த பயபக்தியுடன் ஓதி அதிலுள்ள பொருள்களையும், ஆழ்ந்த கருத்துக்களையும் உணர்ந்து அதன் சட்டதிட்டங்களின்படி நடக்க இறைவன் நம்மனைவருக்கும் நல்லருள்புரிவானாக ! ஆமீன் ! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!

---

## நாயக வாக்கியம்

### சற்குணத்தின் மகத்துவம்

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் ஒரு நாளன்று சற்குணத்தின் மகிமையை விளக்கிக் கூறிக்கொண்டிருக்குங்கால், "மறுமை நாளில் மானிடனின் அமல்களில் சற்குணத்தைவிட மேலான—கனமுடைய எவ்வஸ்துவுமிராது" என கூறியதாக, ஹஸ்ரத் அப்துல்லாபின் உமர் (ரலி.) அவர்களைத்தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம் சாலிஹ் ஜஸாயிரி (ரஹ்.) அவர்கள், இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், இஸ்லாம் மதத்தைப் பரவச்செய்வது, அதனைப் பிரசாரஞ் செய்வது ஆகியவைகளுக்கு அசல்—மூலதனமாக இருப்பது சற்குணந்தானென்று கூறியிருக்கிறார்கள். எனவே, எவன் சற்குணத்தோடு திகழ்கின்றானே அவன் நிகரற்ற கியாதியோடு பிரத்தியேக சிறப்புடன் கீர்த்திபெற்று விளங்குகின்றானென்பதையும், மானிடர்களின் மனதில், தானே அவன்மீது ஒருவிதமான பிரீதி ஏற்பட்டுவிடுகிறதென்பதையும் நாம் திருஷ்டாந்தமாகக் காண்கின்றோம். ஆனால் இதற்கு மாறாக எவனுடைய குணம் கெட்டதாயிருக்கிறதோ, அவனை உலகோர் யாவரும் இலேசாக மதித்துத் தாழ்மையாக நோக்குவதோடு உள்ளன்போடு நேசிப்பதுமில்லை. இதற்காகத்தான், மறுமை நாளில் மூமினான மனிதனுடைய சற்குணத்தைவிட மேலான எந்த அமலுமிருக்கமாட்டாதென, பெருமானார் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள்

கூறியிருக்கிறார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அளவற்ற சற்குணசாலியாகவும், தாழ்மைத்தனத்தை விரும்புகிறவர்களாகவும், விருந்துபசாரம் செய்கிறவர்களாகவும், ஏழைகளின் உபகாரியாகவும் இருந்தார்களென்பதை சரித்திரம் சான்று பகர்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே தாங்கள் தினந்தோறும் பஜ்ர் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வியாதியஸ்தர்களை விசாரணை புரிபவர்களாகவும், ஏழைமக்களின் தேவையைப் பூர்த்தியாக்கிவைப்பதில் ஈடுபடுபவர்களாகவுமிருந்ததுடன் ஒவ்வொருவரிடமும் சற்குணத்தோடு வார்த்தைபாடுகிறவர்களாகவுமிருந்தார்கள்.

## நியாயத்தை விரும்புகிறவர்களுக்கு அளவற்ற பயன்கள் கிடைக்கின்றன !

ஒருநாளன்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் நியாயம், ஒழுங்கு, நீதி இவைகளின் மேன்மைகளை எடுத்துக் கூறுங்கால், "நியாயமாக நடந்துகோள்பவன் மறுமை நாளில் ஒளியினால் பிரகாசித்துக் கோண்டிருக்கும் சிம்மாசனத்தின்மீதிருப்பான்" எனக் கூறினார்கள்.

ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மானிடனுடைய கடமைகளிலும், அவனுடைய வணக்கத்திலும் நியாயமாகவும், ஒழுங்குமுறையோடும் நடந்துகொள்வதற்கு பிரத்தியேக விசேஷித்த தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், குர்ஆன் ஷரீபானது அடிக்கடி மூமீனானவர்கட்கு இதன்பக்கல் ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறதென்றும் கூறியிருக்கிறார்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள் தாங்கள் திருவாய் மலர்ந்தருளும் பிரசங்கங்களிலும் இதனை வற்புறுத்தியும், இதன் மேன்மைகளை எடுத்துக் கூறியுமே வந்திருக்கிறார்கள். எனவே நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சொற்பெருக்காற்றுங்காலை, எவன் நியாயம், ஒழுங்கு இவைகளை முன்வைத்துக் காரியாதிகளை நடத்திக்கொண்டு போகவில்லையோ, அவன் ஈமானுடையவனாகயிருப்பானென்று கூறுவதில் சந்தேகமிருக்கிறதெனத் தெரிவித்தார்கள். நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களோ நியாயம் ஒழுங்குமுறைக்குச் சக்கிரவர்த்தியாக இருந்தார்களாதலின், ஒவ்வொரு காரியத்திலும் அதனைக் கண் முன்வைத்தே காரியாதிகளை நடத்திவந்திருக்கிறார்கள்; ஒருபொழுதும் ஞாயமென்னும் முந்தாணி அவர்களின் கையைவிட்டு நழுவியதே கிடையாது. உதாரணமாக, ஒருமுறை அரபி வர்க்கத்தின் உயர்குடும்பத்திலுள்ள மாதொருத்தி, திருட்டுச்செயல் புரிந்துவிட்டாளென்னும் செய்தி பெருமானார் (ஸல்.) அவர்களிடம் வந்தகாலை, குரைஷித் தலைவர்களில் பெரும் கியாதி வாய்ந்தவர்களெல்லாம் சிபாரிஷ் தேடியும், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் அந்த சிபாரிஷையெல்லாம் அங்கீகரியாது உடனே, அம்மாதின் கையைத் துண்டித்துவிடுமாறு கட்டளையிட்டுவிட்டு, அங்கிருந்தோரை நோக்கி, "மகாஜனங்களே ! உங்களுக்கு முன்னாலிருந்தவர்களெல்லாம் ஏழைகட்குத் தக்க—கடிஸான தண்டனை கொடுத்தும், சீமான்களுக்குத் தாட்சண்யம் பாராட்டியுமிருந்ததால்தான் நாசமடைந்துவிட்டார்கள். ஆகவே நீதம்—ஞாயத்திற்கு விரோதமாய் யான் எவ்வாறான காரியமும் செய்யமுடியாது ; முஹம்மதுடைய மகள் பாத்திமா இக்காரியத்தைச் செய்திருந்தபோதிலும் அதற்குத் தண்டனை அளிப்பதில் சற்றுங்கூட பின்வாங்கமாட்டேன்" எனத் தெரிவித்தார்கள்.

## உண்மையின் மேன்மை

இஸ்லாத்துக்கு விரோதமாயுள்ள அசத்திய காரியங்களை அகற்றுவதற்கு முற்படுவது மேலான காரியமா? அல்லது அநீதிபுரியும்படியான அரசனிடம் உண்மையை எடுத்துக்கூறுவதுமேலான காரிபமா என்னும் விஷயமாய் ஒருநாளன்று ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி, ஹஸ்ரத் ஸைதிப்னு தாபித் (ரலி.) இம்மகான்களுக்கிடையே வாதம் நடைபெற்றபொழுது, ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரி (ரலி.) அவர்கள், தன்னைப் பெரிதாகக் கருதும் அரசனொருவன், தன்னை மானிடர்களின் பதவியைவிட மேலாகவும், இதரர்களையெல்லாம் மிருகஜாதிகள்போலவும் கருதுகின்றான்; அவன் சமூகத்தில் ஏழைகள் எவ்விஷயத்திற்கும் வாய்திறப்பதற்குக்கூட அனுமதி கிடையாது ; அவன் கூறும் வார்த்தைக்கு மாற்றமான அபிப்பிராயம் தெரிவிப்பது மன்னித்துக்கொள்ள முடியாத பாவமெனக் கருதுகின்றான் ; இந்நிலைமையில் அவனிடம் உண்மையை—எதார்த்தத்தை அறிவித்துவிட வேண்டியது மிகமிக மேலான தியாகமாகுமெனக் கூறினார்கள்.



# ஈதுல் பித்ரு

'ஈது' என்ற பதத்திற்குத் திருநாள், பெருநாள் பண்டிகை என்று பொருள்கொள்ளலாம். 'பித்ரு' என்பதற்கு விடுதல் என்பது பொருளாகும். எனவே, 'ஈதுல் பித்ரு' என்பது, நோன்பு நோற்பதை விட்டதன்பேரில் கொண்டாடப்படும் திருநாள் என்பது பொருளாகும். அதாவது, ரமலான் மாதம் முழுதும் இறைவனின் கட்டளைக்காக அவனது திருப்தியை நாடி நோன்பு நோற்று, பகல் போஜனம் துறந்து, இராக் காலங்களில் நித்திரை நீக்கி, நிர்மலனான அல்லாஹு சுபுஹானஹு வதஆலாவை வணங்கிய நல்லடியார்கள், சரியாக ஒரு மாதத்துக்குப்பின் பகல் போஜனம் அருந்துவதை இறைவனால் அனுமதிக்கப்பட்டு முதல்முதலாக பகலில் போஜனம் அருந்துகின்றனர்; இறைவன் அடியார்களுக்கு அளித்த இவ்வருட்கொடையை நினைத்து அடியார்கள் அவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். இதற்கடையாளமாக யாவரும் சுத்தமான உடைகள் அணிந்து இறையை நோக்கி இரண்டு ரக்கஅத்துத் தொழுகையை நிறைவேற்றி ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கின்றனர். முஸ்லிம்களின் பெருநாளாகிய திருநாள் இத்துடன் முடிவுபெற்று விடுகிறது.

ஆனால், இவ்வுலகில் வாழும் ஏனைய சமூகத்தாரும் முஸ்லிம்களைப்போல் பல திருநாட்களை கொண்டாடுகின்றனராதலின் அத்திருநாட்கள் எவ்வாறு ஆரம்பமாயிற்று என்பதை நாம் சற்று கவனிப்போமாயின், இஸ்லாமிய ஈதுப் பெருநாளின் சிறப்பையும் மேன்மையையும் நன்கு உணரமுடியும். முற்காலத்திலிருந்த மதங்களில் இந்த திருநாளை கொண்டாடுவதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற முக்கியாம்சமும் கண்டிப்பும் இஸ்லாமியத் திருநாட்களைக் கொண்டாடும் விஷயத்தில் ஏற்பட்டில்லை. எனவே, இதர மதங்களில் சில குறிப்பிட்ட பண்டிகைகளில், புதிய வஸ்திரங்கள் கட்டுவதையும், பலவிதமான பலகாரங்கள் செய்வதையும் ஒரு முக்கிய கடமையாகப் பாவிக்கப்படுகிறது. ஆனால், இஸ்லாத்தின் திருநாளில் இவ்வாறாகப் புதிய வஸ்திரங்கள் கட்ட வேண்டுமென்றோ, அல்லது பலபலவிதமான பலகாரங்களை அவசியத்துக்கதிகமாகச் செய்து வீண்விரயஞ் செய்யவேண்டுமென்றோ ஏற்பட்டில்லை. உடலும் உடையும் சுத்தமாக இருந்தால் போதும். இதற்காக ஸ்நானஞ் செய்து துணிகளை தோய்த்துக்கொள்வது ஒன்றே போதுமானது. ஆதலின், இதர மதங்களில் ஏற்பட்ட பண்டிகைகளில் காணப்படுகிற ஆடம்பரச் செலவுகளும் வீண் விரயங்களும் இஸ்லாமியத் திருநாளில் ஏற்படுத்தப்பட்டில்லை.

இதுவுமன்றி வாரத்திற்கு ஒருநாள் கூலிக்காரர்களுக்கு விடுமுறையளிப்பதுபோல், வருஷத்தில் சில குறிப்பிட்ட தினங்களில் அந்த ஜனங்களுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. இவ்விடுமுறையை அவர்கள் உல்லாசமாகக் களிப்பதற்காகப் புதிய வஸ்திரங்களை வாங்கியும், ஆடம்பர வீண் செலவுகளை செய்வதிலீடுபட்டும் மார்க்க விதிவிலக்குகளையும் கவனியாது பல காரியங்களைச் செய்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நாட்களில், இம்மாதிரி செய்கைகள் செய்வதைக் குற்றமாகவும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறான நடைமுறைகள் இதர மதங்களிலுள்ள பண்டிகைகளில் சர்வ சாதாரணமாகக் காணப்பட்டு வருகிறது. ஆனால், இஸ்லாத்தின் திருநாளில் இறைவனின் சட்டதிட்டங்களையும், கட்டுப்பாடுகளையும்விட்டு முஸ்லிம்கள் கடந்து போகாது அவனது தெய்வச்சட்டத்தைக் கடைப்பிடித்தே நடக்க வேண்டுமென்ற கட்டளையிடப்பட்டிருக்கிறதுடன், இந்தச் சந்தோஷ தினத்திலுங்கூட அல்லாஹு தஆலாவுக்காக இரண்டு ரக்கஅத்துத் தொழவேண்டுமென்ற விதியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தத் தொழுகையை தனித்தனியே நிறை வேற்றுவதற்கு அனுமதிக்காமல், அந்தந்த ஊர்களிலுள்ள ஜனங்கள் பள்ளிகளில் அல்லது ஈதுகாவில் ஒன்றுகூடி தொழுகை நிறைவேற்றிய பின்னர், இப்பண்டிகை ஏற்பட்ட விருத்தாந்தத்தையும், அப்பண்டிகையில் நடந்து கொள்ளவேண்டிய விபரத்தையும்பற்றி குத்பா பிரசங்கமும், அதன்பின் யாவரும் ஒன்றுகூடி இறைவனை இறைஞ்சிப் பிரார்த்திப்பதும், பின்னர் ஒருவரையொருவர் கண்டு பேசுவதும் நிகழ்கின்றன. இவைகளெல்லாம் வெளிப்பார்வைக்கு ஒருவிதமான கட்டுத்திட்டம் போல் தோன்றிடினும், முஸ்லிம்களை அதிலும் உண்மை முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் உண்மையான திருநாள் கொண்டாட்டமும், திருநாளுக்குரிய சந்தோஷமும் மகிழ்ச்சியும்இந்தத் தொழுகையிலும், முலாக்காத் (சந்திப்ப)திலுமே முற்றுப்பெற்றுவிடுகிறது. மேலும் ஒரே இடத்தில் யாவரும் ஒன்றுகூட வேண்டியிருப்பதால், மக்களுக்குள் புதிய நேசத்தையும் பழக்கத்தையும், அறிமுகத்தையும் ஏற்படுத்திக் கொள்ள இடமேற்படுகிறது. தொழுகை முடிந்தபின் ஒருவரையொருவர் முலாக்கத்துச் செய்துகொள்வதில், மக்களுக்கிடையிலுள்ள சிற்சில மனவேற்றுமைகளையும், வருத்தங்களையும் அகற்றிக்கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. மனிதர்கள் யாவரும் ஒரே இனம், மனிதர் யாவரும் ஒரே வர்க்கம், அவர்களனைவரும் ஒரே சகோதரர்கள், அவர்கள் யாவரும் ஒருவரையொருவர் நேசித்துப் பழகவேண்டும் என்னும் சகோதரத்துவத்தையும், வாஞ்சையையும் நிலைநாட்டுவதற்கு இஸ்லாத்தின் இப்பண்டிகை தினங்கள் எவ்வளவு உதவியாக இருக்கின்றனவென்பதை ஊன்றி கவனிப்போமாக. மக்களில் பலர் பாவிகளாக இருக்கலாம். நாம் செய்த பாவச்செய்கைகளுக்காக இறைவன் நமது பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளாதிருக்கலாம். ஆனால்; ஊரிலுள்ள யாவரும் ஒன்று கூடி, ஒருமனப்பட்டு இறைவனிடம் பிரார்த்தனை செய்யும்போது, இவ்வடியார்கள் பாபம் செய்தவர்களாக இருப்பினுங்கூட அவர்கள் மீது இறைவனுக்குக் கருணையுண்டாகி அருள் சுரக்கக்கூடும். இதனால், மக்களின் மறுஉலகப்பேற்றுக்கும் இம்மையின் இதரப்பேற்றுக்கும் இக்கூட்டம் எவ்வளவோ நன்மையாக இருக்கிறது.

ஆனால், இவ்வளவு சாமான்யமான முறையில் இப்பெருநாள் கொண்டாட்டத்தை இஸ்லாம் ஏற்படுத்தி இருந்தாலும், மனிதர்கள் உலுத்தர்களாக ஆகிவிடக் கூடாது என்பதையும் கவனித்து, இயன்றவரை நல்ல உடைகளை அணிந்து, வாசனைத் திரவியங்களைப் பூசி மஸ்ஜித்துக்கு அல்லது ஈதுகாவுக்குச் செல்ல வேண்டு மென்று கட்டளை யிடுகிறது. இதில், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமில்லாமல், யாவருக்கும் சமவிதி ஏற்படுத்தியிருப்பதால், யாவரும் சுத்தமான உடுப்புகளை உடுத்தவேண்டும்; யாவரும் இப்பெருநாளைச் சந்தோஷமாகக் கொண்டாடவேண்டும் என்ற நோக்கத்தால் 'பித்ரு' ஸதக்கா என்ற ஒரு வகைத் தர்மத்தையும் இஸ்லாம் ஏற்படுத்தி இருக்கிறது. இத்தர்மத்தைப் பணக்காரர்கள், ஏழைகளுக்குக் கொடுப்பதால், அவ்வேழை ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய துணிகளை வாங்கிக்கொள்ளவும், நல்ல உணவுகளைத் தயார் செய்து புசிக்கவும் சந்தர்ப்ப மேற்படுகிறது. இந்தச் சந்தர்ப்பம் ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, பெருநாள் தொழுகைக்கு முன்னர் இந்த தர்மத்தைச்செய்துவிட வேண்டும் என்ற விதியையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதனால், இஸ்லாம் மதத்தைத் தழுவிய யாவரும், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தை உணராமல் சமஉணர்ச்சியுடன் இப்பெருநாளைக் கொண்டாடுகின்றனர். எனவே, இஸ்லாம் மதத்தில் ஏற்பட்ட பெருநாள்கொண்டாட்டமுங்கூட, உலக ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதுடன் மறு உலக வாழ்க்கைக்கான வழியையும் ஏற்படுத்தி இருப்பதை நீங்கள் நன்கு தெரிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட சிறந்த கொள்கையுடன் வேறெந்த மதத்திலும் பண்டிகைகள் ஏற்பட்டிருப்பதை நீங்கள் காணமாட்டீர்கள். ஆகவே இஸ்லாம் மதம் ஒன்றுதான் மக்களுக்கு இம்மை மறுமைப் பேற்றுக்கான வழியைக் காண்பிக்கவல்லது என்பதைச் சொற்ப அறிவுள்ளவர்களும் உணர்ந்துகொள்ள முடியும்.

இனி, இப்பெருநாள்கள் ஏற்படுத்தப்பட்ட காரணங்களைப்பற்றிச் சிந்திப்போம்: இதர மதங்களில் இப்பண்டிகை ஏற்பட்டதானது ஒருவருடைய பிறப்பை அனுசரித்ததாகவோ, அல்லது வேறு குறிப்பிட்ட காரணங்களினாலோ ஏற்படுத்தப்பட்டிருக்கும். சுருங்கக் கூறுமிடத்து, இப்பண்டிகைகளில் பெரும்பா

லனவைகளுக்கு அந்த மதத்துடன் எவ்விதச் சம்பந்தமுமில்லே என்பதை ஆராய்ச்சியுடையவர்கள் எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆனல், இஸ்லாத்தின் திருநாள்கள் அப்படியல்ல. இத் திருநாள்களுக்கும் மதத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. எவ்வாறெனில், உலக மன்பதைகளுய்ய இறைவனுல் இறக்கப்பட்ட திருவேதம், றமலான் மாதத்தில்தான் முதல் முதலாக இறக்கப்பட்டது என்பதைத் திரு குர்ஆனே தெளிவாகக் கூறுகிறது. இந்த றமலான் மாதத்துக்குப் பின் இஸ்லாத்தின் முதலாவது மாதமாக ஷவ்வால் மாதம்தான் வருகிறது. ஈதுல் பித்ருப் பெருநாள் இந்த ஷவ்வால் மாதத்தின் முதல் தேதியிலேயே நிர்ணயிக்கப்பட்டிருப்பதால், உலகமக்களுய்ய, இறைவன் தந்தருளிய திருகுர்ஆன் நமக்குக்கிடைத்ததை நாம் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளும் முறையில் நாம் இம்முதலாவது மாதத்தின் முதல் நாளேப் பெருநாளாகக் கொண்டாடுவதற்கு ஏவப்பட்டிருக்கிருேம். இதுவுமல்லாமல் ஒருமாத காலம் நோன்பு நோற்கும் புண்ணியக் கடமையை நாம் இனிது நிறைவேற்ற இறைவன் உதவிபுரிந்ததற்கு நன்றி செலுத்தும் நோக்கமும் இதில் அடங்கி இருக்கிறது. ஆகவே, இறைவன் இப்பெருநாளே நம்மவருக்கு உண்மையான திருநாளாக ஆக்கிவைத்து, இம்மை மறுமைப்பேற்றுக்கு வழிகாட்டியாகவும் ஆக்கி வைப்பானக. ஆமீன்.

---

# திருகுர்ஆன் போதனேயின் மகிமை

## இஸ்லாம் ஓர் சம்பூர்ண மதம்

தற்காலம் உலகில் தோன்றும் விவகாரம் பிரச்னே, கிளர்ச்சி, உணர்ச்சி, எழுச்சி மாறுதல் முதலியவைகள் எதைப்பற்றியும் குர்ஆன்ஷரீப் கூருமலில்லே. ஒவ்வொரு மதத்தின் வேதங்களும் நம்முன் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தாரும் தம்தம் வேதமே பிரதானமானதென்றும், எல்லா விஷயங்களேயும் திரட்டிக்கொண்டிருக்கிறதென்றும் வெகுதூரம் வாதிக்கின்ருர்கள். அன்னேரின் வேதங்களும் உருவத்தில் மிகத் தடித்தும் பெருத்தும் இருக்கின்றன. ஆனல், உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ளுதல் ஒருபக்கலிருக்கட்டும், ஒருகுறிப்பிட்ட கூட்டத்தார்க்குமட்டுங்கூட அவ்வேதங்கள் அவர்களின் தேவைகளேப் பூர்த்திசெய்து வைக்கமுடியாமல் மௌனமாயிருக்கின்றன. உதாரணமாக, இன்ஞ்சீலி (பைபிளி)ல் கலியாண விஷயமாக எச்சட்டமும் கூறப்படவில்லே. (ஈஸா அலே) இயேசுநாதர் கலியாணம் செய்துகொள்ளவுமில்லே. ஹிந்து வேதத்தில் விதவைகளுக்கு எவ்விதப் பரிகாரமும் காணப்படவில்லே. தவ்ராத்திலும், ஸபூரிலும் அரசியல் பரிபாலனங்களேப்பற்றிய ஒரு விதியுங்கூட கிடையாது. ஆனல் குர்ஆன்ஷரீப் என்னும் திருமறையிலோ எல்லாவித தேசீய சமூக, மார்க்கக்கலா ஞானங்களும் சட்டதிட்டங்களும் அமைந்துகிடக்கின்றன. இச்சிறிய நூல் மேற்கண்ட எல்லா விஷயங்களேயும் ஒன்ருய்த் திரட்டிக்கொண்டிருப்பதை ஒரு மனிதன் நோக்குங்கால், தானகவே அவன் ஸ்தம்பித்து, இஸ்லாமிய சீர்திருத்தத்திற்கு நிகராக இன்று உலகில் ஒரு சீர்திருத்தமுமில்லே எனவும், இஸ்லாமின் நடையுடை ஜீவிய வாழ்க்கையும், ஏனேய சட்டதிட்டங்களுக்கொப்ப உதாரணமற்றதாய்த் திகழ்கிறதென்பதையும் தெரிந்துகொள்வான். இச் சீர்திருத்தங்களனேத்தும் குர்ஆன்ஷரீபிலிருந்து எடுக்கப்பட்டவைகளே! ஆகவே, குர்ஆன் அல்லாஹ்வின் வணக்க சம்மந்தமாய் ஆக்ஞாபிப்பதோடே அரசியலேப் பற்றியும் அறிவுறுத்துவதால், அச்சட்டங்களிலிருந்து சிலவற்றை யாம் இங்கு குறிப்பிடுகிருேம். அவைகளினுல் இஸ்லாம் எவ்வளவு உயர்ந்தது! புத்திக்கும் யுக்திக்கும் ஒற்றுமைந்தது! உலக மாந்தர்கள் இலேசாக அனுஷ்டிக்கக்கூடிய மதமாகும் என்பது தெற்றென விளங்கும்.

### சீர்திருத்த போதனே

குர்ஆன் ஷரீபில் ''வ யித்'' என்னும் வாக்கியத்திலிருந்து ''ஹுஸ்ன'' என்னும் வார்த்தை வரை கூறியிருக்கும் விஷயமாவது :—''அல்லாஹுத ஆலாவைத் தவிர வேறு எவ்வஸ்துவையும் வணங்கக்கூடாதென்றும், பெற்ருேர்க

ளுக்கும், உறவினர்கட்கும், அனாதைகட்கும், ஏழை எளியோர்கட்கும் உதவிபுரிய வேண்டுமென்றும், எல்லா ஜனங்களிடத்தும் ஒழுங்கு முறையோடு அழகாய்ப் பேசவேண்டுமென்றும், இஸ்ரவேல் சமூகத்தாரிடம் யாம் பிரமாணம் வாங்கியிருந்தோம் என்று அல்லாஹ் அருட்செய்கிறான்.

எனவே, இத்திருவசனத்தில் ஆறுவிஷயங்கள் எடுத்துக் கூறப்படுவது வெள்ளிடை. முதன்மையாக, ஆண்டவனை ஆராதனை செய்வதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், அவன் மானிடரை சிருஷ்டித்திருப்பதுடன், அல்லும் பகலும் அனவரதமும் அன்னோர்களைப் பாதுகாத்தும் வருகிறான். நமக்கு இரணமும், சுகமும் அளிப்பவன் அவனே! ஆதலால், அவனை முதலாவதாக வணங்க வேண்டுமென்றும், இரண்டாவதாக, அதன்பின் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில், தரணியில் இன்னோர்களைவிட மக்கட் மீது அன்புள்ளோரும் அநுதாபியும் கிடையாது. ஆகவே, அவர்களின் அன்பிற்கும், அநுதாபத்திற்கும் பிரதியாக யாம் எத்துணை உள்ளன்போடும் ஊழியஞ் செய்தாலுங்கூட அது குறைவேயாகும். மூன்றாவதாக, இன்னோர்க்குப் பின் தன்னுடன் பிறந்த சகோதர, சகோதரி பேரிலும், தகப்பனுடன் ஜனித்த பெரிய, சிறிய தகப்பன், அத்தைகள் மீதும், தாயுடன் அவதாரமான மாமன், சிறிய, பெரிய தாயார் முதலியோர்கள் மீதும், ஏனையோர்களைப் பார்க்கினும் அதிகப் பிரியம் ஏற்படுகிறது. ஆதலால், இவர்களை ஆதரிக்கும்படியாய் குர்ஆன் போதிக்கிறது. நான்காவதாக, தாய் தகப்பனை இழந்த அனாதைகளின் பக்கல் கவனத்தைச் செலுத்தி, அவர்களை கைதூக்கிவிடுமாறு குர்ஆன் தூண்டுகிறது. ஐந்தாவதாக, மனிதவர்க்கத்திலுள்ளவர்களோ, காலச்சக்கர சுழலில்சிக்குண்டு சுழன்றுகொண்டிருப்பதால் அவர்களிடம் சூட்டையும், குளிரையும்விட்டு தங்கள் சரீரத்தை காப்பாற்றிக் கொள்ளக்கூடிய துணியும், அன்னோரின் பெண்டு பிள்ளைகட்கு தின்னக் கொடுக்கவேண்டிய உணவும் கிடையாதாகையால், அன்னோரை இந்நிலைமையில் கண்ணுற்றுக்கொண்டிருக்க மானுஷீகத்தன்மை இடங்கொடுக்காது. ஆகையால், அவர்களை ஆதரிக்கும்படியும் குர்ஆன் கட்டளையிடுகிறது. ஆறாவதாக, மேற்கண்டவர்கள் போக, எஞ்சியிருப்பவர்கள் பொதுஜனங்களும், இதர மதவாதிகளுமேயாவர். மதவேற்றுமை ஒன்று இடையிலிருப்பதால் ஒரு மதஸ்தர் மற்றொரு மதஸ்தருடன் பேசக்கூட மனம் விரும்புவதில்லை. இவர்களில் மேன்மக்களும் கீழ்மக்களுமுளர். தீண்டாதார்களைப் பெரும்பாலும் ஜனங்கள் வெறுப்புடனேயே தான் கண்ணுறுகிறார்கள். இம்மாதிரி கேவலமாய்க் கண்ணுறுதல் இந்தியர்களிலும், ரோமர்களிலும், பாரசிகர்களிலும் இன்றைக்கும் நாளைக்கும் இருந்துவருகிறது. ஆதலால்தான் இதை தடுப்பான்வேண்டி அல்லாஹ் தஆலா, எல்லோருடனும் முகமலர்ச்சியுடன் சந்தியுங்கள்; மேலும், அழகாயும் சம்பாஷியுங்களென்று ஆக்ஞாபித்திருக்கிறான். அதிகமாய் பொதுமக்களைச் சந்தித்து சம்பாஷிக்க நேரிடாமல் போனாலும், சிற்சில சமயங்களில் அவர்களைச் சந்திக்கவும் வார்த்தையாடவும் நேரிடுகின்றன. ஆதலால்தான், அல்லாஹுதஆலா அன்னோர்களுடன் அழகாயும், மரியாதையாயும் பேசுங்கள் எனச் சொல்லியிருக்கிறான் போலும்!

இவ்வித பலதிறப்பட்ட சமாச்சாரக் கொத்துகளை குர்ஆனின் பற்பல இடங்களிலும் காணலாம். ஆகவே, இஸ்லாமதம் இவ்வித உயர்ந்த படிப்பினைகளைக் கற்றுக்கொடுப்பதுடன், அவ்வாறே கிரியாம்சையில் நடத்திக்காட்டும்படியும் ஏவுகின்றது. இவ்வித சட்டங்கள் இதர மத வேதங்களிலோ, அல்லது வேறு நூற்களிலோ கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலுங்கூட இவ்வித தொடர்ச்சியுடனும், அழகிய அமைப்புடனும் கொத்துக்கொத்தாய், குலைக்குலையாய் வெண்ணெய்போல் உருட்டி திரட்டி ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது.

### நன்மை என்பது என்ன?

குர்ஆன் ஷரீபில் "லைஸ" என்னும் சொல்லிலிருந்து "வபிர்ரிகாப்" வரை அல்லாஹு சுபுஹானஹு அருட் செய்வதாவது:—"நீங்கள் உதயகிரி பக்கமாவது அல்லது அஸ்தகிரி பக்கமாவது முகத்தைத் திருப்பிக்கொண்டு தொழுகையை நிறைவேற்றி விடுவது ஒன்றைக் கொண்டே தமது கடமையைக் கழித்துவிட்டோமென்று எண்ணிக்கொள்ளுதல் ஒரு நன்மையான காரியமன்று. எனினும், நன்மை என்பதோ! அல்லாஹு (ஜல்லஜலாலுஹு)வையும், இறுதிநாளையும், அமரர்களையும், வேதங்களையும், தூதர்களையும் விசுவாசித்தலும், அவன்மீது தனக்கிருக்கும் பிரியத்திற்கு

அறிகுறியாய் தம் சுற்றத்தார்கள், அனாதைகள், ஏழைகள், முசாபிர்கள், கடன் கஷ்டத்தில் சிக்குண்டு சுழன்றுகொண்டிருப்போர்கள், அடிமைகள் ஆகியோர்கட்கு பொருளைக்கொடுத்தாதரிப்பதுமாகும்” என்று ஆண்டவன் அருட்செய்துள்ளான்.

சுப்ஹானல்லாஹ்! இத்திருவாக்கியங்களின் திவ்ய கட்டளைகள் எத்துணை உயர்ந்தனவாயும் மனதைக் கவரச் செய்யக் கூடியன வாயுமிருக்கின்றன பாருங்கள். சமுத்திர நீரையே கூஜாவி லடைத்து வைக்கப்பட் டிருக்கிறதென்று யாதொன்றுக்குச் சொல்ல விரும்பினால், இத்திருவாக்கியத்திற்குச் சொல்வதே மிகமிக பொருத்தமாகும். இதைவிட உயர்தர ஒரு உபதேசம் என்னதானிருக்கப் போகிறது? எவ்வளவு சவிஸ்தாரமானதொரு படிப்பினையை சில சுருக்கமான சொற்களால் எளிதாய் விபரிக்கப்பட்டிருக்கின்றன பாருங்கள்!

இத்திருவாக்கியத்தில் ஆண்டவன்மீதும், மரணித்த பின்புள்ள மறுவாழ்க்கை, அமரர்கள், வேதங்கள், நபிமார்கள்மீதும் முறையே எவ்வித பாகுபாடன்றியே விசுவாசிக்க வேண்டியதைப்பற்றிக் குறிப்பிடப்பட் டிருப்பதுடனேயே அல்லாஹ்வின் சிருஷ்டிகளில் சிரேஷ்டமான மானிடர்கட்குப் பொருளுதவி செய்யும்படியும் கட்டளையிடப்பட் டிருக்கிறது. உண்மையில் இப்பொருளுதவி மிகவும் முக்கியமானதும், உயர்ந்ததும், கட்டாயமானதும் என்று கூறியதோடு நிற்காமல், சுற்றத்தார், அனாதை, எளியோர், பிரயாணி, கடன்பட்டிருப்போர், அடிமை ஆகியோர்க்கு வாயால், கை, காலால் உதவிசெய்வது மாத்திரமன்றி, பொருளைக் கொடுத்தும் ஆதரியுங்கள் என்று குர்ஆன் ஷரீப் கண்டித்து ஆக்ஞாபித்திருக்கிறது.

## “அலா ஹுப்பிஹி”

ஓர் மனிதன் ஒருவருக்கு ஒரு தருமம் செய்தால், அதை ஒரு சமயத்தில் சொல்லிக் காண்பிப்பதும் சில வேளைகளில் அவனைக் குத்தி பேசுவதும் சகஜமாயிருந்து வருவதால், அதைத் தடுப்பதற்காக அல்லாஹ் ஆக்ஞாபித்து, நீங்கள் தருமம் செய்ய நாடி, யாதொன்றைச் செய்தால், அல்லாஹ்வின் பிரியத்திற்கே செய்யுங்கள்; அவனுக்கே (அல்லாஹ்வுக்கே) கொடுத்ததாகக் கருதுங்கள்; ஜனங்கட்கு கொடுத்ததாகக் கருதாதீர்கள். உபகாரஞ்செய்வது கெட்டதன்று. எனினும், அதை சொல்லிக் காண்பிப்பதே மகா கெட்டதாகும். ஏனெனில், அதனால் அதை வாங்கிக்கொண்டவனுக்கு வெட்கமும் மனவருத்தமும் ஏற்படுகின்றன. ஆதலால், ஆண்டவனின் பிரியத்திற்காகவே அதனைச் செய்யுமாறு அவன் கட்டளையிடுகின்றான்.

## • உபகாரத்தைச் சொல்லிக் காண்பிப்பதின் கேடுதி

குர்ஆனில் “யா” என்னும் சொல்லிலிருந்து “அன்னாஸ்” வரை, மூமின்களே! ஜனங்கட்கு காட்டுவான் வேண்டி தருமஞ்செய்து, தருமத்தைப் பாழ்படுத்திக்கொள்ளும் மனிதனைப் போல், நீங்கள் செய்யும் தருமத்தை சொல்லிக் காண்பித்தும், வருத்தப்படுத்தியும் அதனைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள் என்று அல்லாஹ்த ஆலா அறிவிக்கிறான். எனவே, நீங்கள் நுங்கள் உபகாரத்தை மனிதர்களுக்கிடையில் சொல்லிக் காண்பித்தால் அது மண்ணாய்ப்போய்விடும்; கொடுக்காமல் போனாலோ தண்டிக்கப்படுகிவீர்கள். ஆனால், சொல்லிக் காண்பிக்காதபடி தர்மஞ் செய்வீர்களானால் அதனால் விசேஷ பலனை அடைய அருகராவீர்கள். இன்னும் வெளிப்படையாக சொல்லவேண்டுமானால், எந்த தேவையுள்ளோர்கட்கோ, பாத்தியமுள்ளோர்கட்கோ கொடுத்தாலுஞ் சரி, அன்னோர் சுற்றத்தாரோ அன்னியரோ யாரேயாயினுஞ் சரியே அவர்கட்கு செய்த உபகாரத்தைச் சொல்லிக் காண்பிக்கக்கூடாது. மேலும், அதனால் அவர்கட்கு எவ்வித வருத்தமும் நேரிடக்கூடாது. அவ்வாறு செய்வீர்களாகில், உங்கள் தருமம் பலனற்றதாய்விடுவதுடன் நீங்கள் குற்றவாளியாகவுமாவீர்கள். ஏனெனில், சொல்லிக் காண்பிப்பதில் கட்டாயம் மனம் வருந்தும். அன்னோர் ஏழைகளாகவும், இயலாதவர்களாயுமிருப்பதால் வாய்திறந்து யாதொன்றைச் சொல்லமுடியாமல் போனாலும் வெட்கப்பட்டு மனம் நொந்துப்போவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆதலால், கொடுப்போர்கள் அல்லாஹ்வுக்காகக் கொடுக்கவேண்டும், வாங்குவோர்கள் யாராயிருப்பினும் அன்னோரின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடாது என அல்லாஹ் ஆக்ஞாபித்திருக்கிறான்.

நேயர்காள்! உலக வழக்கத்தைச் சற்று கவனித்துப் பாருங்கள்! ஒரு மனிதன் ஒருவனுக்கு ஒரு உபகாரஞ் செய்துவிட்டால், அதைச் சொல்லிக்கொண்டு திரிய ஆரம்பித்து

விடுகிறான். அதற்குமேல் ஒரு அடி எடுத்து வைத்து, அவனை விலைக்கு வாங்கிய அடிமையைப் போலாக்கிக்கொள்ளவும் கருதுகின்றான். இதனால் உதவி பெற்றவன், தனக்கு உபகாரஞ் செய்தவனைப் பாராட்ட வேண்டியதற்கு பதிலாக, அவன்மீது மனக் கலக்கமடைகின்றான்; அவன் சொல்லிக் காண்பிப்பது, தன்னை இழிவுபடுத்தக் கூடியதென்றெண்ணுகின்றான். குர்ஆன் ஷரீபோ இல்லாத விஷயத்தை இட்டுக் கட்டிச் சொல்லாமல் இயற்கை நிலைமையையே எடுத்துக் காட்டுகிறது. எனவே, இக்கால மக்களோ தங்களிடம் உதவிப் பெறுவோர் தங்களுக்கு இலவசத் தொண்டராகிப் போக வேண்டுமென்றும், தாங்கள் விரலாலோ கண்ணாலோ, சுட்டிக் காண்பிப்பதற் கேற்ப, அன்னோர் நடிக்க வேண்டுமென்றும், தங்களது எந்த அபிப்பிராயத்தையும் மறுக்கக் கூடாதென்றும் கருதுகிறார்கள். எனவே, பணக்காரர்கள் தங்களது தருமத்தால் ஜனங்களை விலைக்கு வாங்கிவிடவும், தங்களுக்குக் கீழ்படிந்த ஆளாக்கிக்கொள்ளவும் நாடுகின்றனர் போலும்! மேலும், எப்போதாவது தங்கள் அபிப்பிராயத்திற்கு ஏதோ கொஞ்சம் மாறுபட்டதாகத் தெரிந்தாலும், அல்லது தங்கள் கட்டளைக்குக் கீழ்படிய சோம்பேரித்தனத்தால் சிறிது தாமத மேற்பட்டாலும் உடனே தாம் செய்த நன்றி உபகாரத்தைச் சொல்லிக் காட்டத் தொடங்கி விடுகின்றனர். நாம் இன்னானுக்கு இன்னதைச் செய்தோம், அவன் நமக்கு அதற்குப் பதிலாக இன்னதைச் செய்தான் என்றுச் சொல்லித் திரிய ஆரம்பிக்கின்றனர். ஆகவே, கொடுக்கும் போதே "அவனுக்குக் கொடுத்தால் நமக்குப் பிரயோசனமில்லை, இவனுக்குக் கொடுத்தால் அவன் நம் சொல்லுக்கு ஐக்கியப்பட்டு நடப்பான்" என்று ஆதரவு வைத்துக் கொடுக்கக் கூடாது. அல்லாஹ்வுக்காகவேதான் கொடுக்க வேண்டும். பின்னர், வாங்குவோரிடம் தமக்குக் கீழ்படிதலை எதிர்ப்பார்க்குதல் மிகப்பெரிய மடமையாகும். இதனால் அல்லாஹு தஆலாவிற்காகக் கொடுக்கும் எண்ணம் எடுபட்டுப் போய், தமது சுயநலத்தைக் கருதிக்கொடுக்க நேரிடும். அதுபொழுது ஒரு சாரார் பெற்றுக் கொள்ளத் தகுந்தவர்களாயிருக்குங்கால், தமக்கு ஐக்கியப்படாதவர்களா யிருப்பதை முன்னிட்டு அவர்கட்குக் கொடுக்காமல், பெற்றுக் கொள்ளத் தகாதவர்களா யிருந்தாலுங்கூட, தமக்கு தாளம்போட்டு தம்மைப் போற்றிப் புகழ்வதைக் கருதி அன்னோர்க்குக் கொடுக்கத் துணிகிறார்கள். இதனால் ஆதரிக்கப்படுவதற்கு லாயக்குள்ளவர்கள் ஆதரிக்கப்படாமலும், ஆதரிக்கப்பட அருகரில்லாதவர்கள் ஆதரிக்கப்பட்டும் போகின்றனர். ஆகையால், அல்லாஹ்தஆலா, மனிதர்களின் தன்மையை கவனித்து தருமஞ்செய்வதில் எவ்வித ஆபாச அருவருப்பான விஷயமுமுண்டாகக் கூடாது; அவைகளை வேருடன் பிடுங்கி எரியவேண்டு மென்பதற்காகவே "அலாஹுப்பிஹி" ஆண்டவனின் பிரியத்திற்காகவே செய்யவேண்டுமென்னும் நேரான வழியைக் காட்டி, பொருள்படைத்தோர், பொருளுக்காக நன்றி செலுத்தலும் வேண்டுமென்றும் அறிவித்திருக்கின்றான். ஆகவே, நம் முஸ்லிம் நேயர்கள் இம்மேலான போதனையை சிந்தையில் கொண்டு சிறப்புற்று விளங்குவார்களாக.

---

# இஸ்லாமிய உலகின் ஆத்மார்த்த அரசாங்கத்தின் பொதுச் சபை

(மௌலானா ஸெய்யிது சுலைமான் சாஹிப் நதவி)

[அகில இந்திய சீரத் கமிட்டியின் காரியதரிசியான மௌலானா அப்துல் மஜீது சாஹிப் கர்ஷி அவர்கள், மௌலானா ஸெய்யித் சுலைமான் சாஹிப் நதவி அவர்களிடம், "தங்களை அகில உலகஹஜ்ஜு கான்பரன்சுக்குத் தலைவராக நியமித்தால், தாங்கள் எவ்வாறான பிரசங்கம் புரிவீர்கள்" என்று வினவி இருந்ததற்கு மறுமொழியாக, மௌலானா ஸெய்யிது சுலைமான் சாஹிப் நதவி அவர்கள் அடியிற்கண்ட வியாசத்தை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். மௌலானா

கர்ஷி அவர்கள் அவ்வியாசத்தைத் தமது பத்திரிகையில் வெளியிட்டிருப்பதுடன் எல்லா இஸ்லாமியப் பத்திரிகைகளும் அதனைப் பிரசுரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். இவ்வியாசத்தில் பல முக்கிய விஷயங்கள் அடங்கியிருப்பதால் நேயர்களின் பார்வைக்காக அதனை ஈண்டு பிரசுரிக்கலானோம்.—ப-ர்.]

**ஹ**ஜ்ஜு இஸ்லாத்தின் நான்காவது ருக்னு. அதாவது முக்கிய கடமையாகும். ஹஜ்ஜுச் செய்வதற்கு சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிம் மீதும் அவருடைய வயதில் ஒரு முறை ஹஜ்ஜுச் செய்வது அவசியமாகும். இந்த ஹஜ்ஜுக் கடமையானது இஸ்லாத்தின் ஆத்மீக அரசாங்கத்தின் பொதுச்சபையாகும். இந்தச் சபைக்கு, இறைவனின் நல்லுதவி யாருக்கு இருக்கிறதோ அவர் மிகமிகத் தூரத் தேசத்திலிருந்து விஜயம்செய்து அரபாத் மைதானத்தில் ஒன்றுகூடுகின்றனர். எனவே இஸ்லாத்தின் இந்த பொதுச்சபையானது இஸ்லாமிய சகோதரத்துவ அழைப்பாக இருக்கிறது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், அரசர், ஆண்டி, பணக்காரர், ஏழை யாவரும் ஒரே இடத்தில், ஒரே உடையில், ஒரே நிலைமையில், ஒரே மாதிரியில் தலைதிறந்த வண்ணமாக ஒரே துணியில் அங்கத்தை மறைத்துக்கொண்டு, "லப்பைக், அல்லாஹும்ம லப்பைக்" அதாவது நாயனே! உனக்குக் கீழ்ப்படிந்தேன் என்று கூறுகிறார்கள். ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலம் முதல், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலம்வரை எல்லா நபிமார்களும் தங்கள் தங்கள் காலத்தில் இதை நிறைவேற்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த பரிசுத்த பூமியில் எல்லா நபிமார்களும் இறைவனுக்குக் கீழ்ப்படியும் முறையில் பிரயாணஞ் செய்திருக்கிறார்கள். இங்குதான் எல்லா நபிமார்களின் உவமதரிசனத்தோற்றங்களையும் நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் பார்த்திருக்கிறார்கள் எனவே, மானிடர்களில் தங்கள் வாணாளில் குறைந்தபக்ஷம் ஒருமுறையேனும் இப்பரிசுத்தல் பூமியி ஆஜராகி, நபிமார்களின் மஷ்ஹது (அடையாளச் சின்னங்)களை ஜியாரத்துச் செய்யும் பாக்கியம்பெற்றவர்கள் எவ்வளவு பெரிய பாக்கியசாலிகளென்பதை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை.

இப்பூவுலகின்கண், பெரியபூப் பரப்பிலும், தீவுகளிலும், கிழக்கிலும் மேற்கிலும், மிகமிக தூரதேசங்களிலும் பல்கோடி முஸ்லிம்கள் வாசஞ் செய்தபோதிலும், வருஷத்தில் ஒரு முறை இவர்களின் பிரதிநிதிகள் கடல்களையும் காடுகளையும், மலைகளையும், மடுக்களையும் கடந்துவந்து விவசாயமற்ற இப்புண்ய பூமியில் கூடுகிறார்கள். இக்கூட்டத்தைப் பார்ப்போருக்கு, நபிகள்நாயகம் (ஸல்.) அவர்களின் உம்மத்தே முஹம்மதியாவின் அவ்வக் காலத்திய நிலைமையும் அந்தஸ்தும் நன்றாகப் புலப்பட்டுவிடும்.

இஸ்லாத்தின் ராஜீய விஷயத்திலும், இஸ்லாமியக் கான்பரன்சுகள் கூடும் விஷயத்திலும் ஹஜ்ஜுக்கு இருந்துவருகிற முக்கிய ஸ்தானம் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனால், மற்றவர்களுக்கு அதன் மகத்துவம் நன்கு தெரியவருவதால், இதர சமூகத்தார்கள் தங்கள் தேசங்களிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்பவர்களின் தொகையை நாளுக்குநாள் குறைப்பதுடன் மற்றவர்களையும் குறைக்கச்செய்கிறார்கள். எனவே, ஐரோப்பிய மகாயுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்டமாறுதலில், ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றும் விஷயமாக ஹிஜாஸுக்குச் செல்வதில் அதிக பாதகமேற்பட்டிருக்கிறது.

துருக்கி தேசத்தில், உதுமானியா ஏகாதிபத்தியம் இருந்தகாலத்தில், துருக்கியிலிருந்து ஒரு பெரும் கூட்டத்தினர் ஹஜ்ஜுக்கு வந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் கொடியானது ஹிஜாஸ் தேசத்தைவிட்டு எடுபட்டுவிட்ட பின்னர், அவர்கள் இஸ்லாமிய உலகத்தின் தலைமை ஸ்தலத்தைவிட்டு தங்களுக்குள்ள சம்பந்தத்தை அறுத்துக்கொண்டனர். மொரோக்கோவிலிருந்து திரிப்போலி வரை பிரஞ்சுக்காரர்களினுடையவும், இத்தாலியர்களினுடையவும் செல்வாக்குகள் ஏற்பட்டுவிட்டன. பிரஞ்சுக்காரர்களும் இத்தாலியரும் ஹாஜிகளின்மீது கடுமையான தடைகள் ஏற்படுத்திவிட்டார்கள். ருஷிய-போல்ஷ்விக் அரசாங்கத்தின் எல்லைக்குள் வசிக்கும் முஸ்லிம்கள் சட்டப்படி இவ்விதமான யாத்திரைகள் செய்வதைவிட்டுத் தடுக்கப்பட்டுவிட்டனர். மொரோக்கோ, அல்ஜீரியா, டுனிஸ், திரிப்போலி, மக்துனியா, ஷாம், இராக் முதலிய நாடுகளில், மக்கா, மதீனா ஆகிய புண்ணிய பூமிகளுக்கு விடப்பட்டிருந்த வக்புச் சொத்துக்கள், முஸ்

லிம் அல்லாத அரசாங்கங்களின் ஆதிக்கத்தில் வந்துவிட்டதால், அவைகளிலிருந்து வருகிற உதவிநிதி என்ற ஊற்றும் காய்ந்துவிட்டது.

சீன தேசத்திலுள்ள முஸ்லிம்கள் மிகத் தூரத்திலிருந்து ஹஜ்ஜுக்கு வரவேண்டியிருப்பதாலும், பலவிதமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதேற்படுவதாலும், அன்னோர் மிகவும் குறைவாகவே வந்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது அத்தேசத்திலேற்பட்டிருக்கிற ராஜியப் பிரச்னைகளால் அவர்கள் இன்னமும் அதிக கஷ்டமடைந்துவிட்டதால், அவர்கள் ஹஜ்ஜுக்கு வருவதையே அடியுடன் நிறுத்திவிட்டனரெனலாம். ஆனால் மகாயுத்தத்துக்குப் பின்னர் மூன்று தேசங்கள்தாம் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பைக் கூடியவரை செய்துவந்தது. அதாவது ஜாவா, இந்தியா, எகிப்து ஆகிய தேசங்களிலுள்ள முஸ்லிம்கள்தாம் சென்ற 16 வருஷங்களாக, 13 நூற்றாண்டுகளாக நடைபெற்றுவந்த இந்த ஆத்மார்த்த தர்பாரை அலங்கரித்துக்கொண்டிருந்தனர்.

ஆனால், இப்பொழுது சில வருஷங்களாக ஜாவாவிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் ஹாஜிகளின் வருகை குறைய ஆரம்பித்துவிட்டது. ஜாவாவிலுள்ள முஸ்லிம்களுக்கு, பரிசுத்த பூமியிலிருந்து ஈமானின் ஒளியானது பிரகாசிக்க ஆரம்பிப்பதையும், இதர தேசங்களுடைய முஸ்லிம்களுடன் இவர்கள் கலந்துறவாடுவதால் அவர்களில் புத்துணர்ச்சி உண்டாகுவதையும் கண்ட டச்சு அரசாங்கம், ஹஜ்ஜுக்குச் செல்பவர்கள்மீது பலவிதமான சட்டதிட்டங்களை ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டது. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதில் மிகவும் அதிகப் பிரீதியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அதிலும், பரிசுத்த பூமிகள் சமீபத்திலிருப்பதன் காரணமாக அவர்கள்மீது இக்கடமையை நிறைவேற்றும் பொறுப்பும் அதிகமாக ஏற்பட்டிருந்தும், அரசாங்கத்தார் ஏற்படுத்திய புதிய சட்டத்தின் காரணமாக, ஹஜ்ஜுப் பிரயாணத்துக்குப் பெரிய ஆபத்து உண்டாகிக்கொண்டிருக்கிறது. ஒரே கம்பெனிக்கு மாத்திரம் ஹஜ்ஜு கப்பல்கள்விடும் குத்தகையும், வரிப்பளுவும், அனுவசியமான செலவுகளும், கட்டணத் தொகையின் அதிகரிப்பும் இத்தேசத்திலிருந்து ஹாஜிகள் செல்லுவதில் குறைவேற்படுவதற்குக் காரணமாகிவிட்டன. ஆகவே, இவ்விஷயங்களில் நம்முடைய ராஜீய, மதத் தலைவர்களும், ராஜியச் சபைகளும், அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்களும் அதிகக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

### ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் அழைப்பு

உலக சம்பந்தமான இக்கஷ்டங்களும், தொந்தரைகளும், இடைஞ்சல்களும் எப்பொழுதும் இஸ்லாமிய மக்களின் பரமார்த்திக வழியில் உண்டாகிக்கொண்டுதானிருக்கின்றன. ஆனால், பேரின்பத்தில் மூழ்கிய முஸ்லிம்கள், இவைகளை எப்பொழுதும் லக்ஷியம் செய்யாமல் தங்களது கடமையை நிறைவேற்ற முற்பட்டு, அபாயம் நிறைந்த இந்தப் பள்ளத்தாக்கில், அதாவது பரிசுத்த பூமிகளில் எப்பொழுதும் பிரயாணம் செய்துகொண்டே வந்திருக்கிறார்கள். இதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "ஹஜ்ஜு யாத்திரையானது பலஹீனர்கள் செய்யும் ஜிஹாது" என்று திருவாய்மலர்ந்தருளி இருக்கிறார்கள். இஸ்லாத்தின் விரோதிகள் இப்பாதையில் அநேகம் தடைகளையும், கட்டுத்திட்டங்களையும் ஏற்படுத்தலாம். ஆனால், முஹம்மதுர் ரஸூலுல் லாஹி (ஸல்.) அவர்களின் உம்மத்துகள் அவைகளைப் பொருட்படுத்தாமல், இறைவனின் அழைப்புக்கு மௌனமாய்ச் செவிசாய்த்துக் கீழ்ப்படிந்து முன்னேறி வரவேண்டும்; இவ்வுலகத்தாரின் புஜபல சக்தியானது, இஸ்லாத்தின் ஆத்மீக சக்தியை வெல்லமுடியாது என்பதை நிரூபித்துக் காண்பிக்க வேண்டும்; சத்தியவாதிகள் உலகக் கஷ்டங்களை ஒருபோதும் பொருட்படுத்தமாட்டார்கள் என்பதை உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டவேண்டும். ஹஜ்றத் இப்ராஹீம் கலீல் அலைஹிஸ்ஸலாமவர்களின் நாவின் மூலமாக அல்லாஹ்தஆலா அன்று அழைத்தது இன்றும் இருந்துகொண்டிருக்கிறது.

"(இப்ராஹீமே!) ஜனங்களிடம் ஹஜ்ஜுக்கு நீர் அறிக்கையிடும். அவர்கள் பாதசாரிகளாகவும் (தூரவழிப்பயணகஷ்டத்தின் காரணமாக) மெலிந்த வாகனங்களின்மீ தாரோகணித்தும் மிகவும் தூரமான இடங்களிலிருந்து உம்மிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடைய நன்மைகளுக்குரிய இடங்களை தரிசிப்பதற்காகவும், குறிப்பிட்ட சில தினங்களில் அல்லாஹ் (தஆலா)வை ஞாபகிப்பதற்காகவும்"

என்று இப்ராஹீம் (அலை.) அவர்கள்மூலம் இறைவன் இட்ட கட்டளை இன்றும் அமலில் இருந்து வருகிறது.

பாரான் வனம்

இக்கட்டளை இடப்பட்ட அக்காலம் முதல் இக்காலம்வரை "அல்லாஹும்ம லப்பைக்" (நாயனே உனக்கு அடிபணிந்தோம்) என்று பதில் கூறும் சப்தமானது வருடந்தோறும் உலகத்தாரின் செவிகளுக்கு எட்டிக்கொண்டே இருக்கிறது. இனி நாம் தெய்வ அழைப்பைச் செவிமடுத்து அதற்குப் கீழ்ப்படிய வேண்டியது நமது கடமையாகும். தூரதேசங்களிலிருந்து நாம் அங்குச்சென்று ஆத்மார்த்த நன்மைகளுள்ள அந்தப் புண்ய ஸ்தலங்களில் நம்முடைய பிரசன்னத்தைக் காண்பித்துக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட சில தினங்களில், பாரான் வனத்து மலைச்சிகரங்களில் ஏறி இறைவனின் தஜல்லியாத்துகளை தரிசிக்கவேண்டும். நியாயத் தீர்ப்புநாளின் "றஹ்மத்" என்ற கஜனாவின் காவல்காரராக நியமிக்கப்பட்டிருக்கும் காத்திமுன்நுபுவ்வத் (ஸல்) அவர்களின் இறுதி உம்மத்துகளாகிய நமக்கு, "பைத்துல்லாவை, அல்லாஹ்த ஆலாவுக்காக ஹஜ்ஜுச் செய்வது மனிதர்களில் அங்கு செல்வதற்கு இயன்றவர்களின்மீது கடமையாகும்" என்ற கட்டளை பிறந்திருக்கிறது.

இக்கட்டளையானது, நேரான மதத்தைப் பின்பற்றியவர்களான இக்கடைசி உம்மத்துகளுக்கு, அதாவது முஸ்லிம் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்களுக்கு, நியாயத் தீர்ப்புநாள் வரை ஹஜ்ஜுச் செய்வதைக் கடமையாக்கிவிட்டது. ஆகவே, திரேக சுவாத்தியமும், தன்னுடைய பிரயாண காலத்தில் தன் குடும்பத்தாருக்கு வேண்டிய அன்னவஸ்திரம் அளிப்பதற்குத் தக்க வசதியும் இப்பிரயாணத்துக்குரிய சாமக்கிரியைகளுமுள்ள ஒவ்வொருவர்மீதும், வயதில் ஒருமுறை ஹஜ்ஜுச்செய்வது கடமையாக இருக்கிறது. இவ்விதமான பிரயாணத்தை ஏற்றுக்கொண்டு, ஹஜ்ஜுக்கு வருபவர்களைப் பற்றி, ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இறைவனிடம் "நாயனே! உன்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இக்கடமையை நிறைவேற்றுபவர்களுக்கு அவர்களின் பாபங்களை நீ மன்னித்தருள்வாயாக!" என்று பிரார்த்தனை புரிந்திருக்கிறார்கள்.

"(எங்கள் றப்பே!) எங்களுடைய ஹஜ்ஜு வணக்கத்தை எங்களுக்குக் காண்பித்துத் தருவாயாக, இன்னும் எங்களது பாபங்களை எங்களுக்கு மன்னிப்பாயாக. நிச்சயமாக நீதான் தௌபாவை ஒப்புக்கொள்பவன் என்றும், அடியார்கள்பால் அன்புள்ளவன்" என்றும் பிரார்த்தனை புரிந்தார்கள். இந்தப் பிரார்த்தனையும் இறைவன் தர்பாரில் அங்கீகரிக்கப்பட்டது. "ஒருவர் ஹஜ்ஜுக்குச் சென்று, அங்கு பாபம் செய்யாமல் அதன் சட்ட திட்டங்களின்படி சரியாக ஹஜ்ஜை நிறைவேற்றி விட்டுத் திரும்புவாராயின், அவர் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து அன்று பிறந்தவரைப்போல் எவ்விதப் பாபமும் இல்லாதவராகத் திரும்புகிறார்" என்று நாயகம் (ஸல்.) அவர்கள்சொல்ல நான் கேட்டேனென்று, ஹஜ்ரத் அபூஹுரைரா (றலி.) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். (புகாரி-முஸ்லிம்.)

கொல்லுலைகளானது இரும்பை நன்றாகக் காய்ச்சி அதிலுள்ள துருக்களை அகற்றி, அதை இளகலானதாக ஆக்குவதேபோல், ஹஜ்ஜு என்ற உலையானது, மக்களின் பாப அழுக்கைப் போக்கி, அவர்களைப் பரிசுத்தவான்களாக ஆக்கிவிடுகிறது. இன்னும் ஹாஜிகள் தொடர்ந்து நீண்டதூரம் பிரயாணம் செய்வதால் அவர்களிலுள்ள சோம்பலை நீக்கிச் சுறுசுறுப்புள்ளவர்களாக ஆக்கி, பிரயாணப்பழக்கமுள்ளவர்களாகவும், வியாபாரம், வர்த்தகம், தொழில் ஆகியவைகளில் விருப்பமுள்ளவர்களாகவும் செய்து, அபிவிருத்தியடைந்தவர்களாக ஆக்கிவிடுகிறது. இதனால் ஹாஜிகளின் தரித்திர நிலைமை நீங்கிவிடுகிறது.

"ஹஜ்ஜு உம்ராவை ஒன்றுக்குப்பின் ஒன்றாக நிறைவேற்றுங்கள்; உலையானது இரும்பு, தங்கம், வெள்ளி ஆகியவைகளிலிருந்து அழுக்குகளைப் போக்குவதுபோல், தரித்திரத்தையும் பாவத்தையும் இவ்விரு கிரியைகளும் போக்குகின்றன. நேர்மையான முறையில் நிறைவேற்றப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு பிரதிபலனில்லை" என்று நபிகள்நாயகம் (ஸல்.) அவர்கள் கூறியதாக, ஹஜ்றத் அப்துல்லாஹ் (றலி.) ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். (திர்மிதி). அரபாத்தின் முற்றவெளியில், லட்சக்கணக்கான நல்லடியார்கள் தலையைத் திறந்தவர்களாகவும், தூசு, புழுதிபடிந்தவர்களாயும், அங்கவஸ்திரம் மட்டும் அணிந்தவர்களாகவும், கால்தும்படியான வெய்யலில் நின்றுகொண்டு,

கையை உயர்த்தி, கண்களிலிருந்து நீர் வடிய, தேவையற்றவனை இறையின் சமூகத்தில் தௌபாவும் இஸ்திஃபாரும் (பாவ மன்னிப்பு தேடுதல்) செய்யும்போது, அல்லாஹுத ஆலா வின் கருணை என்ற சமுத்திரம் பொங்கிப் பெருக்கெடுக்க ஆரம்பிக்கிறது. அதுசமயம் அடியார்களின் பாவம் என்ற குப்பைக்கூளங் களெல்லாம் அப்பிரவாகத்தில் அடித்துக் கொண்டு போகப்படுகின்றன என்று ஹதீதில் வந்திருக்கிறது.

அல்லாஹுத ஆலா தனது அடியார்களை, நரகத்தைவிட்டு விடுதலை செய்வதற்கு அறபா வுடைய நாளைப்பார்க்கினும் மேலான நாள் வேறெதுவுமில்லை; அந்த நாளில் அல்லாஹுத ஆலா மிகவும் நெருங்குகிறான். பின்னர், மலக்குகளிடத்தில் தன்னுடைய அடியார்களைப் பற்றி பெருமையாகப்பேசி, என்னுடைய திருப்தியைத் தவிர வேறெதையும் இவர்கள் நாடவில்லையென்று கூறுகிறான் என்பதாக நாயகம் (ஸல்.) அவர்கள் தெரிவித்ததாக, ஹஜ்ரத் ஆயிஷாஸித்தீக்கா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியிருக்கிறார்கள். "முஸ்லிம்."

இந்த ஹதீதுகளிலிருந்து ஹஜ்ஜு, உம்ராச் செய்யும் நல்லடியார்களின் பிழைகள் பொறுக் கப்படுகின்றன என்பதையும், அவர்கள் நர கத்தைவிட்டு மீட்சிபெறுகின்றனர் என்பதை யும் நாம் நன்கு உணர்ந்துகொள்கிறோம். இதுவு மன்றி, ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் கூறிய றிவாயத்திலிருந்து இஸ்லாம் என்ற கட்டிடம் 5 பெரும் தூண்களினால் கட்டப்பட்டிருக்கின் றன என்பதையும், அவ்வைந்து தூண்களில் ஹஜ்ஜுச் செய்வதும் ஒன்று என்பதையும் நாம் அறிந்துகொள்கிறோம்.

### இஸ்லாத்தையும் குப்ரையும் பிரித்துக்காட்டும் கரை

நேரான சன்மார்க்கமாகிய இஸ்லாத்துக்கு, பைத்துல்லாவாகிய கஃபாஷரீப் தலைமை ஸ்தல மாக இருக்கிறது. இந்த ஒரு மத்திய ஸ்தலம் தான், உலகத்தின் பல பாகங்களிலும் பரவி யிருக்கிற முஸ்லிம்களை, வருஷத்துக்கு ஒரு முறை ஒன்றுகூட்டி, உலக ஒற்றுமையை நிரூ பித்துக் காட்டுகிறது. இதனால்தான், பைத்துல் லாஹ்வாகிய கஃபாவை ஹஜ்ஜுச் செய்வதா னது, குப்ருக்கும் ஈமானுக்குமிடையில் பிரித்து வைக்கும்படியான கரையாக இருக்கிறது. எனவே எவருக்கு இந்த பைத்துல்லாவினிடத் தில் சம்பந்தமிருக்கிறதோ அவர் இஸ்லாம் என்ற வட்டத்துக்குள் வந்தவராக இருக்கிறார். இதனால்தான் இறைவன் மனிதர்களில் சக்தி யுள்ளவர்கள்மீது வயதில் ஒருமுறை பைத் துல்லாவை ஹஜ்ஜுச் செய்வது கடமை என்று ஏற்படுத்தியிருக்கிறான். சக்தியிருப்பதுடன் பைத்துல்லாவை ஹஜ்ஜுச் செய்யாமலிருப் பதை "குப்ரு" என்று இறைவன் கண்டித் துணர்த்தியிருக்கிறான். ஆனால், கல்வினாலும், காறையினாலும் கட்டப்பட்ட இந்த கட்டிடத் துக்குவந்து ஹஜ்ஜுக்கிரியைகளை நிறைவேற் றாமலிருப்பதால் பரிசுத்தம் பொருந்திய ஏக னான அவ்விறையோனுக்கு எவ்விதக்குறையும் வந்துவிடுவதில்லை. எனினும், அவனது கட்ட ளைக்குக் கீழ்ப்படியாமலிருப்பதால் மக்கள்தாம் நஷ்டவாளிகளாகிவிடுகிறார்கள். இதைத்தான் நபிகள்கோன் (ஸல்.) அவர்கள் "வழிப் பய ணத்துக்குரிய சாமக்கிரியைகளும் வாகனங்களு முள்ளவர்கள், கஃபாவுக்கு வந்து ஹஜ்ஜுச் செய்யாமலிருந்தால், அவர்கள் யூதராகவோ கிறிஸ்துவராகவோ மரிப்பதைத்தவிர வேறு இல்லை" என்று கூறியதாக ஹஜ்ரத் அலீ (றலி) அவர்கள் இயம்பியிருக்கிறார்கள். (திர்மிதி.) அதாவது ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர் களின் வணக்க ஸ்தலமாகிய கஃபாவுடன் சம் பந்தம் வைத்துக்கொள்வதுதான் யூத கிறிஸ்து வர்களைவிட்டு முஸ்லிம்களைப் பிரித்துவைப்ப தாக இருக்கிறது.

ஆகவே, இவ்விதிகளையும், கட்டளைகளையும் சக்தியுள்ள முஸ்லிம்கள் நன்கு கவனிக்கவேண் டும். இதுவரை ஹஜ்ஜுச் செய்யாமலிருக்கிற முஸ்லிம் கனவான்கள் இறுதிவரை முஸ்லிமாக இருந்து மரிக்க விரும்புகிறார்களா? அல்லது யூத கிறிஸ்துவர்களாக மனமாற்றமடைந்து மரிக்க விரும்புகிறார்களா என்பதைச் சிந்தித் துப் பார்க்கவேண்டும். ஆனால் இஸ்லாத்தின் இந்த கிப்லாவைப்பாழடைந்ததாகவும், நேரான மார்க்கமாகிய இஸ்லாத்தின் தலைமை ஸ்தா னத்தை அடையாளம் தெரியாததாகவும் ஆக்க வேண்டுமென்று யூதரும் கிறிஸ்துவரும் இஸ் லாத்தின் ஆரம்பகாலம் முதல் முயன்றுவரு கிறார்கள்.

### நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் அழைப்பு

முஸ்லிம்காள்! எழுந்திருங்கள்!! ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலம் முதல் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள்

காலம்வரையிலும், இன்னும் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலம் முதல் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலம்வரையிலும், இன்னும் நாயகம் (ஸல்.) அவர்கள் காலம் முதல் இன்றுவரையிலும் நிறைவேற்றப்பட்டு வருகிற கடமையான இக்கிரியையை நிறைவேற்றுங்கள்! இன்னும் அந்த நபிமார்களின் மஷ்ஹதுகளை தரிசியுங்கள்! இன்னும் அவர்கள் செய்த மனுஸிக்குகள் என்னும் வணக்கங்களை நிறைவேற்றி, உங்கள் இருதயங்களிலும், அகக்கண்களிலும் ஞானஒளியை நிறப்புங்கள்! இவைகள் நபிமார்களின் ஞாபகார்த்தங்களாகவும், அல்லாஹ் தஆலாவின் பக்தர்கள் அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து தியாகம் செய்த 'ஷஆயிர்' கள் என்னும் அடையாளங்களாகவு மிருக்கின்றன. ஆகவே, பிரார்த்தனைகள் ஒப்புக்கொள்ளப்படுகிற ஸ்தலங்களாகிய இப்புண்ய பூமிகளுக்குச் செல்லுங்கள்! உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக அரபா, முஸ்தலிபா, ஸபா மர்வா, மீஜாப், மஷ்அருல்ஹறும், கஃபத்துல்லா ஆகிய ஸ்தலங்களில் பிரார்த்தனை புரியுங்கள்! சமூகத்துக்கும் முஸ்லிம்களுக்கும் நன்மையபக்கும் காரியங்களைப்பற்றி மற்றவர்களுடன் கலந்தாலோசனை செய்யுங்கள்! அல்லாஹ்த ஆலாவின் றஸூல்மார்கள் தியாகம் செய்த மலைக்குன்றுகளை தரிசியுங்கள்! பரிசுத்த நபிமார்கள் சிற்பிகளாகவும் கட்டிட வேலைக்காரர்களாகவும் இருந்து கட்டிய கஃபா என்னும் தேவாலயத்தில் தொழுகையை நிறைவேற்றுங்கள்! அந்த இடத்தில்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை அடைந்தார்கள். அங்குதான் திரு குர்ஆன் அருளப்பட்டது. ஹஜ்றத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் முதலிய வானவர்கள் இறைவன் கட்டளைகளைக் கொண்டுவந்தார்கள். இவ்வுலக ஜீவியம் நம்பத்தகுந்ததல்ல. இந்தச்செல்வங்கள் நிலைத்திருப்பனவல்ல. இப்பொழுது நமக்கிருக்கிற ஜீவியம் கொள்ளை முதலைப்போலாகும். இன்று கிடைத்த தருணம் நாளைக் கிடைக்கும் என்ற உறுதி இல்லை. மறுஉலக வாழ்க்கைக்குரிய பிரயாணம் உங்கள் முன் வருவதற்குள் கஃபத்துல்லாவுக்குச் செல்லவேண்டிய கடமையை முடித்துக்கொள்ளுங்கள்!

அடிபணிந்தோம் - நாயனே! அடிபணிந்தோம்!! உனக்கு யாரும் இணை கிடையாது. உனக்கே அடிபணிந்தோம்!!! நிச்சயமாக எல்லாப் புகழும் உனக்கே தகும். உனக்கே நன்றி செலுத்துகிறோம்.

பரிசுத்த பூமிகளினுடையவும், ஹறமைனிஷ்ஷரீபைனியுடையவும் சுயேச்சையானது அத்தேச அரசாங்கத்தின் செல்வநிலை திருப்திகரமாக இருப்பதைப் பொருத்திருக்கிறது. ஆதலால், ஹாஜிகள் அதிகமாக ஆங்குச் செல்வதன்மூலம் அத்தேசத்துடையவும் அரசாங்கத்துடையவும் செல்வநிலையைச் சீர்படுத்துங்கள்! இம்முக்கிய விஷயங்களை உலமாக்களும், தலைவர்களும், சங்கங்களும், பேஷ் இமாம்களும், செல்வாக்குள்ளவர்களும் பொது ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் ஹஜ்ஜுக்குச் செல்லுமாறு தூண்டுவார்களாக!!!

---

# லைலத்துல் கத்ர்

## திருகுர்ஆன் அருளப்பட்ட இரவு

"நிச்சயமாக நாம் அதை கத்ருடைய இரவில் இறக்கினேம்."

எல்லா மாதங்களைப் பார்க்கினும் றமலான் மாதத்துக்கு அதிகச் சிறப்பும் மேன்மையும் உண்டு என்பதையும், இந்த மாதத்தில் தான் நோன்பு பர்லாக்கப்பட்டதென்பதையும், இம்மாதத்தில் இறைவன் திருகுர்ஆனை இறக்கியதால் அந்தப் பெரிய பேருளை நினைத்து, அவ்வருள் அருப்பிய அந்த மாதத்தையே இறைவனுக்காக இபாதத்—வணக்கம் புரிவதற்கும், நோன்பு நோற்பதற்குமான மாதமாக இறைவன் ஏற்படுத்திவிட்டான் என்பதையும் முஸ்லிம்களுக்கு எடுத்துக் காண்பிக்கவேண்டியதில்லை. ஆகவே, இம்மாதத்தில் முஸ்லிம்கள் உலகமெங்கணும் விசேஷமாக இறைவன் பாதையில் நல்லகாரியங்களைச்செய்ய முற்படுகிறார்கள்.

அத்துடன் இந்த மாதத்தில் மனிதருக்கு மிகவும் மங்களமான ஒரு இரவு இருக்கிறது. அந்த இரவுக்கு "லைலத்துல் கத்ர்" அதாவது மாக்ஷிமை பொருந்திய இரவு என்றுபெயர். இந்த இரவில் செய்யவேண்டிய நன்மையான காரியங்களைப்பற்றி எழுதுவதற்குமுன், அந்த இரவுக்கு இந்தப் பெயர் வந்ததற்குள்ள காரணம் என்னவென்பதைக் கவனிப்போம்.

நம்முடைய இத்தேசத்தில் அரசர் பிறந்த நாள், பட்டாபிஷேகம் செய்யப்பட்ட நாள், யுத்தநிறுத்தம் ஏற்பட்ட நாள் என்று, வருஷத்தில் இரண்டு மூன்று முக்கியநாட்களை அரசாங்கத்தார் உத்தியோகமுறையில் கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் அரசாங்கத்தின் அரிய பெரிய சேவையைப் பாராட்டித் தங்கள் ராஜபக்தியை பிரஜைகள் செய்கையில் காட்டுகின்றனர். அந்த நாளில் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் கொண்டாட்டங்கள், ஊர்வலங்கள், பிரசங்கங்கள் முதலிய பல விஷயங்களில் பிரஜைகள் போதியளவு பங்கெடுத்துக்கொண்டு அவைகளைச் சிறப்பாக நடத்துவதற்கு அரும் முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். இந்த நாளில் அரசாங்கத்தார் அநேகம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்கிறார்கள். சில கைதிகளை விடுவிக்கிறார்கள். சில கைதிகளுக்குள்ள தண்டனைகளைக் குறைக்கிறார்கள். சில ஜனங்களுக்கு அரசாங்கத்தார் ஜாகீர் முதலியவைகளை வழங்குகிறார்கள். சில ஜனங்களுக்கு பட்டம் பதவிகளை வழங்குகிறார்கள். இது உலகமெங்கும் நடைபெறும் வழக்கமாக இருந்து வருகிறது. உலகத்திலுள்ள சகல அரசாங்கமும் இப்மாதிரியான கொண்டாட்டங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அரசாங்கத்தின்பால் பிரஜைகளுக்கு ராஜபக்தி உண்டாகுவதும், பிரஜைகள்பால் அரசாங்கத்துக்குப் பட்சமும் கருணையும் உண்டாகுவதும்தான் இத்தகைய கொண்டாட்டங்கள் ஏற்படுவதன் முக்கிய நோக்க பலன்.

இதுபோல, எல்லா அரசர்களுக்கும் பெரிய அரசனாகவும், எல்லா அரசாங்கங்களிலும்பெரிய அரசாங்கத்துக்கு அதிபதியாகவும், தான் நினைத்தமாத்திரத்தில் அரசர்களையும், அரசாங்கங்களையும் உற்பத்தி செய்பவனுமுள்ள அல்லாஹு ஜல்லஷானுஹு வதஆலா, அடியார்களாகிய நம்மவர்பால் விசேஷ கருணை பரிபாலிக்கவும், சொற்ப நன்மையான காரியங்களைச் செய்வதற்கு அதிகமான பலன்களைக் கொடுப்பதற்கும் வருஷத்தில் சில முக்கியமான தினங்களை ஏற்படுத்தியுள்ளான். இந்த தினங்களானவை, நம்முடைய உலக அரசாங்கங்களின் விடுமுறையும் கொண்டாட்டத்துக்குரிய நாட்களைப்போலவுமே இருக்கின்றன. இந்நாட்களில் மக்களாகிய நாம், நமது உண்மையான எஜமானனை நினைத்து வணக்கம் புரிவதிலும், தான தருமஞ்செய்வதிலும் ஈடுபட்டு நற்காரியங்களைச் செய்வோமாயின், இறைவன் நமக்கு இனியில்லாவண்ணம் அருள்சுரக்கிறான்.

இத்தகைய விசேஷ தினங்களிலொருநாள், றமலான் மாதத்திலுமிருக்கிறது. அந்த நாளில்தான் இறைவனது அரசாங்கத்தின் திட்டமும் சட்டமும் பொருந்திய வேதம் வெளியிடப்பட்டது. இந்த வேத வெளிப்பாட்டினால், உலகத்திலுள்ள வலியோரால் அக்கிரமமாகச் செய்துவைக்கப்பட்ட அநேக அநீதிகள் அகற்றப்பட்டுவிட்டது. ஆகவே இஃது தெய்வ அரசாங்கமேற்பட்டு மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்த நாளாகும். ஏனெனில், திருகுர்ஆன் அருளப்பட்டபின்னர் தான் உலகில் மனிதவர்க்கத்தின் சரிபாதி பங்காளிகளான ஸ்திரீகள் ஆடவர்களுடன் சம சுதந்திரமும் பாத்தியதையுமுள்ளவர்களாயுமானார்கள். ஒரே புருஷனுக்கு அடிமைப்பட்டு, அவன்செய்யும் கொடுமைகளையும் அக்கிரமங்களையும் சகித்துக்கொண்டு சாகும்வரை துன்பம் அனுபவிக்க வேண்டியதாக இருந்த நிர்ப்பந்தம் ஒழிக்கப்பட்டு, இப்படிப்பட்ட கொடிய கணவனிடமிருந்து விவாகப் பிரிவினையின் மூலம், விவாகப் பந்துத்துவத்தை முறித்துக்கொள்ள உரிமை அளிக்கப்பட்டது. ஸ்திரீகள், புருஷர்களின் அடிமைகளென்று கருதப்பட்டு வந்த விஷயம் மாறி, அவர்கள் புருஷர்களின் சொத்துக்குப் பாகஸ்தர்களாக ஆகிவிட்டனர். தந்தை, தாய், சகோதரன், சகோதரி, கணவன் ஆகிய யாவருடைய சொத்திலும் பாகம் அடையக்கூடிய உரிமையை ஸ்திரீ அடைந்திருப்பதுடன், தனக்கு இஷ்டமில்லாத மணாளனிடம் நிர்ப்பந்தப்படுத்தித் தன்னை வாழ்க்கைப்படும்படி செய்துவரும் கொடிய வழக்கத்தைவிட்டு ஸ்திரீகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இஷ்டமில்லாதவர்களுக்குப் பலவந்தமாக விவாகம் செய்துகொடுத்தால் அவ்விவாகம் சட்டப்படி செல்லாதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உலகத்தின் ஜனங்களில் வலி மிகுந்தவர்கள் பலஹீனர்களை அடிமைப்படுத்தி "அடிமை"த் தனத்தை வளர்த்துவந்தார்கள். திருகுர்ஆனின் சட்டப்படி சுதந்திரவானுக உள்ள எவரும் அடிமைப்படுத்தப்படமாட்டார் என்று தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், புதிதாக அடிமையாக்குவது அடியோடு நின்றது. இவ் வடிமைகளும் சுதந்திரமடைவதற்கான பலசட்டங்களை உண்டுபண்ணி, அடிமை வழக்கத்தைக் குறைப்பதற்கான முறைகளையும் வகுத்தது. அத்துடன், அடிமைகளாக்வுள்ளவர்கள் பட்சமாக நடத்தப்பட வேண்டும்; அவர்கள்பால் அன்பு காட்டவேண்டும் ; அவர்களை தங்களது மக்களைப்போல் பாவித்துப் போஷித்து காப்பாற்ற வேண்டுமென்ற சட்டமியற்றி, மனிதனின் பிறப்புரிமையாகிய சுதந்திரத்தை உலகில் நிலைநிறுத்திற்று. இதல்லாமல், உலகத்தில் யாவரும் சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும் கூட்டுறவாய் வாழ்வதற்கான பல சட்டங்களை இயற்றி, இம்மை மறுமைப் பேற்றுக்கான வழிகளனைத்தையும் திருகுர்ஆன் மக்களுக்குக் காட்டுகிறது. ஆதலால், இப்படிப்பட்ட ஒரு சுதந்திரத்திட்டத்தை ஒரு அரசாங்கத்தார் தமது பிரஜைகளுக்கு அளிப்பார்களாயின், அப்பிரஜைகள் அச்சுதந்திர தினத்தை வருடந்தோறும் திருநாளாகக் கொண்டாடுவார்களென்பதில் ஐயமில்லை. வருஷம் 360 நாட்களிலும் இந்த ஒருநாள்தான் அந்த ஜனங்களிடம் சிறந்ததும் போற்றத்தக்கதுமான நாளாகும். அதுபோலவே, மனித சுதந்திரத் திட்டமும், பாமார்த்திக வழிகாட்டியும் அடங்கியுள்ள திருகுர்ஆன் அருளப்பட்ட தினம், மனிதவர்க்கத்துக்கே புனிதமான ஒரு பெரிய நாளாக இருக்கிறது. ஆகவே, இந்த நாளில் செய்யப்படும்வணக்கம், ஆயிரம்மாதங்களில் செய்யப்படும் வணக்கங்களைக் காட்டினும் சிறந்ததென இறைவன் நமக்கு அறிவித்திருக்கிறுன். அத்தகைய புனித நாளானது இந்த ரமலான் மாதத்தில் "லைலத்துல் கத்ர்" என்ற பெயரால் கொண்டாடப்படுகிறது. இப்படிப்பட்ட புனிதமான இரவானது ரமலான் மாதத்தில்தான் இருக்கிறதென்பதை நாம் திருகுர்ஆனிலிருந்தே தெளிவாகத் தெரிந்து கொண்டாலும், அந்த இரவு இன்ன தேதியில் தான் என்று குறிப்பாகக் கூறப்படவில்லை. ஆதலால், நாம் யாவரும் ரமலான் மாதத்திலுள்ள எல்லா இரவுகளிலும் நல்ல காரியங்களையும் வணக்கங்களையும் புரிந்து, இறைவனின் கருணைக்கும் கிருபைக்கும் உரியவர்களாகுவோமாக! ஆயினும், ஆரிபுகளான பெரியார்களும், இமாம்களும், ஞானவான்களும் திருகுர்ஆன் ரமலான் மாதத்தின் 27-ம் இரவில்தான் வெளியிடப்பட்டது என்று கூறியிருக்கிறுர்கள். வேறு சிலர், ரமலான் மாதத்தின் 21, 23, 25, 27, 29 ஆகிய ஐந்து இரவுகளில் ஒரு இரவு என்று கூறியிருக்கிறுர்கள். ஆயினும், பெரும்பாலான பெரியார்களும், அறிஞர்களும் 27-ம் தேதி இரவையே திருகுர்ஆன் அருளப்பட்ட "லைலத்துல் கத்ர்" என்று கூறியிருப்பதால், அந்த இரவில் நமக்குவேண்டிய காரியங்களை இறைவனிடம் கேட்டுக்கொள்வதிலோ, இன்னும் அவன்பால் நமது பக்தியையும் நன்றியையும் அறிவித்துக்கொள்வதிலோ எவ்விதச் சோம்பலும் காட்டாமல், வணக்கங்களிலீடுபட்டும், தானதர்மங்கள் செய்தும் நற்பயனை அடைய முயலுவோமாக!

---

## ஈதுப் பெருநாள் தொழுகை

ஜும்ஆத் தொழுகை வாஜிபானவர்கள்மீது, இரண்டு ஈதுப் பெருநாள் தொழுகைகளும் வாஜிபு. ஆனுல் தொழுகைக்குப்பின் குத்பா ஓதுவது சுன்னத்தாகும். ஒரு ஊரில் பல இடங்களிலும் பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனுல் ஒரே இடத்தில், அதிலும் 'ஈதுகாஹ்'வில் தொழுவது நல்லது. பெருநாள் தொழுகை யாவரும் ஒன்றுசேர்ந்து தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதால், ஜமாஅத்துத் தவறிவிட்டால் அதைக் கலாச் செய்ய வேண்டியதில்லை. ஆனுல் வேறு இடத்தில் ஜமாஅத்தாகத் தொழலாம்.

சூரியோதயத்திற்குப் பின் ஒரு வல்லயப் பிரமாணத்திற்கு சூரியன் வந்ததிலிருந்து, (அதாவது சூரியன் கிளம்பி ஒரு மணிக்குப்

பின்னிருந்து) மத்தியானம்வரை பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம்.

“இந்தப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்கான நிறைவேற்றுகின்றேன்” என நிய்யத்து (நிர்ணயம்) செய்து “அல்லாஹு அக்பர்” என தக்பீர் கட்டவேண்டும். பின்பு ‘தனு’ ஓதிவிட்டு கையை உயர்த்தித் தக்பீர் சொல்லி கையைத் தொங்கவிட வேண்டும். இவ்விதமாக இரண்டுமுறை தொங்க விட்டு, மூன்றும் முறையில் முன்போல் தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும். இவ்விதமாக மூன்று முறை தக்பீர் சொல்லுவதில் ஒவ்வொரு முறையின் இடை நேரத்தில் மூன்று ‘தஸ்பீஹ்’ ஓதப்பிடிக்கும் அவ்வளவு நேரம் மௌனமாக இருக்கவேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில் தக்பீர் தஹ்ரீமாவையுஞ் சேர்த்து நான்குமுறை தக்பீர் சொல்லவேண்டியதிருக்கும். பின்பு, வழக்கம்போல் எல்லாத் தொழுகையிலும் ஓதுவதுபோல் அஊது, பிஸ்மில்லா, ஸூரத்துல்பாத்திஹா, கிராஅத் ஆகியவைகளை ஓதி, ருகூஉ ஸுஜூது செய்து, இரண்டாவது ரக்கஅத்தை வழக்கம்போல் ஆரம்பித்துத் தொழவேண்டும். ஆனல், கிரஅத் ஓதி முடிந்தபின், முற்கூறிய பிரகாரம் மூன்று முறை தக்பீர் சொல்லிக்கையை தொங்கவிட வேண்டும். பின்பு நான்காம் முறை தக்பீர் சொல்லி ருக்கூஉ செய்யவேண்டும். இவ்விதமாக இரண்டு ரக்கஅத்தையும் தொழுது சலாம் கொடுத்தபின் குத்பா ஓதவேண்டும்.

இமாமைப்பின்பற்றி தொழுவோர், “இந்தப் பெருநாளின் தொழுகையை, இந்த இமாமைப் பின்பற்றி அல்லாவுக்காக நிறைவேற்றுகின்றேன்” என நிய்யத்துச்செய்து, தக்பீர் கட்ட வேண்டும்.

ஈதுல் பித்று பெருநாளன்று, தொழுகைக்கு முன் 1 அல்லது 3, 5 பேரீச்சம்பழங்களை யேனும், அல்லது வேறு மதுரமான வஸ்துக்களையேனும் புசிப்பது முஸ்தஹப்பு. பஜ்றுக்குப்பின் மிஸ்வாக்குச் செய்து, (பல்துலக்கி) நீராடி, தன்னிடமுள்ளவைகளில்சுத்தமானதும் அழகானதுமான உடையை அணிந்து, வாசனை திரவியங்களைப் பூசி, தக்பீர் சொல்லிக்கொண்டு தொழுகை நிறைவேற்றப்படும் இடத்திற்கு நடந்துபோவது முஸ்தஹப்பு.

## பித்று ஸதகா

(ஹனபிமத்ஹபுப் பிரகாரம்)

ஜக்காத்து கொடுக்கக் கடமைப்பட்டவர் ஒவ்வொருவரும் பித்று ஸதகா கொடுக்கவேண்டும் (வாஜிபு). இவ்வாறு கடமைப்பட்டவர்களில் எவர் பித்று ஸதக்கா கொடுக்கவில்லையோ, அவரதுநோன்பு அல்லாஹ்வின் சமுகத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாதென, ஹதீதுஷரீபில் கூறப்பட்டுள்ளது. ஸதக்கா கொடுப்பதால், ஏழைகளுக்கு உபகாரஞ்செய்து, அன்றைய திருநாளில் அவர்களும் மற்றவர்களுடன் சேர்ந்து சந்தோஷங்கொண்டாட ஹேது எற்படுகிறது. ஆதலால் பித்று ஸதக்காவைத் தொழுகைக்குச் செல்லுமுன் கொடுப்பதும், ஷை ஸதக்காவை தானியமாகக்கொடுப்பதைப் பார்க்கினும் ஏழைகள் தங்களுக்குத் தேவையான எதையும் சுலபமாக வாங்கிக்கொள்ளும் வண்ணம் அதைப்பணமாகக் கொடுத்துவிடுவதும் உத்தமம். குடியிருக்கவீடு, கடன் முதலிய அவசியமான செலவுகளுக்குமேல் $52\frac{1}{2}$ ரூபாய், அல்லது அது பெறுமானமுள்ள சொத்துக்களையுடைய ஒவ்வொருவரும் தனக்காகவும், தன் சிசுக்களுக்காகவும் பித்று ஸதக்கா கொடுப்பது வாஜிபு. நோயாளி, பிரயாணி, கர்ப்பஸ்திரீ மாதவிடாய் கொண்ட பெண் ஆகியவர்கள் மேற்கண்ட காரணங்களால் நோன்பு நோற்காவிட்டாலும், அவர்களிடம் மேற்கண்ட விகிதப்படி சொத்திருந்தால் அவர்கள் பித்று ஸதக்கா கொடுக்கவேண்டும். (வாஜிபு)

மணிக்கோதுமை, முந்திரிப்பழம், கோதுமைமாவு, ரவா ஆகியவைகளை பித்று ஸதக்காவாகக் கொடுக்க விரும்பினல், அரை ‘ஸாஉ’ கொடுக்க வேண்டும். வாற்கோதுமை, பேரீச்சம் பழம் ஆகிய இவைகளைக் கொடுப்பதானல் ஒரு ‘ஸாஉ’ கொடுக்கவேண்டும். இவைகளையல்லாமல் தன்னிடமுள்ள நெல், சோளம், கம்பு முதலிய தானியங்களைக் கொடுக்க விரும்பினல், முற்கூறப்பட்ட அளவுள்ள கோதுமை முதலியவைகளை கிரயம் செய்து, அக்கிரயத்துக்கேற்ற தானியத்தைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதைப் பார்க்கிலும் கிரயத்தைப் பார்த்து பணமாகக் கொடுப்பதே மேல். ஜகாத் பணத்தை யார் யாருக்குக் கொடுக்கலாமோ, அவர்களுக்கு பித்று ஸதக்காவும் கொடுக்கலாம். ஆனல் பந்துக்களில் பித்று ஸதக்காவை

வாங்கத் தகுந்த யோக்கியதையுள்ளவர்களிருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதுதான் நல்லது. பலருடையதை ஒரு மிஸ்கீனுக்குக் கொடுக்கலாம். அவ்வாறே ஒருவருடையதை பலருக்குக் கொடுத்தலும் பொருந்தும். ஆயினும் அவ்வாறு ஒருவருடைய ஸதக்காவைப் பலருக்குக் கொடுப்பது கூடாதென சிலர் கூறுவதால், பேணுதலுக்காக ஒருவருக்கே கொடுத்துவிடுவது உத்தமம்.

தற்காலம் அரசாங்க அமுலிலுள்ள அளவைகளில், பட்டணம் படியில் ஒரு படி 130 ரூபா எடையுள்ளது. இதன்படி ஒரு 'ஸாஉ' என்பது இரண்டுபடியும் 13 ரூபாய் எடையுள்ளதுமான $2\frac{1}{10}$ படியாகும். இக்கணக்குப்படி அரை 'ஸாஉ' என்பது, மதறாஸ்படியில் சுமார் ஒன்றே ஒரு வீசம் படியாகிறது. தற்பொழுது மதறாஸில் மணிக்கோதுமை படி 1-க்கு ரூ. 0-3-6 விற்கிறது. இதன்படி ஒன்றேவீசம் படிக்கு சுமார் 4-அணுவாகிறது. இதுதான் ஒருவருடைய சதக்கத்துல் பித்ராகும். இவ்வாறே அந்தந்த ஊர்களில் கோதுமையின் கிரயத்தை நிதானித்து அதன் கிரயத்தைக் கொடுக்க வேண்டும்.

(ஷாபிஈ மத்ஹபுப் பிரகாரம்)

தனக்காகவும் தன் போஷணையிலிருக்கிற மனைவி, மக்கள் முதலியவர்களுக்காகவும், தன் ஊரில் முக்கியமாக உபயோகிக்கப்படுகிற தானியத்தில் ஒரு 'ஸாஉ' பித்று கொடுப்பது வாஜிபு. இதன் விலையைக் கொடுக்கக்கூடாது. இந்த பித்று வாஜிபாவதற்கு நான்கு ஷரத்துகள் இருக்கவேண்டும். அவையாவன :—

1. முஸ்லிமாக இருக்கவேண்டும். தன் போஷணையில் இருப்பவர்களுக்காகப் பித்ரு கொடுக்க வேண்டுமாயின், அவர்களும் முஸ்லிமாக இருக்கவேண்டும்.

2. தான் அடிமையாக இருக்கக்கூடாது.

3. பெருநாள் இரவு வருவது அதாவது முதல்நாள் சூரியாஸ்தமனமாகுதல்.

4. கடன் இல்லாமலும், தனக்கும் தன் பராமரிப்பிலுள்ள மனைவி மக்கள் ஆகியவர்களுக்கும் தேவையான இருப்பிடம், உடமை, உடை முதலியவைகள், பெருநாளின் இரவுபகலில் தனக்கும் தன் குடும்பத்துச் செலவுகளுக்கும் தேவையானவைகள் போக அதிகப்படும்படியான சொத்துக்கள் இருக்கவேண்டும்.

இந்த நான்கு ஷரத்துகளில் ஏதேனும் ஒன்று இல்லாதிருந்தால் ஸதக்கா வாஜிபாகாது.

---

# இஸ்லாமும் ஐரோப்பாவும்

(பிரஞ்சு ராஜதந்திரி எழுதியது)

இஸ்லாத்துக்கு விரோதமாகப் பலமான பிரசாரம் நடத்தப்பட்டபோதிலும், இஸ்லாம் முன்னேறிக்கொண்டேதான் இருக்கிறது. இஸ்லாத்தை புதிதாகத் தழுவுபவர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. இதற்குக் காரணமென்ன? இஸ்லாம் மதம் டாம்பீகமற்றதாகவும், யாவரும் சுலபமாக கைக்கொள்ளத்தக்க சாமான்யமான சட்டதிட்டங்களுள்ளதாகவும், உலகமெல்லாம் பரவத் தகுந்ததாகவும், நாகரீக வளர்ச்சிக்குரியதாகவும் இருப்பதேயாகும். நம்முடைய இக்காலத்தில் இவ்விஷயங்கள் மிக முக்கியமானது. இவைகளையல்லாமல் இக்காலத்திலுள்ள அறிஞர்கள் தற்போது இஸ்லாம் மதத்தைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்துவிட்டனர்; இஸ்லாம் மதத்தில் சொல்லப்பட்டுள்ள தத்துவங்களை அறிந்துகொள்வதில் அதிகம் ஆர்வமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

ரோமன் கத்தோலிக்கர் தங்களுடைய முழுபலத்தையும் இஸ்லாத்துக்கு விரோதமாக உபயோகித்து, இஸ்லாம் மதத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஐரோப்பிய அரசாங்கங்களைத் தூண்டிக்கொண்டிருப்பதுடன் தங்களுடைய இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அநேகம் உபாயங்களையும் கைக்கொண்டிருக்கின்றனர். சிலுவை யுத்தத்தை ஆரம்பித்தனர்; துருக்கி சுல்தான்களுக்கு விரோதமாகத்

தொடர்ச்சியாகப் பல யுத்தங்களைச்செய்து மிகவும் பலம்பொருந்திய அவ்வரசாங்கத்தின் பலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைத்தனர்; வேண்டுமென்றே இஸ்லாத்துக்கு விரோதமான பல பிரச்சினைகளை உற்பத்தி செய்தனர்.

ஆயினும், இஸ்லாம் இவைகளுக்குப் பயந்துவிடாது, முறைப்படியே முன்னேற்றமடைந்துகொண்டிருப்பதுடன் தன்னுடைய சத்தியத்தன்மையினும் சிறந்த குண விசேஷத்திலும் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறது. மேலும் இஸ்லாம் மதம் எல்லா நபிமார்களையும் ஒன்றுபோல் கௌரவிக்கிறது. ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்களையும் மர்யம் ஸித்தீக்காவையும் கூட அது கௌரவிக்கிறது. இது உண்மையில் போற்றத்தக்க விஷயமாகும். துருக்கி அரசாங்கத்தின் ஆதிக்கத்திலிருந்த தேசங்களில் பெரும்பாலானவை, தற்போது மேனாட்டரசாங்கத்தின் ஆதிக்கத்திற் குட்படுத்தப்பட்டு, அவைகள் பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ராஜ்யங்களில் வசிக்கும் முஸ்லிம்களுடன் ஐரோப்பியர்கள், மனிதத் தன்மைக்கு முற்றும் மாறான விதத்தில் பல தடவைகளிலும் நடந்துகொண்டிருக்கின்றனர்; திருப்போலி முதலிய தேசங்களிலுள்ள ஜனங்கள் முற்றிலும் அழிந்துபோகக்கூடிய விதமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. சில பட்டணங்களைத் தவிர்த்துப் பாக்கியுள்ள இடங்களில் திருகுர்ஆனைப் போதிக்கும் மத்ரஸாக்கள் மூடப்பட்டுவிட்டன. அவைகளுக்குப் பதிலாக வேறு பள்ளிக்கூடங்கள் திறக்கப்படவே இல்லை. பாதிரிமார்களின் போதனைகள் சுலபமாகப் பலன்பெறுவதற்காக அவர்கள் இஸ்லாம் மார்க்கக் கல்விகளில்லாத ஜனங்களாக ஆக்கப்படுகின்றனர். இந்தக் கருத்தின்மீது டேட்டோன்ஷியாவில் சென்ற 1930-ல் கிறிஸ்துவ காங்கிரஸ் கூட்டப்பட்டது. இன்னும் அதே வருஷத்தில் மொரோக்கோவில் நாம் அநேகம் முயற்சிகளைச் செய்தோம். ஆனால், இவ்விரு முயற்சிகளும் நாம் எதிர்பார்த்ததற்கு மாறான பலன்களையே அளித்தன.

மகாயுத்தத்துக்குப் பின்னர் இஸ்லாமும், அரபி தேசங்களும் தங்களுடைய தூக்கத்தை விட்டு விழித்துக்கொண்டன; இஸ்லாமிய நாடுகள் முழுவதிலும் சகோதரத்துவம் என்ற அலை வீசிக்கொண்டிருக்கிறது; மத சம்பந்தமான கிரந்தங்கள் பிரசுரிக்கப்படுகின்றன; முஸ்லிம்கள் தங்களுக்குள் எவ்வித வித்தியாசமுமின்றி ஒருவருக்கொருவர் சம்பந்தங்களை உண்டாக்கிக்கொண்டு, ஒரு சங்கிலிக்குள் இணைக்கப்பட்டு வருகிறார்கள்; முஸ்லிம்களுக்குள் பிளவும் வேற்றுமையும் உண்டாகுவதற்காக, ரோமன் கத்தோலிக் செய்த எல்லாக்காரியங்களும் தோல்வியடைந்தன. ஆகவே, ரோமன் கத்தோலிக்கின் திட்டத்தை அனுஷ்டிப்பதன் பலன் எப்பொழுதும் தீங்கையே அளித்துவருகின்றன என்பதையும், இனிமேலும் அது இவ்விதமான பலனையே கொடுக்கும் என்பதையும் என்னுடைய தேசாபிமான உணர்ச்சியாலும், இஸ்லாத்தின்பாலுள்ள அபிமானத்தாலும் என் தேசத்துக்கு நான் அறிவித்துவிட முயற்சிக்கிறேன். கீழ்நாட்டில் ஏற்படுகிற அறபிகளின் ஐக்கியமானது நம்முடன் நேசமாக இருக்குமாயின் அது நமக்கு நன்மை பயக்கும். ஏனென்றால், இந்த ஐக்கியத்தில் லக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் சேர்ந்திருப்பார்கள். இதேவிதம் வட ஆப்பிரிக்காவில் நாம் முஸ்லிம்களை நல்லவிதமாக நடத்துவோமாயின், அவர்களுக்கும் நம்பாலிருந்த அபிமானம் மறுபடியும் உண்டாகும். இதல்லாமல் அரபி தேசம்மேனாட்டில் ஒரு நண்பனைத்தேடிக்கொண்டிருக்கிறது; அதற்கு நாம் இடங்கொடுப்போமாயின் அத்தேசம்நமக்கு உண்மையான நண்பனாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற வருஷத்தில் யான் எழுதிய "வட ஆப்பிரிக்கா முஸ்லிம்கள்" என்ற புத்தகத்தின் இறுதியில், இதற்கான பரிகாரம் என்னவென்பதைப்பற்றியும் குறிப்பிட்டு அதில், நெப்போலியனின் திறமையைப் பிரஸ்தாபித்திருக்கிறேன். அவர் முகக்குறியிலிருந்து மனப்பான்மையை நன்கு தெரிந்துகொள்பவராக இருந்தார். ஆகவே, பிரான்சு தேசம் தன்னுடைய நோக்கத்தில் வெற்றிபெற விரும்புமாயின், நெப்போலியனைப் பின்பற்றவேண்டும். அறபி தேசமும், முஸ்லிம் உலகமும் நம்முடைய இம்மனமாற்றத்தை அவசியம் மதிக்கும். இந்நோக்கத்தை அடைவதற்காக மேலெழுந்தவாரியாக நாம் எல்லா வேலையையும் செய்திருக்கிறோம். ஆனால், கிரியாம்சையில் நாம்இதில் முன்னேறி வரவேயில்லை. இந்த நுட்பத்தைப் பிரஞ்சுக்காரர்கள் இன்று உணரவில்லை. அரசாங்கத்துக்கு இதைப்பற்றி

[stamp]

உணர்ச்சியுண்டாக்க நம்மிடத்தில் எவ்வித உபாயமுமில்லை. இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் நமக்கு உதவி புரிவார்களா?

உலகத்தில் அமைதியை நிலைநிறுத்துவதில் நாம் வெற்றிபெறுவதற்காக பொதுஜனங்களின் முகக்குறியினால் இவ்வேண்டுகோளை என்னுடைய கடைசிப் புத்தகத்தில் விடுத்துளேன். இஸ்லாமிய சமூகத்துடன் ஒற்றுமையாக இருப்பது என்பதற்கு, உலகத்தின் நாலிலொரு பாகத்தினர் நமக்கு உதவிக்காரர்களாகவும் உபகாரிகளாகவும் ஆகிவிடுவார்கள் என்பது பொருளாகும். ஆனால், பிரான்சுதான் இஸ்லாத்தின் பக்கல் சிநேகப்பான்மையுடன் முதலில் கையை நீட்டவேண்டும்.

---

# பெண் கல்வி

இஸ்லாம் மதம், ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி அனைவரும் கல்வி கற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறது. இக்கட்டளைக்கேற்ப இஸ்லாத்தின் முதற்காலத்தில் முஸ்லிம் ஸ்ரீமாட்டிகளில் அநேகம் மேதாவிகளும், கவிவாணிகளும், அறிஞர்களும், ஸூபிகளும், ஆலிம்களும் தோன்றி இருந்தனர். மக்களில் தோன்றிய புதிய சந்ததியினரும் இவர்களின் முயற்சியால் கற்றறிந்த பெரியார்களாகத் திகழ்ந்தனர். ஒரு சமூகத்தில் அஞ்ஞானம் என்ற இருள் நீங்கவேண்டுமாயின் தாய்மார்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்படல்வேண்டும். தாய்மார்கள் கல்வி என்னும் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தால், அவர்களால் பெற்று வளர்க்கப்பெறும் குழந்தைகளும் அறிவுள்ளவர்களாகவும் விவேக முள்ளவர்களாகவு மிருப்பார்கள். ஸ்திரீகளிடம் கல்வி இல்லாதிருந்தால், பிள்ளைகள் விவேக முள்ளவர்களாகவும் சிறந்த அறிவாளிகளாகவுமிருப்பது துர்லபம். ஆதலால் தான், இஸ்லாம் மதம் கல்விகற்பதை ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் ஒன்றுபோல் கடமையாக ஆக்கி இருக்கிறது. பெண் கல்வி என்ற மட்டில் அதை எச்சமூகத்தாரும் எவ்வர்க்கத்தாரும் ஆக்ஷேபிக்கவோ, நிராகரிக்கவோ மாட்டார்கள். ஆனால், பெண்களுக்கு எத்தகைய கல்விவேண்டும், அவர்களுக்கு எம்முறையில் கல்வி போதிக்கப்படல் வேண்டும் என்ற விஷயங்களில் தான் பற்பல சமூகத்தாரும், பற்பல மதத்தாரும், பற்பல வர்க்கத்தாரும் பலதிறப்பட்ட அபிப்பிராய முள்ளவர்களாக இருக்கிறார்கள். இதற்கேற்ப, தற்காலம் இந்திய நாட்டில் கற்பிக்கப்படும் கல்வி ஸ்திரீகளுக்கு அவசியமாகக் கற்பிக்கப்படவேண்டிய கல்வியா? என்ற விஷயத்திலும், நமது நாட்டிலுள்ள கல்விச்சாலைகள் ஸ்திரீகளும் புருஷர்களும் சேர்ந்து கல்வி பயிலத்தகுந்தவைகளா என்ற விஷயத்திலும் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் பலத்த அபிப்பிராய வித்தியாசமுண்டு. எனவே, மார்க்க பக்தியுள்ள முஸ்லிம்கள், முஸ்லிம் சிறுமிகளுக்கு மார்க்க கல்வி பயிற்றுவிப்பதுடன் ஸ்திரிகளுக்குரிய வெட்கம், நாணம், மடமை, பயிற்பு ஆகிய லக்ஷணங்கள் அவர்களைவிட்டு மாறக்கூடாதென்றும், மார்க்கப்பற்றுள்ள தாய்மார்களாகவும், இஸ்லாமிய ஆசாரம், ஒழுக்கம் முதலியவைகள் நிரம்ப உள்ளவர்களாகவும் இருப்பதுடன் குடும்பத்துக்குத் தேவையான அளவுக்கு லௌகீகக் கல்விபயின்றவர்களாக இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். தவிரவும், முஸ்லிம்களுக்குள் இருக்கிற பர்தா முறையினால் முஸ்லிம் பெண் குழந்தைகள் சுமார் 10 வயதுவரை வெளியிற் சென்று கல்விச்சாலைகளிற் கல்வி பயிலத்தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதற்கப்புறம் கல்விச்சாலையில் மற்றவர்களைப்போல் கல்வி பயிலத்தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள் என்று கூற முடியாது. இதனால், முஸ்லிம் பெண்கள் ஆங்கிலம் கற்று பி. ஏ, எம். ஏ. பட்டதாரிகளாக வேண்டுமா? இத்தகைய கல்வி கற்பிப்பது மிக அவசியமா என்பதை முஸ்லிம் சமூகம் தற்போதைய நிலைமையில் ஒப்புக்கொள்வதற்கில்லை. ஆனால், நவநாகரீகத்தில் ஈடுபட்ட இந்தியர்கள்—இவர்களில் முஸ்லிம் முஸ்லிமல்லாதார் யாவரும்—ஸ்திரீகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதையும், அவர்கள் பி. ஏ, எம். ஏ. பட்டதாரிகளாக இருப்பதையும் தங்களுக்குரிய பெருமையாகக் கருதுகிறார்கள். அறிவைத் தேடிக்

கொள்ளவேண்டும் என்ற முறையில் ஸ்திரீகள் உயர்தரக்கல்வி பயிலுவதில் யாருக்கும் ஆக்ஷேபணையில்லை. ஆனல், தற்போதுள்ள உயர்தரக் கல்வியை அவர்கள் கற்றுக்கொள்வதால் வேறு பிரயோஜனமிருக்கிறதா? நாட்டுக்கு அவசியமிருக்கிறதா என்றல், அதை "இல்லை" என்றுதான் வருத்தத்துடன் சொல்லவேண்டியதாக இருக்கிறது. எனவே, இத்தகைய கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு இக்காலத்தில் கல்லூரிகளில் ஸ்திரிகளுக்குப் போதிய வசதியில்லை. இக்காலத்தைய கல்லூரிகளிற் பயிலும் ஸ்திரீ, புருஷாளில் பெரும்பாலோர் மார்க்காசாரமில்லாதவர்களாகவும், உயிரினும் பெரியதான மார்க்கக்கல்வி அவர்களிடமில்லாததால் அவர்கள் மார்க்க விஷயத்திலும் போதிய பக்தியற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தகைய ஸ்கூல்களில் ஸ்திரீ புருஷர் கலந்திருந்து கல்வி பயிலுவதால் இந்தியாவைப் பொறுத்தவரை, கீழ் நாட்டாருக்கிருக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் இருபாலாரிடமும் இல்லாமற்றுனிருக்கும். இதற்காதாரமாக அநேகம் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சில வருஷங்களுக்கு முன் அமிர்தசரஸ் ஸ்திரீ கல்லூரியைப் பார்வையிட்ட ஒரு ஸ்திரீ டாக்டர், அங்கு பயிலும் மாணவிகளில், விவாகமல்லாதவர்களில் 100-க்கு 75 பேர்களின் கற்புக் கெட்டுப்போயிருப்பதாகவும், இவர்களில் 100க்கு 50 பேர் கற்பமுள்ளவர்களாக இருப்பதாகவும் ரிப்போர்ட்டுச் செய்த விபரம் பத்திரிகைகளில் பிரசுரமாகி இருந்தது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். மேலும் சென்ற மே மீ 28-ந் தேதி, உயர்தரக் கல்விகற்ற ஒரு ஸ்திரீ, முராதாபாதிலிருந்து தான் கண்ட ஒருவிஷயத்தைப் பின்வருமாறு எழுதி இருக்கின்றுராதலின், உயர்தரப் படிப்புக்குத் தங்கள் பெண் குழந்தைகளை அனுப்பும் பெற்றேர்கள் இவ்விஷயத்தைக் கவனிப்பது அவசியமாகும். அது வருமாறு:—

"நான் எந்த ஸ்கூலின் பெயரையும் குறிப்பிட விரும்பவில்லை; ஸ்கூல்களுக்குள்ளிருக்கிற அகமிய இரகசியத்தை வெளிப்படுத்தவும் விரும்பவில்லை. ஆனல் பரிசீலனைக் கமிட்டி ஸ்கூலின் உள் வயணங்களை விசாரணை புரிய ஆரம்பிக்குமாயின், ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் படிக்கச்செல்லும் பெண்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கற்பிழந்தவர்களாக இருப்பதை ருஜுப்பிக்கத் தயாராக இருக்கிறேன். பல நூற்றுண்டுகளாகப் பர்தா முறை அனுஷ்டிக்கப்படுவரும் தேசத்தில் ஆடவர்களையும் ஸ்திரீகளையும் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கும் சந்தர்ப்பம் எற்படுமாயின் அதன்பலன் எப்பொழுதும் நன்ருக இருப்பது வழக்கமில்லை. பிரஜாபிருத்தியைக் கட்டுப்படுத்தும் பிரசினையில் வாலிபஸ்திரீகள் தாம் அதிக சிரத்தை காண்பித்துவருவதை நீங்கள் நிதானித்திருக்கக்கூடும். இந்தச் சிரத்தை எதனல் ஏற்பட்டது என்பதை விவரிக்க என்னுடைய இந்த எழுதுகோலுக்குச் சக்திஇல்லை. மாணவர்களும் மாணவிகளும் ஓரிடத்தில் கூடி இருந்து படிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து வருவதாக நான் கேள்விப்படுகிறேன். இது உண்மையாக இருக்குமாயின், "பெற்றேர்களுக்குத் தங்கள் புதல்விகளின் கற்பு அதிகப்பிரியமாக இருக்கிறதா, அல்லது குருட்டு மேனுட்டுக் கல்வி அதிகப்பிரியமாக இருக்கிறதா? என்று அவர்களிடம் நான் கை கட்டி நின்று வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்"

இது ஐக்கிய மாகாணத்துச் செய்தி. நமது மாகாணத்திலுள்ள செய்திகளைப்பற்றி யாம் ஒன்றுங் கூற விரும்பவில்லை. ஆயினும், பெற்றேர்கள் மற்ற இடத்துச் செய்திகளிலிருந்து விஷயத்தை உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதும், இது விஷயத்தில் தக்க சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் நமது அவா. கற்புவிஷயத்தில் மேனுட்டுக்கும் கீழ்நாட்டுக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமுண்டு. ஆகவே, முஸ்லிம்கள் தங்கள் புதல்விகள் விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கமாட்டார்கள். ஆயினும், மேனுட்டு நாகரீகத்தைப் புகுத்துவதற்காக முயற்சி எடுத்துவரும் இத்தருணத்தில், நம்மவர் இவைகளை உணர்ந்திருக்கவேண்டும் என்பது நமது வேண்டுகோளாகும்.

---

## மதுரை சந்தா நேயர்களுக்கு!

நமது அன்பர்களான சந்தாதார்கள், தங்கள் சந்தா பாக்கிகளை நமது ஏஜண்டு ஜனப் மௌலானு மௌல்வி முகம்மது கனி ஆலிம் சாஹிப் அவர்களிடம் செலுத்தி விடுமாறு கோருகிறேம்.

# ஹஜ்ரத் தாரிக்கே அஃலம் (றஹ்)

குலபாயே ராஷிதீன்களுக்குப் பின்னர் உமய்யா வம்சத்தார் இஸ்லாமிய உலகில் கிலாபத் ஆட்சியை நடத்தி வந்தனர். ஹஜ்ரத் முஆவியா (றலி.), ஹஜ்ரத் உமறுப்னு அப்தில் அஜீஸ் (ரஹ்.) முதலியவர்கள் இவ்வரசாங்கத்தின் மாணிக்கங்களாவார்கள். இவர்களது ஆட்சிகாலத்தில் இஸ்லாமிய அரசாங்கம் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் வெகு தூரத்திற்குப் பரவிற்று. இவர்களுடைய ஆட்சி காலத்தில் அநேகம் பெரிய வீரர்களும், இமாம்களும், கற்றறிந்த பல நிபுணர்களும் தோன்றி இருக்கின்றனர். ஆதலால், இவ்வம்சத்தாரின் ஆட்சி காலம் இஸ்லாமியச் சரித்திரத்திலும், உலகச் சரித்திரத்திலும் முக்கிய ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. கீர்த்திவாய்ந்த இவ்வம்சத்தாரின் ஆட்சி காலத்தில்தான் மகுடத்தில் கண்ட பெரியார் பிறந்து வளர்ந்து, உலகில் ஒப்பற்ற வீரர்களாக ஜனித்த பெரியார்களில் ஒருவராக விளங்கினர். மத்திய தரைக்கடலும், அத்லாண்டிக் மகாசமுத்திரமும் சந்திக்கு மிடத்தில் ஐரோப்பாக் கரையில் இருக்கிற ஜிப்ரால்டர் என்ற இடம், இவரது கீர்த்தியை இன்றும் மங்கவிடாமல் பிரகாசிக்கச் செய்து கொண்டிருக்கிறது. ஜிப்ரால்டர் என்ற பதம் அறபிப் பாஷையில் சிதைவுண்டபதமாகையால் 'ஜபலே தாரிக்' என்பது இதன் அசல் அரபிப்பதமாடும். ஆகவே, தாரிக் என்பவரின் மலை என்பது இவ்விரு பதங்களின் பொருளாகும். முதல் முதலாக இம்மலையின் வழியாக ஐரோப்பாவில் பிரவேசித்து அங்கு வெற்றிக்கொடி நாட்டி ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்ஸின் தென் பகுதி இவைகளை எல்லாம் கைப்பற்றி அந்நாட்டில் உந்துலுஸ் அரசாங்கத்தை ஏற்படுத்த அஸ்திபாரமிட்ட பெரியார் இவரே யாவர். இவரது சரித்திரம் மிகவிரிவாக இருந்தாலும், இச்சிறிய வியாசத்தில், இவர் ஸ்பெயினைக் கைப்பற்றுவதற்காகச் செய்த பயங்கரச் செயல்களையும், இவரும் இவரது வீரர்களும் அஞ்சா நெஞ்சத்துடன் துணிந்து ஐரோப்பா சென்ற ஆரம்ப வரலாறுகளையும் சுருக்கமாகக் கூறப்படுமாகையால் நேயர்கள் கவனித்துப் படிப்பார்களாக.

இவர் ஹிஜ்ரீ 61-ம் வருஷம் ஷவ்வால் மீ 6உ (கி. ப. 19-7-681-ன்) அதிகாலையில் திமிஷ்கு நகரில் "பனூ ஆக்கிப்" என்ற பிரசித்திபெற்ற கோத்திரத்தின் மணி விளக்காய்ப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலேயே என்றபடி குழந்தைப் பருவத்திலேயே கூரிய அறிவும், தயாள குணமும் இரக்கச் சித்தமும் வீரமும் பொருந்தியவராக விருந்தார்.

ஐந்தாம் வயதில் மார்க்கக் கல்வி பயிலப் பள்ளிக்கூடம் போந்தார். 17 வயது வரை மார்க்கக் கல்வியில் தேர்ச்சி பெற்று அப்பால், தமது அருமைப் பிதாவான ஹஜ்றத் இப்ராஹீம் யூசுப் (றஹ்) அவர்களிடத்திலேயே யுத்தத்துக்குரிய வித்தைகளைப் பயின்றார். பின்னர், அக்காலத்தில் கலீபாவாக விருந்த வலீதுப்னு அப்துல்மலிக் என்பவரின் தர்பாரில் சென்று தம்மை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும்படி அவரை வேண்டினர்.

அகத்திலுள்ளது முகத்தில் தெரியும் என்றபடி, இவ்வாலிபர் எதிர்காலத்தில் மிகக்கீர்த்தி பெற்ற அரிய காரியங்களைச் செய்வார் என்பதை இவரது முகக்குறியால் உணர்ந்த கலீபா, இவரது விருப்பப்படி இராணுவப்படையில் சாதாரணச் சிப்பாயாகச் சேர்ந்து கொள்ள அனுமதி கொடுத்தார். பின்னர், படிப்படியாக ராணுவத்தில் உயர்பதவியை யடைந்து கி. பி. 709-வது வருடம் உயர்தர ராணுவ உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டு, கி. பி. 710-ம் வருஷத்தில் ஸ்பெயின் தேசத்தின்மீது படையெடுத்துச் சென்று, அத்தேசத்தை அடக்கும்படி கலீபா அவர்களால் உத்தரவிடப்பட்டார். அங்கு அவர் பல அரிய வீரப்பராக்ரமச் செய்கைகளைச்செய்து வாகைமாலை சூடினர்.

ஹஜறத் தாரிக் இக்காலத்தில் அழகிய வாலிபராகவும், பருத்த விழிகளும், திறந்த நெற்றியும், நடுத்தர உயரமும், உயரத்துக்குத் தக்க உடலமும், அகண்ட பாதமும் உள்ளவராகவும், தெளிவாகப் பேசுபவராகவும், உயர்ந்த ஆனல் மதுரமான தொனியுள்ளவராகாவு

மிருந்தார். வெண்மை கலந்த சிவப்புநிற முள்ள மேனியுடையவர். இவருக்குப் பருத்த திரேகமில்லாவிடினும் இறைவன் இவருக்களித்திருந்த இருதயத்தில் உறுதியும், துணிச்சலும், பராக்கிரமமும், கோரியகாரியத்தை இனிது நிறைவேற்றும் சாதுரியமும் நிரம்ப இருந்தன.

### ஒழுக்கமும் பழக்கமும்

இவர் ராணுவத் தளகர்த்தராக இருந்தும் சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவும், மதுரமாகப் பேசும் தன்மையுள்ளவராகவுமிருந்ததுடன் பணிவுள்ளவராகவுமிருந்ததால், வெளியிற்காட்டும் படாடோபத்தை இவர் வெறுத்து வந்தார். இவருடைய தன்மையில் தற்பெருமை, அகம்பாவம் என்பது பெயருக்குக்கூட இருந்ததில்லை. இறைவன் இவருக்கு தியாக உணர்ச்சியையும் தரும சிந்தனையையும் மிகத் தாராளமாக அளித்திருந்தானகையால், இரப்போருக்கு இல்லை என்று கூறுமல் வாரிக் கொடுக்கும் வள்ளலாக இருந்தார். இவரிடத்தில் கேட்டுவந்தவர் எவரும் வெறுமனே திரும்பிச் சென்றதில்லை. வியக்கத்தக்க அபார அறிவும், சிந்தனு சக்தியும் பெற்றிருந்தார். விஷயத்தை மிகவும் சீக்கிரத்தில் கிரகிக்கும் சக்தியும் நுண்ணிய அறிவுமுடையவராக இருந்தார். இவரது பிரசங்கம் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும், இன்பமாகவுமிருக்கும்.

### கற்றோரை யுவத்தல்

இவர் படிப்பாளியாகவும், மார்க்கக் கல்வியிற் றேர்ந்தவராகவுமிருந்ததால் கற்றோரைப் பெரிதும் ஆதரித்துப் போற்றிவந்தார். அநேகக் கல்விமான்கள் அவருக்கு உற்ற நண்பர்களாக இருந்தார்கள். இவருடைய நண்பர்களில் ஆலிம், பாஜில், அதீப், ராஜதந்திரி, நிபுணர்கள் முதலிய யாவருமிருந்தனர்.

### வீரப்பராக்கிரமச் செய்கைகள்

கி. பி. 710-ம் வருஷம் ஏப்ரில் மீ 5-ந் தேதி இவர் 4 ஆயிரம் போர்வீரர்களுடன் ஸ்பெயினை நோக்கிப் புறப்பட்டபோது, வழியில் அநேகம் ஆபத்துகளுக்கும் சோதனைகளுக்கு முட்பட வேண்டியதாயிருந்தது. இறைவனின் இச் சோதனைகளை எல்லாம் அவர் சந்தோஷமாக ஏற்றுச் சகித்துக்கொண்டு, முன்வைத்தகாலைப் பின்வாங்காமல் ஸ்பெயின் தேசத்துக் கரையிலுள்ள ஜிப்ரால்டர் என்ற இடத்தில் இறங்கியதும், தாங்கள் ஏறிவந்த கப்பல்களனைத்தையும், நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டார். இவரது இச்செய்கையைக் கண்ட இவரது போர்வீரர்கள் இவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ, அல்லது இவரது மூளையில் கோளாறு ஏற்பட்டுவிட்டதோ என்று கருதினர். ஆயினும், தலைவர் கட்டளைக்குக் கீழ்படிதல் என்ற கடமையானது அவர்களைத் தலைவருக்குக் கட்டுப்படும்படிசெய்தது.

கப்பல்கள் எரிந்து நாசமான பிறகு தளகர்த்தரான தாரிக் (றஹ்) தமது போர்வீரர்களிடம் உற்சாகமூட்டும் பிரசங்கம் புரியுங்கால், கப்பலைத்தகனஞ் செய்ததன் காரணம் யாது? தாங்கள் எதற்காக ஸ்பெயின் தேசம் வந்தோம் என்ற விபரங்களைப்பற்றி விளக்கினர். இப்பிரசங்கத்தைக் கேட்டபின் போர்வீரர்களுக்குப் புதிய உணர்ச்சியும், ஊக்கமும் உண்டாயிற்று. அவ்வரும் பிரசங்கத்தின் சாராம்சம்வருமாறு:-

இஸ்லாத்தின் புதல்வர்காள்!

நாம் ஏறிவந்த மரக்கலங்கள் எறிக்கப்பட்டுவிட்டன; இப்பொழுது நாம் நமது தாய் நாட்டைவிட்டு வெகு தூரத்துக்கப்பால் இருக்கிறோம். ஆனல், அல்லாஹுதஆலாவின் அருளுக்கு மிக அண்மையிலிருக்கிறோம். சகோதரர்களே! நாம் அன்னிய தேசத்தில் இப்பொழுதிருந்து கொண்டிருக்கிறோம். இதுவோ பகைவர்களின் தேசமாகும். சத்தியத்தை நிலைநாட்டுபவனை, பரிசுத்தனை அல்லாஹு சுபுஹானஹு வதஆலா இந்த இடத்திலும் நமக்கு ஆதரவாயிருக்கிருன். நாம் இந்த தேசத்தைக் கைப்பற்றுவதற்காக வந்திருக்கிறோமேயன்றி முதுகுகாட்டுவதற்காக வரவில்லை. இதனல்தான் நான் கப்பல்களைத் தகனஞ் செய்வித்தேன். இனி, நாம் யுத்தம் செய்து இத்தேசத்தில் ஜெயக்கொடியை நாட்டி சிம்மாசனத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்; அல்லது இத்தேசத்தில் நமது உயிரைத் தியாகம் செய்து நமக்காக சமாதிக்குழிகள் கட்டவேண்டும்.

அன்பர்களே!

நமது பகைவர்களின் எண்ணிக்கை நம்மைவிட அதிகம் என்பது உண்மை. ஆனல், பதினயிரம் ஆடுகள் கூடினலும் ஒரு புலியை வெல்ல முடியாது. நாம், சத்தியத்தை நிலை

நிறுத்துவதற்காக சமர்க்களத்தில் யுத்தம் செய்து, தங்களின் அருமை உயிரை இஸ்லாத்துக்காக அற்பணம் செய்த பெரியார்களின் புதல்வர்களாவோம். அப்பெரியார்களின் கழுத்துக்கள் வாளாயுதத்தின் பரிசோதனைத் தலமாக இருந்தது; அவர்களின் தலைகள் கழுமரத்தில் தொங்கவிடப்பட்டன; அவர்களுடைய விலாக்களில் கூரிய அம்புகள் பாய்ந்தன. ஆயினும், சத்தியத்தை ஆதரிக்கவேண்டும் என்ற உணர்ச்சியால் அவர்கள் ரத்தத்தில் விளையாடினர்; இஸ்லாத்துக்காகப் போர் புரிந்தனர். அப்பெரியார்களின் மார்க்கத்தொண்டுகளை நினைவிற்கொண்டுவந்து இத்தேசத்தில் நாம் யுத்தம் புரிந்து, பொய்க் கோட்டையைப் பொடிப் பொடியாக ஆக்குவோமாக. நாம் இத்தேசத்துக்குப் புதியவர்களாகவும் சொற்பத் தொகையினராகவுமிருந்த போதிலும், இறைவனின் உதவி நம்முடனிருக்கிறது. ஆதலால், பலஹீனமான நம்முடைய கைகளின் அற்ப அசைவும், அற்பமுயற்சியும் அசத்திய அரசாங்கத்தின் ஆசனத்தைத் தலைகீழாகப் புரட்டிவிடும்; நாம் ஜெயசீலர்களாகிவிடுவோம்''.

ஹஜ்ரத் தாரிக் (ரஹ்) அவர்கள் செய்த இந்தப் பிரசங்கமானது, இஸ்லாத்தின் போர்வீரர்களின் இருதயத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கிவிட்டதால், புதிய ஊக்கம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அசத்தியத்தை அழிக்கும் விஷயத்தில் அவ்வீரர்கள் முழுமனதுடன் ஈடுபட்டனர்.

கி. பி. 710-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ந்தேதி ஸ்பெயின் அரசரின் சைனியங்கள் முஸ்லிம்களை முதல் முதலாகத் தாக்கின. பல மணி நேரம்வரை இரு கக்ஷியினரும் கடும்போர் புரிந்தனர். ஏகதெய்வக் கொள்கையின் புதல்வர்களின் இருதயத்தில் இஸ்லாத்தின் உணர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. உயிரை வெறுத்து யுத்தம் புரிந்த எதிரிகளின் சைனியங்களை 16 மைல் தூரம்வரை பின்வாங்கும் படிச் செய்தனர். இந்த யுத்தத்தில் ஸ்பானியர்களில் 2 ஆயிரம் பேர் மாண்டனர். முஸ்லிம்களில் 22 பேர் ஷஹீதானார்கள்.

14-ந்தேதி மறுபடியும் யுத்தம் ஆரம்பமாயிற்று. அதில் ஸ்பானியப்படையினர் ரோஷத்துடன் முன்னேறி வந்தனர். ஆனால், இஸ்லாத்தின் போர் வீரர்கள் அஞ்சாமல் வெட்டினராதலின், ஸ்பானியர் இறுதியாக முதுகு காட்டினர்; முஸ்லிம்கள் வாகைமாலை சூடினர்.

24-ந்தேதி மறுபடியும் கடும்போர் நடந்தபோது, ஸ்பானியப் படைகளுக்குப் புதிய உதவி கிடைத்ததால், அவைகள், புதிய ஊக்கத்துடன் போர்புரிந்தனவாதலின், அவைகள் முன்னேறிக்கொண்டே இருந்தன. இதனால் வெளித்தோற்றத்தில்முஸ்லிம்களுக்கு தோல்வி ஏற்படுவது போலிருந்ததாயினும், திடீரென்று முஸ்லிம்கள் எதிர்த்து உக்கிரமாய்த் தாக்கியதால் ஸ்பானியர் சிதறுண்டு பல திக்குகளிலும் உயிர்தப்பி ஓட ஆரம்பித்தனர். இதனால்,எதிரிகளின் மனம் விழுந்து முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்கு மனமில்லாதவராயினர்.

பின்னர், நவம்பர் மாதம் 6-ந்தேதி மறுபடியும் ஒரு யுத்தம் நடந்தது. முஸ்லிம்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்ததால் உற்சாகமுள்ளவர்களாகஇருந்தனராதலின், பசித்த புலி ஆட்டுக் கூட்டத்தில் விழுவதுபோல ஸ்பானியர்கள் மீது பாய்ந்து விழுந்து யுத்தஞ் செய்தனர். சில நிமிஷங்களுக்குள் ஆயிரம் ஸ்பானியர் கொல்லப்பட்டனர். இச்சண்டையில் சில பிரபல கிறிஸ்துவ தளகர்த்தர்களும்சேர்ந்திருந்தனராதலின், இவர்கள் முஸ்லிம்களின் துணிச்சலையும் வீரப் பராக்கிரமத்தையும் நேரில் பார்த்ததால், ஐரோப்பா முழுவதிலும் முஸ்லிம்களின் கீர்த்தியைப் பரவச்செய்துவிட்டனர். இதனால், முஸ்லிம்களுக்கு யுத்தப்பயிற்சி அளவில்லாமலிருக்கிறது என்று எங்கும் பிரஸ்தாபமேற்பட்டுவிட்டதால், ஐரோப்பியர்கள் நம்பிக்கையிழந்து முடிவு என்னவாகுமோவென்று பயந்தனர்.

ஒரு மாத காலம் வரை ஸ்பானியர் எவ்விதக்கலவரமுமே செய்யாதிருந்துவிட்டு பிறகு பலமான யுத்தம் செய்வதற்கான முஸ்திப்புகளைச்செய்தனர். கி. பி. 711-ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ந்தேதி முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் பலமான யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் ஸ்பானியர்களுக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென்று கிறிஸ்துவ பாதிரிமார்களும் ஸ்பானியச் சேனைகளுடன் சேர்ந்து அமர்களம் வந்தனர். இவர்கள் இயேசுநாதரைக் குறித்து, வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்துகொண்டே இருந்தனர். இஸ்லாத்தின் வாளாயுதங்களின் முன்னிலையில் இவர்களின் பிரார்த்தனைகள் வலிமை பெற்றிருக்கவில்லையாதலால், முஸ்லிம்கள் மகத்தான வெற்றியடைந்தனர். இதற்குப் பின்னர் கர்த்தபா, கர்னத்தா, தலீத்தா முதலிய முக்கிய

பட்டினங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முஸ்லிம்களின் கைவசமாயின. சில தினங்களுக்குப் பின் ஸ்பானிய அரசனும் யுத்தத்தில் மடிந்தனன். அதன்பின் ஸ்பெயின் தேசத்து அரசாங்கத்துக்கு முஸ்லிம்கள் வாரிசுக்காரர்களாகவும் எஜமானர்களாகவுமாயினர்.

## முஸ்லிம்களின் ஆட்சிமுறை

இப்புதிய அரசாங்கத்துக்கு ஹஜ்ரத் தாரித் தலைவராகி, நீதிநெறி தவறாது செங்கோலோற்றி வந்தார். தம்முடைய அரசாங்கத்தை நீதி, வர்த்தகம், ராணுவம், அபிவிருத்தி, உள்நாடு ஆகிய ஐந்து இலாகாக்களாகப் பிரித்து, இவ்வைந்தின் மேல் பார்வையையும் தமது ஆதிக்கத்தின்கீழ் வைத்துக்கொண்டார்.

பஜ்ருத் தொழுகைக்குப் பின் பொது தர்பார் நடைபெறும். அதுபொழுது அநீதி செய்யப்பட்டோருக்கு நியாயம் வழங்கப்படும். அவர்களின் வேண்டுகோள்களையும், மனுக்களையும் ஹஜ்றத் தாரிக் அவர்களே நேரில்படித்து, விசாரணைபுரிந்து குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பார். இவரிடம் யாருடைய சிபாரிஷும் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. பணக்காரர்கள் முறையிடுவதை எவ்வளவு கவனமாகக் கேட்பாரோ அதேகவனமாக ஏழைகளின் முறையீட்டையும் கவனித்துவந்தார். ஏழை பணக்காரர் என்ற தாரதன்மியம்பாராட்டப்படுவதேயில்லை. இவருடைய தர்பாரில் வருவதற்கு யாவருக்கும் பொது அனுமதி இருந்ததால் எவ்விதத் தடையும் யாரும் செய்ய முடியாது.

ளுஹர்த் தொழுகைக்குப் பின்னர், பற்பல பகுதிகளிலுள்ள வரிவசூல் அதிகாரிகள் தர்பாருக்கு வருவார்கள். அவர்களுக்கு வேண்டிய விஷயங்களையும் தகவல்களையும் அறிவிப்பார். முஸ்லிம்கள் ஸ்பெயினுக்கு வருவதற்கு முன் அத்தேசமெங்கும் அறியாமை குடிகொண்டிருந்தது; நாடெங்கும் மானக்கேடான செய்கைகளும் வியபிசாரமும் நிலவி இருந்தன; மனிதவர்க்கத்துக்குரிய எவ்விதத் தன்மையும் அந்நாட்டு மக்களிடம் இருக்கவில்லை. ஆகவே இவைகளை எல்லாம் தாரிக் அஃலம் (றஹ்.) அவர்கள் அகற்றினார்களாதலின், பல தலைமுறைகளாக இருந்து வந்த இத்தகாத காரியங்கள் ஒழிந்தன; வழிகேட்டிலிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் நேர்வழியில் வந்தனர். ஹஜ்றத் தாரிக் (றஹ்.) அவர்கள் கிறிஸ்துவர்களுக்கு மத சுதந்திரம் அளித்து அவர்களின் மதத் தலைவர்களுக்கு முன்னர் இருந்துவந்த கண்ணியமும் மரியாதையும் அப்படியே இருந்து வருமாறு செய்தார். இதனால் அவர்கள் சகல விஷயத்திலும் சந்தோஷமாக வாழ்வதற்கான சந்தர்ப்பங்களும் வசதிகளும் நல்லவிதமாக இருந்துவந்தது.

## விவாகம்

ஸ்பெயின் தேசத்தைக் கைப்பற்றும்வரை ஹஜ்றத் தாரிக் (றஹ்.) அவர்கள் விவாகம்செய்யாதவராகவே இருந்தார். ஸ்பெயின் தேசத்தைக் கைப்பற்றி, ஆங்கு முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்தி, அவர் செய்துவரும் நீதிநெறி முறைகளும், அவரது வீரப்பிரதாபங்களும் தேசமெங்கும் பரவி வருவதை அறிந்த ஸ்பெயின் தேசத்து அரசரின் புதல்வி, ஹஜ்றத் தாரிக் அவர்களை விவாகம் செய்துகொள்வதற்குத் தம்முடையவிருப்பத்தை அறிவித்தனள். கிறிஸ்துவப் பாதிரிமார்களும் மற்றைய தலைவர்களும் இதனால் கடுங்கோபமடைந்து இளவரசிக்கு எவ்வளவோ சொல்லித் தடுத்தனர். ஆயினும், அவ்விளவரசி அவர்களின் சொல்லையெல்லாம் கேட்காமல், ஹஜ்றத் தாரிக் அவர்களிடம் தம்முடைய விருப்பத்தை நேரில் அறிவித்தனள். தாரிக் (றஹ்.) அவர்கள் அதற்கிணங்கியதால், கி. பி. 711-ம் வருஷம் மேமீ 11௳ இருவருக்கும் விவாகம் நடைபெற்றது. இவ்விளவரசி ஹஜ்றத்தாரிக் அவர்களைமணந்து, இஸ்லாம் மதத்தையும் தழுவியபின், இவ்விளநங்கை மாத்திரம் 2000 ஸ்பானிய ஸ்திரீகளை இஸ்லாம் மதத்தில் சேர்த்திருக்கிறார். இவ்வாறு கிறிஸ்துவ உலகில் இஸ்லாத்தின் ஜெயக்கொடியை நாட்டி, இஸ்லாமிய அரசாங்கத்தை ஏற்படுத்திய ஹஜ்றத் தாரிக் (றஹ்.) அவர்கள் தமது 70-வது வயதில் கி.பி. 23-4-75-ல் இவ்வுலக வாழ்க்கையை முடித்துக்கொண்டு அஸ்கலானில் தாருல்பக்கா அடைந்தார்கள்.

இவரது பிரிவால் இஸ்லாமிய உலகில் மிகுந்த துக்கம் காணப்பட்டது; இஸ்லாமிய உலகமெங்கும் துக்கக்கொண்டாட்டங்கள் நடைபெற்றன; தலைவர்களும், மந்திரி பிரதானிகளும், அமீர்களும், கவர்னர்களும் துக்கங்கொண்டாடினர். இவரது மரணத்துக்குப் பின்னும் ஸ்பெயின் தேசத்தில் இஸ்லாமிய ஆட்சி செழித்தோங்கிற்று. அங்குள்ள கர்னத்தா, நைனவா முதலிய இடங்களில் முஸ்லிம்கள் ஏற்படுத்தி இருந்த சர்வகலாசாலைகளில் கிறிஸ்துவர்களும் சேர்த்துக்கொள்ளப்

பட்டு கல்வி கற்பிக்கப்பட்டனர். பிரான்சு, ஆஸ்டிரியா முதலிய தேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் வந்து, இச்சர்வகலா சாலைகளில் கல்வி கற்றனர். இவ்வரசாங்கத்தின் மூலமாகத்தான் ஐரோப்பாவில் கல்வி, கைத்தொழில், நவநாகரீகம் முதலியவைகள் பரவின. இவ்வரசாங்கம் கிறிஸ்துவ உலகுக்குச் செய்த இந்நன்றியை இப்பொழுதும் கிறிஸ்துவ அறிஞர்கள் நன்றியுடன் போற்றி வருகின்றனர்.

---

# ஆத்ம சாந்தி எங்கே?

பணக்கார வயோதிகரொருவர் டாக்டரை அழைத்து, "டாக்டர்! நான் ரொம்பக் கஷ்டத்திலிருக்கிறேன்; பெரிய ஆபத்திலிருக்கிறேன்; என்னைக் காப்பாற்றுங்கள்; இனி நான் அதிக காலம்வரை கஷ்டத்தைப் பொருத்துக்கொண்டிருக்க முடியாது. டாக்டர்! கொஞ்சங் கவனியுங்கள்; ஒரு மனிதன் எவ்வளவு காலம்வரைதான் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள்; நான் 60 வருஷங்களாக இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறேன்; என்மீது தயைபுரியுங்கள்; தாங்கள் என்மீது தயைபுரியவில்லையாயின், இந்த உலகம் மனித வாசத்துக்குத் தக்க இடமில்லாது, இங்கு மனித உருவத்தில் காட்டு மிருகங்கள்தான் வசிக்கின்றன என்று நான் முடிவு செய்துகொள்வேன். கேளுங்கள் டாக்டர்! இப்பொழுது உலகில் எனக்கொன்றும் குறைவில்லை; நானுமிருக்கின்றேன், என்னுடைய கணக்கற்ற சொத்துக்களுமிருக்கின்றன, என்னிடமுள்ள இந்த எல்லாத் திரவியங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால், என்னைச் சவுக்கியப்படுத்தி விடுங்கள். நான் பெரிய ஆபத்திலிருக்கிறேன்" என்று கூறினர்.

உடனே டாக்டர் அந்த வயோதிகரின் திரேகம் முழுதையும் மேனாட்டு வைத்தியக் கருவியைக்கொண்டு பரிசிலனை செய்துவிட்டு, அவ்வயோதிகருக்கு ஆறுதல் சொல்லும் நோக்கத்தோடு "நீங்கள் ரொம்ப பலஹீனமாக இருக்கிறீர்கள்; உங்கள் திரேகத்தில் ரத்தம் இல்லை; உங்களுக்குத் திரேகபலம் உண்டாகுவதற்கான மருந்து கொடுக்கவேண்டும்; இதைத் தவிர, வேறு யாதொரு சிக்குமில்லை; பயப்படாதீர்கள்; நீங்கள் வெகு சீக்கிரத்தில் சுவாத்தியமாகி விடுவீர்கள்" என்று கூறினர்.

அதற்கு அவ்வயோதிகர் டாக்டரைப் பார்த்துக் கூறியதாவது:—

"ரத்த விருத்திக்குறைவையும் பலஹீனத்தையும் தவிர எனக்கு வேறு வியாதி கிடையாது என்று தாங்கள் கூறுகிறீர்கள்; நீங்கள் தவறாகக் கூறுகிறீர்கள்; நான் மிகக் கெட்ட வியாதியால் அவஸ்தைப்படுகிறேன். ஆகவே, என்னுடைய இருதயத்தைப் பாருங்கள்; எனக்கு மனோவியாதிதானிருக்கிறது; என் இருதயத்தைப் பாருங்கள்."

டாக்டர் மறுபடியும் வயோதிகரின் இருதயத்தைப் பரிசோதித்துக் கூறுகிறார்:—

"உமது இருதயம், உமது வயதுக்கு இருக்க வேண்டியதைப் பார்க்கினும் மிகவும் நன்றாக இருக்கிறது; உமது இருதயம் சரியான முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறது; அதில் எவ்விதக் கெடுதியும் இல்லை."

வயோதிகர் இதை மறுத்து, "உங்களுக்கு என் இருதயத்தில் எவ்விதப் பலஹீனமும் இருப்பது புலப்படவில்லை. ஆனால், நானோ மனோவியாதியால் கஷ்டப்படுகிறேன். மனவியாதி மட்டும்தான். இதுதான் என்னை நாசமாக்கி வைத்திருக்கிறது. இதுதான் என் கஷ்டத்துக்கு அசல்காரணம். டாக்டர்! நீங்கள் எப்படிப்பட்ட டாக்டராக இருக்கிறீர்கள்! உங்களுடைய மேனாட்டுக் கருவி எவ்விதமான கருவியாக இருக்கிறது? இந்தக்கருவி உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. இதை நீங்கள் நம்பாதீர்கள். என் திரேக நிலைமையை என்னிடம் கேளுங்கள். நானோ மனோவியாதியால் பீடிக்கப்பட்டவன். அல்லாஹ்த ஆலாவுக்காக என்னை இந்தக் கஷ்டத்தைவிட்டு விடுவியுங்கள். நான் உங்களுக்குத் திரண்ட செல்வத்தைத் தருகிறேன்" என்று கூறினர்.

டாக்டர் வியாதியஸ்தரிடம் அவருக்குள்ள வியாதியின் தன்மையைக் கேட்பதற்காக முற்றிலும் கவனம் செலுத்திக் காது தாழ்த்திக் கொள்ளவே நோயாளி பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:—

"டாக்டர்! நான் வாலிபனக இருந்தபோது, பரம ஏழையாக இருந்ததினல், எவ்விதத்திலேனும் என்னுடைய தரித்திர தசையை நீக்கிக்கொள்ளவேண்டும் என்ற கவலை என்னை வாட்டிக்கொண்டே இருந்தது. நான் இருந்த வீடு ஒரு பணக்கார விதவைக்குச் சொந்தமானதாக இருந்தது. டாக்டர்! நான் உங்களிடத்தில் ஒன்றையும் ஒளிக்காமல் சொல்கிறேன். பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணத்துக்காக அந்தப் பணக்கார விதவையை மயக்கியதன் பயனக அவள் என் வலையில் சிக்கி என்னுடைய மாயப் பேச்சுக்களைக்கண்டு மயங்கிவிட்டனள். வெகு காலம் வரை எனக்கும் அவளுக்கு மிடையில் தகாத முறையில் சம்பந்தமிருந்து வந்தும், சமயம் பார்த்து நான் அவளுக்கு விஷங் கொடுத்துவிட்டு அவளுடைய சொத்துக்களனைத்தையும் அபகரித்துக்கொண்டேன். இது நடந்து இற்றைக்கு ஏறக்குறைய 60 வருஷமிருக்கலாம். ஆயினும், என்னுடைய அந்தப் பாதகச் செயலை நான் இப்பொழுது நினைத்தாலும் எனக்கு நடுக்கம் வந்துவிடுகிறது டாக்டர்! அப்பொழுது நான் செய்த இந்தப் பாதகச் செயலுக்கு என்னுடையமனத்திலிருந்த பேராசையே காரணமாகும். இப்பொழுது என்னை அந்த மனம்தான் வாட்டுகிறது. ஆகவே டாக்டர்! எவ்விதத்திலும் இந்த ஆத்ம வியாதியை விட்டுக்காப்பாற்றுங்கள்! தங்களுடைய டிஸ்பன்சரியில் இதற்குத் தக்க ஒளஷதம் ஏதாகிலும் கிடைக்குமா?

டாக்டர்! என்கையில் பெருஞ் செல்வம் வந்திருந்தது. நான் துர்க்கிருத்தியங்களாலும் தந்திரச் செய்கைகளாலும் அச் செல்வத்தில் ஆச்சரியப்படத்தக்க அபிவிருத்தியைச் செய்தேன். இதை நான் பெருக்கிக் கொண்டே இருந்தேன். என்னுல் கெட்டவர்கள் அனந்தம் பேருண்டு. இன்றைக்கும் அவர்களிற் பலர் காலணவுக்காகக் கடைவீதிகளில் சுற்றித்திரிகிறார்கள். டாக்டர்! நான் பணம் சம்பாதிப்பதில் பெரிய தந்திரசாலி. ஆனல், நான் செய்த இச்செய்கைகளால் என் மனமே இன்று என்னைச்சுடுகிறது. எனக்கு ஒரு க்ஷணப்பொழுதும் நிம்மதியில்லை. டாக்டர்! இவ்வியாதியை விட்டு என்னைக் காப்பாற்றுவீர்களா? நீங்கள் என் வியாதியைக் குணப்படுத்திவிடுவீர்களாயின், அது மிகப்பெரிய உபகாரமாகும். டாக்டர்! உலகில் பணம் எவ்வளவு பெரிய சக்தி வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். உலகிலுள்ள அநேகம் குற்றங்களுக்குப்பின்பு பணம்தான் மறைந்திருந்துகொண்டு வேலை செய்கிறது. நான் பணத்துக்காகவே அநேகம் கற்புள்ள ஸ்திரீகளைக் கெடுத்தேன். அநேகம் பதிவிரதைகள் என்னல் தற்கொலை செய்துகொண்டு இவ்வுலகைவிட்டுச் சென்றுவிட்டார்கள். இவர்கள் யாவரும் என்னலேயே கெட்டார்கள். இச்செய்கைகள் என்ஞாபகத்துக்குவரும்போது, எனக்கு நடுக்கம் வந்துவிடுகிறது. டாக்டர்! இந்நோய்க்கு உங்களிடம் தக்க மருந்திருக்கிறதா? என் நெஞ்சகத்திலிருந்துகொண்டு என்னை நிந்தித்துக்கொண்டிருப்பதற்கு அளவு கிடையாது. இதனல் எனக்குப் பெரும் வருத்தமுண்டாகிறது.

பெண்ணுக்கும் பொன்னுக்கும்உலகில்கொலையும் ரத்தப்பழியும் எத்தனை ஏற்படுகிறது என்பதை எல்லோரும் தெரிந்திருக்கிறார்கள். இதைத்தாங்களும்அறிந்திருக்கிறீர்கள். இவ்விரு காரியங்களுக்காக நான் உலகில் எத்தனை குழந்தைகளை அனாதையாகவும், எத்தனை ஸ்திரீகளை விதவைகளாகவும் ஆக்கி இருக்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்கள். குற்றமற்ற எத்தனை கற்புள்ள ஸ்திரீகளை யான் கொன்றிருப்பேன் என்பதை நீங்களறிய மாட்டீர்கள். ஒரு மயக்கம், ஒரு உணர்ச்சி ஆகியவைகளினல் இவையனைத்தையும் யான் செய்தேன். ஆனல், டாக்டர்! இப்பொழுது என் நினைவிற்கு அவைகள் வரும்போது என் ஈரல் குலையைப் பிடுங்கிவிடுகிறது. இதற்கு ஏதேனும் பரிகாரம் சொல்லுங்கள். நீங்கள் பிரபலமான டாக்டராக இருக்கிறீர்கள். உங்களிடம் ஏதேனும் பரிகாரமிருக்கும்."

டாக்டர் இவைகளைக் கேட்டுப் பிரமித்துப் போய், இந்தக் கிழவனின் கதையை ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே இருந்தார். வயோதிகர் தனது கதையைச் சொல்லச் சொல்ல அவரது கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்துகொண்டிருந்தது.

டாக்டர்! இப்பொழுது நான் மதுபானம் அருந்துவதை விட்டுவிட்டேன். ஆயினும், ஒரு காலத்தில் நான் தண்ணீரைப்போல் மதுவை

உபயோகித்துக் கொண்டிருந்தேன். ஒரு இரவில் நடந்த சங்கதியைக் கேளுங்கள்! நான் மதுபானமருந்திப் போதையுள்ளவனுகிவிட்டேனுகையால், போதை தலைக்கு மேலேறிவிட்டது. என்னுடைய காதலியை நான் எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தேன். இரவு 10 மணிக்கு அவள் என்னைவந்து பார்க்கவேண்டும் என்று திட்டம் செய்திருந்தும் குறிப்பிட்ட நேரத்துக்குக் கொஞ்சம் பிந்தி, 11 மணிக்கு அவள் வந்தாள். அவளுடைய இந்தத் தவறினுல் எனக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது; என்னுல் பொறுக்க முடியவில்லை. அவள் என் அறைக்குள் நுழைந்தவுடன் ரிவால்வரை எடுத்து அவளைக் குறி வைத்துவிட்டேன். பின்னர், அவளுடைய சவத்தை கனத்த கல்லுடன் சேர்த்துக் கட்டி எவருக்கும் தெரியாமல் சமுத்திரத்திற்குள் ளாக்கிவிட்டேன். அவளது ஸ்தூலத்தை மச்சங்கள் புசித்திருக்கும். ஆயினும், அந்தச் சம்பவம் இன்னும் எனக்கு அதிக பயங்கரத்தையுண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

டாக்டர்! இதுமட்டுமா? மதுபானம் அருந்தி யான் போதையுள்ளவனுக இருக்கும்போது, பெரும் பெரும் பாதகங்களைச் செய்திருப்பதை இன்று நினைத்தால் என் இருதயத்தில் ஒரு விதமான திடுக்கம் உண்டாகிவிடுகிறது. அதற்குப் பின் எனது இருதயத்தில் சாந்தி இருப்பதில்லை. இதற்கு தக்க சிகிச்சை செய்யுங்கள். இதற்குத் தக்க சிகிச்சை செய்யவில்லையாயின் யான் இனி உயிருடன் இருப்பதும் துர்லபம் தான்.

நான் விவாகம் செய்துகொள்ளாதிருந்த காலத்தில்தான் இம்மாதிரி எல்லாம் செய்தேன் என்று தாங்கள் நினைக்கக்கூடும். நான் மூன்று முறை விவாகம் செய்தேன்; ஏழு எட்டு மக்களும் பிறந்தனர். என்னுடைய தீய செய்கையின் பலன் என்று தாங்கள் கூறினுலுஞ் சரி அல்லது வேறு காரணம் கூறினுலுஞ் சரி, எனக்குவாய்த்த மூன்று மனைவியரும் வியபசாரியாகவே இருந்தனர். அதனுல் அம்மூன்று பேர்களின் வாணுள்களையும் யான் தொலைக்க வேண்டியதாகவே நேர்ந்தது. என் மனைவியர்கள் உண்மையில் வியபசாரிகளாக இருக்கவில்லை. ஆனுல், நான் அவர்களை அலக்ஷியம் செய்து கொண்டிருந்ததும், அவர்களை நான் கவனிக்காதிருந்ததும்தான் அவர்களை வியபசாரிகளாக ஆக்கிவிட்டது என்று சிலர் கருதுகின்றனர். இவர்களின் வாணுளை நான் எவ்வாறு முடிவு செய்தேன் என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள். ஆயினும், என்கையினுல் அவர்கள் மரணம் என்ற கணவாயில் தள்ளப்பட்டனர். இவ்விஷயங்களனைத்தையும் என் மனம் நன்குணர்ந்திருப்பதால், என்னை க்ஷணப்பொழுதேனும் நிம்மதியாகஇருக்கவிடுவதில்லை. டாக்டர்! இதற்கு ஏதேனும் பரிகாரம் செய்யவில்லையாயின் யான் நிச்சயமாகப் பைத்தியக் காரனுகிவிடுவேன்.

எனக்குப் பிறந்த ஏழெட்டு மக்களில் எவரும் இப்பொழுது உயிருடன் இல்லை என்பதைக் கேட்க நீங்கள் வருத்தமடையக்கூடும். நான் பெற்றவர்களில் நால்வர் சின்னஞ் சிறு வயதிலேயே மரித்தனர். இரண்டு புதல்விகளும் ஒரு புதல்வனும் பெரியவர்களாயினர். இவர்களில் மூன்று வருஷங்களுக்குமுன் என் புதல்விகளில் ஒருத்தி காசவியாதியால் இக் காசினியை விட்டகன்றனள். மற்றொரு புதல்வி வாந்தி பேதியால் வானுலகெய்தினள். எஞ்சியிருந்த ஒரு புதல்வனும் ஜலத்தில் மூழ்கிச் சென்ற வருஷம் மடிந்தனன். ஆவோ! என் சொத்துக்களனைத்துக்கும் ஏக வாரிசாக இருந்த ஒருவனும் போய்விட்டான். இனி இந்தச் சொத்துக்களை வைத்துக்கொண்டு என்ன செய்யப்போகிறேன் என்பது எனக்குத் தெரியவில்லை. இவைகளால் எனக்கு என்ன பிரயோஜனம் ஏற்படப்போகிறதென்பதும் விளங்கவில்லை. டாக்டர்! இந்தச் சொத்துக்களை எல்லாம் நான் வெகு சமர்த்தாகச்சம்பாதித்தேன்; ஆயினும், இதிலிருந்து சுகம் பெறுவதற்கு என் சந்ததியினரில் ஒருவருமில்லை. இது என் அக்கிரமச் செய்கைகளுக்கு தண்டனையோ? டாக்டர்! நான் மிகவும் துரதிர்ஷ்டம் வாய்ந்தவன்; என் மனத்தின் நிலைமையைப் பாருங்கள்! நாடித்துடிப்பு குறைந்துகொண்டே வருகிறது. அதைத் தூண்டுங்கள். இல்லையென்றுல் இம்முறையில் யான் இறந்துவிடுவேன்.

பின்னர், வயோதிக நோயாளிக்குப் பேச முடியவில்லை. கொஞ்சநேரம் பேசாதிருந்தான். கொஞ்சம் பேசுவதற்குச் சக்தி வந்தவுடன், மறுபடியும் டாக்டரைப் பார்த்து,

"டாக்டர்! திரவியம்தான் உலகில் எல்லாவற்றினும் பெரிய சுகமென்று நான் கருதியிருந்தேன். ஆதலால், அதை அடைவதற்கு யான் எந்தக் காரியத்தையும் செய்யத் தயங்கவில்லை. ஆனுல் எனக்கு 80 வயது சென்ற

பின்னர்தான், "மனச் சாந்தி தனப்பெருக்கி லில்லை" என்பதையுணர்ந்தேன். ஆகவே, மனச்சாந்தி வேறு விஷயம் என்பதை நான் இப்பொழுதுதான் தெரிந்தேன். அவ்விஷயம் என்னவென்பதைத் தாங்கள் காண்பித்துத் தருவீர்களா? மனச்சாந்திக்கேற்ற மருந்து தங்களிடமிருந்தால் என் செல்வமனைத்தையும் எடுத்துக்கொண்டு அம்மருந்தை எனக்குத் தந் தருளுங்கள்."

பின்னும், அந்த வியாதியஸ்தன் கூறிய தாவது :—டாக்டர்! எனது இருதயத்துக்குள் மௌனமாக இருந்துகொண்டு என்னைத் தொந் தரவு செய்துகொண்டிருக்கும் அந்தக் குரல் களை யான் கேட்டுக் களைத்துப்போயினன். அல்லாஹுத ஆலாவுக்காக இந்த இருதய கம லத்தை என் நெஞ்சைவிட்டு எடுத்தெறிந்து விடுங்கள்; அந்த மனத்தின் தூண்டுதலினல் தான் நான் இவையெல்லாம் செய்தேன்; இன்று அந்த மனம்தான் என்னை நிந்தித்துக் கொண்டிருக்கிறது. டாக்டர்! இனி என்னல் கஷ்டத்தைச் சகித்துக்கொண்டிருக்கமுடியாது; என் நெஞ்சகத்திலிருந்து இந்த மனத்தைப் பிடுங்கி எடுத்துவிடுங்கள்; என் மார்புக்குள் நெருப்புக்கங்கி இருந்துகொண்டிருக்கிற மனம் எனக்குத் தேவையில்லையென்று பலவாருகப் புலம்பிக்கொண்டிருந்தார். வயோதிகரின் அந் தியமும் நெருங்கிக்கொண்டிருந்தது. அவர் பாலியத்தில்செய்த பாதகங்கள் ஒவ்வொன்ருக அவர்முன் வந்துகொண்டிருந்தன. அவருடைய கஷ்டகால இல்வாழ்வானது இறுதியில் அவ ரைப் பைத்தியக்காரராகவே ஆக்கிவிட்டது. திடீரென அவர் துடித்தார்; வாரிச் சுருட்டி எழுந்திருக்க முயன்ருர்; தன் வேதனையைப் பொறுக்கமுடியாமல் கூக்குரலிட்டார். "டாக் டர்! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று ஒரு சப்தமிட்டார். அத்துடன் சப்தம் ஒடுங்கி விட்டது; அதற்குப்பின் அவர் பேசவில்லை. பார்த்தால் வயோதிகரைக் காணோம். அவரது சவம்தான் டாக்டரின் முன்னிலையில் அசை வற்றுக்கிடந்தது. அவர் மனமே அவரை இறுதியில் சுட்டுக்கொண்டிருந்தது. அவருக் குள்ள கஷ்டங்களும் இம்மரணத்துடன் வெளிப்பார்வைக்கு ஒழிந்ததாகத் தோன் றிற்று. ஆனல், இந்தக் கஷ்டங்கள் இவ்வுல கத்துடன் நிவர்த்தியாகிவிட்டது என்று யார் தான் கூறமுடியும்? அவருடைய பூத உடலம் திக்கற்ற நிலைமையில், "அறிவுகெட்ட மனித! உன்னுடைய ஆத்மாவின் சுகத்துக்காக பாவத்தை விலைக்கு வாங்குகின்றனை" என்று சொல்லிக்கொண்டிருந்தது.

சோதரீர்! இந்த வயோதிகரின்நிலைமைதான் இக்காலத்தில் நம்மவரிற் பலருக்கு மிருந்து வருகிறது. தங்களது வாலிபப் பருவத்தில், தங்களது மனே இச்சையைப் பூர்த்திசெய் வதற்காக, பணத்தைத் திரட்டுவதற்காக, செய்யத்தகாத காரியங்களையெல்லாஞ் செய்யத் துணிந்துவிடுகின்றனர். மண்ணுசை, பொன் ஞசை, பெண்ணுசை என்ற மூவகை ஆசைக் கும் வயப்பட்டு பஞ்சமாபாதகங்களைச் செய் கின்றனர். இவ்வுலக வாழ்வினை மெய்யென்று நம்பி மறு உலக வாழ்வினை மறந்து இன்ப வாழ்க்கையிலும், ஆடம்பரங்களிலும் தங்களது மனம்போனபோக்குப்படிச் செய்து இறைவ னின் கட்டளையைமீறி பாபிகளாக ஆகுகின்ற னர். இப்படிப்பட்டவர்களுக்கு உண்மையில் தெய்வபக்தியோ, தெய்வபயமோ இருப்ப தில்லை. ஆனல், அந்தக் குலத்தில், அந்த வகுப்பில், அந்தந்த ஜாதியில், அந்த மதத்தில் பிறந்ததற்காக வெளியில் வேஷம் போட்டுக் கொண்டு ராவுத்தராகவோ, சாகிபாகவோ, காவன்னவாகவோ, பட்டாணியாகவோ உடை நடையும் உடுத்தி அலங்காரவேஷம் போட்டுக் கொள்கின்றனர். இவர்களின் இவ்விதச் செய் கைகள் நாத்தீகரின், தஹ்ரியரின், கடவுள் ஒரு வர் உண்டு என்ற நம்பிக்கையற்றவரின், மரித்த வர் உயிர்ப்பிக்கப்பட்டு கேள்வி கணக்கு கேட் கப்பட்டுத் தண்டனை அடைவதென்பதை மறுப்பவரின் செய்கையாக இருப்பதைக்கண்டு தங்குலத்தார், தஞ்சாதியார், தஞ்சமூகத்தார், தம் மார்க்கத்தார் கண்டிப்பர், அவமதிப்பர் என்றஞ்சி மத ஊழியர், சமூகத் தொண்டர், மதத்துக்காகத் தியாகஞ்செய்தவர் என்ற வேஷங்களைப் போட்டுக்கொண்டு தன்னைப் போல் பலரை உற்பத்தி செய்துவிட வும், தனது செய்கைகளை ஆதரிக்கும் ஒரு கூட்டத்தை உண்டாக்கிவிடவும் முயற்சி செய்கின்றனர். புலி வேஷம் போட்டுள்ள இந்தப் போலிகளின் உள் வயணத்தை அறியாத பொதுமக்கள் இவர்களின் கூற்றுக் களை மெய்யென்று நம்பி அவர்களைப் பின்பற் றத்தொடங்கி விடுகின்றனர். இன்னேர் மார்க் கத்திலும் மதத்திலும் புரட்சியை உண்டு பண்ண முயலுவதுடன் மதப்பெரியார்களையும், குல மேதாவிகளையும் கூசாமல் ஏசுகின்றனர்;

மார்க்கத்தலைவர்களையும் சமூகத்தலைவர்களையும் தக்கபடி திட்டுகின்றனர். இறுதியாக எல்லாம் தெரிந்து விட்டதேபோல் பாவனை காட்டி, மார்க்க வேதக் கிரந்தங்களுக்கு சுயமே வியாக்யானம் செய்யவும் முற்பட்டு, தங்களது நாத்திகச் செய்கைதான் சுத்தமான இயற்கை மதம் என்பதை ருஜூப்பிப்பதற்காக வேத வசனங்களைத் திரித்தும் கூறுகின்றனர். பெரியாரைப் பரிகசித்து இகழுகின்றனர். இதுவரை உலகில் அறிஞர்களாலும், இமாம்களாலும் அறிவிக்கப்பட்டு வந்த மதச் சட்டங்களனைத்தையும் மூடப்பழக்கம், மூடக்கொள்கை, வைதீகப்பித்து என்று வாய் கூசாமல் பிதற்றுகின்றனர். உண்மையான மதத்தை உலகில் பரவச்செய்வதாகக் கூறித் தங்களது நாத்தீகக் கொள்கைகளுக்கு ஆத்தீகப் பெயரிட்டு அவனியோருக்கு அளிக்கின்றனர். இன்னும் பல தகாதகாரியங்களை இத்தரணியில் புரியத் தயங்குகிறார்களில்லை. இவையனைத்தையும் இக்குவலய மாந்தரை ஏமாற்றச் செய்யலாம். காசினியோர் இவைகளைக்கண்டு ஏமாற்றமடையலாம். தங்களது நினைப்புப்படி தங்களுக்குச் செல்வமும் கௌரவமும், மதிப்பும் கிடைக்கலாம்.

ஆனால், இவை எத்தனை நாளைக்கு? எத்தனை காலம் இன்பசுகத்திலிருந்தாலும் இனியொரு காலத்தில் இவைகளையெல்லாம் துறந்து ஒருவனின் கட்டளைக்குட்பட்டு நாம் மறுவுலகெய்யவேண்டியதிருக்கிறது. அதுபோது இவர்கள் செய்த இக்காரியங்களெல்லாம் இவர்களுக்கு நேர்விரோதமாக, எதிராக இருந்து இவர்களை இம்மையிலும் மறுமையிலும் வாட்டத் தொடங்கிவிடும். இறைவனை ஏமாற்ற முடியாதாகையால் "ரோஜெ மஹ்ஷரி"ல் இச்செய்கைகளெல்லாம் யாவருக்கும் முன்னிலையில் அம்பலப்படுத்தப்படும்போது இவர்களின் நிலைமை பரிதாபகரமாக இருக்கும் என்பதை நாம் இக்கதையிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். இறைவன் நம்மவருக்கு நேரான வழிகாட்டி சன்மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கும்படிச் செய்வானாக. ஆமீன்.

---

# ஷிர்கு ஏன் பொறுக்கப்படுவதில்லை?

மௌலவி E. M. S. கமால் எழுதியது.

நிச்சயமாய் ஆண்டவன் அவனுடன் இணைக் கூட்டப்படுவதை ஒருபோதும் பொறுக்க மாட்டான். அதைத் தவிர இதர (பாவங்கள்) யாவற்றையும் பொறுத்துக்கொள்வான்.

(அல்குர்ஆன்.)

உலகில் தெய்வ பயமற்றோரும், நாத்திகர்களும் புரிந்துவரும் பஞ்சமாபாதகங்கள் கொஞ்சநஞ்சமல்ல. கொலை களவு குடி விபசாரம் சூது பொய் புறம் கோள் கிளர்ச்சி இன்னும் இவைபோன்ற எத்துணையோ எண்ணத்துலையாத பாபங்கள் நடமாடி வருகிறது. இவைகளில் மாபெருங் கொடிய பாபம் எதுவாயிருப்பினும் ஒருவன் நெஞ்சஞ்சாமல் செய்துவிட்டு, பிறகு நல்ல புத்தி வந்து அல்லாஹ்விடம் கெஞ்சி பாப மன்னிப்புத் தேடினால், அதை மன்னித்து விடுகிறான். இது அவனது பெருந்தகமை.

உதாரணமாய், முற்காலத்தில் ஏழையொருவன், பிழைப்புக்கு வழியறியாதவன் திருட்டுத் தொழிலைத் தெரிந்துகொண்டான். திருட்டிலும் கேவலமான திருட்டு, தீரமாய் சூறையாடப்படும் தீவட்டிக் கொள்ளையல்ல, பகற்கொள்ளையுமல்ல. இவனது திருட்டு மிக மிக இழிவானது, கேடு கெட்டது. அது என்ன? புதிது புதிதாய் சமாதிச் செய்யப்பட்டிருக்கும் புதை குழிகளில், இரவு நேரங்களில் புகுந்து பிணங்களின் துணியை-கபனைக் களைந்தெடுத்து விற்று வயிறு வளர்ப்பது அவனது தொழிலாயிருந்தது. அற்பன், கருதகன், இதே பழக்கமாய்க் கொண்ட அப்பாதகன், ஓர் நள்ளிரவில், அன்று பிற்பகல் சமாதிச் செய்யப்பட்ட புதிய புதைக் குழியொன்றை தோண்டினான்; அதிலிருந்த பிணத்தின் கபன் துணியைக் களைந்தான்; அழகில் இணையில்லாத இள அணங்கொருத்தி துயில் கொள்வதேபோல் தோன்றிற்று. வயது 18-க்கு மேல் 20-க்கு உள்

பட்ட அவளை, தங்க விக்கிரஹமோ, பசும்பொன் சிலையோவென்றுதான் சந்தேகிக்கவேண்டும். ஆஹா! கரிய கூந்தலும், பிரைச்சந்திரனைப் போன்ற நுதலும், பூர்ண சந்திரனைப்போன்ற முகமும், மிருதுவான சரீரமும், முத்து வரிசைப்போன்ற தந்தங்களும், தகுந்த பருவமும், முழங்கால்வரை நீண்டு பருத்து உருண்டு வளர்ந்த செவ்விய கரங்களும், பொற்கலசங்களைபோல் விம்மி எழுந்த மார்புகளும் அவ்வாலிபனை தடுமாறச் செய்துவிட்டது. அது சுடுகாடு என்பதை மறந்தான்; சுவன வீடு என மதித்தான். அது புதைகுழி என்பதை மறந்தான்; பள்ளியறை என மதித்தான். அது பிணப்பெண் என்பதை மறந்தான்; மணப்பெண் என மதித்தான். உன்மத்தங்கொண்டான்; காமம் கபாலத்தை முட்டியது. கண் இருண்டது; மண்டை கிறு கிறுவென சுழன்றது. இனி இன்பநுகர்ச்சியை க்ஷணமும் தள்ளிவைக்க தாளாத நிலைமைக்கு காமம் மண்டை கொண்டுவிட்டது. உடனே பாதகச் செயலுக்குத் துணிந்துவிட்டான். பூட்டுகள் விட்டுப் போமாபோல் இருக கட்டியணைத்தான், முத்தினன், முகந்தான், கொஞ்சினன், குலாவினன்; அதரத்தை உருஞ்சினன். சுருங்கச் சொன்னால், சுத்தமாய் ஸ்னனம் செய்விக்கப்பட்டு சமாதிச் செய்யப்பட்டிருந்த அந்த பெண் மையித்தின் கற்பை களங்கப்படுத்தி தன் காமத்தைத் தீர்த்துக் கொண்டான்; அப்பெண்ணை கியாமத் வரை தீட்டுத் துடக்கிலாக்கி விட்டான்.

இச்சம்பவம் சிந்தனைக்குரியதாகும். இச்சண்டாளன் எத்துணைவகை பாபத்திற்காளானன் பாருங்கள்! நமது ஹிருதயங்களை துணுக்குரச் செய்யக் கூடியதும், அவனை எதிரில் கண்டால் மென்று விழுங்கிவிடலாமாவென்ற ஆத்திரமும் க்ஷாத்திரமும் ஏற்படக் கூடியதுமான அத்தனை பெரிய அடாத செயலாய்த்தான் காணப்படுகிறது. அத்துணை பெரும்பாபங்களையும் ஒரே ஆள், ஒரே சமயத்தில் செய்து முடித்துவிட்டானென்றால் அது சின்ன விஷயமல்ல. துணிகரமானவனும், தெய்வ பயம் கொஞ்சமுமில்லாதவனும், நெஞ்சில் ஈரமில்லாதவனுமிருந்திருக்கவேண்டும். எந்த ஜட்ஜியும், எந்த ஜூரர்களும், எந்த அப்பீல் கோர்ட்டும் இக்குற்றத்தை மன்னிக்க முன்வரமாட்டார்களென்பது முக்காலும் திண்ணம். எனவே, பிறகு நிதானம்பெற்று யோசிக்கிறான் அவன். மனதே அவனைச் சுடுகிறது, வெட்கம் தலைகாட்ட முடியவில்லை. தன்னையே, தான் பார்க்க லஜ்ஜைப்படுகிறான்; நாக்கைப் பிடுங்கிகொண்டு சாகலாமாவென துணிகரங்கொள்கிறான். பாபத்துக்குப் பிராயச் சித்தம் பண்ணிவிட்டு உயிரை விட்டு விடுவதாய்த் தீர்மானித்தான்.

ஆண்டகையிடம் பாபமீட்சி தேடுமாறு அக்கால தீர்க்கதரிசியிடம் ஓடி விஷயத்தைச் சொல்லி முறையிட்டு மன்றாடினன். இவனது முறையீடு, நபியின் காதில் நாராசம் நுழைவதே போலிருந்தது. நபி அவனைப் பார்க்கவும் அறுவறுப்பக்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். வானம் உன்தலையில் இடிந்து விழுந்துவிடும்; என்முன் நில்லாதே; உன்னைப் பிடிக்கும் பீடை, ஊரையும் சேர்த்துப்பீடிக்கும்; ஓடுவிடு, இக்கொடும் பாபம் செய்ததுமல்லாமல் இவ்விழிச் செயலை வாய்விட்டு விபரித்து பாப மன்னிப்புத்தேட என்னிடம் சிபார்சுக்கா வந்திருக்கிறாய்? வாய் பேசவியலாது, சர்வ ஜீவசக்தியும் இழந்து, மௌனியாய் இருந்த மையித்தை மானபங்கப்படுத்த எப்படியடா உன் மனம் துணிந்தது? நீ ஆணோடு, பெண்ணோடு பிறக்கவில்லையா? பாபி, இதை நினைக்கவே என் மனம் துணுக்குறுகிறது. இந்த துஷ்டச்செயலுக்கா ஆண்டவன்முன் என்னை ஆஜராகி மன்னிப்புக்கோர வேண்டுகிறாய்? வெட்கம், வெட்கம். என்னால் இயலாதுவென தூர்த்தனம்பேசி, அவனது கோரிக்கையை திரஸ்கரித்துவிட்டார் நபி. வாலிபன் மன எக்கங்கொண்டான். பாபமே செய்தோம்; அதற்குப் பிராயச்சித்தமில்லையா? என்னமோ என் பொல்லாதவிதி கெடுபுத்தியைக் காட்டிற்று; இனி யான் கடைதேற வழியில்லையா? நபியோ முடியாதென விரட்டிவிட்டார். அவரிடம் நமது கோரிக்கையை வெளியிட்டது தவறு. அல்லாஹ்விடம் கேட்பதற்கு வக்காலத்து எதற்கு? அவன்தான் அபயம் அளிக்க வேண்டும்; இல்லையேல் அவனது திருவடியில் உயிரை விட்டுவிட வேண்டுமென்ற ஒரே உறுதியுடன் வெளிக்கிளம்பினன்; யாரும் நடமாடாத பாலைவனத்தின் ஓர் பள்ளத்தாக்கில் போய் அடித்து மோதி ஸஜ்தாவில் வீழ்ந்தான்; ஆண்டகையைத் தொழுதான்; அழுதான்; புரண்டான்; புலம்பினன்; கெஞ்சினன்; கூத்தாடினன்; அலறினன்; பதறினன்; செய்த பாபத்தை நினைத்து நினைத்து மனமுருகினன். அவன்படும் அவஸ்தை

பார்ப்பவர் ஹிருதயம் வெடித்து விடுமாப் போன்ற அத்தனை சோகமாயிருந்தது. இனி துரும்பளவும் துரோகம் பண்ணுவதில்லை யென பிரதிக்கினை பண்ணினான்; சிறு குற்றங் கூட செய்வதில்லையென சபதஞ்செய்தான்; அன்னந்தண்ணீர் ஆகாராதி அருந்தினானில்லை; கண்ணீர்வற்றி செந்நீர் பெருக ஆரம்பித்தது; உடல் மெலிந்து வலிமை குன்றிவிட்டது; மேனி மஞ்சள்நிறமாய் மாறிவிட்டது. வாழ்க்கையின் இடத்தை வேறு உலகுக்கு மாற்றிக் கொண்டுவிடுவானென எதிர்பார்க்க வேண்டியிருந்தது. அத்தனை பாடுபட்டு ஆண்டவனிடம் பாபமீட்சி தேடுகிறான். இதற்குத்தான் "தவ்பயேநசூஹா"வென குர்ஆனில் கூறப்படுகிறது. அவன் கதறுவது கல்லுங் கரைந்துவிடக்கூடியதாய் இருந்தது. எனவே, நமது இரட்சகன் பிடிவாதமான கடின சித்தமுடையவனல்ல; தயவு தாட்சண்யமுள்ளவன்; அன்பு ஆதரவு உள்ளவன்; கிருபா கடாட்சமுள்ளவன். அவனது இரைஞ்சுதலைக்கண்டு மனம் இறங்கினான்; பக்தனின் தவத்தை மெச்சினான்; பாவத்தை மன்னித்தான். தனது நபியின் வாயிலாய் மேற்படி சுபச்செய்தியை அந்த அப்பாவிக்கு அறிவிக்கும்படி கட்டளையிட்டான். "எனது கிருபைக்கடல் மிக ஆழ அகலமுள்ளதென்பதை நினையாது ஏன் அவனை விரட்டினீர்" என நபியை கடிந்துகொண்டான். பாலைவனத்தில் புரண்டு புலம்பிக்கொண்டிருந்த பக்தனை நபி சந்தித்து, அவனது மனோ உருக்கத்தைக் கண்டு மெச்சி ஆண்டவனின் தூதை ஓதினார். உடனே அம்மனிதன் தெளிவு பெற்றெழுந்து புளகாங்கிதங் கொண்டான்; குதூகலமெய்தினான்; ஆனந்தக் கூத்தாடினான். இனி, தன் ஜன்மம் சாபல்யம் அடைந்துவிட்டதாய் சந்தோஷப் பிரவாகத்தில் மூழ்கினான். நரகவாயிலில் துடித்துக்கொண்டிருக்கும் ஒருவனை சுவர்க்கத்திற்குள் கட்டி உருட்டியதே போல் களிப்பெய்தினான். ஆண்டகையை மிக மிக, ஸ்தோத்திரம் பண்ணினான்; புகழ்பாடினான்; கை கூப்பினான்; கரைபுரண்ட குதூகலத்தில் துள்ளிக் குதித்தான்.

இஃதோர் பழங்கால சரிதை. இதிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ளவேண்டியது தொன்றுளது. அதாவது, ஆண்டவன் தன் அடிமைகளின் குற்றங் குறைகள் மலையளவு இருந்தாலும் தான் செய்த தவறுக்கு வருந்தி, இனி செய்வதில்லையென்ற சபதத்தின்பேரில் உண்மையான உருக்கத்தோடு மன்னிப்புத் தேடினால், மனவிரக்கங்கொண்டு மன்னித்துவிடும் பெருங்குணம் படைத்தவனென்பதே. அது அவனுக்குள்ள உயரிய அந்தஸ்து.

அப்படியானால், பர்வதம் போன்ற பாபங்களை யெல்லாம் பொருத்துக்கொள்ளும் பெருந்தகமையுள்ள ஆண்டவன், இணைவைத்தலை மட்டும் ஏன் மன்னிக்க முடியாதென்கிறான் என்ற கேள்வி பிறக்கிறது. ஆம், அதில் ஏதேனும் ஓர் பிரதான காரணமிருந்துதான் ஆகவேண்டும். அதை அலசிப்பார்ப்பதும் அவசியந்தான்.

'ஷிர்கு' என்னும் அரபிப் பதத்திற்கு இணை, துணை, கூட்டு, போட்டி என்றெல்லாம் பொருட்கொள்ளலாம். மேல் கூறப்பட்ட பதங்கள் ஏதேனும் ஒருவகையில் ஒருவருக்கொருவர் அந்தஸ்தில் பங்கிருக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. ஆண்டகைக்கு யாரும் நிகர் இலர் என்பது நமது கொள்கை. அதையே தான் நமதுவேதமும் வற்புறுத்துகிறது. "இராக்ஷஸ வருக்கம் மனு வருக்கம் (இவைகளை) எம்மை வணங்குவதற்கல்லாது சிருட்டிக்கவில்லை" என்பது தெய்வவாக்கு. உன்னையே வணங்குகிறோம் என்பது உண்மைத்தத்துவம். கலிமயே தவ்ஹீதின் தாத்பரியமும் இதே முரசைத்தான் முளக்கிக்கொண்டிருக்கிறது. எனவே, அல்லாஹ்வுக்குரிய வணக்கத்தில் யாருக்கும் வீதம் போடக்கூடாது. எளிய வணக்கமும் அவனையே சாரவேண்டியிருக்க, அவ்வணக்கத்திற்குரிய குட்டி தெய்வங்கள் இன்னும் பல உளவென கூட்டுப்படுத்தினால் வணக்கத்திற்குரிய உண்மை கர்த்தாவுக்கு ரோஷம் பிறக்குமா? பிறக்காதா? நியாயமாய் ஒருவனுக்குக் கிடைக்கவேண்டிய உரிமையில் ஊரான் தலையிட்டால் வீறுப்பு ஏற்படாமலிருக்க முடியுமா?

உலகிலுள்ள எப்பொருட்களையும் மனித சகாயத்திற்கென்றே படைத்ததாயும், மனிதனைத் தனக்காக, அதாவது தன்னை வணங்குவதற்காகப் படைத்ததாயும் இறைவன் அருள்கிறான்.

உதாரணமாய், உலகாளுங் கோமானொருவன், இவ்வுலகத்திலேயே வேறெங்கும் காணக் கிடைக்காத அத்துணை சிருங்கார ரூபலாவண்யமுள்ள, ஆனால் ஓர் ஏழை குடும்பத்திலுதித்த அரம்பையொருவளை வெகு பாடுபட்டுத் தேடியலைந்து, கண்டுபிடித்து காதலித்து கலியாணம் பண்ணிக்கொண்டான். நினைவும்

கனவும் அவளாகவே இருந்தன. அவளில்லா விட்டால் இவ்வுலகமே அஸ்தமித்துவிடுமென் றெண்ணினன். சுவர்க்கலோகத்து ஹூரோ, அல்லது பரிஜாதியில் பிறந்த பெண்ணரசியோ வென பார்ப்பவர் பிரமிக்கும் இப்பொற்பாவை யைப் படைப்பதற்கென்றுதான் இறைவன் இந்த ஈரேழு லோகத்தையும் படைத்திருக்க வேண்டுமென இறுமாப்புக் கொள்வான். 'லவ் லாக' வென்னும் பிரபல நாயகவாக்கை பின்வரு மாறு "லவ்லாகி லவ்லாகி லமாகுலிகதில் அப் லாக்" வென்று புரட்டி பாடம் பண்ணினன். தான் ஜன்மமெடுத்ததே அவளை அடைவதற் குத்தானென எண்ணினன். உடலிரண்டும் உயிரொன்றுமாய்க் கருதினன். உயிரினும் பெரிய மூன்னறி தெய்வமென மதித்தான். உடல், பொருள், ஆவி யாவையும் அவளுடைய சுண்டுவிரல் சைகைக்குத் தத்தம்பண்ண தயா ரானன். நதிகள் சூழ்ந்த நறுமணம் வீசும் நந்தவனத்தின் நடுவே, வானமளாவிய உப்ப ரிகையொன்றை வாசஸ்தலமாக்கினன். பல சேடிகளினூடே அன்ன பேடேபோல் அவ் வுய்யான வனத்தில் உலாவி வருவாள்; குயிலே போல் கூவுவாள்; மயிலேபோல் ஆடுவாள்; கவலையென்பத அவளது அகராதியிலிருந்து கெல்லி எரியவேண்டியதாய் ஆய்விட்டது. எப் பொழுதும் சந்தோஷம். எல்லாம் சொர்க்க போகம். ஏழைக் குடிபிறந்த பெண்ணாயிருந் தும் அவளுக்குள்ள அழகின் மேம்பாட்டினல், உலகாளும் அரசிளங்குமரனின் அன்பிற்குரிய ராணியானள். அரசாங்க அலுவல்களை அமைச் சர்வசம் ஒப்புவித்துவிட்டு அவளிடமே அவனது ஆயுளைக்கழிக்க ஏற்பாடு செய்துகொண்டான். எனது அன்பும், இந்த பங்களாவும், பணிப் பெண்களும், விலைக்குட்படா கோடிக்கணக்கான துகையைக்கொண்ட நகைகளுமென்ன? இந்த ராஜ்ஜியமுங்கூட உனக்கென்றே அர்ப்பணம் பண்ணிவிட்டேன்; எல்லாம் உனக்குச் சொந் தம். ஆனல் நீ மட்டிலும் எனக்குச் சொந்த மென்னும் உரிமையும் உடன்படிக்கையும் நடந் தன. ஒன்றுமில்லா அகதியாயிருந்த ஓர் மாதை அழைத்துவந்து, தன் காதல் கிழத்தியாய் ஆக் கிக்கொண்ட துமன்னியில், இத்தனை சுவர்க்கா னந்த சுகபோகத்தினூடே சுகித்துவரும் இவ் வரசி, இத்தனைக்கும் கர்த்தாவான தன் பர்த்தா விடம் எவ்வாறு நடந்துக்கொள்ளவேண்டுமென் பதற்கும் சில விதி முறைகளிருக்கின்றன. அவனைக் கண்டதும் ஆவலோடு ஆலிங்கனம் செய்து, அவனது அன்பை அபிவிருத்திச் செய்து கொள்ளவேண்டும். அவன் மனம் கோணாது நடந்து கொள்ளவேண்டும்; சதா அவனது இருதயத்தை இன்புறச் செய்வது எதுவோ அதில் கண்ணுங்கருத்து மாயிருந்து, அவனை களிப்பிக்கவேண்டியதும், அவளது கற்பிற்கு கறையும் குறையும் ஏற் படாது காத்து, அவன் ஒருவனுக்கே உரித் தாக்கி ஒப்படைக்க வேண்டியதும், அதில் பிறர் யாருக்கும் பங்குபாகம் கொடுக்காமலும், பிறர் தன்னைதீண்டவிடாமலும், மனதாலுங்கூட பரபுருஷனை நினையாமலும் பரிசுத்தமாய் நடந் துக் கொள்ளவேண்டியது அவளது கடமை யாகும். இதில் அவள் அசட்டைபண்ணி ஏமாந்துவிடில், பிறகு களேபாரமான கேடு சம்பவிக்குமென்பது யாவருமறிந்த உண்மை. எனவே, வாழ்க்கைத் துறையில் புருஷன் மன திற்கொவ்வாத சிறிய குற்றங்குறைகள் காணப் படுவதும், மனக் கசப்பு ஏற்பட்டு மறைவதும் உலக சகஜந்தானென்பதற் கேற்ப, அவ்விரு வருக்குமிடையே ஏற்பட்ட சிறு குறைகளைப் பொருட்படுத்தாது பரஸ்பரம் பெருந்தன்மை யோடு நடந்து வந்தார்களென்பது போற்றத் தக்கதாகும். சிறு சிறு குற்றங்களுக்காக ஒருவ ருக்கொருவர் சீற்றங்கொண்டு மனதைபுண்படுத் திக்கொள்வது நேர்மையாகாதல்லவா? ஆண்ட வனும் சிறு சிறு குற்றங்களையெல்லாம் பாப மன்னிப்புத் தேடாமலே இவனது நித்திய சத் காரியங்களாலேயே மன்னித்து விடுகிறனென் பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மனித இயற்கையில் சில கெடுபுத்திகளும் தோன்று வதைக் காண்கிருேமாதலின், ஓர் துணிகரமான காரியத்தை அக்காரிகை செய்யத் துணிந்தாள்.

புருஷனின் இறந்துபோன மூத்தாளுக்கு மூன்று வயதுள்ள ஓர் ஆண்மகவுண்டு. அவ் ஆண் உயிரோடு வளர்ந்துவிட்டால், புருஷனுக் கப்புரம் ராஜியத்துக்குரியவன் அவனே ஆய் விடுவானே என்பதை பொருக்கமாட்டாமல், அவ்விளைஞனை எவ்வாறேனும் விண்ணுலகு அனுப்பிவிட சமயம் பார்த்துவந்தாள். அதற் கேற்ற சந்தர்ப்பங் கிடைத்ததும், முன் பின் யோசியாமல் அம்மைந்தனின் மென்னியைப் பிடித்து மெரித்தாள். உயிர் வாங்கும் வேலை யில் முன்பின் அனுபவமுடையவளல்லவாத லின், காலதாமதம் ஏற்பட்டது. குழந்தை கதறினன்; அறுத்த கோழியேபோல் துடித் தான். இவ் அபாய சத்தம் மன்னனின் காதில்

மோதியது. தொனிவரும் திக்கை நோக்கி விரைந்து ஓடினன். பரிதாபமான காக்ஷி, பயங்கரகோலம். தன்னருங் காதலியே காளிரூபங்கொண்டு, இரத்த வேட்கைகொண்ட பெண் வேங்கையேபோல், தன்னரும் புத்திரனின் குரல்வளையை நெறித்து,பாபமறியா அப்பச்சையின் உயிரை உருஞ்சிக்கொண்டிருக்கக் கண்டான். தடுமாறிபோனன்; மூளை குழம்பியது; கனவோ நினைவோவென கண்ணைக் கசக்கினன். விழிப்பு நிலையில் உண்மையாய் நடக்கும் விஷயமென உணர்ந்தான். கட்டழகி கையுங் களவுமாய் அகப்பட்டுக் கொண்டாள். மைந்தனின் உயிர் மண்ணுலகை நீத்து விண்ணுலகுக்கு வெகு துரிதமாய் பிரயாணம் பண்ணிவிட்டது. ஒரு வினடியில் ஆயிரங்கோடி சிந்தனைகள், அப்பாதகியின் மனதில் தோன்றி மறைந்தன. அரசன் முகம்விழிக்காமல் தற்கொலை பண்ணிக்கொள்ள வழிதேடினள். அவ்வரையில் எந்த உலோகமும் அச்சண்டாளிக்கு உதவிபுரிய முன்வரவில்லையாகையால், அவள் நினைத்த காரியத்தில் சித்தியடைய முடியாதுபோயிற்று. கடைசி ஓர்முடிபுக்கு வந்தாள். அதைத்தவிற வேருவழி அவளுக்குத் துலங்கவில்லை எனவே, கோவென கதறி கீழே விழுந்து, கனவனின் காலை கெட்டியாய்ப் பற்றிக்கொண்டாள். உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்த சதிகாரி, என்னை தங்கள் கை வாளாலே வெட்டி சிதைத்துவிடுங்களென கத்தினள்; நெக்குநெக்குருகினள். அடைக்கலங்கோரிய அணங்கின் பரிதாபக்கோலத்தைப் பார்த்து மன்னனின் கோபம் தணிவுற ஆரம்பித்தது; உறுவியவாள் உறைக்குள் நுழைந்தது. பக்கத்தில் பச்சைக் குழந்தையின் பிரேதம், பாதத்தடியில் பேதைப் பெண்ணின் பாப மன்னிப்பு பிரார்த்தனை. இந்த தரும சங்கடத்தில் இன்னது செய்வதென்று புரியாமல், காலை விடுவித்துக்கொண்டு ஓர் மூலையில் குந்தி சிந்திக்கத் தொடங்கினன். நீண்ட நேர நிசப்த மௌனம். சதிகாரி சாஷ்டாங்கத்திலேயே கிடந்தாள். மன்னன், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, இவள் தன் வயிற்றில் பிறக்கும் புத்திரனுக்கு பட்டங் கிடைக்கவேண்டுமென்ற கெட்ட புத்தியால் இக்கொலைக்குத் துணிந்து விட்டாள்; ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலு மாண்டார் மீள்வதில்லை; இவளை பழிவாங்கி விடுவதால் போன உயிர் வரப்போகிறதா? வென்றெல்லாம் மனதை சமாதானப்படுத்திக்கொண்டு, அம்மங்கையின் மையலில் வெறிபிடித்த வேந்தன், அவளின் கரத்தைப் பற்றி தூக்கி நிப்பாட்டி, அவளது பிரலாபத்துக்கு தேருதல் கூறி, மன்னித்து விட்டதாய் நல்ல வாக்குச் சொன்னன். இருவருமாய்ச் சேர்ந்து குளவியின் கொலையை மறைத்துவிட்டனர். நாளாவட்டத்தில் அஷ்சம்பவம் இவர்கள் மனதைவிட்டும் சுத்தமாய் அகன்றுவிட்டது. எந்த பின்னல் கோர்ட்டு பிரமுகர்களும் இக்கொலையை மன்னித்துவிட வழி வைத்திருக்காத நிலைமையில், அரசுரிமைக்கு வாரிசான தன்னரும் புதல்வனை சித்திரவதைச் செய்து சாவடித்த சண்டாளியை, அவளின் இறைஞ்சலுக்காக மனமிறங்கிய மன்னன், மன்னித்து விடுகிறுன். இப்படித்தான் ஆண்டவனும், எப்பெரும் பாபத்தையும் கெஞ்சி, யழுது கேட்டுவிட்டால் மன்னித்துவிடுகிறுன். இது பெருந்தகைமையாளரின் போக்கு.

எனவே, கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்பதர்க்கொப்ப, இக்கள்ளியின் கதை எள்ளலுக்கிடமாயிற்று. விதியை யாரால் வெல்வது கூடும்? அரசன் சொந்தமாய் சவாரி செய்யும் பரியொன்றுக்கு சேவகம் பண்ண, வடிவழகுள்ள கட்டுமஸ்தான காளையொருவன் சாரதியாய் இருந்தான். அச்சிறுங் குமரியின் சிருங்காரமான சுந்திர ரூபமானது மின்சார கிரணங்களேபோல் அவனது ஹிருதயத்தில் ஊடுருவி விட்டது. தேன் குடித்த நரியேபோல் தடுமாறிப் போனன். இவனுக்கு அம்மெல்லியாளிருப்பிடத்தில் எவ்வித வேலையுமே இல்லாதிருந்தும், தன் குதிரையை அவள் வதியும் உய்யான வனத்தில் கொண்டு உலாத்தி உலாத்தி, வையாளி போட்டு வந்தான். அவள் உலாவுவதர்க்கென்று எப்பொழுது வெளியே வருவாளென்பதை வெகு ஏக்கத்தோடு எதிர்பார்த்து காத்து நிற்பான். அவள் வெளிக்கிளம்பி வந்தால், அவன் வெகு தூரத்திலிருந்துகொண்டே, பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையை கண்டது என்பதுபோல், கண் சிமிட்டாது வெறிக்கவெறிக்கப் பார்த்து கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பான். எட்டாத கொம்புத் தேன்! அவன் என்னசெய்வான்? அவள் உள்ளே புகுந்துவிட்டால், வேட்டை நாயேபோல் சுற்றிச்சுற்றி வந்து அவளது உப்பரிகையை முற்றுகையிடுவான்.

ஷீரீனின்மீது காதல்கொண்ட பர்ஹாதைப் போலவும், லைலாவின்மீது காதல்கொண்ட மஜ்னூனைப் போலவும், அவனது காதல் பைத்தியம்

காணப்பட்டது. அவளோ அரசனின் ஹிருதயகமலமாய் இருந்துவருகிறாள்; இவனோ கேவலம் குதிரைச் சாரதியாயிருக்கிறான். மலைக்கும் மடுவுக்குமுள்ளதைவிட அதிகமான வேறுபாடுடைய படுகுழியில் ஈடுபட துடை தட்டி நின்றான். காதல் கொடுமையின் கோலம் இத்தன்மையுடையதுதான் போலும்! முடவனும் கொம்புத்தேனுமாய்த்தான் இவன் கதை காணப்பட்டது. காலத்தின் கோலத்தை யாரால் கணிக்கவியலும்? பூகம்ப பயனால் மலைச்சரிந்து மடுவில் வீழ்ந்தால், மலையும் மடுவும் சமதரையாய் ஆகிவிடலாமல்லவா? புயல் காற்றின் பயனாய்க் கொம்பு முறிந்து கீழேவிழுந்தால், முடவனுக்கும் கொம்புத்தேன் கிட்டிவிடலாமல்லவா? எனவே, அவ்வாலிபன் இடைவிடாது வட்டம்போட்டு வந்ததில், அடிக்கடி அந்தத் தடியனை அவள் கடைக்கண்ணால் காணநேர்ந்தது. ஆரம்பத்தில் அவனது வருத்துப் போக்கை அருவெறுப்பு கொண்டாளாயினும், நாளாவட்டத்தில் அக்கட்டழகனின் வடிவழகானது அவள் ஹிருதயத்தில் வேரூன்றத் தலைப்பட்டது. இனி அவனைக் காணுவதில் மனதுக்கு ஓர்வகை இன்பந்தருவதேபோல் தோன்றிற்று. எனவே, நாளாக ஆக, அவனது வருகையை எதிர்பார்க்கத் தொடங்கினாள். சிறிதுநாள் சென்றது; அவள் புத்தி பேதலித்துவிட்டது. பேதையாள் அவனது காதலில் கட்டுப்பட்டாள். ஒருநாள் அவனைக் காணமுடியாவிட்டால், அந்த ஒருநாளும் அவளுக்கு பல யுகமாய்த் தோன்றத் தொடங்கியது; அப்பேதையின் மனம் சபலச் சித்தமடைந்தது; மனம் குழம்பியது. அக்கட்டழகனோடுகூடி ஒரு வார்த்தையேனும் பேச வேண்டுமென்பதற்குச் சமயம் தேடினாள். அனுவசியமாய் அவனை அழைத்து சிறு சிறு வேலைகள் சொல்லத் தொடங்கினாள். முத்துகோர்த்த அவள் முன்வாயைத் திறந்து சொற்களை சொரிந்ததானது, கோடைகால மின்னலேபோல் அவனுக்குப் பளிச்சு பளிச்சென காட்சி கொடுத்தது. அவள் குரல் ஓசையானது வீணையோ, நாணல் குழலோசையோ, குயிலின்கூப்பாடோ என கலங்கிப்போனான். அவள் காலால் காட்டும் வேலைகளை தலையால் உருண்டு செய்து முடிப்பான். இப்படியே அவர்கள் அடிக்கடி தனிமையில் ஒன்றுகூடி சம்பாஷிப்பதற்குள்ள சந்தர்ப்பத்தை யுண்டுபண்ணிக் கொண்டார்கள். "ஓர் ஆணும், ஓர் பெண்ணும் தனிமையில் சந்தித்தால் மூன்றாவதாக ஷைத்தான்வந்து சேருகிறான்" என்னும் நாயகவாக்கு இவர்கள் விஷயத்திலும் பலிக்கவாரம்பித்தது. பர்தா முறையை திரஸ்கரிக்கும் பிரகஸ்பதிகள் இப்படிக்கொத்த கோளாறுகளைக் கண்டேனும், அன்னிய ஆணையும் பெண்ணையும் தனிமையில் சந்திக்க சாவகாசம் கொடுக்காமலிருக்க கற்றுக்கொள்வார்களாக.

எனவே, இருவரும் தம் தம் மனதிலுள்ளதை எடுத்தியம்பத் தயங்கினர். பெண்மணி அவ்வாலிபனை நோக்கி, 'ஏனிப்படி இங்கு ஊடாடிக்கொண்டிருக்கிறாய்?' என கேட்டாள். வாலிபன், மனத்திலுண்டான எழுச்சியை இனி அடக்கிக்கொள்ள முடியாத நிலைமைக்கு மாறி, பின்வருமாறு பிரலாபித்தான். 'ஏ! பேசுந் தெய்வமே! உண்மையைச் சொல்லிவிடுகிறேன்; இதுசமயம் என் உயிர் உன் கைவசமிருக்கிறது; உயிர்ப்பிச்சை கொடுப்பது உன் கடமை; உண்மையாய் உன்மீது கரைபுரண்ட காதல்கொண்டுவிட்டேன்; என்னை ஆட்கொள்வது உன் கடமை யெனக்கூறி பாதகமலத்தில் கைகூப்பி வீழ்ந்தான். பேதை பெண்ணின்புத்தி பிரமை கொண்டது; சபலசித்தங் கொண்டாள். அவனை அவ்வித நிலையில்விட்டு வைக்க மனந்தாளவில்லை. வெகுநாள் உள்ளடக்கி வைத்திருந்த ஆவலை வெளியிடத் தொடங்கினாள். அவனை கட்டிவாரி மார்போடணைத்து ஆலிங்கனம் செய்துகொண்டாள். இருவரும் பூலோகமோ கைலாசமோவென மெய்மறந்து போனார்கள். கட்குடித்த கரடியே போல், காதல் கயிற்றால் கட்டுண்டு கட்டிப்புரண்டு, தேனில்விழுந்த ஈயே போல், தங்கள் நிலைமையை உணராமல் தடுமாறிப் போனார்கள். இவ்வேளையில் வேந்தன் உள்ளே வருகிறான். தன் கண்ணை அவனால் நம்ப முடியவில்லை. அவர்களிருக்கும் பேரானந்தத்தில், பிறர் வருகையையும் தெரிந்துகொள்ளாமலிருந்தது ஆச்சரியமல்ல. அரசனின் சிரசில் விஷம்போல் ரோஷம் ஏறிவிட்டது. உடைவாளை எடுத்து, வெட்டு ஒன்றும், துண்டு நான்குமாய் துண்டித்துவிட்டான். அதைப்பற்றி எவ்விதக் கவலையும் அவனுக்கு ஏற்படவில்லை. வெளியில் சொன்னால் வெட்கமென வாய்பேசாது மௌனமாய் இருந்துவிட்டான்.

இக்கதையின் நியதி என்ன? வறுமையிலிருந்த பெண்ணொருத்தியை உயர்ந்த அந்தஸ்தில், உயரிய அந்தஸ்தில் வைத்தான். இராஜ்யமே

அவளுக்கு சொந்தம், அவள் தனக்குச்சொந்தம், என முடிவுசெய்யப்பட்டது. எத்தனையோ குற்றங்குறைகளை கவனித்தானில்லை. தன்னரும்புத்திரனின்கொலையையும் மன்னித்து விட்டான். ஆனால், தனக்கு உரித்தானதும், சொந்தமானதும், பிறர்யாருக்கும் பாகமில்லாததுமான காரியத்தில் அச்சண்டாளி, சதிகாரி சலனப்படுத்திவிட்டாள்; பிறருக்கும் பங்கு கொடுத்தாள்; புருஷன் விஷயத்தில் மோசடி பண்ணிவிட்டாள்; துரோகத்திற்குத் துணிந்துவிட்டாள். இது புருஷனுக்கு ஷிர்குச் செய்ததாகும். யாரேனும் அவளை ஏன் மன்னித்துவிடக் கூடாதென கேட்க துணிகரங் கொள்வரா? இல்லை. வீரதீர ஆண்பிள்ளை சிங்கமாயிருக்கும் எவருமே அவளை சித்திரவதைக்குட்படுத்தி உயிர்போக்க வேண்டுமென்றுதான் தீர்ப்புக் கொடுப்பார்கள். அவளை ஒரே வெட்டில் துண்டித்தது தவறு; சன்னஞ்சன்னமாய் சிதைத்திருக்க வேண்டும். எத்தனையோ சுகானுபோகத்தை ஒருவனால் அடைந்துகொண்டு, அவனுக்கே ஷிர்கு செய்வதென்றால், அவளை என்னதான் செய்யக்கூடாது? எனவே, அது மன்னிக்க முடியாத குற்றமென உலகம் ஒப்புக்கொள்கிறது. இதேபோல்தான் ஆண்டவனும், மற்ற எல்லா பாபங்களையும் மன்னித்துவிடும் நிலைமையில், தனக்குச் சொந்தமான வணக்க விஷயத்தில் தன்னோடு பிறர் யாரையும் கொண்டுவந்து பிணைத்தால், போட்டியும் கூட்டுமாய் போட்டு கலப்படம் பண்ணுகிறானே என்பதை ஒறுக்காமல் உரோஷம் கொள்கிறான்; மன்னிக்க மனந்தாள்வதில்லை; அவனை முடிவில்லாத நரகத்தின் கொடிய வேதனைக்கு உட்படுத்துகிறான். இதேபோல்தான், ஒரு புருஷன் எத்தனை குற்றங்குறைகளை தன் பெண்ஜாதிக்குச் செய்தாலும், அடித்தாலும், உதைத்தாலும், அன்னந் தண்ணீர் கொடுக்காவிட்டாலும் பொறுத்துக் கொள்கிறாள். ஆனால் அவளிருக்க மற்றவள் இவளுக்குப் போட்டியாய், புருஷனுக்கு இளையாளாய் வருவதை மூத்தாள் ஒருக்காலும் ஒறுக்கிறாளில்லை. கேவலம் மனித பிண்டங்களுக்கு, இத்தனை வேகமும் வீராப்பும் ரோஷமுமிருந்தால், சர்வசக்தனும் சிருட்டி கர்த்தாவுமான ஆண்டகைக்கு எத்துணை ரோஷபாச மிருக்க வேண்டும்? ஆகையால் ஷிர்க்கை பொறுக்க மாட்டானென்பதில் எவ்வித ஆச்சரியமும் அடைய வழியில்லை. பொறுக்க முடியாதென்பது முற்றிலுஞ் சரிதான்.

ஆகவே, அறைகுறை குணமில்லாத அல்லாஹ்வானவன், யாருக்கும் ஐக்கியப்பட்டுக் கொண்டு, ஷை ரோஷத்திற்கிடமான ஷிர்க்கை மன்னித்துவிட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லாதவனாதலின், ஷிர்கை ஒருபோதும் பொறுக்கமாட்டானென்பது நியதியும்நேர்மையுமுடையதாகும். இதைத் திண்ணமாய் எண்ண வேண்டியிருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டு விட்டோமாதலின், உயிர் போவதாயினும் ஷிர்க்குவைக்க துணிகரங் கொள்ளோம். ஆகவே, எல்லா சமூகத்தினருக்கும், கலிமயெ தவ்ஹீதின் தத்துவத்தை எடுத்துக்காட்டி, ஷிர்க்கு என்பது எங்குமே இல்லாதவாறு கெல்லி எறியுங்கள். பெருமானார் (ஸல்.) அவர்கள்பிறந்ததும் இதற்குத்தான். எல்லாம் வல்ல அல்லாஹ் மக்களை, ஷிர்க்கை விட்டும் சுத்திகரிப்பானாகவும்.

---

## காதியானி மதஸ்தர்களின் யுக்திவாதம் பயன்தருமா?

(தேன்காசி இ. மு. ஷா. அப்துற் றஹ்மான் வரைவது)

இஸ்லாமிய பக்தர்காள்!

நமது தென்னிந்தியா, சிலோன் பகுதிகளில் சில்லாண்டுகளாகக் காதியானி, அஹ்மதிய வர்க்கத்தினரின் லாகூரி, காதியானி பிரிவினர்களின் ஏஜண்டுகள் தோன்றி, தங்கள் மதக்கோட்பாடுகளை வெளிரங்கமாகவும், மறைமுகமாகவும் பிரஸ்தாபித்து வருவதை நீங்களறிவீர்கள். ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் கொள்கைகளையும், ஆசாரங்களையும் அவரவர்களின் மதவிதிப்படி பிரசாரஞ் செய்வதில் ஆக்ஷேபனையொன்றுமில்லை எனினும், தமது மதத்தை உண்மையென்ஸ்தாபிப்பான் வேண்டி, ஆதாரமற்ற பொய்க் கூற்றுகளை எழுதிப் பொதுமக்களிடை பிரசாரம்

செய்வதைத்தான் நாம் கண்டித்துக் கூறவேண்டியதிருக்கின்றது. எந்தமதஸ்தராயினும் தங்கள் மதத்தை உண்மைப்படுத்த, எதிர்மதாவதிகளின் நூற்களிலிருந்து காட்டும் மேற்கோள்கள், ஆண்டு அவ்வாறே காணப்படல் அவசியமாகும். இதுதான் தர்க்கம் செய்ய முன்வரும் எதிரிகளுக்குரிய நியாயமும் முறையுமாகும். இதற்கு சர்வசமயத்தவர்களும் சம்மதங்கொடுப்பாரென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமிலது. இங்ஙனமாக காதியானி மதக்குரு வென்னும் மிர்ஸாஜீ தமது கொள்கையைச் சாதிப்பான் வேண்டி, அநேகவசனங்களைத் தமது நூற்களில் வரைந்து, இது குர்ஆனில்காணப்படுகிறது; இது ஹதீதில் காணப்படுகிறது; இது இன்னின்ன இஸ்லாமிய மேதாவிகளின் நூற்களில் காணப்படுகின்றன வென்று முஸ்லிம்களிடம் கூறிப்பகிரங்கமாக வீர முழக்கமிட்டிருக்கிறார். அவரின் கூற்றுப்பிரகாரம் அந்நூற்களில் தேடிப்பார்க்குங்கால், ஆண்டு குறிப்பிட்ட அவ்விஷயங்கள் அவைகளில் காணப்படுவதற்கில்லை. இந்நிலைமையில் இவரின் சொற்களை ஆதாரமாகக்கொண்டு, எந்த மதஸ்தர்களையும் ஆக்ஷேபிப்பதற்கு வழியில்லாமல் இவரின் சிஷ்ய கோடிகள், குறிப்பிட்ட நேரத்தில் அவமானம் அடையும் படியாக ஏற்பட்டிருக்கிறது. இதனுற்றான் இவர்களின் நிலைமையை அறிந்த முஸ்லிம்களிடைத் தர்க்கம்புரிய நேரிடும்பக்ஷம், தர்க்கம் நிகழாதவாறு நூற்றுக்கணக்கான தந்திரோபாயங்களை உபயோகித்து தப்பித்துக்கொண்டு விடுகின்றனர்.

இன்னர் முஸ்லிம்களிடம் இப்படித் தப்பித்துக்கொள்வதையே பெரிய ஜெயமென்று கொண்டாடி வருகின்றனர். எதிரியிடமிருந்து தோல்விபெற்று ஓடிவந்த ஒருவனிடம், என் இப்படி ஓடிவந்தாய் எனக்கேட்கும்போது, எனது ஓட்டத்தை எதிரிகளால் பிடித்துக்கொள்ள முடியவில்லை யென்று கெம்பீரமாய்க் கூறினனும். எனவே, இம்மதஸ்தருக்கு முஸ்லிம்களைக் காணும்போது, விசேஷமாக உலமாக்களின் பெயர் வந்துவிட்டால் ஏற்படும் துவேஷமும், மனக்கலக்கமும், திகிலும் இவ்வளவென்று கூறிவிட முடியாது. உடனே ஏசல் மாலையைப் பிடித்து விடுகின்றனர். இந்த ஏசல் மாலையில் சுவாமி தயானந்தருக்கும் இவர்கள் குருவென்று கூறினும் மிகையாகா.

எனவே, இவ்வாறு பொய் புகல்பவரை அவரின் உம்மத்துக்களான லாகூர் பார்ட்டிகளும், காதியானி பார்ட்டியைச்சேர்ந்தோர்களும் வழிகாட்டி, நபீ, ரஸூல், மஸீஹ், மஹ்தீ, முஜத்தித், கிருஷ்ணன் போன்ற பல பட்டங்களால் போற்றி வருவது உலக விந்தைகளில் ஒன்றெனக் கூறின், மிகையாகாதென்றே நம்புகிறோம். அச்சிஷ்யர்கள் எத்துணை கல்விகற்றவராயினும், பி.ஏ, எம்.ஏ பண்டிதர்களாயினும், தங்கள் ஞானகுருவின் மேற்கோள்களுக்குத் தக்க சான்று காட்டாதவரை, அவர்களின் யுக்திவாதங்கள் ஒருசிறிதும் பயன்தராதென்பது வெள்ளிடை. இவ்விஷயத்தை நிரூபிப்பான்வேண்டி மிர்ஸாஜீயின் வாக்கியங்களைக் குறிப்பிட்டு அதற்கு மேற்கோள் காட்டும்படி அவர்களின் சிஷ்யர்களை அறைகூவி அழைக்கிறோம்.

### மிர்ஸாஜீ கூறியது

(1) "குர்ஆன் ஷரீபிலும், தௌராத்தின் சில பாகங்களிலும், வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹின் காலத்தில் பிளேக் (பேதி) உண்டாகுமென்ற விஷயம் காணப்படுவது ஞாபகமிருத்தல் வேண்டும். தவிரவும், ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமும் இஞ்சீலில் தெரிவித்துள்ளார்கள். ஆனதுபற்றி நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிவிடுகிறது கூடாத காரியம்." (கிஷ்தியெநூஹ். 5-ப.)

குர்ஆன் ஷரீபோ உலகின்கண் எல்லாப் பாகங்களிலும் தாராளமாகக் காணப்படுகிறது. காதியானி நண்பர்காள்! வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹின் காலத்தில பேதி உண்டாகுமென்ற விஷயம் திருமறையில், அல்ஹம்திலிருந்து வன்னாஸ்வரை தேடிப்பார்த்தும் கண்டிலோம். நுங்களது நபி மிர்ஸாஜீயால் காட்டப்படும் மேற்கோளை எம் திருமறையாம் குர்ஆன் ஷரீபிலிருந்துகாட்டும்படி நுங்களை அறைகூவி அழைக்கிறோம்.

அப்படிக்காட்ட உங்களால் இயலாவிடின், அவரால் எழுதப்பட்ட நூற்களைத் தமிழில் மொழிபெயர்த்து முஸ்லிம்களிடை பரத்தத் துணிவது பெரும் வஞ்சகமென்பதை உணர வேண்டும். இவருடைய நூல் விஷயமாய், ஒரு மாஜி வார வெளியீடு எழுதியிருப்பதாவது:—

"உங்களில் ஒவ்வொருவருக்கும் 'இஸ்லாம்' என்றால் என்னவென்று பூரணமாய்த் தெரியுமா? சிறிது தெரிந்தாலும் உங்களுக்கு அதன் பரிபூரணத்தன்மை இன்னதென்று தெரிந்து

கொள்ளமுடியாது. ஆகையால் இன்றே "இஸ்லாமிய ஞான போதம்" என்னும் முழு முதற்றரமான நூலைப் படித்துப் பாருங்கள். நீங்கள் பத்தாயிரம் கிரந்தங்களைப் படிப்பதும் சரி, இவ்வொரே நூலைப் படிப்பதும் சரி. உங்களுக்கு இஸ்லாத்தின் முழுதத்துவமும் கற்றுக் கொடுக்க இதைவிடச் சிறந்த ஆசான் இவ் வகண்டவகிலத்தில் கிடைத்தலறிது. இன்றே எழுதுங்கள்" என்பதே.

குர்ஆனில் இல்லாத விஷயங்களை, குர்ஆனில் வருகிறதென்று பிரசாரம் செய்யும் மிர்சாஜீ இந்நூலில், குர்ஆனில் இல்லாத எத்தனை விஷயங்களைப் புகுத்தியிருக்கிறரென்பதை யாரே அறிவர். ஆதலின், இந்நூல் சந்தேகப்பட்டதென்பதும், நம்பத்தக்கதல்லவென்பதும் மிர்ஸாஜீயின் கூற்றுப்பிரகாரம் உறுதிப்படுகிறது. மேலும் மிர்ஸாஜி கூறுகிருர்:—

"ஒருவன் ஒரு விஷயத்தில் பொய்யனென ருஜுவாய்விட்டால், பின்னர் இதர மற்ற விஷயங்களிலும் அவன்பேரில் நம்பிக்கையிருக்க மாட்டாதென்பது வெளிப்படை." (சஷ்மயெ மஅரிபத். 222. ப.)

பொய் (2) மெய்யான ஹதீதில் வந்திருப்பதாவது:—வாக்குரைக்கப்பெற்ற மஹ்தியின் வசமாக் அச்சிடப்பட்ட நூலொன்றுண்டாயிருக்கும். அதில் 313 சீடர்களின் நாமமும் அதில் வரையப்பட்டிருக்கும். எனவே, அம் முன்னறிக்கை இன்று நிறைவேறிற்றென்பதை ஈண்டு குறிப்பிடுவது அத்தியாவசியமாகிறது. (லமீமா அஞ்சாமே ஆத்தம், 40-ப.)

காதியானி நண்பர்கள் ஸஹீஹான ஹதீதில் இப்படிப்பட்ட விஷயம் எங்கிருக்கிறதென்று காட்டுவார்களா?

பொய் (3) "எமது நபிய்யகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பதினெரு ஆண்மக்கள் மரணமாய்விட்டார்கள்." (பதுர், டிஸம்பர், 19-1907.)

இவ்விஷயங்கள் எந்தச் சரித்திரத்தில் காணப்படுகிறது? சரித்திரமறிந்தோர்களே, சாற்றுங்கள்! மிர்ஸாஜீயால் கூறப்படுவது மெய்யா? பொய்யா?

ஆகவே, தென்னிந்திய கண்ணியமிக்க உலமாக்களே! மாணவர்களே! ஆங்கிலம் கற்று பி. ஏ., எம். ஏ. பரீட்சையில் தேறின மகான்களே! மதப்பிரசாரகர்களான அபிமானிகளே! முஸ்லிம்களைச் சீர்திருத்தும் சேவையிலீடுபட்ட சங்கத்தலைவர்களே! அங்கத்தினர்களே! குர்ஆன், ஹதீதுகளில் இல்லாத விஷயங்களை நுழைத்து ஒரு வர்க்கத்தார் முஸ்லிம்களிடை பிரசாரம் செய்யும்போது நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? எழும்புங்கள்! உண்மையை மக்களுக்கு எடுத்துரையுங்கள்!

---

## காலண்டர்கள் வரவு

208340

S. E. S. அப்துலகரீம் & பிரதர்ஸ்:— சென்னை, அங்கப்பநாயக்கன் தெரு, 217-ம் நெம்பர் பிரபல கைலி வியாபாரிகளாகிய மெஸர்ஸ் S. E. S. அப்துல்கரீம் & பிரதர்ஸ் அவர்களிடமிருந்து அரபி, தமிழ், ஆங்கிலம் இம்மூன்று தேதிகளும் அச்சிடப்பெற்ற காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம். அதில் அவர்களின் வியாபாரக் குறிகளான துருக்கித் தொப்பி, டைமன், ரிங்கி இவைகள் அழகிய முறையில் பொரிக்கப்பட்டு பினங், மைடான் டில்லியின் அட்ரஸ்கள் குறிக்கப்பட்டு மாதமொரு ஷீட்டுடையதாக இருக்கிறது.

முஸ்லிம் ஜனநாயக சபை:—காயல்பட்டணம் முஸ்லிம் ஜனநாயக சபையினரால் வெளியிடப்பட்ட, மூன்று தேதிகளையும் காட்டும் அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம். அதில் கல்வி, சமுதாயம், தேசியம் ஆகிய இம் மூன்றும் சபையின் பிரதான நோக்கங்களாகுமெனக் குறிப்பிடப்பட்டிருப்பதுடன், கொழும்பிலும் சென்னையிலும் ஏற்பட்டிருக்கும் கிளைச்சங்கங்களின் அட்ரஸ்களும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

K. A. ஷேக் யூசுப் & Co.:—சிங்கப்பூர் மார்க்கட் தெரு, 108-ம் நெம்பர் பிரபல்ய வியாபாரியும், கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸர்ஸ் K. A. ஷேக் யூசுப் & Co., அவர்களிடமிருந்து மாதம் ஒரு ஷீட் உடைய காலண்டர் ஒன்று வரப்பெற்ருேம். அது வெகு அழகான தாயும், விசேஷ தினங்களுக்கு பிரத்தியேக அடையாளங்களிடப்பட்டதாகவுமிருக்கிறது.

# ஹிபாஜத்துல் இஸ்லாம் ஆறுவதாண்டின் வாழ்த்து

காரைக்கால்

## அமுர்தகவி - அ. சாயபு மரைக்காயரால் எழுதியது.

பஞ்சரத்தினக் கலித்துறை

சீரும் செல்வமுஞ் செழித்த சென்னையில் ஜனித்து
பேரும் புகழும் படைத்த ஹிபாஜத்துல் இஸ்லாமுன்
நேருந் துறையில் நிலஉல மக்கட்கரி உறுத்த
ஆறு வயதின் றடைந்து அவனிக்கண் வந்ததம்மா? (1)

திங்கள் தோருந் தரணிக்கண் மக்கள் முன்வந்து
சங்கதி யாவும் சத்தியப் பாகமாய் விடுத்தோதும்
மங்களந் திகழ ஹிபாஜத்துல் இஸ்லாம் மாசிகைநீ
எங்குஞ் சிறந்து இறுதிநாள் வரையில் வாழியவே. (2)

கலையற்ற காதியான் குழுவினர் செய்து வரும்மாய
வலையதிற் சிக்கிய மக்களை விழிப்புரச் செய்வித்து
விலையில்லா ஞான வாரிதி வழியை விளக்கியே
நிலைபெறத் தந்த ஹிபாஜத்துல் இஸ்லாம் வாழியவே. (3)

இன்றய உலகில் இஸ்லாம் மதத்தின் இயற்கைகளை
குன்றக் கூறுங் குழுவினர் மாசியின் கொள்கைக்கு
சென்ற ஐந்தாண்டில் செய்துள்ள மறுப்பும் வ்யாப்பும்
என்றும் வியக்க ஹிபாஜத்துல் இஸ்லாம் வாழியவே. (4)

புதியவன் றாதுவர் புகன்ற பொன்மொழிகள் பொறித்து
விதிவிலக் குணர வேண்டிய வைகளை யுந்தீட்டி
பதிமீதில் உலவும் பால்யன் ஹிபாஜத்துல் இஸ்லாம்நீ
முதியவ னருளால் மகிலமே லென்றும் வாழியவே. (5)

வஸ்ஸலாம்.

# சித்தர் மருந்துசாலை

இடமண்—புனலூர் போஸ்டு.

சித்த மருந்துகளும், யூனனி மருந்துகளும் முறைப்படி சுத்திக்கிரமத்துடன் செய்யப்படுகின்றன.

## சித்தர் சஞ்சீவி செந்தூரம்

ஜுரம், ஜன்னி, காசம், பலவீனம், ஜலதோஷம், அசதி முதலிய ப வியாதிகளுக்கும், பிறந்த சிசு முதல், விருத்தாப்பியர், பிரசவித்த ஸ்திரீக முதலிய யாவரும் எவ்வித பயமுமின்றி உபயோகிக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சீசா 1-க்கு | ரூ. | 1 | 4 | |
| அயச் செந்தூரம் | 40 வேளை | ரூ. | 2 | 0 | |
| உருக்கு செந்தூரம் | ஷை | ரூ. | 3 | 0 | 0 |
| காந்த செந்தூரம் | ஷை | ரூ. | 5 | 0 | 0 |
| தங்க செந்தூரம் | ஷை | ரூ. | 13 | 0 | 0 |

## சொர்ண சஞ்சீவி சுன்னம்

க்ஷயத்திற்கு தக்க ஔஷதம் 21 வேளை ரூ. 7 0 0

## சித்தர் ரசாயனம்

மேக சம்பந்தமான வியாதிகளுக்கும், இரத்த சுத்திக்கும் மிகப் பிரயோஜனமுள்ளது. 40 நாள் மருந்து ரூ. 7 0 0

## வீரிய விர்த்தி லேகியம்

40 வேளை மருந்து ரூ. 5 0 0

## திரு நபி சரித்திரம்

காலிகோ பைண்டு ரூ. 2 0 0

இதுவன்றி இதர மருந்துகளும் கிடைக்கும். விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

இங்ஙனம் :

மு. ந. முஹம்மது சாஹிப்.



Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.

1018

Regd. No. M. 2569

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 6 | செந்தமிழ் மாத சஞ்சிகை | இதழ் 2

# HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1353 ஷவ்வால்மீ , 1935 பிப்ரவரிமீ

25 FEB 1935 MADRAS


1. அல்குர் ஆன் ... 41
2. அல்ஹதீது ... 44
3. அமெரிக்காவில் இஸ்லாம் ... 46
4. இந்தியரனைவரும் இஸ்லாத்தைதழுவாததேன்? 47
5. தஜ்ஜால்களின் தோற்றம் ... 51
6. ஸ்திரீகளின் சுதந்திரம் ... 54
7. முல்லாவும் காதியானியும் ... 57
8. உண்மை நபிக்குரிய உயரிய லக்ஷணம் ... 64
9. காதியானிகளின் யுக்திவாதம் பயன்தருமா? 67
10. சீன முஸ்லிம்களின் மார்க்க பக்தி ... 69
11. இஸ்லாத்துக்கு சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற ஸ்திரீகள் தேவையா? ... 71
12. முகலாய அரசர்களின் தர்பார் ... 73
13. தென் ஆப்ரிக்காவிலுமா காதியானிப்பிரசாரம்? ... 77
14. அரிய உபன்னியாசம் ... 78


சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

# சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்திலேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்க வேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1934-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், நிகழும் புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பி வைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும் சென்ற வருடத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் 1935-ம் ஆண்டுக்குள்ள சந்தா ரூபாயை முன் பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

---

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

**ஜனாப் மு. முகம்மது ஷரீப் சாஹிப் அவர்கள்,**

(439, நார்ட் பிரிட்ஜ் ரோடு) இடமும்

---

பினாங் வாசிகள்

**ஜனாப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் அவர்கள்,**

(117, சோலியா ஸ்ட்ரீட்) இடமும்

---

சிலோன் வாசிகள்

**ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,**

(220, 2-ம் குறுக்குத் தெருவு) இடமும்

தங்கள் சந்தாக்களை செலுத்திவிடுமாறு கோருகிறோம்.

حفاظة الاسلام

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

| மலர் 6 | ஹிஜ்ரி 1353 ஷவ்வால் மீ<br>1935 ளு பிப்ரவரி மீ | இதழ் 2 |
|---|---|---|

OFFICE OF THE ... 25 FEB 1935 MADRAS

## அல் குர்ஆன்

"மேலும், (நபியே) யூதர்களும் கிறிஸ்துவர்களும்—அவர்களுடைய மார்க்கத்தை நீர் பின்பற்றும் வரை—உம்மைப் பற்றித் திருப்திகொள்ளவே மாட்டார்கள். (நபியே) நிச்சயமாக நேர்வழியானது அல்லாஹு தஆலாவின்நேர்வழிதான் என்று (அவர்களிடம்) கூறிவிடும். மேலும், உமக்கு அறிவிப்பு வந்த பின்னரும் அவர்களுடைய இச்சைகளை நீர் பின்பற்றுவீராயின் அல்லாஹு தஆலாவில் நின்றும் உனக்கு ஒத்தாசைக்காரனுமில்லை, உதவியாளனுமில்லை"

(அல்குர் ஆன்.)

சன்மார்க்கத்தைப் போதிப்பதற்காக அருளப்பட்ட தெய்வத் திருமறையின் கண், இறைவன் மக்களுக்குப் பலவித முறையில் கட்டளைகளை விதித்திருக்கிறான். அறபி தேசத்தில் நபிகள் நாயகம்(ஸல்.) அவர்கள் பிறந்தாலும் அவர்களுடைய வாழ்க்கை முறையானது ஒரு வித முறையில்லாது பற்பலவிதமானமுறையிலிருந்திருக்கிறது. எனவே, நாயகம்(ஸல்.) அவர்கள் பிறந்தபோழ்து யத்தீமாக (அனாதையாக) இருந்தார்கள். இளைஞராக இருந்த காலத்தில் பெற்றோர்களால் பரிபாலிக்கப்படாமல், பெற்றோர்களுக்கு உற்றவர்களான பாட்டனார், பெரிய தந்தை ஆகியவர்களின் மேன்பார்வையிலிருந்தார்கள். வாலிபப் பருவத்தில் வியாபார முறையில் இருந்தார்கள். பின்னர் குடும்பஸ்தரானார்கள். அதற்குப் பின் பொது ஜன ஊழியரானார்கள். பின்னர் கானகஞ் சென்று கடுந்தவம் புரிபவர்களாக இருந்தார்கள். அப்பால் நபியாக ஆனார்கள். நபியாக வந்தபின் மக்கா வாசிகளிற் பெரும்பாலர்களின் அபிமானத்தை இழக்கவேண்டிய சந்தர்ப்பமேற்பட்டது. ஆனால் ஒரு திரளான பக்தர்களின் பேராதரவு கிடைத்ததானாலும், இறைவன் கட்டளைப்படியே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நடப்பவர்களாக இருந்ததால், அநேகம் சோதனைகளுக்குட்பட்டு அனைத்தையும் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். பின்னர், இறைவனின் கட்டளைப்படி தங்களது பந்துக்களையும், பிறந்த அகத்தையும் மறந்து வேறொரு புதிய அகம் புகவேண்டியதிருந்தது.

இப்புதிய அகத்தில் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறை முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. எனவே யூதர், கிறிஸ்துவர், விக்கிரகத்தொழும்பர், நயவஞ்சகக் குழாத்தினர் முதலியவர்களுடன் உடன்படிக்கை செய்யவும், யுத்தம் செய்யவும் சந்தர்ப்பமேற்பட்டது. இதனால் தளபதியுடைய அந்தஸ்தையும் வகிக்கவேண்டியதேற்பட்டது. சுருங்கக் கூறுமிடத்து, உலகத்தில் மக்கள் வகிக்கவேண்டிய சகல பதவிகளையும், சகல தொழில்களையும் நாயகம் (ஸல்.) அவர்கள் செய்தார்கள். இவையனைத்தும் எதற்காகவெனில், உலகத்திற்றோன்றும் பற்பலவிதமான மனிதர்களும் நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுவதற்கேயாகும். ஏனெனின், இறைவன் தனது திருமறையின்கண் "மேலும், உங்களுக்கு—(அதாவது) அல்லாஹ்வையும், கடைசி நாளையும் விரும்புபவருக்கு—அல்லாஹ்வின் றஸூலில் அழகிய முன்மாதிரி இருக்கிறது", என்று கூறியுள்ளான். மேலும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் குறிப்பிட்ட ஒரு சமூகத்தாருக்கு மாத்திரம் வழிகாட்டியாக வராமல், உலகத்திலுள்ள சகல தேசத்தாருக்கும், சகல சமூகத்தாருக்கும் வழிகாட்டியாக வந்திருப்பதால், சகல மானிடர்களுக்கும் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை முறை வழிகாட்டியாக இருக்கிறது; நாம் அனைவரும் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை முறைகளைப் பின்பற்றக் கடமைபட்டுள்ளோம். ஆதலால், திருவேதத்தில் இறைவன் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி ஒரு கட்டளை விதித்தால் அக்கட்டளை நாயகம் (ஸல்) அவர்களுக்குத்தான் என்றும், மற்றவர்களுக்கு அக்கட்டளையில் சம்பந்தமில்லை என்றும் கொள்ளலாகாது. ஆனால், சிற்சில கட்டளைகளில் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிரத்தியேக விதி விலக்கு இருக்கிறது. ஆயினும், அவைகளைப்பற்றி நாம் விவாதிக்காமல், இந்த இடத்துக்குச் சம்பந்தப்பட்ட மட்டிலுள்ள பொதுவிதியைப்பற்றி மட்டும் எழுதுவாம்.

மகுடத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வசனத்தில் இறைவன் நாயகம்(ஸல்)அவர்களைக் குறித்துக் கட்டளையிட்டாலும், அக்கட்டளை நம் அனைவருக்கும் விடுத்த கட்டளையேயாகும் என்று மதிக்கவேண்டும். மேலும், ஆயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்கள் நாயகம்(ஸல்) அவர்களிடமிருந்ததாகவும் நாம் கருதலாகாது. ஏனெனில், நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை முறை ஆரம்ப முதல் இறுதிவரை, இறைவனின் இஷ்டப்படி நடப்பதாக இருந்ததேயன்றித் தங்களது சொந்த நோக்கப்படி நடப்பதாக இருக்கவில்லை. அதிலும், நபிமார்களாகவுள்ளவர்கள், நபிப்பதவி அளிக்கப்பட்ட பின் தங்களது சொந்த அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் இறைவனின் வசம் ஒப்புவித்துவிட்டு, அவனது கட்டளைப்படியே முற்றிலும் நடப்பவர்களாக இருந்ததால், நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து சொல்லப்பட்ட இவ்விஷயம் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்ததாக நினைப்பது தவறாகும்.

மேலும், நாயகம் (ஸல்) அவர்கள் மக்காபுரியிலிருந்த காலத்தில் அதாவது நுபுவ்வத்துவந்த ஆரம்பக்காலத்தில்—மக்கத்திலுள்ள விக்கிரகத்தொழும்பர்களும், குறைஷிக் குலத்தாரும் ஒன்றுகூடிக் கலந்து ஆலோசனைசெய்து, நாயகம் (ஸல்) அவர்கள் ஏகதெய்வக் கொள்கையைப் பிரசாரம் செய்வது ஒன்றை மாத்திரம்விட்டு விடுவார்களாயின் அதற்குப் பதிலாக நாயகம் (ஸல்) அவர்கள் விரும்புவதை: அதாவது அழகிய அணங்கை ஆசைப்பட்டால் மக்காபுரியிலுள்ள அழகிற் சிறந்த கன்னிகைகளை மணமுடித்துக் கொடுப்பதாகவும், பணத்துக்கு ஆசைப்பட்டால் அவர்கள் வேண்டுந் திரவியத்தை அளிப்பதாகவும், தலைமைப்பதவிக்கு ஆசைப்பட்டால் மக்காவின் பிரதமத் தலைவராக ஏற்றுக்கொள்வதாகவும், அரசர்பதவிக்கு ஆசைப்பட்டால் அரசராகவும் கூட ஏற்படுத்தி விடுவதாகவும் கூறினார்கள். ஆனால், நாயகம் (ஸல்) அவர்கள் இதற்குப்பதிலாகத் தங்களது பெரிய தந்தையவர்களிடம்," ஒரு கையில் சூரியனையும் ஒரு கையிற் சந்திரனையும் கொடுத்து அதற்குப் பதிலாக ஏகதெய்வக்கொள்கைப் பிரசாரத்தை நிறுத்தவேண்டுமென்று கூறினாலும், அவைகளிலெதையும் தாங்கள் லக்ஷியம்செய்யப் போவதில்லை"என்று கண்களில் நீர்வடியக் கூறினார்கள். ஆதலால், நாயகம் (ஸல்) அவர்கள் பிறருடைய இச்சைகளை ஒருபோதும் பின்பற்றியதில்லை என்பது பிரத்தியக்ஷம். அவ்வாறிருக்க, இறைவன் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்விதமான கட்டளையிட்டதானது மக்களாகிய நம்மவர்களுக்காகத்தான் என்பதை நாம் உணரவேண்டும்.

நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையில் நாம் இக்கட்டளையை உணர்ந்துகொள்ள

முடியுமாயினும், அதைத் தெளிவாக நமக்கு அறிவித்து விடுவதற்காகவே இறைவன் இக் கட்டளையை ஏவி இருக்கிறான். ஆதலின், நம்முடைய வாழ்க்கை முறையானது தெய்வத் திருமறையைப் பின்பற்றியதாகவே இருக்க வேண்டுமேயன்றி வேறொரு மதத்தவரைப் பின்பற்றியதாக இருத்தல் கூடாது. ஏனெனில், நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையானது செய்கையின் மூலம் நமக்கு முன் மாதிரியாக இருப்பதுபோல, திருகுர்ஆன் ஏவல் விலக்கல்கள் நிறைந்த சட்டதிட்டங்களாகநமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஒருமுறை ஹஜ்ரத் உம்முல்மூமினீன் ஆயிஷா ஸித்தீக்கா (றலி) அவர்களிடம் ஒருவர் சென்று, நாயகம் (ஸல்.) அவர்களின் ஒழுக்கத்தைப்பற்றி விசாரித்தபோது, "நாயகம் (ஸல்.)அவர்களது ஒழுக்கம் திருகுர்ஆன்தான்" என்று நாயகி (றலி.)அவர்கள் பதில் கூறியதாக ஹதீது ஷரீபுகளிற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையானது திருகுர்ஆனுக்கு வித்தியாசமில்லாதிருந்ததென்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். எனவே, ஒருவர் நாயகம் (ஸல்.) அவர்களது வாழ்க்கை முறையை உண்மையாகப் பின்பற்றுகிறார் என்பதற்கு அவர் திருகுர்ஆனை முற்றிலும் கடைப்பிடித்தொழுகுகிறார் என்பதும், திருகுர்ஆனைமுற்றிலும் பின்பற்றுகிறார் என்பதற்கு அவர் நாயகம் (ஸல்.) அவர்களின் வாழ்க்கையைத் தமக்கு முன் மாதிரியாகக் கொண்டு வாழ்கிறார் என்பதும் தான் பொருளாகும்.

எனவே, திருகுர்ஆனின் இச்சட்டத்தின்படி நம்முடைய வாழ்க்கையானது நாயகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றியதாகவே இருக்கவேண்டுமேயன்றி யூதர்களையோ, கிறிஸ்துவர்களையோ, ஏனைய பிறமதத்தாரையோ பின்பற்றியதாக இருக்கக்கூடாது என்பது தெளிவு.

முற்காலத்திலுள்ள ஸஹாபிகள், தாபியீன்கள், தபஅத்தாபியீன்கள் முதலிய பெரியார்களும் இமாம்களும் நாயகம் (ஸல்.) அவர்களையும் திருகுர்ஆனையும் தங்களுடைய சகல நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டியாக வைத்துக் கொண்டிருந்ததால் அவர்களுக்கு இம்மையிலுள்ள சகல கௌரவங்களும் சம்பத்துகளும் தானாக வந்துகொண்டிருந்தன; உலகத்திலுள்ள சகல மதஸ்தர்களும் அவர்களுடன் கண்ணியமாக நடந்துகொண்டனர்; அவர்களது இஷ்டத்துக்கு மாறாக நடக்கத் துணிவு கொள்ளவில்லை. அவ்வாறு மாறாக நடக்கத் துணியாமல் அவர்களை எதிர்த்தவர்கள் நாடிழந்து, நகரிழந்து, நல்ல வாழ்க்கை இழந்து இந்நானிலத்தில் தவிக்கவேண்டிய நிலைமைக்கு வந்தனர். உலகில் இப்பொழுதிருக்கிற முஸ்லிம் ஜனத்தொகையைப் பார்க்கினும் அப்பொழுதிருந்த முஸ்லிம் ஜனத்தொகை குறைவாக இருந்தது. ஆயினும் அவர்கள் வெற்றி வேந்தராகவும், ஆளும் ஜாதியினராகவு மிருந்தனர். இதற்குக் காரணமென்னவென்று நாம் சிந்தித்துப் பார்க்குமிடத்து, அவர்கள் ஏனைய மதத்தவரின் அபிலாஷைகளையோ, நோக்கங்களையோ,கிரியைகளையோ, சித்தாந்தங்களையோ பின்பற்றாது மேலே கூறப்பட்ட தெய்வச் சட்டங்களின்படி நடந்துகொண்டார்கள் என்பதைத் தவிர வேறொரு காரணமுமின்று. ஏனெனில், இறைவனது கட்டளையைப் பின்பற்றி நடக்கும்வரை, இறைவன் முஸ்லிம்களுக்குத் துணைவனாகவும், காரியஸ்தனாகவும், தோழனாகவும், உதவிக்காரனாகவும், ஒத்தாசைக்காரனாகவும்,உபகாரியாகவும் இருக்கிறான். ஆகவே, அவனது துணை முஸ்லிம்களுக்கு இருக்கும்போது அவர்களை ஒருவரும் எதிர்த்து ஜயிக்கமுடியாது. இதுதான் முற்காலத்தவர்கள் உலகில் கண்ணியமாக வாழ்ந்ததற்கு முக்கிய இரகசியமாக இருந்தது.

ஆனால், இக்காலத்திலுள்ளவர்களோ முற்காலத்தவர்கள் செய்த இவ்விரகசியத்தை அறிந்து கொள்ளாமல் திருகுர்ஆன், நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை ஆகியவைகளை முற்றிலும் பின்பற்றாமல் சிற்சில விஷயங்களில் ஏனைய மதத்தாரின் கிரியைகளையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றத் தலைப்பட்டு விட்டனர். முற்காலத்தவர்களின் கிரியைகளைக் கர்நாடகம் என்று கேவலமாக மதித்து நாகரீகஸ்தர்கள் என்றும், பகுத்தறிவாளர் என்றும், தங்களைப்பற்றிப் பிரமாதமாக நினைத்துக்கொண்டு மேனாட்டினரின் அதாவது பிறமதத்தாரின் வாழ்க்கை முறையைப் பின்பற்றத் தலைப்பட்டதானது முஸ்லிம்களுக்குக் கண்ணியக் குறைவை உண்டுபண்ணி விட்டது. இவ்விதமான கண்ணியக் குறைவு உண்டாகும் என்பதைத் தான் இறைவன் மேற்கண்ட வேத வசனத்தில் "மேலும், உமக்கு அறிவிப்பு வந்த பின்னும் அவர்களுடைய இச்சைகளை நீர் பின்பற்றுவீராயின் உமக்கு ஒத்தாசைக்காரனுமில்லை,உதவி

யாளனுமில்லை" என்று அறிவித்திருக்கிறான். ஆகவே, நாம் தப்பான வழியில் செல்வோமாயின் இவ்வசனத்தின் பிரகாரம் இறைவன் நமக்கு உதவி செய்பவனுகவோ, ஒத்தாசை புரிபவனுகவோ, காரியஸ்தனுகவோ இருக்கமாட்டான் என்பதைத்தெரிந்து கொள்கிறோம். இறைவனின் கிருபையும் உதவியுமில்லாதவர்கள் எதிலும் வெற்றிபெறமாட்டார்கள் என்பது தெரிந்தவிஷயம். எனவே, நமது கண்ணியமும் வெற்றியும் திரு குர்ஆனைப் பின்பற்றி நடப்பதில் மறைந்திருக்கின்றன என்பதை இத்தெய்வத்திருவசனத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம். ஆகவே, எல்லாம் வல்ல இறைவன் நம்மவருக்கு நேரான வழியைக்காட்டி, அவனது மார்க்கத்தில் சீராக நடப்பதற்கு அருள்புரிந்து, மேனுட்டு நாகரீகத்தில் மூழ்கித் தவிப்பதைவிட்டும் கரைசேர்ப்பானுக, ஆமீன்.

---

## அல்ஹதீது

"தன் கை, உழைப்பால் சாப்பிடுகிறவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது (மார்க்க யுத்தம்) செய்பவரைப் போலிருக்கிறார். மனிதர்களிடத்தில் கேட்காமலிருப்பதற்கு யார் எனக்குப் பிணை கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு நான் சொர்க்கத்துக்குப் பிணையாக இருக்கிறேன்."

சோதரீர்! இது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம். இந்த ஹதீதை ஹஜ்ரத் 'ஜைதுப்னுஹாரித்' றலியல்லாஹு அன்ஹு ரிவாயத்துச்செய்ததாக 'அபூதாவூத்' என்ற கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின் இந்த ஹதீது ஸஹீஹான ஹதீதுகளிற் சேர்ந்தது என்பதிற் சந்தேகமில்லை. இந்த ஹதீதில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதாவது, தான் உழைத்துச் சாப்பிடவேண்டும் என்பது ஒன்று. மற்றவர்களிடம் யாசகம் கேட்கக்கூடாது என்பது மற்றொன்று. அல்லாஹுதஆலாவின்மீது உண்மையாக விசுவாசங்கொண்டவர்கள் பிறரிடம் யாசகம் கேட்காமல் தன்கை உழைப்பால் சுய சம்பாத்தியம் செய்வது அவசியம் என்பது இதிலிருந்து தெரியவருகிறது. ஒரு சமூகம் முன்னேற்றமடையவேண்டுமாயின், அச்சமூகம் பிறருடைய உதவியை எதிர்பாராமல் தனக்குத்தானே உதவிபுரிந்து கொள்ளவேண்டும் என்பது இந்நாட்டில் சொல்லப்படும் முதுரை. ஒருவன் பிறனிடமிருந்து ஒரு உபகாரத்தைப் பெறுவானுயின், உபகாரம் செய்த மற்றவனுக்கு, உபகாரம் பெற்றுக்கொண்டவன் அடிமையாகி விடுகிறான். இதனுல், உபகாரம் செய்தவன் எவ்வித அக்கிரமஞ் செய்தாலும், தவறு செய்தாலும் அதைக் கண்டித்துணர்த்த, உபகாரம் பெறுபவனுல் முடியாது. முஸ்லிம்களாகிய ஒவ்வொருவரும் நன்மையை ஏவித்தீயதை விலக்கக்கடமைப் பட்டுள்ளார்களாதலால், அவர்களுக்குப் பிறருடைய உபகாரமோ, பிறருடைய ஒத்தாசையோ இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்குமாயின் நன்மையை ஏவித்தீயதை விலக்கவேண்டும் என்ற இஸ்லாமியச் சட்டத்தைச் சரியாகக் கடைப்பிடித்தொழுகமுடியாது. இதனுல்தான் நாயகம் (ஸல்.) அவர்கள், சுய உழைப்பால் தனக்கு வேண்டியதைச் செய்து கொள்ளவேண்டும் என்று கூறி இருக்கிறார்கள்.

மேலும், ஒருவர் யாசகத்தொழிலைத் தனக்குரிய அலுவலாகக் கொள்வாராயின், அவர் இறைவனுல் தனக்கருளப்பட்ட அறிவு ஆற்றல் முதலியவைகளைச் சரியாக உபயோகப்படுத்தாமல் இருக்கவேண்டியதாக ஏற்பட்டுவிடுகிறது; சோம்பல் உண்டாகிவிடுகிறது. நாடு செழிக்க வேண்டுமாயின், நாட்டிலுள்ளோர் நம்மை மதிக்கவேண்டுமாயின், நாட்டிலுள்ளோருக்கு நலம் பல புரியவேண்டுமாயின் நம்மாலியன்ற தொழிலை ஒவ்வொருவரும் செய்யவேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் தொழில் செய்யாது, எவ்வித அலுவலையும் ஆற்றுமல், பிறருடைய கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எந்த சமூகத்தில் அதிகமிருக்கிறார்களோ அந்த சமூகத்தார் ஒரு போதும் முன்னுக்கு வரமாட்டார்கள்; அவர்களை எவரும் கவனிக்கமாட்டார்கள். இந்த விதி உல

கத்துக்குப் பொது விதியாகும். இவ்வுண்மையினை அறியாத நம்மவரிற் பலர், தாங்கள் இறைவனை வணங்குவதாக நினைத்துக்கொண்டு சதா நபிலான வணக்கங்களில் ஈடுபட்டுத் தங்களது குடும்பத்தைக் கவனியா திருந்துவிடுகிறார்கள். இதனால் குடும்பத்தின் வருவாய் குறைந்து, குடும்பத்திலுள்ள பின்னைய சந்ததியினர் கல்வி, கைத்தொழில் முதலியவைகளிலீடுபட்டு முன்னேற்றமடைவது தடைப்பட்டு விடுகிறது. வணக்கங்களிற் சிறந்தது பர்லான வணக்கமாகும்; அதற்கடுத்தபடி யிலுள்ளது வாஜிபு; அதற்கப்புறம் சுன்னத்து; அதற்கப்புறம் நபில். ஆகவே, குடும்பத்தைக் காப்பது அக்குடும்பத்திலுள்ள தலைவர்கள்மீது கடமையான காரியமாக இருக்கிறது. எனவே, கடமையைவிட்டுவிட்டுக் கடமையல்லாத காரியத்தைச் செய்வது ஒருபோதும் போற்றத்தக்கதாகாது. எனவே, தானும் தனது குடும்பத்தாரும் பிறரிடம் தேவைப்படாமல் கைத்தொழில் புரிந்து ஜீவனம் செய்வதானது பெரியவணக்கமாக இருக்கிறது என்பதை நாம் இந்த ஹதீதிலிருந்து தெரிந்துகொள்கிறோம்.

“ ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சில ஸஹாபிகளுடன் “ ஷுஅபே அபூதாலிபி”ன் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார்கள். அதுபொழுது வழியில் நல்லதிட காத்திரமுள்ள ஒருவாலிபர் இரும்புச்சாமான் ஒன்றைச் செய்து கொண்டிருந்தார். அவரைப்பார்த்த ஸஹாபிகளில் ஒருவர், “ இவருடைய சக்தியானது இறைவனின் பாதையில் செலவாகுமாயின் எவ்வளவு நன்மையாக இருக்கும்” என்று கூறினர். அப்பொழுது நாயகம் (ஸல்.) அவர்கள், “அவ்வாறு கூறுதீர்கள்; ஜனங்களிடம் யாசகங்கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளவும், ஜனங்களிடம் தேவையற்றவ ராகுவதற்காகவும் அவர் இவ்வுழைப்பைச் செய்வாராயின் அவர் நிச்சயமாக அல்லாஹு தஆலாவின் பாதையிலிருக்கிறார்; அவருடைய உழைப்பும் முயற்சியும் வணக்கமாக இருக்கிறது” என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஹதீதிலிருந்து சுய உழைப்பும் சுய முயற்சியும் கூட வணக்கமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

### இரக்கம், அனுதாபம்

மானிடர்கள்மீது எவன் இரக்கங்காட்டமாட்டானோ அவன்மீது அல்லாஹ்தஆலா இரக்கங் காட்டமாட்டான்.

அடியான் தனக்கு எதை விரும்புவானோ அதையே தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை அவன் மூமினாகமாட்டான்.

மனிதர்களெல்லோரும் அல்லாஹ்வின் சம்ரக்ஷணையிலுள்ளவர்கள். அவனுடைய சம்ரக்ஷணையிலுள்ளவர்களுக்கு எவன் நன்மை செய்கிறானோ அவன் அல்லாஹ்தஆலாவுக்கு அதிகப் பிரியமுள்ளவனாக இருப்பான். அல்லாஹு தஆலா இரக்கமுள்ளவனாக இருப்பதால் இரக்க குணத்தை விரும்புகிறான். ஆதலால், இரக்க குணமில்லாதவர்களுக்குக் கொடுக்காத அநேக வஸ்துக்களை இரக்கமன முடையவர்களுக்குக் கொடுக்கிறான்.

இடையூறு செய்வதென்பது மாபெரும் பாதகச் செயலாகையால், அதனை மானிடன் ஒருக்காலும் செய்ய முற்படலாகாதென்பது திண்ணம்.

இதரர்களுக்குக் கஷ்டம் கொடுப்பவன் அல்லாஹ்தஆலாவின் கஷ்டத்திற்கு ஆளாகுவான்.

அல்லாஹ்தஆலாவின் கிருபையின்மீது ஆதரவு வைப்பவர்கள் அவனுடைய சிருஷ்டிகள் மீது இரக்கங்காட்ட வேண்டியது முக்கியமாகும்.

### பொது விஷயம்

(1) துண்டு துண்டாக்கினாலும் (நெருப்பில்) எரித்தாலும் அல்லாஹ்விற்கு இணைவைக்கலாகாது. (2) விதிக்கப்பட்ட தொழுகையை வேண்டுமென்றுவிடலாகாது. (3) கள், சாராயம் குடிக்கலாகாது. (4) மாதாபிதாக்களுக்குக் கீழ்ப்படியாதிருக்கலாகாது. (5) உண்மை ஆட்சி புரிபவரோடு சண்டையிடலாகாது. (6) மதயுத்தம் புரிந்துகொண்டிருப்பதை விட்டு புறங்காட்டி ஓடலாகாது. (7) சம்பாத்தியத்திலிருந்து சந்ததிகளுக்கு செலவு செய்யாதிருக்கலாகாது. (8) வீட்டார்களுக்கு தன்மீது பயமில்லாது செய்யலாகாது. (9) கண்ணியமுள்ள அல்லாஹ்வைப்பற்றி அவர்களுக்கு பயமூட்டாதிருக்கலாகாது.




# அமெரிக்காவில் இஸ்லாம்

உலகத்தில் இஸ்லாம் முற்காலத்தைப் போல் அவ்வளவு வேகமாகப் பரவாவிடினும், ஏனையமதங்களைப் பார்க்கினும் அதிவேகமாகப் பரவி வருகிறது. எனவே, தற்போது மேனாட்டில் இங்கிலாந்து, ஜெர்மனி, போலண்டு, ஆஸ்டிரியா, பிரான்சு முதலிய ஐரோப்பிய நாடுகளில் ஆங்காங்கு முஸ்லிம் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு ‘இஷா அத்தே இஸ்லாம்’ செய்யப்பட்டுவருவது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். ஐரோப்பாவுக்குப் பின்னர் ஜப்பான், மஞ்சூரியா முதலிய கீழ்நாடுகளில் இஸ்லாம் துரிதமாகப் பரவுவதும், ஜப்பான் தலைநகரில் மத்ரஸாவும் மஸ்ஜிதும் ஸ்தாபிக்கப்படுவதும், ஜப்பான் அரசாங்கம் முஸ்லிம்களுக்கு ஆதரவு காட்டிவருவதும் நேயர்களுக்குத் தெரியாத விஷயமன்று. இதுபோல், தென் ஆப்பிரிக்காவிலுள்ள உள் நாட்டுப் பிரதேசங்களில் இஸ்லாம் மதம் கிறிஸ்துமதத்துடன் போட்டி போட்டு அம்மக்களை அதிவிரைவாகத் தன்பால் ஈர்த்துக்கொண்டிருக்கும் விஷயம் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் மூலமாக நமக்கு எட்டிக் கொண்டிருக்கிறது.

இம்மட்டுடன் நில்லாது அமெரிக்காவிலும் இஸ்லாம் நாளுக்கு நாள் வளர் பிறைச்சந்திரனைப்போல் வளர்ந்தோங்கி வரும் செய்தி நமக்கு தினேதினே எட்டிக்கொண்டிருக்கிறது. ஆகவே, அமெரிக்காவில் இஸ்லாம் பெருகி வருவதைப் பற்றி “ தீ முஸ்லிம் ஓர்ல்ட் ” என்ற பத்திரிகை எழுதுவதை ஈண்டு குறிப்பிட விரும்புகிறோம்.

“இஸ்லாம் அமெரிக்காவில் வெகு வேகமாகப் பரவிவருகிறது. அமெரிக்காவில் முன்னர் 50 ஆயிரம் முஸ்லிம்களிருந்தனர். இப்பொழுது $2\frac{1}{2}$ லக்ஷம் முஸ்லிம்களிருக்கக் கூடும் என்று மதிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையின் பெரும்பாகம் தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலு மிருக்கின்றது. தென் அமெரிக்காவிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பாலும் அர்ஜன்டையின், பிரேஜில் முதலிய தேசங்களில் காணப்படுகின்றனர். டிரினிடால் தீவில் முஸ்லிம்கள் ஏராளமாக வசிக்கிறார்கள். வட அமெரிக்காவில் முஸ்லிம்கள் பல மாகாணங்களிலும் பரவி இருக்கிறார்கள். பற்பலரும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து வாடகைக்கு வீடுகளை வாங்கிக்கொண்டு தொழுகையை நிறைவேற்றி வருகிறார்கள். நியூயார்க்கிலுள்ள பார்க்கலின் என்ற பகுதியில் முஸ்லிம்களுக்கு ஒரு மஸ்ஜிது மிருக்கிறது.”

மேலே காட்டப்பட்ட விஷயங்களிலிருந்து அமெரிக்காவில் இஸ்லாம் அதிவேகமாகப் பரவிவருகிறது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். ஆனால், அந்நாட்டில் இஸ்லாமியப் பிரசாரம் செய்வது யார் என்பதை நாம் கவனியாதிருப்பது முடியாத காரியம். துருக்கி, ஷாம் முதலிய நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு வியாபார நிமித்தமாகச் சென்ற முஸ்லிம்கள் சுமாராக இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்தனர். பின்னர் இங்கிலாந்தில் நடைபெற்றுவந்த “ இந்தியா ” என்றபத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த ஜனப் ஸையத் ஹுஸைன் என்ற இந்திய முஸ்லிமும் மற்றவர்களும் இஷாஅத்தே இஸ்லாம் செய்துவருகிறார்கள். ஆயினும், இந்தியாவிலுள்ள முஸ்லிம் பொது ஜனங்களின் கவனம்

இன்னும் அவ்வளவு அதிகமாகச் செல்ல வில்லை என்றே தோன்றுகிறது. தென் அமெரிக்காவிலுள்ள பிரேஜில் முதலிய பிரதேசங்களில் பஹாயீ மதக்காரர்களும், காதியானி மதத்தாரும் இஸ்லாத்தின் பெயரால் பிரசாரம் செய்வதாக பிரஸ்தாபமிருந்து வருகிறது. ஆதலின், நமது நாட்டிலுள்ள முஸ்லிம் மதப் பிரசாரர்கள் அமெரிக்கா விஷயத்தில் அதி சீக்கிரம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அவ்வாறு செய்யாமல் விட்டுவிட்டால், அந்நாட்டிலுள்ள மக்கள் இஸ்லாத்தைத் தழுவுவதாக நினைத்துத் தங்களது பழையமதத்தைக் கைவிட்டாலும், குளிக்கப்போனவன் சேற்றைப் பூசிய கதைபோல், இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை உணராதவர்களாகவே இருப்பார்கள். அந்தக் குற்றம் நம் முஸ்லிம் சமுகத்தையே சாருமாதலால் அதில் அபரிமிதமான கவனத்தைச் செலுத்துவோமாக.

---

# இந்தியரனைவரும் இஸ்லாத்தைத் தழுவாததேன்?

உலகத்தின் எதிர்கால மதம் இஸ்லாம் தான் என்று, கல்வி கேள்விகளிற் சிறந்த அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். இஸ்லாத்தின் ஆடம்பர மின்மை, இயற்கைக்கு ஒத்தவாறு இஸ்லாமியச் சட்டங்க ளமைந்திருத்தல் போன்ற பலசிறந்த தன்மைகள் இஸ்லாத்தினுள் ஆதி முதலிலேயே அமைந்திருப்பதால், இனி எதிர்காலத்தில், இன்றைக்கில்லை யெனினும், இனி ஒருகாலம் உலகம் முழுவதும் இஸ்லாம் மயமாக மாறிவிடும் என்பது திண்ணம். இஸ்லாம் மிகவிரைவாக மக்களிடை பரவி வருவதை நாம் பிரத்தியக்ஷமாகக் கண்டு வருகிறோம்; ஆயிரக்கணக்கான அடியார்கள் பல தேசங்களிலும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டே இருக்கிறார்கள்; இந்தியாவிலும் இஸ்லாம் நாளுக்குநாள் பரவி வருகிறது. இந்தியாவில் இஸ்லாமிய அரசாங்கம் முடிவடைந்தபோது சுமார் $1\frac{1}{2}$ கோடிப் பேர் தான் முஸ்லிம்களாக இருந்தனர். இப்பொழுது அந்நிய மதத்தார் இந்தியாவை ஆட்சி புரிந்தும், இந்தியாவில் 8 கோடிக்கு அதிகமானவர்கள் முஸ்லிம்களாக இருப்பது ஒன்றிலிருந்தே இந்தியாவில் இஸ்லாம் மதம் எவ்வளவு துரிதமாகப் பரவி வருகிறது என்பதை நிதானித்துக் கொள்ளலாம். இவ்வளவு துரிதமாக இஸ்லாம் பரவி வருவதை இதர சமுகத்தார் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இது நம்மிடத்தில் ஆச்சரியமான விஷயமல்ல. ஏனெனில், இந்தியாவில் ஒழுங்கான முறையில் இஷா அத்தேஇஸ்லாம் செய்யப்பட்டிருக்குமாயின் வெகு காலத்துக்கு முன்பே இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மனிதரும் இஸ்லாத்தின் வட்டத்துக்குள் வந்திருப்பர். குறைந்த பக்ஷம் தாழ்த்தப்பட்ட ஜாதி என்ற பதம் இந்தியாவில் இல்லாமலேனும் ஒழிந்திருக்கும். உதாரணமாக, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் அதாவது, நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை ஹிஜ்றத்துச் செய்தபின் அவர்களுடைய வபாத்துக் காலத்துக்குள் அதாவது 9 வருஷ காலத்தில், கிட்டத்தட்ட அறபிதேசத்தில் பெரும்பாலர் இஸ்லாத்தைத் தழுவி விட்டனர். ஆகவேமக்கா, மதீனா, தாயிப் முதலிய நகரங்களில் ஒருவர் கூடப் பாக்கியில்லாமல் இஸ்லாத்தைத் தழுவி விட்டார்கள் என்று கூறுவது மிகையாகாது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்கடைசி முறையாக மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜுச் செய்த காலத்தில் லக்ஷத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் ஹஜ்ஜுக்கு வந்திருந்தது ஒன்றே அறபி தேசத்தில் இஸ்லாம் எவ்வளவு தூரம் வியாபித்திருந்தது என்பதை அறிவிக்கும்.

பின்னர், "குலபாயெராஷிதீன்"கள் காலத்தில் எகிப்து, ஷாம், இராக், பாரசீகம், அப்கனிஸ்தானம் முதலிய நாடுகள் முஸ்லிம்கள் வசமாயின். இக்காலத்தில் அந்த தேசங்களில் முஸ்

லிம்கள் பெரும்பான்மையாக இருப்பதும், முஸ்லிம்கள் ஆட்சி இருந்து வருவதும் இன்றும் நிரந்தரமான சாக்ஷியமாக இருந்து வருகிறது. அக்காலத்தில் இத்தேசங்களிலுள்ள முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவிய விபரத்தைப் பார்த்தால், இஸ்லாம் எவ்வளவு துரிதமாக அங்கு பரவிற்றென்பது தெரியவரும். ஆனால், இந்தியாவிலோ ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்னரே இஸ்லாம் வந்தும், 800 வருஷ காலம் வரை இஸ்லாம் அரசுபுரிந்தும், நான்கில் ஒரு பாகத்தினரே இஸ்லாம் என்னும் வட்டத்துக்குள் வந்திருக்கிறார்கள் என்பதைக்காண முஸ்லிமாகவுள்ள எவருக்கும் இந்தியாவில் இஸ்லாம் பரவி வரும் முறையைக் கண்டு ஆச்சரியமேற்படாது.

அற்றை நாளில் அவ்வளவு துரிதமாகப் பரவிய இஸ்லாம் மதம், இற்றை நாளில் இவ்வளவுமெதுவாகப்பரவுவதற்குக் காரணமென்ன என்ற வினா இவ்விடத்தில் இயற்கையாக யாவருக்கும் தோன்றக்கூடும். இவ் வினாவுக்கு பதில் கூறுவதும், இப்பிரசினையைப்பற்றிய உண்மைச் சமாச்சாரத்தை உலகத்தாருக்கு அறிவிப்பதும்ஒவ்வொரு முஸ்லிமுனுடையவும் கடமையாகும் என்பதிற் சந்தேகமில்லை. இவ் விஷயத்தில் கவனம் செலுத்தித் தக்க பரிகாரம் தேட முயலுவது ஒவ்வொருவருக்கும் அவசியமாகுமென்பதை யாம் ஒப்புக்கொள்கிறோம். முற்காலத்தைப்போல் தற்காலத்தில் இஸ்லாம் மதம் உலகில் துரிதமாகப் பரவாததற்குக் காரணம், முற்காலத்து முஸ்லிம்களிடமிருந்த தன்மைகள், உணர்ச்சிகள், செய்கைகள் நம்மிடத்தில் இல்லாதிருப்பது தான் என்பதை நாம் உணரவேண்டும். முற்காலத்துப் பெரியார்களின் ஜீவிய சரித்திரங்களைப் படித்துப் பார்த்துவிட்டு நம்மிடத்தில் இன்னுளிலுள்ள தன்மைகளை யாம்சிந்தித்துப் பார்ப்போமாயின், நமக்குள்ளாக அத்தன்மைகளில்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் மனத்துக்குள்ளாகவேனும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது. ஆகவே இவ்விடத்தில், முற்காலத்துப் பெரியார்களிடமிருந்த சில தன்மைகளைப்பற்றிய இரண்டொரு சம்பவங்களை உதாரணத்துக்காகக் குறிப்பிடுவாம்.

ஹஜ்ரத் உமர் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில், முஸ்லிம்கள் ஷாம் தேசத்தில் உரோமச் சக்கிரவர்த்தியின் வலி மிகுந்த படையை எதிர்த்துப் பல யுத்தங்கள் செய்ய வேண்டியதிருந்தது. அக்காலத்தில் திமிஷ்கு நகரில் முஸ்லிம் கவர்னர், முதல் முதலாக நியமிக்கப்பட்டார். ஷாம் தேசத்திலுள்ள சகல சைனியங்களுக்கும் ஹஜ்ரத் அபூஉபைதா (றலி.) அவர்கள் பிரதம தளகர்த்தராக இருந்தார்கள். உரோமச் சக்கிரவர்த்தி இலக்ஷக்கணக்கான போர்வீரர்களைத் திரட்டி, யுத்தாயுத்தங்களின் சகலவிதமான கருவிகளையும் கொண்டு முடிவான யுத்தம் செய்து முஸ்லிம்களை ஷாம் தேசத்தைவிட்டு ஒரே தாக்கில் விரட்டி யடிப்பதுடன் அவர்களை நிர்மூலம் செய்து விடவேண்டுமென்றும் கடுங்கோபமாக அடர்ந்தேறி வந்தார். அக்காலத்தில் அத்தேசத்தில் முஸ்லிம்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் போர்வீரர்களே இருந்தனர். இந்த 40 ஆயிரம் பேர்களும் நான்கு பாகமாகப் பிரிந்து நான்கு இடத்தில் வசித்து வந்தனர்.

முஸ்லிம் ஒற்றர்கள் தகவல் அறிவித்ததன் பேரில் பிரதம தளகர்த்தரான ஹஜ்றத் அபூஉபைதா (றலி.)அவர்கள் ஏனைய ராணுவ உத்தியோகஸ்தர்களையும் யுத்த சபை ஆலோசனைக்கர்த்தர்களையும் ஒன்று கூட்டி,உரோமச் சைனியத்தை எதிர்த்துப் போர் செய்வதற்காக ஆலோசனை புரிந்தார்கள். அது பொழுதுநான்கு பக்கங்களிலுமுள்ள முஸ்லிம் போர் வீரர்கள் யாவரும் ஒன்றுகூடிக்கோட்டைக்குள்வேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொண்டு பத்திரமாக இருந்து யுத்தம் செய்யவேண்டும் என்று ஒருவர் ஆலோசனை கூறினார். ‘திமிஷ்கு’ முதலிய நகரங்களைக்காலி செய்துவிட்டு முஸ்லிம்களுக்கு வசதியான ‘யர்மூக்’ போன்றஇடத்துக்கு முஸ்லிம்கள் சென்றுவிட வேண்டும் என்றும், அந்த இடத்திலிருந்து யுத்தம் செய்தால் முஸ்லிம்களுக்குத் தக்க தற்காப்புக்கு வசதிகிடைப்பதுடன் உதவிப்படைகள் சீக்கிரம் வந்து சேரவும் வசதியாக இருக்கும் என்றும் ஒருவர் ஆலோசனை கூறினார்.

மற்றொருவர், இவ்வாலோசனையை மறுத்து, முதலில் சொன்ன ஆலோசனையை ஆதரித்துக் கூறுகையில், “இத் தேசத்திலுள்ளவர்களிற் பெரும்பாலர் கிறிஸ்துவர்களாக இருக்கிறார்கள்; அதற்கு அடுத்தபடியில் யூதர்களிருக்கின்றனர்; ஆதலால், யுத்தம் நேர்ந்து இவர்கள் உரோமக் கைசருடன் சேர்ந்து கொண்டால் கோட்டைக்குள்;இருக்கும் நம்மவருக்கு ஆபத்து நேர்ந்துவிடும் ஆதலின், இவர்களை யுத்தம் முடியும்

வரை ஊரைவிட்டு அப்புறப்படுத்திவிடவேண்டும்'' என்று கூறினர். இவ்வாலோசனையைக் கேட்டவுடன் எல்லாத் தளகர்த்தர்களும் ஒரு முகமாக இதனை மறுத்து "நாம் அவர்களிடமிருந்து வாங்கிய வரிப்பணம், அவர்களின் பொருளையும் உயிரையும் காப்பாற்றுவதற்காகத் தான்; அவர்களை ஊரைவிட்டு வெளியேற்றுவதற்காக வன்று. ஆதலின், நாம் அவர்களை ஊரைவிட்டு வெளியேற்ருமல் காப்பாற்ற வேண்டும். இதற்குச் சக்தி இல்லை எனின், அவர்களிடம் வாங்கிய வரிப்பணத்தை திரும்பக் கொடுத்துவிட்டு நாம் வேறிடம் செல்வது தான் முறையாகுமென்று கூறினர்கள். பிரதம தள கர்த்தரான ஹஜ்ரத் அபூஉபைதா (ரலி.) அவர்கள் உடனே தமது காரியாலயத்து ஊழியர்களை அழைத்து, வரிப்பணத்தைக் கணக்குப்படி அவரவரிடமும் திரும்ப ஒப்புவித்து விடும்படிக் கட்டளையிட்டார். இதல்லாமல், யூத கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த அந்நாட்டு மக்களை அழைத்து, "உங்களது உடல் பொருளைக் காப்பதாகக் கூறியே நாங்கள் உங்களிடம் வரி வசூல் செய்தோம்; தற்போதைய நிலைமையில் நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியாமலிருப்பதால் உங்களிடம் வாங்கிய வரிப்பணத்தைத் திருப்பக்கொடுக்க முடிவுசெய்திருக்கிருேம்; நீங்கள் கொடுத்த பணத்தைக் கொஞ்சமும் குறைவில்லாமல் திரும்ப வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று கூறினர்கள். பின்னர், வரிப்பணம் கணக்குப்படி அவரவரிடமும் ஒப்புவிக்கப்பட்டது.

முஸ்லிம்களின் நேர்மையான இந்நடத்தை, யூத கிறிஸ்துவர்களின் மனத்தைக் கவர்ந்து விட்டது. "வேறொரு ஜாதியாராக இருந்தால் நமது பணத்தைத் திரும்பக்கொடுக்காமல் இன்னும் அதிகப்படியான பணம் கேட்டிருப்பர்; நம்முடைய ஆள் உதவியும் வேண்டி நிற்பர்; முஸ்லிம்கள் அவ்வாறு செய்யாமல், வாங்கிய பணத்தையும் திரும்ப ஒப்புவிப்பது அவர்களின் உதாரகுணத்தைக் காண்பிக்கிறது'' என்று அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். பின்னர், முஸ்லிம்கள் ஊரைக் காலி செய்யப்போவதைத் தெரிந்தவுடன் யூத கிறிஸ்துவர்கள் மனமுருகிவிட்டது. பிற ஜாதியாராக இவர்கள் இருந்தும் தங்களை எவ்வித வித்தியாசமு மில்லாமல் நீதியுடன் நடத்திய காட்சிகளை யூத கிறிஸ்துவர்கள் நினைத்துக் கண்ணீர் விட்டதுடன் பைபிளையும் சிலுவையையும் எடுத்துக்கொண்டு, "இறைவா! இவர்களை எங்கள் தேசத்துக்குத் திரும்பவரும்படி செய்தருள்; இவர்களுக்குப் பூரண வெற்றியைத் தந்தருளுவாயாக'' என்று முஸ்லிம்களுக்காகப் பிரார்த்தனை செய்தனர்.

வாக்குறுதிக்கு மாறு செய்யக்கூடாது என்ற உணர்ச்சி அக்காலத்து முஸ்லிம்களிடம் எவ்வாறிருந்தது என்பதையும், அதனை எவ்வளவு பொறுப்புடன் அவர்கள் நிறைவேற்றினர் என்பதையும் இச்சம்பவத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். முஸ்லிம்கள் நடந்த கண்ணியமான முறையால், பிறமதத்தவராக இருந்த யூத கிறிஸ்துவர்கள், கிறிஸ்துவ அரசரை நிராகரித்து முஸ்லிம்களை நேசிப்பதாயின், இவ்வளவு மனமாற்றத்தை உண்டுபண்ணியது முஸ்லிம்களின் வாள்வலிமையா? அல்லது அவர்களின் ஒழுக்க வலிமையா? என்பதையும், இன்னுளிருள்ள நம்மவரிடம் இத்தன்மை எம்மாத்திரம் இருக்கிறது? இத்தன்மையைப்பற்றிய உணர்ச்சியேனும் நம்மிடம் இருக்கிறதா? என்பதையும் சிந்தித்துப் பார்ப்போமாக.

## முஸ்லிம்களின் பரோபகார சிந்தை

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறப்பதற்கு முன் அறபிகளில் சகலவிதமான துற்குணங்களும் நிறைந்திருந்தன. தகப்பனென்றும், பிள்ளையென்றும், தமையனென்றும், தம்பியனென்றும் பாராமல் அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிமாய்த்துக்கொள்வர். ஈவு, இரக்கம் என்பவை அவர்களிடம் மருந்துக்குக்கூட கிடையாது. அநாகரீகர்களாக இருந்த இவ்வறபிகளை நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் சீர்திருத்தி, உலகவழி காட்டிகளாக உயர்த்திவிட்டார்கள். ஷாம் தேசத்தில் கைஸர் சக்கிரவர்த்தியுடன் நடந்த யர்மூக் சண்டையில் முஸ்லிம்களிற் பலர் சேதமடைந்தனர். வெட்டுக்காயம் பட்டு குற்றுயிராய் படைக்களத்தில் கிடந்த முஸ்லிம் ஸஹாபிகளிற் சிலர், தாகவிடாயினுல் தவிப்பதைக் கண்ட ஹஜ்ரத் இப்னு ஹுதைபா (ரலி.) அவர்கள் தண்ணீர் பையைத் தோளில் வைத்துக்கொண்டு அவர்களிடம் சென்று ஜலம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அதுபோழ்து காயமடைந்த ஒருவர் "ஜலம், ஜலம்'' என்று கூறுவதைக்கண்டு அவரிடம் ஜலம்கொண்டு போனுர்கள். இதற்குள்ளாக மற்றொருவர் சற்று தூரத்தில் "ஜலம் ஜலம்'' என்றுகூறும்சப்தம் வந்தது. இதைக்கேட்ட காயமடைந்துகிடக்கும் அந்த ஸஹாபி, தமக்கு ஜலம் வேண்டாம், ஜலம்

கேட்டுத்தவிக்கும் மற்றவருக்கு முதலில் ஜலத்தைக் கொடுத்துவிட்டு அப்புறம் தமக்குக் கொடுத்தால்போதும் என்று கூறினர். இதன்பேரில் இரண்டாவதாக ஜலம் கேட்டவரிடம் ஹஜ்றத் இப்னு ஹுதைபா (றலி.) சென்றபோது அவருக்குப் பக்கத்தில் வேறு ஒருவர் 'தாகம், தாகம்' என்று சப்த மிட்டார். உடனே, அவ்விரண்டாவது ஸஹாபி தம்மைப்பார்க்கினும் தாகவிடாயால் தவிக்கும்அம்மூன்ருவது மனிதருக்கு ஜலம் கொடுத்துவிட்டு, அப்புறம் தமக்கு ஜலம் தந்தால் போதும் என்று கூறியதற்கிணங்க, ஹஜ்ரத் இப்னு ஹுதைபா (றலி.) அவர்கள் மூன்ருவது ஸஹாபியிடம் ஜலம் கொண்டுபோனர். ஹஜ்றத் இப்னு ஹுதைபா (ரலி.) அவர்கள் மூன்ருவது மனிதரிடம்போன போது அவர் இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டார். ஆதலின், அவ்விடத்தைவிட்டு இரண்டாவது ஸஹாபியிடம் ஓடிவந்தபோது, இவ்விரண்டாவதுஸஹாபியும் இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டார். இதனைப் பார்த்தவுடன் முதலாவது ஸஹாபிக்கேனும் ஜலம் கொடுக்கலாம் என்று நினைத்து அவரிடம் வந்தபோது அவரும் உயிரில்லாமலிருந்தார். எனவே, முஸ்லிம் ஸஹாபிகள் படைக்களத்தில் படுகாயமடைந்து உயிருக்கு மன்ருடும் சமயத்தில் கூடப் பிறருடைய கஷ்டத்தைப் பெரிதெனக் கருதித்தங்களது கஷ்டத்தை லக்ஷியம் செய்யாமல், தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட தியாக உணர்ச்சியும், தியாகமும் நமது சமூகத்தாரில் முன்னளிலிருந்ததால்தான் அவர்கள் கால் வைத்த இடங்களிலெல்லாம் இஸ்லாம் என்ற வித்து முளைத்து, வளர்ந்து, விருக்ஷமாகிக் காய்த்துப் பூத்துக் கனி தந்துகொண்டிருக்கிறது. இக்காலத்திலுள்ள நம்மவரிடம் இப்படிப்பட்ட உணர்ச்சி மிகக்குறைவாக இருப்பதால் நாம் எடுக்கும் காரியம் கை கூடாமலும், 'இஷாஅத்தே இஸ்லாம்' பிறமதத்தாரிடம் பரவாமலும் இருந்து வருகிறது என்பதை நாம் உணருவோமாக. இது இன்னளிலுள்ள உலக முஸ்லிம்களனைவருக்கும் பொதுவான நிலைமையாகும். இனி, நமது நாட்டிலுள்ள முஸ்லிம்களின் தன்மையைக் கவனிப்போம்.

### இந்தியாவும் முஸ்லிம்களும்

இந்தியாவிலுள்ள முஸ்லிம்களில் அனேகருடைய சொல், செயல், கிரியை, கொள்கை ஆகியவைகள், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த ஸஹாபிகள், அதற்குப் பின்னரிருந்த தாபியீன்கள், தபஅத்தாபியீன்கள் ஆகியவர்களின் காலத்தைய சொல், செயல், கிரியை, கொள்கை முதலியவைகளுக்கு முற்றிலும் மாருனதாக இருக்கிறது. இக்காலத்திலுதித்தஇந்திய முஸ்லிம்களிற் சிலர் தங்களை நபியென்றும், இமாம்களென்றும், மஸீஹுகளென்றும், மஹ்தீகளென்றும் தாவாச்செய்ய ஆரம்பித்து விட்டனர். "தாயைக் கொன்றவனுக்கு ஊரில் பாதி" என்றதுபோல, இவ்விஷமிகளின் கூற்றுக்குத் தலையசைத்துத் தாளம் போடுவதற்குச் சில தம்பிரான்கள் உற்பத்தியாகி விடுகின்றனர். இவர்களது நுபுவ்வத்துடையவும், மஹ்தியத்துடையவும், மஸீஹிய்யத்துடையவும் தாவாவையும், அதற்காக இவர்கள் கூறும் ஆதாரங்களையும் பார்த்த பிறமதத்தார், முஸ்லிம்களின் நிலைமையைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்து விட்டனர். இதுவும் போதாதென்று இத்தம்பிரான்கள் திருகுர்ஆன், ஹதீது முதலியவைகளைத் தாய் பாஷையில் எழுதுவதாகக்கூறிக்கொண்டு, ஒன்று கிடக்க ஒன்றை எழுதவும், தங்களது போலி நபியரின் வாதங்களை அப்புத்தகங்களில் நுழையவைக்கவும் தொடங்கி, இஸ்லாமியக் கிரந்தங்களுக்கு இருந்த மதிப்பையும் போக்கி விட்டனர். ஆகவே, இந்தக் கோஷ்டியாரால் இஸ்லாத்துக்கு இந்தியாவில் இருந்த கண்ணியமும் குறைந்து விட்டதே யன்றிப் பெருகி விட்டதாகக் காணேம்.

தவிர, எஞ்சி இருக்கும் முஸ்லிம்களில் அநேகர் தங்களைப் பக்கா முஸ்லிம் என்று வாயளவில் கூறிக்கொள்கிருர்களாயினும், இஸ்லாத்துக்குப் புறம்பான காரியங்களைச் செய்வதில் அவர்கள் கொஞ்சமும் பின்வாங்குவதில்லை. அன்றியும் இந்தியாவிலுள்ள இதர சமூகத்தாருடன் அவர்கள் நெருங்கிப் பழகுவதால் அவர்களிலுள்ள உணர்ச்சிகள் பல இவர்களிலும் பரவ ஆரம்பித்திருக்கின்றன. சிற்சில இடங்களிலுள்ள முஸ்லிம்களின் உடை நடையைப்பார்த்தால் அவர்களை முஸ்லிம் என்று தெரிந்து கொள்ள முடியாது. பின்னர், அவர்கள் தங்களை இன்னர் என்று கூறினல் தான் மற்றவர்கள் அவர்களை முஸ்லிம்கள் என்று உணர்ந்துகொள்ள முடியும்.

இன்னுஞ்சில முஸ்லிம்களிடம், ஹிந்துக்களிடமுள்ள வர்ணசிரம உணர்ச்சி தோன்றி,

இந்தியாவிலுள்ள மக்களிற் சிலரை உயர்வாகவும், சிலரைத் தாழ்வாகவும் அன்னோர் கருத ஆரம்பித்து விட்டனர். ஆகவே, இப்படிப்பட்டவர்கள், ஹிந்துக்களிலுள்ள பிராம்மணர், முதலி, நாய்டு, பிள்ளை முதலிய வகுப்பினரில் ஒரிருவர் இஸ்லாம் மதத்தைத் தழுவுவாராயின் அதனைப் போற்றுவர்; தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டத்தகாதவர் என்று ஹிந்துக்களால் கருதப்படும் சகோதரர்களிற் பலர் இஸ்லாத்தைத் தழுவினாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார். மேலும் இப்படிப்பட்ட வர்க்கத்தார் இஸ்லாத்தைத் தழுவ முற்படுவதால் தங்களுக்கு அவமானமுண்டாகுவதாகவும், உயர்ஜாதி ஹிந்துக்கள் தங்களை மதிக்கமாட்டார்களென்பதாகவும் கருதுகிறார்கள். தாழ்த்தப்பட்ட—தீண்டப்படாத ஹிந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவுவதால் இஸ்லாத்துக்குரிய சிறப்பும் கண்ணியமும் குறைவதுமில்லை, உயர்ஜாதி ஹிந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவுவதால் அதிகமாகுவதுமில்லை; அரசனும் ஆண்டியும் இஸ்லாத்தில் ஒன்றுதான். ஆதலின் உலகமக்களில் இஸ்லாத்தைத் தழுவவிரும்பும் பிறமதத்தார் தங்களுக்குள்ள நன்மையைக் கருதி இஸ்லாத்தில் சேர்ந்து கொள்ளவேண்டுமேயன்றி, இஸ்லாத்தைத் தழுவிய அப்பிறமதத்தாரால் முஸ்லிம் களுக்கு எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை "(நபியே) என்னிடத்தில் உங்களுடைய இஸ்லாத்தை (அதாவது நீங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்டதைப் பெரிய காரியமாக - முஸ்லிம்களுக்கு ஏதோ பெரிய உபகாரம் செய்து விட்டதாக, நினைத்து)ச் சொல்லிக் காண்பிக்க வேண்டாம். ஆயினும் அல்லாஹ் (தஆலா) விசுவாசங் கொள்வதற்கான வழியை உங்களுக்கு அறிவிப்பதற்காக (தான் செய்த நன்றியை) சொல்லிக் காண்பிக்கின்றான் என்று நீர் (அவர்களுக்குக்)கூறிவிடும்" என்பதாகத் திருகுர்ஆன் கூறுகிறது. ஆகவே, இஸ்லாம் மதம் முற்காலத்தில் ஷாம், இராக், எகிப்து போன்ற நாடுகளிற் பரவிய அவ்வளவு துரிதமாக இந்தியாவிலும் பரவவேண்டுமாயின், முஸ்லிம்களாகிய நாம், முதலில் நம்மைத்திருத்திக்கொள்ளவேண்டும்; இஸ்லாத்தைத் தழுவ விரும்பும் ஏனைய சமூகத்தாரில் எவ்வகுப்பினரையும் உயர்வுதாழ்வு என்று மதியாமல் இஸ்லாத்தினுள் வரவேற்றுக் கொள்ளவேண்டும்; இஸ்லாத்தில் முளைத்த பதர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளவேண்டும். இத்தியாதிகாரியங்களைச் செய்யநாம் முற்படுவோமாயின், அந்த நாள்முதல் இந்தியாவில் இஸ்லாம் வெகு துரிதமாகப்பரவ ஆரம்பிக்கும்என்பதையும், அதற்கப்பால்தான் உண்மையான ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படும் என்பதையும், முஸ்லிம்களுக்கு இந்தியா நாட்டிலுள்ள நியாயமான உரிமைகளும் பங்குகளும் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். இறைவன் நம்மவருக்கு உண்மையை உணரத்தக்க அறிவாற்றலை யளித்து, அவனுடைய சன்மார்க்க நெறியினிற்செல்ல 'தௌபீக்' செய்வானாக. ஆமீன்.

தமிழ்நாடு ... ஆவணக்காப்பக நூலகம் ... சென்னை 600 008

## தஜ்ஜால்களின் தோற்றம்

பகுதாது நகரில், அப்பாஸிய்யா வம்சத்தினர் கிலாபத் பதவியை வகித்து ஆட்சிபுரிந்த விபரமும், அவர்களது ஆட்சி காலத்தில் இஸ்லாமியக் கலைகள் வளர்ந்தோங்கிய விபரமும் இஸ்லாமிய சரித்திரத்தைப் படித்தவர்களுக்குத் தெரியாத விஷயமன்று. இவ்வம்சத்தில் தோன்றிய ஹாரூனுர் ரஷீது, அமீனுர் ரஷீது, மாமூனுர் ரஷீது ஆகியவர்கள் கலீபாக்களாக இருந்த காலத்திற்றான் ஹஜ்றத் இமாம் ஷாபிஈ, இமாம் ஹன்பலீ, இமாம்அபூயூஸுப், இமாம் முஹம்மது(றஹ்)ஆகிய பெரிய இமாம்கள் தோன்றி இருந்தனர். ஆதலின்,முஸ்லிம்களாகவுள்ளவர்களில் இம்மூன்று கலீபாக்களின் தூபார்களைப்பற்றிச் சிறிதேனும் தெரியாதவர் இருக்க மாட்டார்கள். இவ்வரசர்கள் கலீபாப் பதவியை வகித்திருந்தாலும் இஸ்லாமியக் கலைகளையும் அறிந்தவர்களாக இருந்ததால், மார்க்க சம்பந்தமான மஸ்அலாக்களில் இவர்கள் இமாம்களுடன் தர்க்கவாதம் செய்ததும், சிற்சில இமாம்களை ஆதரித்துக் கௌரவப்படுத்தி மரியாதை செய்ததும், சில இமாம்கள் இவர்களால் தண்டிக்கப்பட்டதும், இன்னும் இது போன்ற சரித்திர சம்பந்தமான நிகழ்ச்சிகளும் சரித்திர புத்தகங்களில் மலிந்து காணப்படு

வதை இஸ்லாம் மார்க்கக் கல்விபயிலும் மாண வர்கள் நன்குணர்ந்திருப்பர். இவர்களின் பொன்னுட்சியில் மத சுதந்திரம் யாவருக்கும் தாராளமாக அளிக்கப்பட்டிருந்ததால் 'பகுதாது' நகரில் யூதர்களும், கிறிஸ்துவர்களும், முஸ்லிம்களும் தங்கள் தங்கள் மதத்தின் உண்மைகளைத் தாராளமாக எடுத்துக் கூறவும், பிற மதத்தில் தங்களுக்குள்ள சந்தேகங்களை எடுத்துரைத்து அந்தந்த மதத் தலைவர்களிடமும், பண்டிதர்களிடமும் தர்க்கவாதம் செய்யவும் தாராளமாக அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. அல்லாமலும், முஸ்லிம்களுக்குள்ளும் பகுத்தறிவுக் கக்ஷிக்காரர்களும், மதபக்தர்களும், முஃதஜிலாக்களும், முஹத்திதுகளும் கடுமையான வாக்குவாதம் செய்து கொள்ளுவதும் வழக்கமாக இருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, யாவருக்கும் மத சுதந்திரம், வாக்குச் சுதந்திரம் தாராளமாக அளிக்கப்பட்டிருந்ததால் ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளைப்பொது ஜனங்களிடம் தாராளமாக எடுத்துக்கூறிப் பிரசாரம் செய்து வந்தனர்.

இச்சுதந்திரங்களைச் சிலர் அளவுக்கு மிஞ்சி உபயோகித்துத் தங்களை நபி என்று தாவாச் செய்யவும் முற்பட்டு விட்டனர். இவ்வாறு தாவாச்செய்தவர்கள் நூதனமான முறையில் செய்த பிரசாரங்களைப் பார்த்தால் இவர்களின் அந்தரங்க நோக்கம் புலனுகாமற்போகாது. இப்படிப்பட்டவர்கள் மலிந்து நாடெங்கும், கிராமங்கள் தோறும் தோன்றி, தேசத்திலுள்ள பொதுஜனங்களை பைத்தியக்காரர்களைபோல் பாவித்துச்செய்த சூழ்ச்சிகள் கணக்கிடமுடியாமல் மலிந்துவிட்டன. ஆதலின், பொதுஜனங்களை படுகுழியிற் தள்ளும் கெடுவழியினரை நடுவழியிற் கொண்டுவருவதற்காக அரசாங்கத்தார் தலையிடவேண்டியநிர்ப்பந்தமேற்பட்டுவிட்டது. எனவே, அரசாங்கம் இவ்வாறு தங்களை நபியெனக் கூறிக்கொள்ளும் போலி களையும் தஜ்ஜால்களையும் தண்டித்துப் புத்தி புகட்ட ஏற்பாடு செய்தது. ஆயினும், தக்க நீதி வழங்கவேண்டும் என்பதற் காக 'மாமூனுர் ரஷீத்' என்ற அவ்வரசர் போலிகளைச்சிட்சிப்பதற்குச் சில்லரை தேவதைகளுக்கு உத்தரவு கொடுக்காமல், நபிகளெனத் தாவாச்செய்த இந்த போலி தஜ்ஜால்களைக் கைதி செய்து பந்தோபஸ்தாகப் பகுதாதிலுள்ள கிலாபத் தர்பாருக்கு அனுப்பிவிடவேண்டும் என்றும், இந்த தஜ்ஜால்கள் கலீபா அவர்கள், "காலியுல் குலாத்" தாகிய பிரதம நீதிபதி, மார்க்க சட்டத்தை யுணர்ந்த மேதாவிகளின் முன்னிலையில் விசாரிக்கப்படவேண்டும் என்றும் திட்டம் செய்திருந்தார்.

இவ்வாறு கிலாபத் தர்பாரில் கொண்டுவரப்பட்ட போலிகளில் ஸ்திரீயுங்கூட தன்னை 'நபிய்யா' என்று தாவாச்செய்து கைதுசெய்யப்பட்டு, கொண்டு வரப்பட்டிருந்தனள். இதற்கு முன் ஒரு முறை ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில் ஆடவர்களில் 'முஸைலமத்துல் கத்தாப்' என்பவனும், ஸ்திரீகளில் "ஸஹாஜ்" என்பவளும் கணவன் மனைவியாகி நபியென்று தாவாச் செய்ததும், அதற்காக கிலாபத் அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டதும் சரித்திரம் அறிந்த உண்மையாகும். அக்காலத்துக்குப் பின் ஸ்திரீகளில் நபி வேடம் போட்டவர்கள் மாமூனுர் ரஷீதுடைய கிலாபத் ஆட்சியில் தான் தோன்றினர் என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறோம்.

எனவே, தங்களை நபியென தாவாச்செய்த பொய்யர்கள், கலீபா அவர்களின் கண்டிப்பான உத்தரவுப்படி தேசத்தின் நாலுபக்கங்களிலிருந்தும் பகுதாது நகருக்குக் கூட்டங் கூட்டமாக கொண்டுவரப்பட்டனர். அக்காலத்து கலீபாவான மாமூனுர் ரஷீது பாதுஷா அவர்கள் அன்னேருடன் நேரில் விவாதம்செய்து, அவர்களின் ருசிகரமான வாதங்களைக் கேட்கத் தொடங்கினர். இவ்வாறுநேருக்கு நேராக விவாதம் செய்ததன் பலனுகச் சிலருக்கு மரண தண்டனையும், சிலருக்கு தேசப் பிரஷ்டமும், சிலருக்கு சிறைவாசமும் அளிக்கப்பட்டது; சிலருக்கு நல்ல புத்தி தோன்றியதால் தௌபாச் செய்து விடுதலையடைந்தவரும் உண்டு. ஆனல் இவர்களை நேரில் விசாரித்ததன் பலனுக ஒரு விஷயம்மாத்திரம்நன்குவெளியானது. அதுவிஷயம் இற்றைநாளிலுள்ள நம்மவருக்கு அதிக நன்மையை விளைவிக்குமென்று கருதுகிறோம். இவர்கள் யாவரும் பைத்தியக்காரராக இருக்கவுமில்லை, இறைவனடியார்களுக்குத் தம்மாலான ஊழியம் புரியவேண்டுமென்ற எண்ணம் வைத்திருக்கவுமில்லை. உலகமக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பணம் பறித்துத் தங்களது தொப்பையை நிறப்பவேண்டும் என்ற ஒரே எண்ணம், இவர்களனைவரிலும் ஒன்றுபோலிருந்து வெளியாயிற்று. இவ்விஷயம் இக்

காலத்திலுள்ள நம்மவர் நன்கு கவனிக்கவேண்டிய தொன்ருகும்.

இப்போலி களில் ஒருவருடைய விருத்தாந்தம் மிகவும் ருசிகரமாக இருப்பதால் அவருடைய வழக்கு விசாரணையை ஈண்டு கீழே குறிப்பிடுகின்ருேம். இப்போலி தம்மை ஹஜ்ரத் இப்ராஹீம் நபி என்று தாவாச்செய்தவராவார். நபிப் பதவியை தாவாச் செய்வதிலும், முற்காலத்து நபிமார்கள் என்று தாவாச் செய்வதும் பெரிய வேடிக்கையான தாவா வல்லவா? எனவே, இவருடைய வாதம் மிக மிக ருசிகரமானதாகும்.

மாமூனுர் ரஷீது தம்முடைய தர்பாருக்கு இவரை வரவழைத்தார். "காலியுல் குலாத்" தான பிரதம நீதிபதியும் இவ்விசாரணையில் கலந்து கொண்டார். அது பொழுது அப்போலிக்கும் மாமூனுர் ரஷீதுக்கும் பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது.

மாமூனுர் ரஷீது :—நீர் யார்? உமது விஷயம் என்ன?

**போலி** :—நான் இப்ராஹீம் கலீ லுல்லா. இறைவன் என்னை இரசூலாக அனுப்பி இருக்கிருன்; வழிதவறி இருக்கிற உலகத்தை நேரான வழியிற் கொண்டுவருது என் வேலை.

மாமூன் :— இப்ராஹீம் கலீ லுல்லாஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு இறைவன் அற்புதச் செய்கைகளையும், அவர் இறைவனின் தூதர் என்பதற்கான திருஷ்டாந்தங்களையும் அளித்திருந்தான்.

போலி :—அவருடைய அற்புதச் செய்கைகளும் திருஷ்டாந்தங்களும் யாவை?

மாமூன் :— அதிகமான நெருப்பு வளர்க்கப்பட்டு ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை அதில் தள்ளப்பட்டது. ஆனுல், அந்த நெருப்பானது ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குக் குளிர்ந்ததாகவும் சௌக்கியத்தைத் தரத்தக்கதாகவும் ஆகிவிட்டது. ஆதலால், நாங்களும் இப்பொழுது உமக்காக நெருப்பை வளர்த்து உம்மை அதில் தள்ளுகிறேம். உம்மை அந்நெருப்புச்சுட்டெரிக்க வில்லையாயின், நாங்கள் உம்மை இப்ராஹீம் நபி யென்று ஒப்புக்கொள்கிருேம்.

போலி :—இப்ராஹீம் கலீலுல்லாவுக்குஇந்த நரக அற்புதத்தைத் தவிர்த்து வேறு அற்புதம் கொடுக்கப்படவில்லையா? என்னிடம் இதைப் பார்க்கினும் கொஞ்சம் இலகுவான அற்புதச் செய்கைகளைக் காண்பிக்குமாறு வேண்டிக் கொள்ளுங்கள். இதுவோ வெய்யிற்காலம்; இவ்வுலகம் இப்பொழுது வெய்யிலின் கொடுமையால் நரகத்தைப்போலிருக்கிறது. ஆதலால், என் போன்றவர்கள் இந்த உஷ்ணகாலத்தில் நெருப்புக்குள் செல்வது முடியாதகாரியம்.

மாமூன் :—நல்லது! அப்படியானுல், ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாவர்கள் காண்பித்த அற்புதச் செய்கைகளைப் போலொரு அற்புதச் செய்கை நீர் செய்து காண்பியும்.

போலியர் :—மூஸாவின் அற்புதச் செய்கைகள் யாவை?

மாமூன் :—ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கைத்தடியை கீழே போடுவார்களாயின், அதுபாம்பாகிவிடும். தமது கைத்தடியால் அவர் சமுத்திரத்தை அடித்தபோது, சமுத்திரம் இரண்டாகப் பிழந்து பனீஇஸ்ராயீல்கள் வழி நடப்பதற்கான பாதை ஏற்பட்டது. அவர் தமதுகையை சட்டைக் கழுத்துக்குள் போட்டு வெளியில் எடுத்தால், அந்தக் கை இலங்கும்படியானதாக ஆகிவிடும்.

போலியர் :—இந்த அற்புதங்கள் இப்ராஹீம் கலீலுல்லாவின் அற்புதத்தைப் பார்க்கினும் கஷ்டமானவை. இப்பொழுது உலகம் மாறுதலடைந்துவிட்டது. பிர்ஔன், நம்றூத், ஷத்தாத்போன்ற வம்பர்கள் இப்பொழுதில்லை. ஆதலின், இப்பொழுது இலகுவான அற்புதங்கள் தாம் தேவை.

மாமூன் :—நல்லது! அப்படியாயின் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் காண்பித்த அற்புதங்களைப்போல் ஏதேனும் ஒரு அற்புதத்தைக் காண்பியும்.

போலியர்: —எதைப்போல.

மாமூன் :—மரித்தவர்களை உயிர்ப்பித்து விடும்.

போலியர் :—ஆம்! நல்லது. மரித்தவர்களை உயிர்ப்பிக்கிறேன்.

மாமூன் :—ரொம்ப சரி! இப்பொழுதே அந்த அற்புதத்தைக் காண்பியும்.

போலியர் :—என் கையில் கூறிய வாளைக் கொடுங்கள்; இவ்விடத்திலிருக்கிற பிரதம நீதிபதியான காலீ "யஹ்யப்னுஅக்த" முடைய தலையை வாங்கி விடுகிறேன். பின்னர், அவரை உடனே உயிர்ப்பித்துக் காண்பிக்கிறேன்.

காஜிசாகிப் இதைக்கேட்டவுடன் பயந்து நடுங்கிப் போனவராய், "எல்லோருக்கும் முதலில் நான் உன்னை நபியென்று ஒப்புக்கொள்கிறேன், என்னை வெட்டிப் போடாதே." என்று சப்தமிட்டுக் கூறினர்.

இதைக்கேட்டவுடன் மாமூனுர் ரஷீதுக்கு ஏற்பட்ட சிரிப்பை அடக்க முடியவில்லை. உடனே இந்தப் போலிக்கு வெகுமதி கொடுக்கும்படி கட்டளையிட்டு, மேலும் கூறியதாவது :—

மாமூன் :—இப்பொழுது நான் உனக்கு 100 தீனர் தங்க நாணயம் வெகுமதி கொடுக்கிறேன். ஆனல், இனிமேல் நீர் நபியென்று தாவாச் செய்யக் கூடாது.

போலியர் :—இந்தப் பணம் என்னிடமிருக்கும் வரை நான் நபியென்று தாவாச் செய்ய மாட்டேன்.

மாமூன் மறுபடியும் சிரித்துக்கொண்டு, இன்னும் இருநூறு தங்க நாணயங்களையும் கொடுத்து, இந்தப்பணம் செலவானவுடன் தம்மிடம் வந்து பணம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டு அனுப்பிவிட்டார்.

இப்போலியரின் சமயோசிதமான சாதுரியப் பேச்சானது அவருடைய உயிருக்கு ஆபத்து வராமற் காப்பாற்றிற்று. இதுபோலவே, இற்றை நாளில் தோன்றும் போலியர்கள் பொது ஜனங்களிடம் சாதுரியமாகப் பேசித் தங்களது தொப்பையை நிறப்புகின்றனர். ஆதலால், இப்போலியர்களையும், அவர்களது சிஷ்யர்களையும் கண்டு அவர்களின் வாக்குச் சாதுரியத்தால் பொது ஜனங்கள் மருண்டுவிடாதிருப்பார்களாக.

---

# ஸ்திரீகளின் சுதந்திரம்

(எகிப்தில் பிரசுரமாகும் "இஸ்லாமிய உலகம்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் அல்லாமா மஹ்மூது அஹ்மது இர்பானி எழுதியது)

இப்பொழுது உலகத்தின் நிலைமை கொந்தளிக்கும் சமுத்திரத்தைப் போலிருக்கிறது. கொந்தளிக்கும் கடலில் அலைக்குப் பின் அலையும், ஒரு அலைகிளம்பி அமருவதற்குள் அதைத்தொடர்ந்து இன்னொரு அலையும் கிளம்புவதேபோல், உலகம் என்ற சமுத்திரத்தில் பல அலைகள் ஒன்றுக்குப் பின் ஒன்ருகத் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இப்பொழுது உலகம் தன்னுடைய பழைய ஸ்திதியைவிட்டு முற்றிலும் மாறிவிட்டது. குடும்ப வாழ்க்கை இன்பமளிப்பதற்கு பதிலாகத் துன்பமளிப்பதாக ஆகிவிட்டது. நாகரீகம், முன்னேற்றம், சீர்திருத்தம் என்ற பெயரால் உலகத்திலுள்ள மதங்களை அழிக்க மக்கள் முயற்சிசெய்கிருர்கள். ஒழுக்கத்தின் தத்துவத்தைக் கிரியாம்சையில் இல்லாதொழிக்க முயலுகின்றனர். இந்நிலவுலகில் குடும்பவாழ்க்கை பெருந்தொல்லையாக ஏற்பட்டு வருகிறது. விவாகம் அல்லது சதிபதிகளாக இருந்து கூடி வாழ்வதானது மக்களுக்குத் தோன்றியுள்ள ஒருவகைச் சாபபலன் என்று கருதப்படுகிறது. உலகத்திலேற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை மாற்றுவதற்குப் பிரஜா உற்பத்தியைத் தடுப்பதுதான் சிறந்த முறையென்று இப்பொழுதுள்ள சிலர் கூற முற்பட்டு விட்டனர்.

இது போன்ற எண்ணமுடியாத அலைகளும், சுழிகளும், குமிழ்களும் இக்குவலயத்திற் ருேன்றிக் கொண்டே இருக்கின்றன. இவ்வித அலைகளில் ஒரு அலை மிகவும் பலமாகக் கிளம்பிற்று. அதற்கு "ஸ்திரீகள் விடுதலை" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகத்திலுள்ள அமைப்பைத் தலைகீழாகப் புரட்டுவதும், சுதந்திரம், விடுதலை என்ற பெயர்களால் ஸ்திரீகளை அவர்களின் உன்னத நிலைமையிலிருந்து கீழே இறக்கி, பாழடைந்த கிணற்றுக்குள் தள்ளிவிடுவதும் தான் நோக்கமாக இருந்து வருகிறது. ஸ்திரீகள் இந்தப் பாழும் கிணற்றினுள் விழுந்து விடுவாராயின், பின்னர் அவர்களை அதிலிருந்து வெளியேற்றி மறுபடியும் உச்சஸ்தானத்துக்குக் கொண்டுவருவது மகாச் சிரமமாகிவிடும்.

இவ்வியக்கத்தை நான் ஆழ்ந்து கவனித்து வந்திருக்கிறேனுகையால், இதில் யானுணர்ந்த விஷயத்தைப் பச்சையாகக் கூறிவிட விரும்புகிறேன். இவ்வியக்கத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயர், கேட்பதற்கு இன்பமாகவும், பார்வைக்கு அழகாகவும் இருக்கிறதாயினும், ஸ்திரீகள் ஆடவர்களின் மிருக உணர்ச்சிக்கு இரையாகி, இருபாலரும் மனித சுவாபத்தை விட்டு வெளிப்பட்டு தற்காலிகமாக உண்டாகிற சக்தியை இன்புறவேண்டுமென்பதே இவ்வியக்கத்தின் நோக்கமாகஇருக்கிறது என்பதுதெரிய வருகிறது. இவ்வியக்கம் பெண் கல்வி என்ற பெயரால் சில சமயத்தில் ஆதரிக்கப்படுகிறது. சில சமயத்தில் பர்தாவைப்பற்றிப் பிரசங்கம் செய்யப்படுகிறது. பர்தாவினுல் தான் சுகாதாரம் கெட்டுப்போவதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. சில சமயத்தில் கற்பத் தடையைப்பற்றி உபன்யாசம் செய்கிருர்கள். ஸ்திரீகளின் அழகையும், சௌந்தரியத்தையும் காப்பாற்றுவதற்கு ஸ்திரீகள் பிரசவியாதிருப்பதுதான் சிறந்த முறை என்று கூறுகிருர்கள். ஆடவர்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் ஸ்திரீகள் சரிபங்கெடுத்துக்கொண்டு அவர்களுடன் சமத்துவமாக நிற்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். சில சமயத்தில் விவாகம் செய்வதே வெறுக்கத்தக்க காரியம் என்று கருதுகிருர்கள். ஸ்திரீகளின் மீது அதிகாரம் செலுத்த ஆடவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று சிலர் வினவுகின்றனர். ஸ்திரீ புருஷாளிருவரும் வெவ்வேறு விதமான உடையணிவதை எடுத்துப் போடவேண்டுமென்று சிலர் முயற்சி செய்கின்றனர். இவ்விதமான பிரசாரங்களும், பிரசங்கங்களும், இயக்கங்களும், விவாதங்களும் ஸ்திரீகளுக்குச் சுயேச்சையளித்து, அந்நிய ஆடவர்களுடன் அவர்கள்பகிரங்கமாகக்கூடி கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இன்னும் எவ்வித வித்தியாசமுமின்றி, மதக்கட்டுப்பாடெதுவுமின்றி எல்லோரும் ஒன்றுகூடி வாழவேண்டுமென்பது தான். இந்த வீணுன இயக்கம் ஐரோப்பாவிற்ருன் முதலாவதாகத் தோன்றிற்று. ஆனுல்,இப்பொழுது அதுகொஞ்சங் கொஞ்சமாக கீழ்நாடுகளிலும் பரவத் தலைப்பட்டு விட்டது. இவ்விஷயங்களை ஆதரிக்கும் ஆடவர்கள் எல்லா தேசங்களிலும் காணப்படுகிருர்கள். இவ்விதமான ஜனங்களை குறைந்த புத்தியுள்ளவர்கள் என்று நான் கூறவேண்டியதாக இருக்கிறது. என் கண்களில் இவர்கள் கண்ணியமாகக் காணப்படவில்லை. இந்தியாவில் ஸ்திரீகளுக்கு அதிக மரியாதை இருந்தது என்பதிற் சந்தேகமில்லை. ஆனுல், இம்மாதிரியான பிற்போக்கான ஸ்திரீகளை, அவர்கள் இழந்துவிட்ட அந்தஸ்திலிருந்து கரையேற்ற முயற்சி செய்யப்படவில்லை; அவர்களை இன்னும் ஏமாற்றி ஒழிக்க விரும்புகிருர்கள் என்றே நம்புகிறேன். ஆடவர்களின் நோக்கம் நன்மையானதாக இருக்குமாயின் யானுங்கூட என்னுடைய அற்ப முயற்சியை அவர்களுக்குச் சாதகமாக உபயோகித்திருப்பேன். ஸ்திரீ புருஷர் இருவரும் காம இச்சை என்ற பூதத்துக்குப் பலியாகுவதைத் தவிர வேறென்றுமில்லை.

இவ்வியக்கத்தில், இந்த நோக்கமில்லையாயின் தேசிய வேலைகளுக்குச் சந்தா வசூல் செய்வதற்காக உயர் குடும்பத்து ஸ்திரீகளை வெளியிற் கொண்டுவருவதற்குக் காரணமென்ன? அதிலும் சந்தாவசூல் செய்வதற்காகக் கையாளப்படும் யுக்திகள் இன்னும் கேவலமான முறையினவாக இருக்கின்றன. இந்த ஸ்திரீகள் கடைத்தெருவில் நின்றுகொண்டு தங்களது முத்தங்களை ஆடவர்களுக்கு விற்பனை செய்கிருர்கள். கூத்துக் கூட்டங்களுக்குச் சென்று அந்நிய ஆடவர்களுடன்சேர்ந்து கூத்தாடுவதற்குச் சம்மதிக்கிருர்கள். மானங்கெட்ட முறையான கூத்துக்களையும் ஆடுகின்றனர். இவை யாவும் "ஸ்திரீ சுதந்திரம்" என்ற விரிந்த பொருளுக்குள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தற்போது ஸ்திரீகள் ஆடவர்களுக்குச் சமமாகக்கூட நில்லாமல் இன்னும் வெகு தூரத்துக்குமுன் சென்றுவிட்டனர். நாகரீகமடைந்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் வீடுகளுக்குச் சென்றுல் ஆங்கு நிர்வாண ஸ்திரீகளின் படங்கள்தொங்கவிடப்பட்டிருப்பதையும், நிர்வாண சிலைகள் வைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். இதுதான் இப்பொழுது கௌரவமாக மதிக்கப்படுகிறது. கடைத்தெருக்களிலும், பப்ளிக் ரஸ்தாக்களிலும் ஸ்திரீகளின் புகைப்படங்கள், நிர்வாணப்படங்கள் முதலியவை விற்பனை செய்யப்படுகின்றன. இவைகளைக் கண்டித்துப் பேசினுல் வந்துவிடும் மோசம்.

இந்த குருட்டுச்சுதந்திர இயக்கம் என்ற புயல் ஐரோப்பாவிலிருந்து கிளம்பி உலகத்திலுள்ள வெட்கம், மானம், நாணம் ஆகியவை

களை அடித்துக்கொண்டு,யெல்லாம்இப்பொழுது கீழ்நாட்டை நோக்கிவந்து கொண்டிருக்கிறது. இந்தியா இப்பிரவாகத்தில் ஓரளவு தப்பித்துக் கொண்டிருந்தது. ஆனால், அங்கும் இப்புயல் தலைகாட்டி இருப்பதாகப் பத்திரிகைச் செய்தி களிலிருந்து தெரியவருகிறது. நம்முடைய ஆசாரம், நம்முடைய பழக்கம், நம்முடைய வழக்கம், நம்முடைய மதம், நம்முடைய மார்க் கம் ஆகியவைகளுக்கு முற்றிலும் மாறுன செய்கைகள் இந்தியாவில் இப்பொழுது ஆரம்பமாகி விட்டதாகத்தெரிகிறது. இந்தப் புயல் ஏனைய மதத்தவரிடம்மாத்திரமின்றி முஸ்லிம் குடும்பத்தாரிடமும் பரவி இருப்ப தாக நான் அறிகிறேன். யான், முஸ் லிம் ஸ்திரீகள் மட்டுமில்லாமல் ஸ்திரீ ஜாதி யினர் அனைவரின் நன்மையைக் கோருப வன் ; அவர்களுக்குக் கல்விபோதிக்கவேண்டு மென்பதை நான் எதிர்க்கவில்லை ; சுகாதா ரத்தைக் காக்கவேண்டு மென்பதை நான் மறுக்கவில்லை; தேசிய சமூகவேலைகளில் தடை களை ஏற்படுத்தவிரும்பவில்லை. ஆனால், சுகா தாரம், கல்வி, சுதந்திரம், என்ற பெயர்களைக் கூறிக்கொண்டு இப்பொழுது கையாளப்படும் முறைகளைத்தான் நான் எதிர்க்கிறேன். இப் பொழுது கையாளப்படும் முறைகள் உறுதி யாகக் கண்டிக்கப் படத்தக்கன வாயிருக்கின் றன. இந்த முறைகள் நமது கட்டுப்பாட்டைச் சீர்குலையச் செய்வனவாயிருக்கின்றன. இப் புயலைத் தடுப்பதற்காக நாம் அதி சீக்கிரத்தில் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். நாம் இதைக் கவனியாதிருந்து விடுவோமாயின் இஸ்லாமிய வாழ்க்கை முறையில் பெரும் பூகம்பம் உண் டாகி விடும். பின்னர், அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு எவ்வித வழியுமிருக்காது.

ஸ்திரீகள் இயற்கையிலேயே பராமுகமா யிருப்பார்களாதலால், இவ்விதமான ஏமாற்றங்க ளில் சுலபமாகச் சிக்கிக்கொள்கின்றனர். ஆத லின், ஆடவர்கள் அவர்களை ஏமாற்றிச் சிக்க வைக்கும் தொழிலைவிட்டு விட்டு, அவர்களது கவனத்தைச் சீர்திருத்தம், கல்வி ஆகியவை களிற் திருப்பவேண்டும். ஆனால் இறைவன் ஆடவர்களை, ஸ்திரீகளுக்குத் தலைவர்களாக ஆக்கி இருக்கிறான் என்பதற்கு, ஆடவர்கள் ஸ்திரீகளை அடித்து உதைத்துத் தொந்தரை செய்ய வேண்டுமென்பது பொருளல்ல. ஸ்திரீ களை ஆடவர்கள் பாதுகாக்கவேண்டும் என்ப தும், அவர்களுக்குத் தேவைப்படும் வஸ்துக் களுக்கு ஆடவர்கள் பொறுப் பேற்றுக் கொள்ளவேண்டும் என்பதும், சரியான கல்வி போதிக்கவேண்டும் என்பதும்,சரியான பயிற்சி அளிக்கவேண்டும் என்பதும்தான், ஆடவர்கள் ஸ்திரீகளுக்குத் தலைவர்கள் என்பதன் கருத்து. ஸ்திரீகளின் இயற்கையிலேயே சில குறைக ளுண்டு. அவைகளின் காரணமாக அவர் கள் ஆடவர்களைப்போல் பரந்த நோக்க முள்ளவர்களாக இருக்கமுடியாது. ஆடவர் களின் அவயவங்களில் இருக்கிற வலிமை ஸ்திரீ களின் அவயவங்களில் இல்லை. ஸ்திரீகளுக்கு தீவிர உணர்ச்சியும், சீக்கிரத்தில் ஏமாற்றமடை யும் தன்மையுமுண்டு. இந்தக் குறைகளைவிட்டு ஸ்திரீகள் தப்பித்துக்கொள்வதற்காக அல்லா ஹுதஆலா ஆடவர்களை அன்னோர்களுக்குப் பாதுகாப்புச் செய்பவர்களாக ஆக்கி இருக் கிறான். ஆகவே, எவர் தம்முடைய வீட்டைப் பாதுகாக்கத்தக்க காரியங்களைக் கவனிக்கவில் லையோ அவர்களை தலைவர்கள் என்று சொல் லப்படமாட்டாது.

## முஸ்லிம்களில் மூன்று பிரிவினர்

முற்றிலும் கல்வியில்லாத ஜனங்கள்—மார்க்க விஷயங்களைப்பற்றி ஒன்றுந்தெரிந்து கொள்ளா தவர்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் ஒரு பிரி வார். உலக விஷயங்களில் அதிகம்படித்து, மத விஷயங்களைக் கற்றுக்கொள்ளாதவர்கள் இரண்டாவது பிரிவார். மார்க்க விஷயங்களில் கொஞ்சம் அல்லது அதிகம் தெரிந்தவர்கள் மூன்றாவது பிரிவார். இம்மூன்று பிரிவினரில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் உலக சம்பந்தமான விஷயங்களில் நிபுணர்களாக இருக்கின்றனர். ஆயினும், மார்க்க விஷயங் கள் ஒன்றுந்தெரியாதவர்களாக இருக்கிறார்கள். என்றாலும், அவர்கள் தங்களை எல்லாரிலும் சிறந்தவர்களென்று நினைத்துக்கொண்டிருக்கின் றனர். ஹிந்து சமூகத்தில் பிராமணர்கள் தங் களை உயர்ந்தவர்களென்றும் மற்ற ஜாதியார் தாழ்ந்தவர்களென்றும் கருதிக்கொண்டிருப்பது போல், இவர்கள் தங்களை "முஸ்லிம்களிலுதித்த பிராமணர்கள்" என்று மதித்துக்கொண்டிருக் கிறார்கள்.

இவர்கள் ஆங்கிலக் கல்வியிற்றேர்ந்தவர்களாக இருப்பதால், தாங்கள் கூறும் விஷயம் மத சம்பந்தமான விஷயங்களாக இருந்தபோதிலும் சரியே அதனை அப்படியே ஒப்புக்கொண்டு நடக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். அவர்

கள் மதசம்பந்தமான விஷயங்களில் பூரண மாக ஒன்றுந்தெரியாதவர்களாக இருப்ப தால், தங்கள் மனத்தில் நினைப்பதைத்தான் மதம் என்று நினைத்துக்கொள்கின்றனர்; மதம் என்பது ஒரு சமூகத்திட்டம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மதவிஷயங் களை உணர்ந்தவர்களாக இல்லாதது ஒருபுற மிருக்க, மதச்சட்டப்படி நடப்பது தங்களுக் குக் கேவலம் என்றும் மதிக்கிறார்கள். ஆதலால், அவர்கள் மத விஷயங்களையே மாற்றி புதிய தொரு ஷரீஅத்தை ஏற்படுத்த முயன்று வரு கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் தான் மேற்கண்ட குருட்டு இயக்கத்துக்கு முதலில் இரையாகுகின்றனர். இவர்களைப் பார்த்து நடுத் தர வகுப்பாரும் கீழ்த்தர வகுப்பாரும் இதைப் பின்பற்ற முற்பட்டு விடுகின்றனர்.

இந்தியாவில் உண்மை முஸ்லிம்களும், இஸ் லாத்துக்குத் தங்களை அர்ப்பணம் செய்த ஒரு பெருங்கூட்டமும் இருப்பதை நான் பார்க் கிறேன். நமது குடும்பங்களில் இந்த புயல் வந்து தாக்குவதற்கு முன் இதற்குத்தக்க பரிகாரமுறையைச் செய்யவேண்டும் என நான் உறுதி கூறுகின்றேன். ஆனால், நாம் தக்க காலத்தில் எச்சரிக்கையாக இல்லாமலிருந் தால் இதனால் பெரும்பாதக மேற்பட்டுவிடும். அப்பால் பல நூற்றாண்டுகள் வரை இவ்வியக் கத்துடன் நாம் போர்செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஸ்திரீகளின் இவ்வியக்கத்தினால் கஷ்டமடை யும் ஐரோப்பியர்களின் அழுகுரல்இப்பொழுது நம் செவிக்கெட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்த வியாதிக்குரிய தக்க சிகிச்சையையும், ஔஷதத்தையும் கண்டுபிடிப்பது அவ் ஐரோப் பியரின் சக்தியிலில்லை. ஆதலால் நாம் ஸ்திரீ களுக்கான சரியான ஒரு திட்டத்தை முற் கூட்டியே கண்டுபிடித்து, அத்திட்டத்தின் படி அவர்களை நடத்திச்செல்லவேண்டியது அவசியமாகும். அவர்கள் குடும்ப வாழ்க்கை யின் மேன்மையை உணரவேண்டும். குடும்பத் திலுள்ள பல அனுச்சாரங்களைச் சீர்திருத்த வேண்டும். இஸ்லாத்தின் இறந்தகாலச் சிறப்பு களை மறுபடியும் கொண்டுவரத்தக்க புதல்வர் களைப் பரிபாலிக்கும் முறையை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். புத்திரர்களுக்கு மத உணர்ச்சிகளை யுண்டாக்கவேண்டும். சிறந்த தாய் மார்களாக அவர்களை ஆக்கத்தக்க நூல் களை நாம் எழுதவேண்டும். "உங்கள் மாதாக் களின் பாதங்களுக்குக் கீழில் சுவர்க்க மிருக்கி றது" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர் கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீதுக்குத்தக்க மாதாக்களாக அவர்கள் தலையெடுக்க வேண்டும். மத ஊழியர்களும், சமூகஊழியர்களும், தலைவர் களும் இம்முக்கிய விஷயத்தில் கவனஞ்செலுத் தாதிருந்து விடுவார்களாயின் இனிப்பிறக்கும் சந்ததியினர் "முல்ஹிது"களாகத் தானிருப் பார்கள். இந்த அபாயம், மதசம்பந்தமான விஷயங்களில் மாத்திரம்தான் என்று நினைத் துக்கொள்ள வேண்டாம். பொருளாதாரம், நாகரீகம் ஆகியவைகளுக்கும் கூட இதனால் பெருத்த அபாயம் உண்டாகக்கூடும். ஆகவே, இதற்கான தக்க பரிகாரம் செய்ய நாம் இன்று முதல் பிரயத்தனம்செய்ய ஆரம்பித்துவிட வேண்டும்.

---

# முல்லாவும் காதியானியும்

(சென்ற டிஸம்பர் மாதத் தொடர்)

அபந்தி அவில்வது.

காதியானி:—ஹஸ்ராத்! சில்லரை விஷயங் களில் நீண்ட நேரங்கழிந்து விட்டனவாதலால் எனது மீதக் கனவையும் தங்கள் திருச்சமுகம் கூற தயவு புரிந்து உத்திரவு அளிக்கவேண்டு கின்றேன்.

முல்லாஜி:—நல்லது, முன் விட்டதிலிருந்து தொடராகவே உமது மீதிக் கனவையும் கூறும்.

காவன்னு:—கண்ணிய மிக்க ஹஜ்ராத்! கேட் பீர்களாக!! யான் மத்திய உலகான கப்ரில் சொல்லொணுத் துயரத்தையும், வேதனைகளை யும் பெற்று திடுக்கங்கண்டிருக்குங்கால், எழுப் பப்பட்டு, நியாயத் தீர்ப்பளிக்கும் "மஹ்ஷர்" மைதானத்திற்கு, மலக்குகளால் இழுத்துச் செல்லப்பட்டேன். ஜெயிலிலிருந்து கைதிகளை

இழுத்துக்கொண்டு வரப்படுவது போல் மலக்குகள் என்னைப்போலவே, ஒவ்வொருதிக்குகளிலிருந்தும் ஜனங்களை ஏராளமாக இழுத்துக்கொண்டு வந்து அந்த மஹ்ஷரில் பத்தி, பத்தியாக நிறுத்திவைத்துக்கொண்டே இருந்தனர்.

இவ்வாறு இழுத்துக்கொண்டு வரப்படும் ஜனங்கள் அனைவரும் அழுது, புலம்பிக்கொண்டு, பெரிய திடுக்கமடைந்தவர்களாகவே காணப்பட்டனர். யானும், அவ்வித நிலைமையுடையவனாகவேதான் இருந்தேன். அம்மைதானத்தில் ஒளியின் மேனியரான அமரர்கள் அங்குமிங்கும் ஒடி ஜனங்களை இழுத்து வந்து சேமித்துவந்தனர். சிலரை அமரர்கள் அடித்து, உருட்டிப்புரட்டித் தள்ளிக்கொண்டும், தங்கள் கையிலிருக்கும் சாட்டைகளால் சாத்திக்கொண்டும், இழுத்துவந்து சேர்த்தனர். இதில் பலர்கள் பலதரப்பட்ட ஆபாச உருவங்களையுடையவராயும், அவலட்சணத்தோற்றமுடையவர்களாகவும், இன்னுஞ்சிலர் விலங்குகளின் உருவங்கள் போல் உருக்கொண்டு, ஓலமிட்டுப் புலம்பியவர்களாய், அடித்து இழுத்துக்கொண்டு செல்லும் மஹ்ஷரின் மலக்குகளிடம் மன்ருடிவேண்டி நிற்போராய்,பெரும் மா— வேதனையில்அகப்பட்டு சுழன்றுவரும்சமையம், பல இன்னல், இடுக்கண், வேதனைகள் எல்லாம் மஹ்ஷரின் ஜனங்கள்மீது, ஏக காலத்தில் பிரசன்னமாகி நிற்பதுபோதாதுபோல்,கொடிய அக்கினிச் சுவாலையின் கிரணங்களின் வேகத்தைவிட இன்னும் அதிக வேகமாகச் சுட்டுக்கரிக்கும் அனந்தகோடி சக்திகொடுக்கப்பட்டு, சூரியனனது அங்கு நிற்கும் ஜனங்களின் தலைக்கு வெகு சமீபமாக வந்து, மகா உக்கிரத்தோடுகூடிய தனது கிரணங்களை வீசி தன்னை, பாபிகளை சிட்சிப்பான்வேண்டி, வேதனைக்கொடுக்கும் சிறிய நரகமாகப் படைக்கப்பட்டதுபோல், அம்மஹ்ஷர் மைதான ஜனங்களை தலையின் வழியாகத் தாக்கிக்கொண்டிருந்தது.

பூமியோவென செப்புமயமாகி, கொல்லன் உலையில் காய்ச்சப்பட்டதுபோல் சூரிய வெப்பத்தால் பழுக்கக் காய்ச்சப்பட்டு தக, தகவென பழுத்து, நெருப்பின் உருவமாகி, தன்னை வேதனைக்குரிய நரகத்தின் நமூனாவாக ஸ்பெஷலாய் சிருஷ்டிக்கப்பட்டது போல், அச்செப்பு பூமியானது தனது முழுவலுவைக் கொண்டும் ஜனங்களின் பாதங்களின் மூலமாய் வேதனையைக் கொடுத்துக்கொண்டு மிருந்தது.

இதுவுமல்லாமல், சூரியனின் உக்கிரத்தாக்குதலாலும், பூமியின் கொதிப்பினுலும் ஜனங்களின் மேனிகளானது, அல்லல்பட்டு வாடி வதங்கி, கசக்கி சாறெடுக்கப்பட்டது போன்று, அம்மேனிகளிலிருந்து வெளியாகும் வியர்வை நீரானது, வென்னீர் வெள்ளம் ஒடுவது போன்று பெரியகடலைப்போன்று ஓடிக்கொண்டிருக்கும் அவ்வியர்வை நீரால் வேக வைக்கப் பட்டதுபோல், ஜனங்கள் அனைவரும் அதில் நீந்தி, தத்தளித்து அவஸ்தை பட்டுக்கொண்டு அவர்கள் படும் துன்பமானது, விஷங்கொண்ட மீனின் துன்பத்தைவிட பன்மடங்கு அதிகத் துன்பமடைந்து, அக்கொதிப்பான வென்னீர்வெள்ளத்தில் சிக்குண்டு சுழண்டு கொண்டு, அவர்கள் அனுபவிக்கும் வேதனையானது முந்திய இரண்டின் வேதனையைவிட அதிக வேதனையைக் கொடுக்கக் கூடியதாக இருந்ததைப் பார்த்தபோது, இவ்வென்னீர் கடலையும் தற்காலிகமாக வேதனை கொடுக்கும் ஓடையில் ஒன்ருகவே படைக்கப்பட் டிருக்கின்றதென உன்னிக்கொண்டேன்.

இவ்வாறு தெய்வ தண்டனைகளனைத்தும் ஒன்று சேர்ந்து, வேதனையே உருவாக நிற்கும் அச்சமயத்தில், மஹ்ஷரின் தோற்றமானது உலகில் பூகம்பங்களோ அல்லது ஜலப்பிரளயம், மகாபிரளயங்களோ ஏற்பட்ட நாடுகளில் உண்டாகும் கோரக்காட்சியைவிட அவ்வியத்தமடங்கு அதிகமாக திடுக்கமுடைய தோற்றத்தையும், பயங்கரமாய் இருதயங்கள் கலங்கி நிற்கும் நிலைமையையும் பெரிய அமளியாகக் கண்டேன்.

முல்லாஜீ:—ஸுப்ஹானல்லாஹ்! (வென, வல்லோனைத் துதித்துவிட்டு) அதன் பின் என்ன நடந்தது.

காதி:—ஹஜ்ராத்! அந்த மஹ்ஷரில் எல்லாரையும்விட அதிகமாக யான் பலவிதமான துன்பங்களை ஏககாலத்தில் அனுபவிக்க நேர்ந்திருந்தும், இதர மனிதர்கள் படுந்துன்பத்தைப் பார்த்து திடுக்கமுற்று எமது மனம் அடைந்த வேதனையானது மகா வேதனையாகவே யிருந்தது.

முல்லாஜீ:—பின்னர்,

காதி:—நான் அவ்வேதனை உலகில் பல துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவித்தவனுய், அச்சுடுநீர் வியர்வை வெள்ளத்தில் மிதந்து

அதில் அல்லல்பட்டு ஓர்மேட்டின் பக்கல் கரையோரமாக ஒதுக்கப்பட்டேன். அங்கு ஓர் பெரிய கூட்டத்தினர் திரளாக கூடி நிற்பதையும், அவர்களின் மத்தியில் ஜோதிப் பிரகாசம் போன்று ஜொலிக்கும் வதனத்தையுடைய உத்தம மகான் ஒருவர் நின்றுகொண்டிருப்பதையும் கண்டேன். அம்மகானைச் சூழ்ந்து நிற்போரனைவரும் அழகான பிரகாச வதனத்தை யுடையவராயும், அடர்ந்த தாடியோடு, நீண்ட ஜுப்பாக்களையும் அணிந்தவர்களாயும் சாதாரண அமைதியான தோற்றத்தோடும், "தாங்கள் ஜெயம் பெறும் கூட்டத்தினர்" போன்ற ஓர்வித உற்சாகக் குறியானது அவர்கள் முகங்களில் தோன்றி நிற்பதையும் கண்டேன்.

அந் நற்பாக்கியக் கூட்டத்தினரிலிருந்து அநேகர்கள் தங்கள் கரங்களில் "ஹிஸ்புல்லாக்கள்" என, அரபி லிபிகளால் எழுதப்பட்ட போஸ்டர் ஒவ்வொன்றைத் தாங்கிக்கொண்டு, அவ்வெந்நீர் ஆற்றங்கரை ஓரத்தில் வந்து நின்றுகொண்டு, "ஹிஸ்புல்லாக்கள் எல்லாரும் கரையில் வந்து இந்த மேட்டிற்கு வாருங்கள்; இந்த மேட்டிலே நமது இறுதி நபியான நபிகள் நாயகமவர்கள் வீற்றிருக்கின்றார்கள் என, பெரிய கூச்சல்களிட்டுக் கூவி அழைத்துக்கொண்டிருந்தனர்.

முல்லாஜீ :—பின்னர்,

காதி:—இடுப்புவரை நீரில்வந்து இனிகரையை அடைந்துவிடலாமென, எமக்கேற்பட்டிருந்த மனத்தேர்தலானது 'ஹிஸ்புல்லா' என்றசப்தத்தைக் கேட்டமாத்திரத்தில் எமதுள்ளத்தைவிட்டும் அடியோடுபறந்து ஓடிவிட்டது; எனது உடம்பில் நடுக்க மேற்பட்டுவிட்டது. இவ்வித நிலைமையில், ஷை ஹிஸ்புல்லாக்களில் ஒருவர் எமது சமீபமாய் வந்துவிட்டார். அவர் எம்மை அறிந்தவர் போலிருந்ததால், ஒரு வேளை எம்மை பழைய காதியானியெனத் தெரிந்து, கரையேற ஒட்டாமல் நடு ஆற்றில் தள்ளிவிடவும்போதும் என, எமது உள்ளம் நினைத்ததால் நான் முகத்தை அவருக்குக் காட்டாது, திருப்பிக்கொண்டு ஆற்றின்புறம் திரும்பிக்கொண்டேன்.

அவர் எம்மைக் கண்டவுடன் நான் ஹிஸ்புல்லாவாக இருக்கலாமென நினைத்து, வேகமாகமாக எனக்கு மிக்க சமீபமாகவந்து எமது தலையைத் திருப்பிப் பார்த்து,

ஹிஸ்புல்லா:—ஏ! காதியானிப் பயலே!! நீ இங்குவந்துமாட்டினயா? வென, வெகுகோபத்தோடு கூறிக்கொண்டு தமது இரண்டு கால்களாலும், எமது முதுகில் ஒரேஉதையாக் உதைத்து நடு ஆற்றில்போய் விழும்படி தள்ளிவிட்டார் ஹஜ்ரேத்.

முல்லாஜீ :—சிரித்துக்கொண்டு அந்தோ பரிதாபம், அப்பால்.

காதி:—மீண்டும் நான் ஷை வெந்நீர் ஆற்று ஜலத்தில் மிதந்தே அவஸ்தைப்பட ஹிஸ்புல்லாஹ் செய்து வைத்துவிட்டார். இதற்கு கொஞ்ச நேரத்திற்கெல்லாம்நான் மிதக்கும் இடத்தை நோக்கி, என்போன்று மிதந்து தவிக்கும் ஒருவர் அவஸ்தைப்பட்டவராய் என்சமீபம் வருவதைக் கண்டேன். அவர் சமீபமாக வந்தபோது பார்த்ததில், அவர் எனக்கு முன் அறிமுகமுள்ள முகமாகத் தெரிந்தது. இறுதியாய் அவர் என் ஆப்த நண்பரும், "தாடிசம்கார வியாசகக் கர்த்தா"வுமான ஆசாமியாகயிருந்தார்.

அவர் எம்மைக்கண்ட உடன் இன்னாரெனத் தெரிந்துகொண்டு, கோவென அலறிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதார். அவர் அவ்வெந்நீர் ஆற்றில் அவஸ்தைப்படும்போது, தான் முல்லாக்களைத்திட்டிப் பரிகசித்து, எழுதிய வியாசங்களானது, தனது மனத்தில் உருவாக நிற்பதாயும், தமது தப்பான விசுவாசத்தின் பாபக்கிருத்தியத்தால் இன்று தான் இக்கதியை அடைந்து, வியர்வை சுடுநீரால் வெந்து துன்பப்பட நேர்ந்ததாகவும் கூறிக்கொண்டு, ரத்தக்கண்ணீர் வடித்தார்.

நான் அவரை சமீபத்தில் நீந்திவரச்சொல்லி, அதோ சமீபமாகவே கரை இருக்கின்றது; ஆனால் அங்கு ஓர் "ஹிஸ்புல்லா" நின்றுகொண்டிருக்கின்றார்; அவர் ஒரு கையில் கொடியும், மறுகையில் தடியும் வைத்திருக்கின்றார்; நான் கரையில் போனபோது எம்மைக் காவன்ன என அவர் தெரிந்துகொண்டு, ஒரு உதை உதைத்து எம்மை இதே ஆற்றில் தள்ளிவிட்டார். ஆனால் நீர் பயப்படாது "ஹிஸ்புல்லா, ஹிஸ்புல்லா" எனச் சொல்லிக்கொண்டே போனால், உம்மை அவர் கரையில் தூக்கிவிடுவார், எனக் கூறினேன். அதன் பிரகாரமே ஷை வியாசகர்த்தாவும், நீந்திச்சென்று கரையை அடைந்தார். உடனே அங்கு நின்ற ஹிஸ்புல்லாவானவர் இவரைத்

தூக்கிவிட்டு, இவரின் முகத்தை உற்றுக்குறிப்பாகக் கொஞ்சநேரம் வரை பார்த்த பின், 'ஏ! பயலே நீதானு "தாடி சம்காரமுல்லா" வியாசமெழுதியோன்' எனக்கூறி, பல்லை நெருநெரு எனக்கடித்துக்கொண்டு, அடங்காச் சினங்கொண்டு, இருகண்களும் சிவக்க, வேங்கையைப்போல் சீறிக்கொண்டு தமது வலக்கரத்திலிருந்த தடியால் ஷெயார் மண்டையில் ஓர் பெரிய அடியொன்று போட்டார். அடிப்பட்ட உடன் அவர் மூர்ச்சித்து கீழே விழுந்து விட்டார். மீண்டும் ஹிஸ்புல்லாவானவர் "ஏ! கள்ளப் பயலே!! கா............... ப...............யில், தாடிவைக்கும் முல்லாக்களான எங்களை எவ்வளவு கேவலமாக எழுதினுய்" எனக்கூறிக்கொண்டு, முதுகில் மீண்டு மோரடியும் போட்டுவிட்டு அவரையும் உதைத்து நடு ஆற்றில் தள்ளிவிட்டார்.

முல்லாஜீ:—(சிரித்து, "மாஷா அல்லாஹ்" எனக் கூறிக்கொண்டு) வே! காவன்னு!! இறுதி தீர்ப்புநாள் மெய்; அதில் கேள்வி கணக்கு கேட்கப்பட்டு மனிதர்கள் செய்யும் அமல்களுக்குத் தக்க தண்டனை அடைவார்களென, நாங்கள் "வஅள்"கள் சொன்னல் அதை "முல்லாக்களின் கட்டுக் கதைகள்" என நீங்கள் கூறினீர்களே, ஷெ கியாமத்து நாள் என்ற மகத்தான நியாயத் தீர்ப்பு நாளை நாம் ஒவ்வொருவரும் மெய்யாகவே ஸ்தூலத்துடன் சந்திக்க நேரிடுமென்பதை நீங்கள் கண்ட காட்சியைக்கொண்டு இப்போதாவது நன்நம்பிக்கை கொள்கின்றீர்களா?

கா:—முல்லாக்கள் போதிக்கும், மறுமை நாட்களின் "நிகழ்ச்சிக் குறிப்புகளை" நாங்கள் பரிகசித்து வந்ததற்காகவே நாயன் படிப்பிணையாக எமக்கு இந்தக் கனவை, முன் மாதிரியாக காண்பித்தான் என, நான் நினைக்கிறேன் ஹஜ்ரத்!

முல்லாஜீ:—மற்றென்று ஞாபகத்தில் வந்திருக்கிறது வே! அதாவது, மூன்றும் உலகில் மக்கள்கள் அவஸ்தைப்படுவதோ அமைதி பெற்றிருப்பதோ ஸ்தூலத்துடன் அன்று; அவ்வுலகில் நிகழ்வதெல்லாம் ஆன்மாக்களுக்கே சம்பந்தமானதாக யிருக்கின்றது; ஸ்தூலமற்ற ஆன்மாக்களே அங்கு சுக, துக்கங்கள் அனுபவிக்கின்றது என, ஓர் நவநாகரீகச் சாரார் கூறுகின்றார்களே அவர்கள் கூற்றிற்கு அங்கு ஏதாவது ஆதாரங்களைக் கண்டீரோ? அவர்கள் கூற்றுமெய்யாகுமா?

காதியானி:—ஹஜ்ரத்! ஷெ நாகரீக மக்கள் கூறுவது அத்துணையும் பொய்; எல்லாம் புழுகு; அவை உலகோரை ஏய்ப்பதாகும். ஷெ குழாத்தினர் தமக்கு மிஞ்சியவர் உலகில் இருக்க முடியாதென இறுமாப்புக்கொண்டவருமாவர். எனவே, நான் மஃஷரில் கண்டபோது ஆன்மா வோடுங்கூடிய ஸ்தூலத்தோடுதான் அங்கு நடவடிக்கைகள் ஆகின்றது. இங்கு எவ்வாறு சரீரம் கஷ்டமனுபவிக்கின்றதோ அது போலவே அங்கும் கஷ்டத்தை அனுபவிக்கின்றது. ஆனல் சுகம் எவ்வாறு அனுபவிக்கப் படுகின்றதோ, அவை எமக்குத் தெரியாது. ஏனெனில், ஷெ மூன்றும் உலகில் சுகமனுபவிக்கும் பாக்கியமே எமக்குக் கிடைக்கவில்லை ஹஜ்ரத்!

முல்லாஜீ:—பின்னர், ஷெ வியாசகக் கர்த்தாவின் கதி என்ன வாச்சுது கூறும்!

காதி:— ஷெயார், சுடு நீரில் உதைத்துத் தள்ளப்பட்ட பின், அவரின் மயக்கமும், ஹிஸ்புல்லாவின் அடியின் அவஸ்தையும் பறந்தோடி விட்டனவாதலால், அவர் நீந்திக்கொண்டே எமக்குச் சமீபமாக வந்து சேர்ந்து கொண்டார். நாங்களிருவரும் அந்த கடுஞ்சுடுவியர்வை நீராற்றின் நடுவில் மல்லார்ந்து படுத்துக்கொண்டு இரு கால்களையும் கைகளையும் பறத்தியவர்களாய், "ஜனுஸா"ப்பிரேதங்கள் மிதந்து செல்வது போல், நாங்களிருவரும் மிதந்து கொண்டு ஷெ ஹிஸ்புல்லாக்களின் கண்களுக்குத் தெரியாத மஃஷர் தீவு ஏதாகிலும் தென்படுகின்றதாவென மிதந்து சென்று கொண்டிருந்தோம்.

முல்லாஜீ:—அப்பால்,

காதி:—இவ்வாறு முன்னூறு பெரிய நாட்கள் வரை நீந்திச் சென்றபின், வெகு தூரமாக ஓர் தீவு தென்பட்டது. நாங்கள் அந்த தீவின்கரையை நோக்கி மிதந்துகொண்டு சென்று அத்தீவை அடைந்தோம். அப்போது எங்கள் மனமானது சற்று கலக்கமற்றிருந்தது. ஷெ தீவில் ஹிஸ்புல்லாக் கொடிதாங்கிகளை அறவே காணேம். ஆனல் சில நீண்ட உயரமான மனிதர்கள் சிலுவைகளைக் கைகளில் பிடித்துக் கொண்டு, வாடிய வதனத்தினராய் அங்கு நிற்கக் கண்டோம். அவர்களுக்கு மத்தியில் ஓர் தூய்மையான வாலிபர், பரிசுத்தமேனியராய் ஷெ கூட்டத்தோரின்மீது வெறுப்புக்

கொண்டவரைப்போல் நிற்பதைக் கண்டோம். நாங்கள், அவஸ்தைப்பட்டு அங்கு நிற்கும் கூட்டத்தினரை ஒருவாறு அணுகி, அவர்களின் மத்தியில் நின்று கொண்டிருக்கும் தூய்மையான மேனியுடைய பரிசுத்த வாலிபர் யாரெனத் தெரிந்து கொள்வதற்காக அக்கூட்டத்தினர் ஒருவரிடம், அதோ நிற்கும் வாலிபர் யாரெனக் கேட்டோம். ஷை சிலுவை தாங்கி மனிதர், இந்த மகான் தான் யேசு நாதராக இருக்கும்; அவரிடம் மன்றாடி எங்களைக் கரைசேர்க்க வேண்டுமெனவும், அப்பொறுப்பு தங்களுக்கே எனவும், யாங்கள் தஞ்சமிட்டு அடைக்கலம் புகுதும் கோரிக்கையை, யேசுநாதரவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்களில்லை. "யேசு நாதர்" சிலுவையில் அறையப்பட்டுவிட்டாரென்று நாங்கள் அபத்த விசுவாசமுங் கொண்டிருந்ததே அதற்குக் காரணமாகும் எனக் கூறினர்.

முல்லாஜி :—அல்ஹம்து லில்லாஹ், அஸா குல்லி நிஃமாயிஹி.

காவன்னா:—ஹஜ்ரத் ! சிலுவை தாங்கி இடமிருந்து இந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் நாங்கள் கேலி அடிக்கப்பட்டவர்களாக ஆகிவிட்டோம். "நாம் இவ்வேசுநாதரிடம் சென்று நம்மை அறிமுகப்படுத்தி, மன்றாடிக் கோரிக் கொள்வதென்றாலும், அவர்கள் சன்னிதானஞ் செல்வதற்கு தாடி மிக்க அவசியமாச்சுது, அஃது நம்மிருவருக்கும் பூஜ்யமாதலின் யாது செய்வது" எனத் தெரியாது திகைத்துக் கொண்டிருந்தோம். அச்சமயம் வெகு சமர்த்தரான எமது மஃஷர் சகாவானவர் ஓர் நல்ல யோசினையைக் கூறினர்.

முல்லாஜி :—என்னாவே, உம்மை விட ஷை வியாசதாரி பெரிய எத்தனோ ?

காதி :—என்ன ஹஜ்ரத்! அவர் திருவாளி எத்தனின் பாட்டனுச்சுதே.

முல்லாஜி :—அப்படியா ! பின்னர் கூறும்,

காதி:—எமது சங்காத்தி கூறியுள்ள யோசனை யாவது : "நாம் இகலோகில் பலவிதத் தந்திரங்களும், சூட்சிகளும், புரட்டுருட்டுகளும், பசப்புகளும் செய்து உலகோரில் அட்டகாசம் புரிந்து வந்தோம் ; அதுபோல் இந்த பரலோகத்தில் நமது ஜெகஜாலக் குண்டுகளெல்லாம் செல்லாது போலிருக்கிறதே. இஃதன்றி நமக்கு மற்றொரு பெரிய அபாயம் என்னவென்றால், இந்த மஃஷரில் மனிதர்கள் தோற்றத்தைக் கண்டு, இவர்கள் இன்னின்ன அமல்கள் செய்தவர்களென எக்ஸ்ரே கண்ணாடியைப் போல், படமெடுத்துக் கொள்கின்றார்கள். ஆகையால் நாம் யாரையும் பகிரங்கமாகவோ மறைமுகமாகவோ ஏமாற்ற முடியாதென்பது திரிகாலும் உறுதி. இதற்காக ஓர் இமிடேஷன் தாடியை எப்படியாவது தேடி, சரிபண்ணி வைத்துக் கொண்டால் இங்கு யாரையும் கண்டு, வேண்டி கதிபெறலாம் எனக் கூறிவிட்டு, சிலுவைதாங்கி நிற்பவர்களில் இருவர் தாடியில் பாதியையாவது வாங்கி ஒட்டவைத்துக் கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து, அங்கு நின்ற இருவர்களிடம் சென்று வந்தனங்கூறி, பிரதர்! நாங்களும் உங்கள் சித்தாந்தப்படியே, "யேசுநாதர் சிலுவையில் அடிக்கப்பட்டு மரணமெய்திவிட்டார்" என, ஈமான் கொண்டிருந்தோம் ; அவ்வாறே உலகோருக்கும் பிரகடனப்படுத்திக் கொண்டிருந்தோம். இன்று எங்களுக்கு ஒரு சிறிதேனும் தாடி இருந்தால்தான் யாரிடமும், முடுகும் பாக்கியம் கிடைக்கும் போலிருக்கிறது எனக்கூறி, "பாதி, பாதி தாடிகளை எங்களுக்கு கொடுக்க வேண்டும்" என, நாங்கள் வேண்டிக்கொண்டதை அவ்விருவர்களும் நிராகரித்துவிட்டு, பாதிதாடிகள் கொடுக்க முடியாதெனக் கூறிவிட்டார்கள். எங்களுக்கு வேறுவழி யில்லாததால், அவ்விருவரின் தாடிகளில் பாதியை கையால் இழுத்து அறுத்துக்கொண்டு, ஷை கூட்டத்தின் மறுபக்கம் ஓடிவிட்டோம். ஷை கூட்டமானது பெரிதாக இருந்ததால் எங்களை அவ்விருவர்களும் கண்டுபிடிக்க முடியாமலாகிவிட்டது.

முல்லாஜீ:— ஏ! காவன்னா மஃஷரிலுமா திருட்டு ?

காவன்னா.—வேறுவழி ஏது ஹஜ்ரேத்! எனவே, ஷை திருட்டு பாதி தாடிகளை எங்கள் கன்னங்களிலும் மோவாய்க்கட்டையிலுமாக ஒட்டவைத்துக் கொண்டு நாங்களும் தாடிவாலாக்களாக ஆகிவிட்டோம்.

ராவுத்தர்:—(இடையில்) முல்லாஜீ அவர்களே ! இவ்வுலகில் தாடியுள்ளோர்களுக்கு மறு உலகிலும் தாடியிருக்குமா ?

முல்லாஜீ : — அதற்கென்ன சந்தேகம்.

காதியானி:—கண்ணியமுள்ள ஹஜ்ரத் அவர்களே! ஒருவாறு நாங்களும் ஏகதேச தாடிக்காரர்களாக ஆகிவிட்டபின் இனி யாரிடமுஞ் செல்லலாமென, புதிய தைரியமொன்று ஏற்பட்டது.

முல்லாஜீ:—திருட்டு தாடியால் உங்களுக்கு என்ன பிரயோஜனங்கிடைத்தது?

காதி:—ஹஜ்ரேத்! அவ்வுலகில் தாடியுள்ளோர் மட்டிலும், கொஞ்சம் நிதானமான துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்; என்போன்ற தாடியில்லாத் தம்பிரான்களெல்லாம் பலரிடத்திலும் சரமாரியாக சகிக்கொணாத் துன்பங்களை அநுபவிக்க நேருகின்றது; எவரிடமும் போக நாணமேற்படுகின்றது. இஃதல்லாது தாடியில்லாப் பேர்வழிகளைக்கண்டால் மலக்குகள் கண்ட கண்டபடி பூசையில் விடுகின்றார்கள். இத்தாதி காரணங்களால் அவ்வுலகிற்கு தாடி மிக அவசியமானதாகும்.

முல்லாஜீ:—ஓய் காதியானி சாயபே! இவ்வுலகில் ஒவ்வொரு முஸ்லிம்களும் தாடிவைப்பது "ஸுன்னத்"தாகும். கட்டாயம் தாடிவைக்கவேண்டுமென, நாங்கள் "வஅஸ்"கள் செய்து வருவதை உங்கள் குழாத்தினர்கள் பரிகசித்து நகையாடி வருகின்றார்களே? நீர் கனவுகண்ட பின்பாவது எங்கள் வார்த்தைகளின் உண்மையைத் தெரிந்துகொண்டீரா?

காதியானி:—அப்படி பரிகசித்தது குறும்புத்தனமாகும்; அவ்வாறு பழித்துப் பரிகசித்தோர்களில் முதன்மையான எமது மஃஷர் கூட்டாளியான தா. ச. மு. வியாசதார் படுஞ் சிட்சை இதுதானு! இன்னமுங்கேளுங்கள்!!

"நானும் எமது மஃஷர் சங்காத்தியும் ஷை கூட்டத்தினுட்புகுந்து, பரிசுத்த தூயமேனியாய் அங்கு நின்ற வாலிபமதான் அவர்கள் சமுகஞ்சென்று சலாம் கூறி, ஓ! தூய நபி நாதரே!! மஸீஹே!!! நாங்கள், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் உம்மத்துகளாவோம்; ஆனல் "தங்களை 33-வது பிராயத்தில் ஸ்தூலத்துடனும் உயிருடனும் மேலே இறையோன் உயர்த்திக்கொண்டான்" என, முஸ்லிம்கள் கொண்டிருந்த விசுவாசப்படி நாங்கள் விசுவாசிக்காது, தாங்கள் சிலுவையில் அறையப்பட்டே நிர்யாணமானீர்கள் என, எங்கள் "லில்லிநபி" யான மிர்ஸா ஸாஹிப் அவர்களுக்கு வஹியின் துவாராவால் செய்தி கிடைத்து, அவர்கள் திருவாய் மலர்ந்ததையே யாங்கள் வேதவாக்காக மதித்து, ஈமானுங்கொண்டு, பிரகடனமுஞ் செய்துவந்தோமாதலால், இவ்வாறு கூறி தங்களை உயர்வுசெய்ததற்காக, தாங்கள் எங்களுக்கு மன்ருடக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள்; தங்களின் மன்ருட்டத்திற்கு நாங்கள் முற்றுங் கடமைப்பட்டிருக்கின்ருேம். ஓ! யேசுநாதரே! வள்ளலே!! நாயகமே!!! எங்களை மன்ருடிக் கரைசேர்க்க வேண்டும் என, கோரி யாங்கள் அபயந்தேடி நின்றக்கால், எங்களின் இவ்வார்த்தைகளைக் கேட்ட ஈஸா (அலைஹி) அவர்கள், ரொம்ப விசனித்த குரலோடு எங்களை நோக்கி, ஹே! ஹேது பெற்றிருந்தும், பலனடைய பாக்கியமற்ற பதர்காள்!! நபிகளின் திலகமும் ஸர்தாருமான, திரு நபி முஹம்மது (ஸல்.) அவர்கள் உம்மத்தோ ரென்னும் அரிய பாக்கியத்தை நீங்கள் பெற்றிருந்தும், ஏதோ ஓர் குட்டி தஜ்ஜாலின் வார்த்தையின் மீது உறுதிகொண்டு, உங்கள் நபிநாதரின் உம்மத்தின் வரம்பைவிட்டும் அப்புறங்கடந்து ஓர் சகனத்தின் வசனங்களின்மீது மயங்கி அம்மாயா மதவட்டத்தில்சேர்ந்து மோசமடைந்தீர்களே அப்ஸோஸ்!!! எனக்கூறிவிட்டு, மீண்டும் ஓ! பரிதாப மக்களா! இப்போது என் நிலைமையையும் கேளுங்கள்! அதாவது, எனது உம்மத்துமார்கள் என்னை "அல்லாவின் குமார" னென தப்பாகக் கூறி அதையே ஊர்ஜிதப்படுத்தி அவர்கள் நம்பியும் வந்திருந்ததால்," நீர்தானு இவ்வாறு அந்த உம்மத்துகளைக் கூறச்சொன்னீர் என, அல்லாஹ் என்னைக் கேட்கும் கேள்விக்கு, என்ன பதில் கூறி, நான் எப்படி தப்பிப்பதென "நப்ஸி, நப்ஸி" என கலங்கி நிற்கும்போது, எம்மிடம் வந்து, தங்களை மன்ருடிக் காப்பாற்ற வேண்டுமென அபயந் தேடுகின்றீர்கள் என்னே! மடமைத்தனம். மேலும் இவர்கள் என்னைதெய்வபுத்திரரெனப்பறைசாற்றி அதன் தோஷத்தால் எம்மையும் பீடிக்கச் செய்துவிட்டு, இக்கால் இவர்களுக்கும் யான் மன்ருட வேண்டுமாம்! என்னே புதுமை!! இந்நிலைமையில் நான் அவர்களுக்காக மன்ருடுவது நியதியோ? எனக்கூறி, அவர்களையே விரட்டி இருக்கும்போது, நீங்களிருவரும் வந்து, உலகில் நான் மரணித்துவிட்டேன் எனக்கூறி, எம்மை உலகில் மேன்மைபடுத்தி விட்டதாகவும், அதற்காக மன்ருட வேண்டுமென்றும் கோரிக்கொள்கிறீர்கள். நான் முதல் தட்டவையிலேயே மா

ணித்துவிட்டேன் என நீங்கள் பிரகடனஞ் செய்ததானது, எம்மையும் எமது கண்ணியத்தையும், திருகுர்ஆனையும், நீங்கள் இழிவுபடுத்தியதாகும். உங்களுக்காக வந்த குர்ஆன் ஷரீபில் அல்லாஹ் (ஜல்.) எம்மை உயர்த்திக் கொண்டதாகக் கூறி, எம்மை உன்னதப்படுத்தி யிருக்கும்போது, தாங்களோர் குர்ஆனை ஒப்புக்கொண்ட மக்களாகயிருந்தும், எமது விஷயத்தில்தானா நீங்கள் விதண்டாவாதஞ் செய்து வலிந்துரைகள் பேசவேண்டும்? உங்களோரின் புத்திக்கும் சக்திக்கும், யூகத்திற்கும், குறுகிய பகுத்தறிவிற்கும் எட்டாத, பரமத்திற்குச் சொந்தமான சில பிரட்சினைகளை விவாதித்து உங்களின் சிறிய புத்திக்கெட்டியவாறு தீர்மானித்து முடிவுகட்டி வந்தீர்கள். இஃதையன்றி நீங்கள் உலகிலிருக்கும்போது உங்களை மமதைப் பைசாசமும், மமகாரத் தேவதையும் பிடித்து அமுக்கிக்கொண்டிருந்ததால், உங்களின் யூக சக்திக்கு எட்டாத அம்மஹா பரம ரகசியப் பொருள்களை யெல்லாம் உங்கள் குறுகிய திருஷ்டியாலும், உலக சக்தியை மட்டிலும் ஒப்புக்கொள்ளும் யீனமதியாலும், சிறிய பகுத்தறிவாலும் அவைகளை நீங்கள் இலேசாகக்கண்டு நிர்ணயித்திருந்ததானது, உங்களிடம் பாரமார்த்தீக ஆழிய அறிவானது பூஜ்யமாகயிருந்த தோஷமேயாகும்.

உலகில் உங்களுக்கு பாரமார்த்தீக பேரறிவானது நன்கு வழிகாட்டியாக நின்றிருக்கும் பட்சத்தில், எமக்கும் எமது நாயனுக்கும் சம்பந்தமான விஷயங்களில் உங்களின் குறுகிய புத்தியையும் சிறிய பகுத்தறிவு ஞானத்தையும் ஒட்டி, நான் மரணித்துவிட்டேன் எனத் தீர்மானித்திருக்கமாட்டீர்கள். அவ்வாறு தீர்மானிப்பதற்கு நீங்கள் யார்? இவ்வாறு பரம நாயகனுக்குச் சொந்தமான, பல நுண்ணிய ரகசிய விஷயங்களில் நீங்கள் வீணாக, தலையைக்கொண்டு மாட்டி இருமாபெருங் குற்றத்தைச் சுமக்கும் மாந்தர்களாக ஆகிவிட்டீர்கள். (1)-வது திருக் குர்ஆனின் ஆணையை பூரணமாக ஏற்று விசுவாசிக்காதது. (2)-வது உங்கள் நபிகள் நாதரின்பொன் வாக்கியங்களை முற்றும் மதியாது அலட்சியஞ் செய்தது. இவ்விரண்டும் பெரிய குற்றமாகும்.

ஓ! யீனமதி மாக்களே!! நீங்களோ எங்களின் திலகமும், கண்மணியுமான திருமுஹம்மது (ஸல்.) அவர்களின் உம்மத்துமார்களென்னும் அருந்தவப் பாக்கியம் பெற்றிருந்தும், உங்களின் குறுகிய திருஷ்டியையும், சிறிய பகுத்தறிவையும் நீங்கள் பூஜித்தும், மனுக்களின் மோட்சத்திற்கு மிக்க அத்யாவசியமான "பாரமார்த்தீகப் பேரறி" விருக்குமிடத்தை எத்துவதற்கும் உங்களுக்கு பாக்கியமில்லாதிருந்தும், அபவாதமென்னும் இருள் மண்டபத்தினுட் புகுந்து, நீங்களும் உங்களையொத்த சித்தாந்திகளும் மெஞ்ஞான திக்கற்றுத்தடுமாறி நின்றதால் ஷை உத்தம உம்மத்தோர்களென்னும் அதி விமோசன மணிமுடியைக் கழட்டி வைத்துவிட்டு, நீங்கள் இவ்வலங்கோலக்கதியை அடையநேர்ந்தது. அந்தோ பரிதாபம்! என, யேசுநாதரவர்கள்கூறிவிட்டு, இறுதியில் எம்மை முஸ்லிம்கள் மரணமடையவில்லை என, விசுவசித்து மேன்மைபடுத்திபிருக்கையில், நீங்கள் எம்மைத்தாழ்மைபடுத்தி பிரகடனஞ் செய்திருப்பதால், நீங்களிருவரும் இங்கு நிற்பதில் உங்களுக்கு யாது பிரயோஜனமு மேற்படாது. இது திண்ணம். நான் உங்களுக்காக மன்றாடுவேனென, நீங்கள் கனவிலும் நினைக்கவேண்டாம். ஆனால் நீங்கள் எம்மிடம் வந்ததற்காக வழியொன்று காட்டுகின்றேன். அதாவது, உங்கள் நபி அவர்கள் இடமே நீங்களிருவரும் சென்று, அவர்களைப்பற்றி அடைக்கலம்புகுந்துகொண்டு இறைஞ்சுவீர்களானால், அவர்கள் மாபெருந் தயாளரானதால் உங்களை ஒருக்கால் க்ஷமித்து ஏற்றுக்கொள்ளவும் போதும், அவர்களுக்கு இம்மஃஷரில் போதிய மதிப்பும் விசேஷச் செல்வாக்குமுண்டு. உம்மத்துமார்களின் மீது மிக பட்சமுள்ளவர்களாகும். எனவே, நீங்கள் அவர்கள் உம்மத்துக்களில் துரோகிகளாகயிருந்தாலும், உங்கள் நபி அவர்களின் பெருந்தகையால் நுங்கள் துரோகத்தைப் பொருட்படுத்தாது, க்ஷமித்து உங்களுக்கு மன்றாடக்கூடும். இஃதை விடுத்து நீங்கள் இங்கு எத்தனை மா, மஹாங்கள் நின்று கொண்டிருப்பினும் யாது பிரயோஜனமு மேற்படாதென்பது நிச்சயம்.

"அரனை நம்பிபுருஷனை இழந்ததுபோலும்" "இரண்டு வீட்டு விருந்தாளி திண்டாடிச் செத்தான்" என்பதுபோலும், மஃஷரின்நடவடிக்கைகளெல்லாம் நடந்து முடிந்தபின், நீங்கள் இவ்வாறே மன்றாடுவோரற்று நின்று விழித்துக் கொண்டிருந்தால் கடாசியில் உங்களிருபேர்களையும் மலக்குகள் இழுத்துக்கொண்டுபோய் நரகத்தில் தள்ளிவிடுவார்கள். ஆகவே, நீங்கள்சுணங்

காது உங்கள் முஹம்மது நபி (ஸல்.) யிடம் சென்று விடுங்கள். இனிமேலும் அதிக நேரம் இங்கு நிற்பீர்களாகில், 'என் இவர்களை முன் நிறுத்தி வைத்திருக்கின்றீர் என, என்மீது கேள்வி ஏற்பட்டுவிடும். ஆகவே, இக்ஷணமே இவ்விடம் விட்டுப்போய்விடுங்கள் என, கடிந்து கோபமாகச் சொல்லிவிட்டார்கள் ஹஜரேத்.

(தொடரும்.)

---

# உண்மை நபிக்குரிய உயரிய லக்ஷணம்

(தென்காசி மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதுலி சாஹிபு வரைவது)

பரிசுத்த மார்க்கமாகிய இஸ்லாமாகிறது, மானிட உற்பத்தி முதற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு, எமது வள்ளல் நபிகள் திலகம் முஹம்மது (ஸல்.) அவர்களுடன் சம்பூரணமாக்கப்பட்டுவிட்டது. எனவே, நாயகம்(ஸல்.) அவர்கள் தங்களுக்குப் பின் வேறு நபியோ, வேறு வேதமோ தேவைப்படாதவாறு இனிபிலா வண்ணம் சகல காரியங்களையும் பரிபூரணமாக்கிவைத்துவிட்டார்கள். இஃதிவ்வாறிருக்க, கிறிஸ்தவர்கள் தங்கள் வேதத்தில் கூறப்பெற்ற "தேற்றரவாளர்" நாயகமவர்களல்லர் என்று கூறி பொதுமக்களை வஞ்சிக்கின்றனர். ஆனால் உண்மையை உணர்ந்தவர்கள் சத்திய மதத்தைப் பின்பற்றுகின்றனர். ஆகவேயான் இச்சிறு வியாசத்தில் நபிகள் நாயகமவர்களே இறுதி நபியென்பதையும், அவர்கள் கூறிய ஒவ்வொரு தீர்க்கதரிசனங்களும் இனிது நிறைவேறி, அவர்களது நபித்துவத்தை உண்மைப்படுத்தின விபரங்களையும் சிறிது எடுத்தெழுதுகின்றேனாதலின், ஒவ்வொரு சகோதரர்களும் இதனை நன்கு கவனித்துப் பார்ப்பார்களாக.

சோதரீர்!

இக்குவலயத்தில் ஒருவஸ்து வெளியாக வேண்டுமானால், அதற்குமுன் அதைப்பற்றிய பல அறிகுறிகள் தோன்றுகின்றன. உதாரணமாக, சூரியன் உதிக்க வேண்டுமானால் வைகறை தோன்றி பகல் ஆரம்பமாகிறது. இன்னும், மழைபொழிய வேண்டுமானால், அதற்குமுன் மேகம் உண்டாகின்றது. இஃதே போன்று, நமது நாயகம் (ஸல்.) அவர்கள் இந்நிலவுலகில் அவதாரமாவதற்கு முன்னால் இவ்வுலகிற்றோன்றிய அநேக இறைத்தூதர்கள் பெருமானார் (ஸல்.) அவர்களின் வருகையைப் பற்றிய முன்னறிவிப்புகள் பல விடுத்துள்ளார்கள். அவர்கள் கூறிப் போந்த முன்னறிவிப்புகள் யாவும் நமது நாயகம் (ஸல்.) அவர்களிடம் சம்பூரணமாகக் காணப்பெற்றன. இவ்வாறிருந்தும் சூரியனை சுண்டுவிரலால் மறைப்பது போன்று, கிறிஸ்தவ சகோதரர்கள் இஸ்லாத்தின் பேரொளியை மறைக்கப்பார்க்கின்றனர். இவர்கள் மறைக்க மறைக்க, இப்பேரொளியானது எங்கும் பிரகாசிக்க முற்படுகிறது. இவ்வாறு எங்கும் பரவுவதற்குக் காரணம், நாயகமவர்களின் ஒவ்வொரு வாக்கியமும் நமது மேலான புத்திக்கும், யுக்திக்கும் ஒத்திருப்பதேயாகும். இன்னும், நாயகம்(ஸல்.) அவர்கள் பின்னர் நிகழப்பெறப்போகும் விஷயங்களைமுன்னதாகவே கூறி, பின்னர் அதற்கேற்றவாறு அவைகள் நிறைவேறியிருப்பதுமே நாயகமவர்களின் கீர்த்தியையும், மகிமையையும் அதிகப்படுத்துகின்றன.

உதாரணமாக, ஷாம் ரூம் தேசங்களை அரசாக்ஷி புரிந்துவந்த "ஹிர்கல்" என்ற கிறிஸ்தவ அரசரை, ஈரான்தேச அரசாதிபதியான "மஜூஸி" ஜெயித்து விட்டதால், கிறிஸ்தவர்கட்கு அளவிலா அபஜெய மேற்பட்டது. அதனால் கிறிஸ்தவர்கள் இனி முன்னேறுவது பகற்கனவாகவே கருதப்பட்டன. இவைகளைக் கண்ட மக்கத்து காபிர்கள் அளவற்ற குதூகலத்துடன் முஸ்லிம்களை நோக்கி "நுங்களைப் போன்ற வேதக்காரர்கள் தோல்வியுற்றனராதலின் நீங்களும் தோல்வியெயுறுவீர்க" ளென பரிகசிக்க ஆரம்பித்தனர். இந்நிலைமையில் நாயகமவர்கள் ஜனங்களை நோக்கி, தோல்வியடைந்த 'ரூம்' அரசர் "இன்னும் ஒன்பது வருஷத்திற்குள், வெற்றி பெறுவார், வெற்றியடைந்த "ஈரான்" அரசர் தோல்வியுறுவார் என, தீர்க்கதரிசனங் கூறினார்கள். அவ்வமயம் உலகத்திலுள்ள எவருடைய மூளையிலும்

'ரூம்' அரசர் வெற்றிபெறுவாரென்ற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லாதிருந்தது. ஈரான் தேச சிப்பாய்களெல்லாம் தாங்கள் வெற்றி பெற்ற மமதையில் மயக்கங் கொண்டிருந்தனர். இந்நிலைமையில்தான் நாயகம் (ஸல்.) அவர்கள் அவ்வாறு கூறினார்கள். நாயகமவர்களோ உதவியற்ற மிக்க எளியவர்களாகவும், இப்படிப்பட்ட நூதன விஷயங்களைத் தாங்கள் யாரிடத்திலும் கேட்காதவர்களாகவும், எந்த சாஸ்திரத்திலும் பார்க்காதவர்களாகவும், எவ்விதமான கல்விகளை எவரிடத்தும் கற்காதவர்களாயு மிருக்கும் நிலைமையில்தான் இவ்வாறு முன்னறிக்கை செய்தார்கள். அதுபொழுது நக்ஷத்திரக் கலைகளைப் பயின்றிருந்த எவரும் இவ்விஷயத்தைக் கூற முன்வரவில்லை. இந்நிலைமையில், நாயகம் (ஸல்.) அவர்கள் தீர்க்கதரிசனம் கூறியவாறே சமீபகாலத்தில் ரூம் அரசர் வெற்றிபெற்றதால்,இஸ்லாமியவிரோதிகளின் கொட்டம் அடங்கி, நாயகமவர்களின் கீர்த்தி எங்கும் பரவலாயிற்று.

மேலும் நாயகமவர்களும், அவர்களைத் துயர்ந்தோர்களும் மிக்க வறுமையானவர்களாகவும், தங்களது உயிர்களுக்குப் பயந்தவர்களாகவும், தொழுகை முதலான வணக்கங்களைக்கூட வீட்டினுள் மறைவாக நிறைவேற்றுபவர்களாகவும் இருக்கும் நிலைமையிலும், மக்கத்துக் காபிர்களெல்லோரும் குறிப்பாக நாயகமவர்களின் பந்துக்களாயுள்ள குறைஷியர்களுள்பட யாவரும் நாயகமவர்களை ஒழித்து விடவேண்டுமென்ற முயற்சி செய்துவருவதைக் கண்ட பெருமானார் (ஸல்.) அவர்கள், தங்களது திருத்தோழர்களை நோக்கி, " சகோதரர்களே! நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் பயப்பட வேண்டாம்; நீங்கள் ஒருதினம் 'ஹிர்கல்' அரசரையும் ஈரான் அரசரையும் வெற்றிபெற்று, நீங்களே அத்தேசங்களுக்கு அரசராவீர்' களென்று கூறினார்கள். இவ்விஷயம் மக்காவிலுள்ள எதிரிகளான காபிர்களுக் கெட்டியதும், நாயகமவர்களையும் ஸஹாபாக்களையும் காணுந்தோறெல்லாம், அன்னோர் கேலிபரிகாசஞ் செய்யவாரம்பித்தனர். இன்னும் நாயகமவர்களுக்கு மூளையே கிடையாது எடுபட்டுவிட்டதோ என்ன! இந்த அற்பச் சின்ன கூட்டம்தான் மாபெரும் மகுடாதிபதிகளை யெல்லாம் வெற்றி பெறப் போகின்றனவாம்!! என்றெல்லாங்கூட பிதற்ற வாரம்பித்தார்கள்.

சிறிதுகாலம் சென்றபின் நாயகமவர்கள் கூறிய தீர்க்கதரிசனம் உண்மையாகி இராக், ரூம், ஷாம், ஈரான் முதலிய பல பெரியதேசங்களெல்லாம் மக்கமாநகர் வாசிகளான இந்த ஏழை சிறு கூட்டத்தினரின் கைவசமாயின; அத்தேசங்களிலுள்ள பெரிய பெரிய மனிதர்களெல்லாம் கைதியாக விலங்கிடப்பட்டு மதீனநகருக்குக் கொண்டுவரப்பட்டனர். இன்னும், நாயகமவர்கள் " ஈரான் " தேசத்தைப்பற்றி இதுவும் கூறிப்போந்துள்ளார்கள். அதாவது, "ஈரான்தேசத்தின் அரசரான 'கிஸ்ரா' தோல்வி அடைந்தபின் இவரைப்போன்ற அரசர்கள் உலகம் முடியும்வரை அவர்களில் உண்டாகவேமாட்டார்கள்" என்பதே. இவ்விதமே ஆகிவிட்டது. எனவே, அன்று தொடுத்து இற்றைய நாள் வரை அவரைப்போன்ற அரசர் ஈரானில் உண்டாகவில்லை. இன்னும், நெருப்பை வணங்குபவர்களுக்கு இவ்வுலகில் அன்று முதல் இன்று வரை எவ்வித அரசாங்கமும் இருக்கவில்லை; இனி ஆகப்போவதுமில்லை. ஆகவே, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று. இவ்விதமாக பின்வரும் விஷயங்களை முன்னதாகக் கூறுவது உண்மை நபிக்குள்ள லக்ஷணமே யொழிய பொய்யான போலி நபிகளுக்குள்ளதல்ல வென்பது உலகேற்கும் உண்மை.

மேலும் மற்றொரு உண்மையாவது:—உலக முழுவதிலுமுள்ள, அதிலும் குறிப்பாக மக்கத்தின் காபிர்களனைவர்களும் நாயகமவர்களுக்குப் பகைவர்களாக இருந்தனர். யூதர்கள், கிறிஸ்தவர்கள், நாஸ்தீகர்கள், விக்கிரகத் தொழும்பர் ஆகிய எல்லோரும் நாயகமவர்களின் உயிர்மீது தாகமுடையவர்களாகவே இருந்தனராதலின், மக்காவின் ஒவ்வொரு வீடுகளிலும் நாயகத்தின் பெயரால் ஒவ்வொரு வாட் தொங்கவிடப்பட்டிருந்தது. மக்காவின் ஒவ்வொரு சிறுவர்களும் நாயகம் (ஸல்.) அவர்களைப் பார்க்குந்தோறெல்லாம் பலவாறான நோவினை செய்துகொண்டிருந்தனர். அவர்கள் நடக்கும் பாதைகளில் முட்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். ஒருநாள் பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுதுகொண்டிருக்கும் போழ்து ஒட்டகத்தின் துர்நாற்றமெடுத்த குடலை கழுத்தில் போட்டுவிட்டனர். சுருங்கக் கூறுமிடத்து, அப்பாதகர்கள் நாயகமவர்களை நிம்மதியாக விருக்கவிட்டார்களில்லை. இவ்வித நிலைமையில்தான் நமது நாயகமவர்

கள் தங்களது தோழர்களை நோக்கி, "நீங்கள் நிம்மதியாகவிருங்கள்; என்னை எவராலும் கொல்லமுடியாது" என்னும் வீரமொழியை மிக பகிரங்கமாக கர்ஜித்தார்கள். அதற்காதரமாக இறைவனின் திருமொழியை யோதிக் காண்பித்தார்கள். அதாவது:— "மனிதர்களுடைய தீங்கைவிட்டும் அல்லாஹ் உங்களை காத்துக்கொள்வான்" என்பதே.

நாயகமவர்கள் இவ்வாறு கூறியதின்பின், அவ்வெதிரிகள் மீண்டும் அதிகமாக சொல்லொணு கஷ்டங்களை விளைவித்தனர். ஒருநாளிரவு எதிரிகளான காபிர்கள் ஆயுதம் பூண்டவர்களாக நாயகமவர்களின் வீட்டை வளைந்துகொண்டனர். இது விஷயத்தை நபியவர்கட்கு அறிவித்து, உடனே மக்காவைவிட்டும் மதீனு நகருக்குப் புறப்படும்படி இறைவன் உத்திரவிட்டான். அவ்வாறே நாயகமவர்கள் அன்றிரவே அவ்வெதிரிகளின் முன்னிலையிலேயே புறப்பட்டு வழியில் ஒரு மலைப் பொதும்பில் சில தினங்கள் தங்கியிருந்து பிறகு மதீனுவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது, எதிரிகள் வாட்களையுறுவிக்கொண்டு பெருமானுர் (ஸல்.) அவர்களை வெட்ட முற்பட்டனர். இவர்களின் இம்முயற்சி பலியாது தோல்வியும் அவமானமுமே ஏற்பட்டது. பின்னர் "கைபர்" யுத்தத்தின் போழ்து ஒரு எஹூதிப்பெண் நஞ்சைக் கலந்து விருந்து நடத்தினள். இதுவும் நாயகமவர்களைத் தீண்டவில்லை. இன்னும், "உஹத்" யுத்தகளத்தில் மக்காவின் காபிர்கள் நாயகமவர்கள் மீது அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்தனர். இதனுல் நாயகமவர்களின் திருச்சிரசில் சிறிது காயமேற்பட்டுப்போயிற்று. இருந்தாலும், நாயகமவர்கள் யாதொரு ஆபத்துமின்றி ஜெயம் பெற்ருர்கள். இவ்விதச் சிக்கலான நிலைமையில் ஆயிரக்கணக்கான யுத்தவீரர்களின்முன்னிலையில் எல்லோர்களின் கொள்கைகட்கு மாற்றமாக ஏகதெய்வக்கொள்கை யென்னும் உண்மையையே அஞ்சா நெஞ்சத்துடன் அவண் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு புத்திக்கு எட்டாதவாறு, பின்பு நிகழ்பெறக் கூடிய விஷயங்களை நாயகமவர்கள் கூறியது பூராவும் நிறைவேறினதானது, அவர்கள் உண்மை நபியென்பதை மீண்டும் ஸ்திரப்படுத்துகின்றது.

மேலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் பிரதிநிதிகளான கலீபாக்கள், பெருமானுர் இவ்வுலக வாழ்க்கையை நீத்த பின், நபியவர்களால் நடத்தப்பட்டுவந்த இராஜாங்கத்தையே நடத்தினுர்கள். வெளிரங்கத்தில் பார்த்தால் நாயகமவர்கள் அரசாக்ஷி செய்ததைப் பார்க்கினும் பன்மடங்கு அதிகமான அரசாக்ஷி புரிவது போலிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி,) அவர்களின் அரசாட்சியிலேயே ரூம், ஷாம், ஈரான், தூரான், இவைகள்கூட வெற்றிபெற்றது. இந்நிலைமையில் ஹஸ்ரத் உமர் அவர்கள் தங்கள் இடத்தில் "பஜ்ரு" தொழுதுகொண்டிருக்கும் பொழுது, ஒரு மஜூஸி அவர்களைக் குத்தி ஷஹீதாக்கி விட்டான். மூன்ருவது கலீபாவான ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களை, அவர்களின் இராஜாங்கஸ் தலமாகிய மதீனு நகரில் ஷஹீதாக்கப்பட்டது. இன்னும் நான்காவது கலிபாவான ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கூபா தேசத்தில் பஜ்ரு தொழுதுகொண்டிருக்கும் பொழுது ஷஹீதாக்கப்பட்டார்கள்.

சுருங்கக் கூறுமிடத்து, மூன்று கலீபாக்களுக்கும் ஆயிரக்கணக்கான பாதுகாப்பாளர்கள் இருந்தனர். இவ்வாறிருந்தும் இவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஆனுல் நாயகமவர்களுக்கோ எந்த நேரத்திலும், எந்த பாதுகாப்பாளரும் இருந்ததில்லை. அவர்களோ எப்பொழுதும் எதிரிகளிடையே வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஆயினும் எவர்களாலும் கொலைபுரிய முடியவில்லை.

நமது வள்ளல் நாயகம் (ஸல்.) அவர்களது தீர்க்கதரிசனம் சம்பூரணமாயிற்று. எல்லா விதத்திலும் அல்லாஹ் தனது உண்மைத் தூதராகிய நாயகத்தை எதிரிகளைவிட்டும் காத்துக் கொண்டான். நாயகம் (ஸல்) அவர்களின் எத்தனையோ தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறினது போக, இன்னும் பிற்காலம் நிறைவேற வேண்டியவைகளும் அநேகமுண்டு. ஆதலின், மேற்கூறப்பட்டவைகளை மாதிரிக்காக எடுத்தெழுதினேன்.

உதாரணமாக, மழைபெய்ய வேண்டுமானுல் மேகம் அவசியம் இருத்தல்வேண்டும்; அப்பொழுதுதான் மழைபெய்யும். இஃதே போன்று நாயகத்தைப் பின் பற்றியொழுகி அவர்களின் அன்பைப் பெற்ருல்தான் ஆண்டவனிடத்தில் அவனின் திருவருளைப் பெற முடியும். இவ்வுலகம் 'குபிர்' என்னும் காரிருளில் மூழ்கிக் கிடந்தது. நபிகள் நாயகம்

(ஸல்.) அவர்கள் தோன்றி அவ்விருளை நீக்கி ஏகதெய்வக் கொள்கையென்னும் சூரியப் பிரகாசத்தை தோற்றுவித்தார்கள். இந்த சூரியன் பிரகாசிக்கும்பொழுது வேறு சூரியன் வேண்டுவதின்றென்பது உலகேற்கும் உண்மை. ஆகவே, நாயகத்திற்குப்பின் வேறு நபியோ, வேறு வேதமோ தேவையில்லை. இஸ்லாமே சம்பூரண மார்க்கம். நபிகள் நாயகமவர்களே முன்னுள்ள தீர்க்கத் தரிசிகளால் அறிவிக்கப்பட்ட இஸ்லாத்தின் இறுதிநபியாகும். இதுவே உண்மை, சத்தியம்.

அன்பீர்! உண்மை நபிக்குரிய உயரிய லக்ஷணங்களை நன்குணர்ந்து அவைகளைப் பின்பற்றி மோக்ஷம் பெறுவோமாக.

---

# காதியானிகளின் யுக்திவாதம் பயன்தருமா ?

தென்காசி இ. மு. ஷா. அப்துர் ரஹ்மான் ஸாஹிப் எழுதுவது.

(சென்ற ஜனவரி மீ தொடர்)

கண்யமிக்க முஸ்லிம் சகோதரர்களே !

சென்ற "ஹிபாஜத்" இதழில், மிர்ஸாயீ மதஸ்தர்களின் குருநாதருடைய ஆதாரமற்ற பொய்க் கூற்றுகளை எழுதி அன்னாரிடம் அதற்குத் தக்க ஆதாரம் காட்டுங்கள், இன்றேல் நுங்களின் யுக்திவாதம் பயன்தரமாட்டாது! என, வினவியிருந்ததை நீங்கள் கண்ணுற்றிருக்கலாம். இதுபோது இங்கு அந்தக் காதியானி வகுப்பாரின் "முஜத்தித்" என்னும் ஷெய்குநாதரின் மூன்று வசனங்களைக் குறிப்பிடுகிறேனாதலால் அவைகளை நன்றாக கவனிப்பீர்களாக.

மிர்ஸாஜீ கூறுகிறார் !

பொய் (4) "குர்ஆன்ஷரீப், ஹதீதுகளின் முன்னறிக்கைகள் பூர்த்தியடைய வேண்டியது நிக்ஷயமாயிருந்தன. அவற்றில் எழுதியிருந்ததென்னவெனின், வாக்குச் சொல்லப் பெற்ற மஸீஹ் தோன்றும்போது இஸ்லாமிய உலமாக்களின்கைகளால் துக்கிப்பார். அவர்கள் அவரைக் காபிரெனவும் தீர்மானிப்பார்கள். இன்னும் அவரைக் கொல்லவும் பத்வாக்கொடுக்கப்படும். மேலும், அவரைக் கடினமான நிந்தனைசெய்யப்படுவதுமின்றி, அவரை இஸ்லாத்தின் சுற்றெல்லையை விட்டுப் புறம்பானவரென்றும், மார்க்கத்தை அழிக்கக்கூடியவரென்றும் கருதப்படும்" (அர்பாஈன் நீர் 3-ப-20).

ஏ காதியானி மத விஸ்வாஸிகாள் !

எங்கள் திருமறையாம் குர்ஆன் ஷரீபிலும், ஹதீதுகளிலும் மேற்சொன்ன விஷயங்கள் கூறப்பட்டிருப்பதாக நுங்களது ஞானவழி காட்டியான மிர்ஸாஜீ எழுதியிருப்பதை நிரூபிக்கும்படி நுங்களை அழைக்கிறோம். குர்ஆன் ஷரீபின் எந்த ஆயத்தில், எந்தஹதீது கிரந்தத்தின் ஸஹீஹானஹதீதில் இவ்வாறு அருளப்பட்டிருக்கிறதென்பதை விபரமாய்க் காட்டுங்கள் !

பொய் (5) "கடைசிகாலத்திலுள்ள சில கலீபாக்கள் விஷயத்தில் அறிவிக்கப்பட்ட, ஸஹீஹ் புகாரியினுடைய ஹதீதுகளையெடுத்துக்கொள்வோம்: விசேஷமாக அந்த கலீபாவை எடுத்துக் கொள்வோம். ஏனெனின், அவர் சம்பந்தமாக புகாரியில் "அவருக்காக வேண்டி வானத்திலிருந்து 'இவர் அல்லாவுடைய கலீபாவாகிய மஹ்தி' என்று சப்தம் வரும்" என்று எழுதியிருக்கிறது. இப்போது இந்த ஹதீது எத்துணை ஆதாரமும் அந்தஸ்தும் உள்ளதென, யோசியுங்கள்! இந்த ஹதீதானது குர்ஆன் ஷரீபுக்குப்பின் மிக ஒழுங்கான கிதாபென்னும் கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது" (ஷஹாதத்துல் குர்ஆன், ப-41)

ஏ! அஹ்மதிய மித்திரர்காள்!! ஸஹீஹ் புகாரீயென்பது உலகிலுள்ள ஸர்வமத்ரஸாக்களிலும் தாராளமாகக் காணப்படும் ஓர் உயரிய கிரந்தம். நுங்கள் முஜத்திதான மிர்ஸாஜீபால் கூறப்பட்டுள்ள, மஹ்தி சம்பந்தமான வசனங்களை அதிற்காட்டும்படி நுங்களை அழைக்கிறோம். இதற்குத்தக்க மேற்கோள் காட்டாமல் மௌனம் சாதிப்பீர்களேல், நுங்கள் நபியாம் மிர்ஸாஜீயின் பத்வாவின் பிரகாரம் அவரை அழைக்கும்படி நுங்களை வற்புறுத்துவோம்.

மிர்ஸாஜீ கூறுகிறார்: பொய் கூறுபவன் சபிக்கப்பெற்றவன், மெய்யை மறைக்கும் அற்பன்,

இப்படிப்பட்ட பொய்யன் நாவினல் ஆண்டவன் உண்டுவென மொழிந்தாலும் உண்மையில் அவன் ஆண்டவனை மறுத்த நாஸ்தீகனே. (காதியான்கே ஆரியா அவ்ர்ஹம், 19-ப) *

காதியானி மித்திரர்காள்! மிர்ஸாஜீயின் மேற்சொன்ன கூற்றுக்கு ஆதாரம்காட்டுங்கள்!! இன்றேல் அவரின் பத்வாவிற்கு இணங்குங்கள்!!! ஓடி யொழிப்பதை விட்டுவிடுங்கள்.!!!!

பொய் (6) "ஒரு இராஜாவின் காலத்தில் அவனின் ஜெயத்தைப்பற்றி நானூறு நபிமார்கள் முன்னுரை பகர்ந்திருந்தும் அஃதெல்லாம் பொய்யாகி அவன் சிறுமையடைந்தவனுகக் கொல்லப்பட்டான் என்று பைபிளில் எழுதப்பட்டிருக்கிறது" (ஸறுலத்துல் இமாம், 17.ப. சுருக்கம் இஸாலா. 1147.ப)

பொய் சொன்னலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? பைபிள் உலகத்தின் சகலபாகங்களிலும் சாதாரணமாகக் காணப்படும் ஓர் கிரந்தமாகும். அப்படிப்பட்ட கிரந்தத்தில் நானூறு நபிமார்களின் முன்னறிக்கைகள் பொய்யாய் விட்டதென வரையப்பெற்றிருப்பதாய், மிர்ஸாஜீ கூறும் கூற்றுக்கு ஆதரவு காட்டுவீர்களா?

இறைவனின் அனுமதியின்மீது கூறப்படும் முன்னறிக்கைகள் தவறுதிருப்பது ஞாயமாகவிருக்க, ஒன்றிரண்டு நபிமாரல்ல, நானூறு நபிமார்களின் முன்னறிக்கைகள் பொய்யாய்விட்டதென்றல், இதைவிட அந்தர்வீச்சும், ஆகாயப்புளுகும் வேறென்ன விருக்கப்போகின்றது? நபிமார்களின் முன்னறிக்கைகள் பொய்யாய்ப் போனல், பின்னர் அந்த நபிமார்களின் வேறெந்த வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்படப் போகிறது?

மிர்ஸாஜீ பொய்யான முன்னறிக்கைகளைக் கூறி, அது நடவாமற் போகும்பக்ஷம், நானூறு நபிமார்களின் முன்னறிக்கைகளே தவறி பொய்யாய்ப்போ யிருக்கும்போழ்து, ஒரு நபியாகிய என்னுடைய முன்னறிக்கை தவறிப்போகிறதில் ஆச்சரிய மொன்றுமில்லையென்று, தம்மைத் தப்பித்துக் கொள்ளச் செய்த சூதல்லவா இது.

ஏ காதியானி மித்திரர்காள்! மேலே அவ்வாறு கூறின மிர்ஸாஜீ இதுபோது என்ன சொல்லுகிறுரென்று கேட்கின்றீர்களோ? கேளுங்கள்! மிர்ஸாஜீகூறுகிறர்: "நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிவிடுவது கூடாதகாரியம்" (கிஷ்திய நூஹ். 5-ப.)

மேலே நானூறு நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிப் பொய்யாய்ப் போய்விட்டதென்றுர்; கீழே நபிமார்களின் முன்னறிக்கைகள் தவறிவிடுவது முடியாத காரியமென்கிருர். இம் முன்னுக்குப்பின் முரணுன இருவசனங்களுக்குத் தீர்ப்புக் கூற நுங்களது நபியாம் மிர்ஸாஜீயின் பத்வாவைக் கீழே வரைகின்ருேம். "முன்னுக்குப்பின் முரண்கூறுபவன் கீழ்குலமக்களைச் சார்ந்த மூடனென்றும், முனபிக் (நயவஞ்சகன்) என்றும், பித்தசுபாவமுள்ளவ னென்றும், பொய்யன் என்றும் கூறுகிருர்" (சத்பச்சன் ப. 29-30-31, லமீமா பராஹீன், வா. 5, ப-112)

மிர்ஸாயீ நேயர்காள்! இனி தீர்ப்பு நுங்கள் வசமே. மிர்ஸாஜீயின் கூற்றுக்கு தக்க ஆதாரம் காட்டுங்கள். இன்றேல் அம்மார்க்கத்தை விட்டும் நீங்கிவிடுங்கள். வெறும் யுக்தி வாதம் பயன் தராது.

"நீங்கள் அறிந்து கொண்டே மெய்யை மறைத்துப் பொய்பை மெய்யெனப் புரட்டிவிட வேண்டாம்" (குர் ஆன்)

இஸ்லாமியப் பிரசாரகர்களே, இன்னரின் மதப்புரட்டுகளை எதுவரை பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றீர்கள். எழுமின்! அதனை ஒழிமின்!! சத்தியத்தை நிலைநிறுத்துமின்!!!

---

* இந்த மிர்ஸாஜீயால் இயற்றப்பெற்ற நூலை மொழிபெயர்த்து 'ஞானபோதம்' என்னும் பெயரால் விற்பனைசெய்து வருவோர், அதைப்பற்றிய விளம்பரத்தினிறுதியில் "இந்நூலை இயற்றிய மிர்ஸாஜீக்கு பொய்கூறும் வழக்கமுமுண்டு ஆகவே, அவர் சில சமயம் குர்ஆனில் இல்லாத விஷயங்களை குர்ஆனில் உண்டு யென்றும், ஹதீதில் இல்லாத விஷயங்களை ஹதீதில் உண்டுயென்றும் கூறுவார். ஆதலின் அவரின் புத்தகங்களை வாசிப்போர்சற்று எச்சரிக்கையுடன் வாசித்துக் கொள்வீர்களாக" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும். அங்ஙனமின்மையால், இஸ்லாத்தினின்றும் அந்தகாரத்தில் விழும் மக்களின் பாபங்கள் யாவும் அவர்களையேசாரும். ஆதலின் அன்னேர் அடுத்த பத்திரிகையில் இக் குறிப்பை வெளியிடுவார்களாக.

---

N. B.—இது சம்பந்தமான விஷயங்கள், தென்காசி முஸல்மான் ஆபீஸின் நூற்களில் விபரமாய்க் காணப்படுமாகையால், அதனை வாங்கிப்படித்துப் பயன் பெறுவீர்களாக.

# சீன முஸ்லிம்களின் மார்க்க பக்தி

(குலாம் ஹைதர்கான் வரைவது)

சீனதேசத்துக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள், சீனாவில் வசிக்கும் முஸ்லிம்களைப்பற்றி கிறிஸ்துவ உலகத்துக்கு நீண்ட அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார்கள். அதன் சாராம்சம் வருமாறு :—

## சீன முஸ்லிம்களின் வீடு

சீனாவில் முஸ்லிம்களுக்கும் சீனர்களுக்குமிடையில் வாழ்க்கை முறையில் அதிக வித்தியாசமில்லை. ஆகவே, வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மிகச்சிரமத்துடன்தான் முஸ்லிம்களின் வீட்டைத் தெரிந்துகொள்ள முடியும். முஸ்லிம்களின் ஜனத்தொகை அதிகமாகவுள்ள மாகாணங்களில் அவர்களது வீட்டை அறிந்துகொள்வது அவ்வளவு சிரமமில்லை. சீனதேசத்தாரின் பழக்க வழக்கங்களைப்பற்றி ஆழ்ந்து கவனித்திருப்பவர்கள் முஸ்லிம்களின் வீடுகளைச் சீக்கிரத்தில் அறிந்து கொள்வதற்கான அடையாளங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சீனர்களது வீடுகளின் வெளிக்கதவுகளின்மீது விக்கிரகங்களின் உருவம் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் விக்கிரங்களின் உருவமில்லாத வீடுகள் முஸ்லிம்களுடையதாக இருக்கும், அல்லது கிறிஸ்துவர்களுடையதாக இருக்கும். இதல்லாமல் முஸ்லிம்களின் வீடுகளில் இன்னொருவிதமான அடையாளமும் இருக்கும். அதாவது, ஒரு மாதிரியான வர்ணக் காகிதத்தில் அறபி அக்ஷரங்கள் எழுதப்பட்டிருக்கும். இதுவும் முஸ்லிம்களின் வீடு என்பதற்கு ஒரு அடையாளமாகும்.

## சீனத்து மஸ்ஜிதுகள்.

சீனத்து மஸ்ஜிதுகளின் கட்டிடம் சில குறிப்பிட்ட இடங்களைத் தவிர்த்து பொதுவாக எங்கும் சீனத்து முறையிலேயே கட்டப்பட்டிருக்கின்றன. இதனாற்றான் சீனத்து புத்தாலயங்களுக்கும் சீனத்து மஸ்ஜிதுகளுக்கு மிடையில் வித்தியாசம் தெரிவதில்லை. ஆனால் சீன துருக்கிஸ்தானிலுள்ள கட்டிடங்கள் சீன முறையிலில்லை. பொதுவாக எல்லா மஸ்ஜிதுகளிலும் ஒரு மினாரா மிகப் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கும். அர்மக்கி, குல்ஜா, ஸக்ஸஷ்க் முதலிய இடங்களிலுள்ள மஸ்ஜிதுகளுக்கு மினாராக்களிருக்கின்றன. ஆனால், சீனப்பிரதேசங்களிலுள்ள மஸ்ஜிதுகளில் மினாரா இருப்பதில்லை. சில சீனநகரங்களிலுள்ள அநேகம் மஸ்ஜிதுகளின் உச்சியில் சிறு சிறு கொத்தளங்கள் கட்டப்பட்டிருக்கும். இவைகளைப் பார்க்கும்போது, இவைகள் பார்வைக்கு சீன மந்திரங்களென்றே தோன்றும். இக்கொத்தளங்கள் பெரும்பாலும் 'அதான்' (பாங்கு) சொல்லுவதற்கு, அல்லது பிறை பார்ப்பதற்கு உபயோகப்படுத்தப்பகின்றன.

சீனாவிலுள்ள அநேகம் இடங்களில் முஸ்லிம்கள் மஸ்ஜிதுகளைவிட்டு வெகுதூரத்துக் கப்பால் வாசஞ்செய்கின்றனர். மஸ்ஜிதுகளில் பாங்கு சொல்லும் சப்தம் அவர்களுக்கு விழாதவாறு அவ்வளவு தூரத்திலிருக்கிறார்கள். இதன் காரணமாக சில இடங்களில் பாங்கு சொல்லப்படுவதில்லை. இதுவன்றி இதர காரணங்களாலும் சிலஇடங்களில் பாங்கு சொல்வது அடியுடன் நிறுத்தப்பட்டு மிருக்கின்றன. சில இடங்களில் ஒழுங்காகத் தவறாமல் பாங்கு சொல்லப்படுகிறது. சிறப்பாக முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள இடங்களில்தான் சட்டப்படி தவறாமல் பாங்கு சொல்லப்படுகிறது.

பெரிய பெரிய மஸ்ஜிதுகளில் கும்பாக்கள் இருக்கின்றன. அதன்முன் பக்கத்துச் சுவர்களில் அழகான சித்திரவேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மிஸ்டர் டாட்டன் குபோ என்பவர் ஷான்சி மாகாணத்தைச் சேர்ந்த ஒரு மஸ்ஜிதைப்பற்றிக் கூறுகையில், அம்மஸ்ஜிதின் உட்புறம் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு, மத்தியில் இமாமுக்காக மிஹ்ராபு கட்டப்பட்டிருக்கிறது. மஸ்ஜிதின் உட பக்கத்தின் முகடுகள் வளைந்தனவாக பீக்கின் நகரத்துமந்திரங்களைப்போலிருக்கின்றன. இதற்கு "சாந்தி மந்தரம்" என்று சொல்லுகிறார்கள். பெரும்பாலன மஸ்ஜிதுகளில் ஒரு தலைவாசல் கட்

டிடமுமிருக்கிறது. அதற்கு, ஹஜ்றத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்துக்குச்சென்றதாக கூறிக்கொள்ளும் தலைவாசலின் ஞாபகார்த்தம் என்று அவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

மஞ்சூரியாவின் மஸ்ஜிதுகள் சீனத்துக்கட்டிடமுறையில் கட்டப்பட்டிருக்கின்றன. அத்தேசத்திலுள்ள பராக்கூமன் என்ற இடத்திலுள்ள மஸ்ஜிது சீனத்துக்கட்டிட முறையிலிருந்தாலும், நகரத்திலுள்ள எல்லாக் கட்டிடங்களைப் பார்க்கினும் உயர்ந்ததாகவும் அழகானதாகவுமிருக்கிறது. மஞ்சூரியாவின் தலைநகரான முக்டனிலுள்ள மஸ்ஜிதுகளுக்கு மினாராக்களில்லை. முகடுகள் பெரும்பாலும் சதுரமான கொத்தளத்தைப் போலிருக்கின்றன. ஆனால், இதன் வேலைப்பாட்டைக் கவனிக்கும்போது, இது மிக உயர்ந்த ரகத்தில் அதிக திறமையான வேலைப்பாடுள்ளனவாக இருக்கின்றன. பார்வைக்கு அழகானவைகளாகவும் தோன்றுகின்றன. மஸ்ஜிதிலுள்ள பெரிய மண்டபம் வெய்யிற்காலத்தில் காற்றோட்டமுள்ளதாகவும், பனிகாலத்தில் கதகதப்பைக் கொடுக்கக் கூடியதாகவுமிருக்கிறது. முஸ்லிம்களின் மஸ்ஜிதுகள் புராட்டஸ்டண்ட்களினுடையவும், ரோமன் காத்தலிக்கர்களுடையவும் மாதாகோவில்களைப் பார்க்கினும் அழகானவைகளாகவும்இருக்கின்றன என்றுசில ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள்.

## பீக்கிங் மஸ்ஜிதுகள்

சீன அரசாங்கத்து மாஜி தலைநகரான பீக்கிங்கில் மொத்தம் 38 மஸ்ஜிதுகளிருப்பதாகத் தெரியவருகிறது. மிஸ்டர், ஆர்தர்காட் என்பவர் பீக்கிங்கில் ஏராளமான மஸ்ஜிதுகளைப் பார்த்திருக்கிறார். இந்த மஸ்ஜிதுகளில் அநேகம் சிறு மஸ்ஜிதுகள் என்றும், நகரத்தில் பிரபல்யமில்லாத பகுதிகளில் இவைகள் கட்டப்பட்டிருக்கிறனவென்றும் கூறுகிறார். சில மஸ்ஜிதுகள் மிகப்பெரியதாகவும், அவைகள் கட்டப்பட்டிருக்குமிடம், அமைப்பு முதலியவைகளைக் கவனிக்குமிடத்து அந்த மஸ்ஜிதுகளுக்கு முக்கியாம்சம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தோன்றுகிறது. மிங் அரசகுடும்பம் சீனாவை அரசாட்சிபுரிந்த காலத்தில் ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டது. அது வெறுங் கல்லாலேயே கட்டப்பட்டது என்று கூறுகிறார்கள். ஆனால், கால வித்தியாசத்தால் அவ்வரச குடும்பத்தின் பெயர் நாமம்கூட இப்பொழுது அழிந்துவிட்டது. சீன்மிங் சக்கரவர்த்தியின் கட்டளையின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மஸ்ஜிதில் நான்கு கற்சாசனங்களிருக்கின்றன. இந்த மஸ்ஜிது எவ்வளவு பூர்வீக காலத்தில் கட்டப்பட்டது என்பதை அக்கற்சாசனங்கள் இன்னும் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. இக்கற்சாசனங்கள் சீன, மஞ்சூ, மங்கோல், துருக்கி ஆகிய நான்கு பாஷைகளிலும் எழுதப்பட்டிருக்கின்றன. இம்மஸ்ஜிதின் சிற்ப வேலையும், கட்டிட அமைப்பும் பாதி சீனமும் பாதி அரபியுமாக இருக்கிறது. இதனுடைய உள்பாகம் சீனதேசத்திலுள்ள அநேகம் மஸ்ஜிதுகளைப் போலிருக்கிறது. வெளிப்பாகம் இஸ்லாமிய நாடுகளில் காணப்படும் மஸ்ஜிதுகளைப்போலிருக்கிறது என்று அவ்வைரோப்பியர் எழுதியிருக்கிறார்.

## மதக்கல்வி

சீனதேசத்திலுள்ள பெரும்பாலான மஸ்ஜிதுகளுடன் மார்க்கக்கல்வி போதிப்பதற்கான பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் அந்த ஸ்தலத்துக்கும், சமூகநிலைமைக்கும் தக்கவாறு முஸ்லிம் குழந்தைகளுக்குக் கல்விபோதிக்கப்படுகிறது. இங்கு இஸ்லாமிய ஷரீஅத்தைப்பற்றியும், அரசாங்க முறையை அனுசரித்தும் இருவிதமான கல்விகளும் போதிக்கப்படுகின்றன. குழந்தை பிறந்த 4 வருஷம், 4 மாதம், 4 நாள் ஆகிவிட்டால் "பிஸ்மில்லாகானி" சொல்லிக்கொடுத்துவிடுகிறார்கள். அக்குழந்தைகள் திருகுர்ஆன் ஓத ஆரம்பித்து விடுகின்றன. 7 வயதானவுடன் பொதுக்கல்வி போதிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். மஸ்ஜிதுகளுக்குப் பக்கத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற பள்ளிக்கூடங்கள் இவ்விதமான கல்விபோதிப்பதற்கு மிகவும் தகுந்தனவாயிருக்கின்றன என்று கருதப்படுகிறது. பின்னர் 21 வயதுவரை கல்வி போதிக்கப்படுகிறது.

பையனை ஏதேனும் தொழிலில் ஈடு படுத்த வேண்டுமென்றிருந்தால், ஏதேனுமொரு தொழில் சம்பந்தமான கல்வியும் போதிக்கப்படுகிறது. பெண் குழந்தைகளுக்கு பொதுவாகக் கல்விபோதிப்பதே இல்லை. முஸ்லிம்களின் ஜனப்பெருக்கு குறைவாக வுள்ள மாகாணங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மத்ரஸாக்கள் மதசம்பந்தமாக மாத்திரமே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாதலால், அங்கு மதக்கல்விகள் மாத்திரம்தான் கற்பிக்கப்படுகிறது. அங்கு

படித்துத்தேர்ச்சி பெறுபவர், மௌலவியாகவோ அல்லது பேஷ்இமாமாகவோ ஏற்படுகிறார். முஸ்லிம் ஜனத்தொகை மெஜாரிட்டியாக வுள்ள கான்ஸூ போன்ற மாகாணங்களின் குக்கிராமங்களில் இம்மாதிரியான ஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்கூல்களில் பாலர்களுக்கு மார்க்கச்சட்டங்கள் போதித்துக் கொடுக்கப்படுவதுடன், சிற்சில இடங்களில் பார்ஸீ அல்லது துருக்கிபாஷைகளும் போதிக்கப்படுகின்றன. ஆனால், இவைகளில் கல்விபோதிக்கப்படுவது மேலெழுந்தவாரியாகத்தான். கல்விக்குச் சிறந்ததெனப்பெயர் பெற்ற இடங்களில், நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர்தான் எழுதவும், படிக்கவும், விஷயத்தை யுணர்ந்து கொள்ளவும் தகுந்தவர்களாக இருக்கிறார்கள். ஜூவேஹோங் (மௌலவி)யின் அந்தஸ்துவரை படித்துக் கொடுக்கும் மத்ரஸாக்களில் பல வற்றைப் பாதிரிமார்கள் பரிசீலனை செய்து பார்த்ததில் அறபிப்பாஷையிலுள்ள இஞ்ஜீலைப் படித்துணரும் சக்தி பெற்றவர்கள் சிலர்தானிருக்கிறார்கள் என்று தெரியவந்தது. சில இடங்களில் முஸ்லிம்களின் மதக்கல்வித்திட்டம் மிக உன்னதமாக இருக்கிறது. கான் சு மாகாணத்திலுள்ள ஹோக்கார் என்ற இடத்தில் திருகுர்ஆனைப் போதிப்பதற்காக ஒரு காலேஜ் இருக்கிறது. மிஸ்டர் கேல் என்பவர் இந்த காலேஜைப் பார்வையிட்டிருக்கிறார். இக்காலேஜில் பற்பல ஜில்லாக்களிலிருந்தும் 400 மாணவர்கள் வரை வந்து படிக்கிறார்கள். இவர்கள் தங்களது படிப்பை முடித்துக் கொண்டு பற்பல இடங்களுக்கும் மதப்பிரசாரத்தின் நிமித்தமாகச் சென்றுவிடுவார்கள் என்று மிஸ்டர் கேல் கூறுகிறார்.

### மாணவர்களின் படிப்புச் செலவு

மாணவர்களின் கல்விக்காக ஏற்படும் செலவுகளனைத்தும் பொது ஜனங்களால் கொடுக்கப்படுகின்றன. ஏழு அல்லது எட்டு வருஷம் வரைகல்வி போதிக்கப்படுகிறது. இந்த ஏழெட்டு வருஷகாலத்தை "மௌலவி" களின் மேற்பார்வையில் கழிக்கவேண்டும். மஞ்சூரியாவிலுள்ள பாக்கூமென் என்ற மார்க்கக் காலேஜில் 10 வருஷகாலம் கல்வி போதிப்பதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்குத் திருகுர் ஆனின் தப்ஸிர் முதலியவைகள் போதிக்கப்படுகின்றன.

---

# இஸ்லாத்துக்கு சர்வகலாசாலைப் பட்டம்பெற்ற ஸ்திரீகள் தேவையா?

முஹ்தரமா கேத்தி ஆரா பேகம் அவர்கள் பிரசங்கம்.

18-1-1935-ல் "அஞ்சுமனே தப்லீஹ் நிஸ்வான்" என்ற சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டம் லாகூர் கண்டோன்மென்டில் கூடிற்று. அக்கூட்டத்துக்கு முஹ்தரமாகேத்தி ஆராபேகம் தலைமை வகித்தார். அதுபொழு அவர் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் வருமாறு:—

முஹ்தரமா தலைவி அவர்கள் தம்மை அக்கிராசனப் பதவிக்குத் தெரிந்தெடுத்தமைக்கு வழக்கம்போல் நன்றி செலுத்திவிட்டு, ஸ்திரீகளுக்குக் கல்வி போதிக்கப்படுவதைப்பற்றிப் பிரசங்கம் புரிந்தார். பின்னர், முஸ்லிம் ஸ்திரீகள் ஆங்கிலம் கற்று சர்வகலாசாலைப்பட்டம் பெறுவதைப்பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டதாவது: பெண்கல்வி அவசியம் என்று கூறுவதில், ஸ்திரீகள் பி. ஏ, எம். ஏ. பட்டம் பெற வேண்டும் என்பது கருத்தல்ல. குடும்பக் காரியங்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஸ்திரீகள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் நிபுணத்துவம் பெறுவதுமல்ல. ஸ்திரீகள் தங்கள் மக்களுக்குச் சிறந்த பயிற்சியளிப்பதும், அவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய உணர்ச்சியை உண்டுபண்ணுவதும், சிறந்த ஒழுக்கமுள்ள மனைவிகளாகவும், தாய்மார்களாகவும் கூடிய தன்மையை ஸ்திரீகளிடம் உற்பத்தி செய்வதுமே பெண்கல்வியின் முக்கிய நோக்கமாகும். ஆனால், இன்றைய நிலைமை இதற்கு நேர்மாறாகப் புரண்டிருக்கிறது. ஆங்கில பாஷையில் எழுதப்பட்ட நாலைந்து புத்தகங்களைப் படிக்கத்தெரிந்த ஸ்திரீகள், விவாகம் செய்துகொள்வதை வெறுக்கும் ஸ்திரீகள், குடும்பக் காரியத்தைக் கவனிப்பது வீண்வேலை என்று கருதும் ஸ்திரீகள், புத்திர புதல்விகளைப் பெறுவது முட்டாள்

தனமென்று கருதும் ஸ்திரீகள் ஆகியவர்களைத் தான் உண்மையில் சரியான கல்வி கற்றவர்கள் என்று இற்றைநாளில் கருதப்படுகிறது.

மேலும், தலைவி கூறியதாவது :—

தாயின்மடிதான் குழந்தைகளின் பயிற்சிக் குச்சிறந்த இடமாகும். எனவே, தாய்மார்கள் இஷ்டப்பட்டால் தங்கள் புதல்வர்களை அரஸ்து வாகவும், ஜாலினூஸாகவும், தாரலித், தாரிக் ஆகியவர்களாகவும் ஆக்கிவிட முடியும். ஆகவே, டான்சுகளிலும் சினிமாக்களிலும் மயங்கிக் கிடக்கிற பி.ஏ, எம். ஏ. பட்டம் பெற்ற ஸ்திரீகள் நமக்கு இப்பொழுது தேவையில்லை. பின்னர், பேகம் சாகிபா முன்னேற்றமடைந்த இதர சமூகத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், "ஸர் ஸெய்யித் மர்ஹூம் அவர்களைப்போன்ற இருதயமுள்ள ஸ்திரீகள் தாம் தேவை ; ஸர் ஸெய்யிது அஹ்மதுகான் அவர்களுக்கு விரோதமாக உலகம் முழுதும் இருந்தும்கூட, அவரது பொறுமையிலும் உறுதியிலும் தடுமாற்ற முண்டாகவில்லை. அவரைப்போல் நீங்களும் உறுதியாகவும், பொறுமையாகவும், சலியா உழைப்பாளிகளாவும் இருப்பீர்களாயின் உங்களுடைய இந்த "பிரைமரி" ஸ்கூல் பெரிய காலேஜாக ஆகக்கூடும். ஆனால், அதில் புதிய கலைகளுடன் இஸ்லாமிய மதக்கல்விகளும் போதிக்கப் படவேண்டும். பின்னர் பேகம் அவர்கள் ஸ்திரீகள் குடும்பக் காரியங்களைக் கவனிப்பதைப்பற்றிப் பிரயோஜனமுள்ள சில ஆலோசனைகள் கூறினர். (இதனால், ஸர் சையித்தினுடைய கொள்கைகள் யாவற்றையும் ஏற்றுக்கொள்வதாக கருதலாகாது).

குறிப்பு :—பெண்கள் கல்விபயிலும் விஷயத்தில் நமக்கொன்றும் ஆக்ஷேபனையில்லை. கல்வியைக் கற்றுக்கொள்வது முஸ்லிம் ஆண்பெண் ஆகிய இருபாலரின்மீதும் கடமை என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்கூறி இருப்பதால், உண்மை முஸ்லிம் எவரும் பெண்கல்வியை வெறுக்க எவ்வித நியாயமுமில்லை. ஆனால், ஸ்திரீகளுக்கு எத்தகைய கல்வி வேண்டும், புருஷர்களுக்கு எத்தகைய கல்வி வேண்டும், இவ்விருசாராருக்கும் எவ்விதம் கல்வி போதிக்கப்படல் வேண்டும் என்பதைப்பற்றித்தான் முஸ்லிம் பெரியார்கள் அபிப்பிராய பேதங் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களில் ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி யாவருக்கும் மார்க்கக்கல்வி போதித்து, யாவரும் மார்க்க பற்றுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதையும், ஸ்திரீகளையும் புருஷர்களையும் தனித் தனியே பிரித்துவைத்து கல்விபோதிக்கப்பட வேண்டுமென்பதையும், ஸ்திரீகள் குடும்பக் காரியங்களைச்செவ்வனே கவனித்து சிறந்த தாய்மார்களாகவும், ஒழுக்கமுள்ள மனைவி மார்களாகவும் இருக்கவேண்டும் என்பதையும் தான் நாம் வற்புறுத்துகிறோம். முஹ்தரமா கேத்தி ஆரா பேகம் அவர்கள் கூறுவதுபோல், முஸ்லிம் ஸ்திரீகள் மார்க்கக்கல்வியைக் கற்றுக் கொள்ளாமலும், மார்க்க பக்தியில்லாதவர்களாகவும் இருந்துகொண்டு சர்வ கலாசாலைப் படிப்புகளிற் றேர்ச்சிபெற்று பி. ஏ, எம், ஏ. முதலிய பட்டங்களைப் பெறுவதில் என்ன பிரயோஜனம் என்று தான் யாம் வினவுகின்றோம்.]

---


# சுல்தானியா படைமருந்து.

இந்தப் படைமருந்து அநேக வருஷங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலாய் நாடு, சியாம் முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகப் படுத்தப்பட்டு, ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றுளது. மேகப்படை சொறி சிரங்கு, கக்கூஸ்பத்து, எச்சில் தழும்பு முதலியவைகளையும் உடனே குணப்படுத்தும். ஒரேமுறை பரீக்ஷியுங்கள்.

புட்டி 1-க்கு விலை அணா 8.

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை,

(தஞ்சாவூர்).

# முகலாய அரசர்களின் தர்பார்

முகலாய சக்கிரவர்த்திகளின் ஆட்சிகாலத்தில் பரம்பரைப் பிரபுப்பட்டம் பெற்றவர்களும், சுயேச்சையுள்ள தலைவர்களும் கிடையாது. எந்த நவாபும், அமீரும் வாரிசுப் பாத்தியத்தினுல் பூமிகளையடையமுடியாது. பூமிகளனைத்தும் அரசருக்குச் சொந்தமானது என்று கருதப்பட்டுவந்தது. ஆதலால், நவாப்களும் அமீர்களும் தங்களுடைய மரணத்துக்குப்பின், தங்கள் சந்ததியினருக்குத் தங்கள் பூஸ்திதிகளை வாரிசு பாத்தியமாக அளிக்க முடியாது. ஆனுல், முகலாய அரசாங்கத்தில் அநேகம் நவாபுகளும் அமீர்களும் இருந்துவந்தனர். இவர்களனைவரும் தங்களுடைய சொந்தத் திறமையினுலேயே அந்தப் பதவிகளை அடைந்தனர். இவ்விதத் திறமைகளும் பெரும்பாலும் ராணுவ உத்தியோகஸ்தர் பதவிகளை யடைந்து அங்கு தங்கள் திறமைகளைச் செய்து காண்பிக்க வேண்டியதாக இருந்ததாலேற்பட்டதாகும்.

அரசாங்க உத்தியோகப் பதவிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்ததால், அந்நிய தேசங்களிலிருந்த தக்க திறமையாளர்கள் மொகலாய அரசாங்கத்தில் உத்தியோகப் பதவி யேற்பதற்காக அதிகம் வருவார்கள். இச்சம்பள விகிதம் காந்த சக்தியுள்ளதாக இருந்தது என்றுகூறுவது பொருந்தும். ஆகவே இவர்கள்பெரும்பாலும் ஈரான் தேசத்திலிருந்து வந்தவர்களாகவே இருந்தனர். அத்துடன் அங்குள்ள உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவுமிருந்தனர். இவர்கள் ஈரான் தேசத்து அரசாங்க தர்பாரில் அதிகம் பழக்கப்பெற்று தர்பாரின் ஒழுங்குமுறைகளை அறிந்தவர்களாகவுமிருந்தனர்.

## அரசரின் அதிகாரங்கள்

இவ்விதமாக மொகலாய தர்பார் உத்தியோகப் பதவியில் அந்நியதேசத்தார் அதிகம் இருந்தாலும், அறபியர், ஈரானியர், அப்கானியர், துருக்கர், இந்திய ஹிந்து முஸ்லிம்கள் ஆகிய யாவருக்கும் ஒன்றுபோல் சலுகை காட்டப்பட்டு வந்தது. ஒரு தேசத்தார், ஒருசமூகத்தார் என்பதற்காக, எவருக்கும் விசேஷச்சலுகை காட்டப்படுவதில்லை. ஆதலால், அனைவரும் உயர்பதவி யடையச் சந்தர்ப்பங்களையும் தருணங்களையும் ஒன்றுபோல் அடைந்துகொண்டிருந்தனர். ஹிந்துக்களில் பெரும்பாலும் ராஜபுத்திர இளவரசர்கள் தாம் அதிகமாக ராஜாக்கள், மகாராஜாக்கள் பதவிகளை அடைந்து வந்தனர். இவ்வாறு பற்பல வகுப்பு ராஜாக்களுக்கும், மகாராஜாக்களுக்கும், நவாப்களுக்கும், அமீர்களுக்கும் மொகலாய தர்பாரில் ஒன்று போல்இடம்கிடைப்பதால்,மொகலாயதர்பாரை கீழ்நாட்டு நாகரிகத்துக்குச் சிறந்த முன்மாதிரியாகக்கொள்வது மிகவும் தகும். இதல்லாமல், தலைவர்கள், அமீர்கள் ஆகியவர்களின் அதிகாரங்களும் ஒரு அளவுக்குத்தானிருந்து வந்தது.

அரசர் கடவுளின் பிரதிநிதியாக இருந்து அவர்களைப் பரிபாலிப்பதுடன், அவர்கள்மீது பூரண அதிகாரமும் அரசருக்கு இருந்தது. நவாப்களும், அமீர்களும் உயர்பதவியடைவதற்காக அரசரின் தயவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியவர்களாக இருந்தனர். ஆதலால், அமீர்களும், நவாப்களும், ராஜாக்களும், மகாராஜாக்களும் மொகலாயரின் தர்பாருக்கு பணிந்து சலாம் செய்வதில், ஒருவகையில் தங்களுக்குச் சிறுமை யுண்டாகுவதாகக் கருதினுலும், தங்களுடைய பெருமைக்கும் உயர்வுக்கும் அது பெரிய சாதகமாகவும் காணப்பட்டு வந்தது.

## தர்பார் மரியாதை

அரசாங்கக் கொண்டாட்ட காலங்களிலும், சமூகக் கொண்டாட்டத் திருநாள்களிலும் அமீர்களும், பொது ஜனங்களும் பாதுஷாவின் முன் மிக வணக்கமாக நிற்கவேண்டும். இவ்வாறு நிற்பதைப் பார்ப்பதானது அடிமைத்தனம் என்பதே உயிருடன் உருவெடுத்து வந்திருப்பதாகத் தோன்றும். அவர்கள் கைகட்டி, சிரம்வணங்கி நிற்க வேண்டும். அக்பர் சக்கிரவர்த்தியின் காலத்தில் ராஜா மான்சிங் பெரிய ஜெனரல்களின் அந்தஸ்திலிருந்தார். இவர் கொஞ்சம் நொண்டி நொண்டி நடப்பார். இவ்விதமான தங்கடமுள்ள இவரும்கூட, சக்கிரவர்த்தியின் தர்பாருக்கு வந்தால், தங்கத்தால் செய்யப்பட்ட தண்டத்தின் உதவியால் குனிந்து சலாம்செய்ய வேண்டியதாக இருந்

தது. இத்தண்டம் ஜெய்ப்பூர் சமஸ்தானத்தில் இப்பொழுதும் இருந்துவருகிறது. ஜஹாங்கீர் சக்கிரவர்த்தியின் காலத்தில் நடைபெற்ற ஒரு பெரிய யுத்தத்தில் பட்டத்து இளவரசர் வெற்றி பெற்றுத்திரும்பிய போது, அவ்வெற்றிக்கு வெகுமதியாக மொகல் தர்பாருக்குச் சலாம் செய்யும் சடங்கை இளவரசர் செய்ய வேண்டியதில்லை என்று சக்கிரவர்த்தி கட்டளையிட்டதுடன், ஜெயம்பெற்ற இளவரசருக்கு "ஷாஜஹான்' என்ற பட்டத்தையும் கொடுத்தார். தர்பார் நடை பெறுங்காலத்தில் இவ்விளவரசர் சக்கிரவர்த்திக்குப் பக்கத்தில் தங்க நாற்காலியில் வீற்றிருக்கவும் அனுமதி கொடுக்கப்பட்டது.

அரசாங்க வைபவ தினங்களில் இம்மரியாதையைச் செலுத்துவதற்கு விசேஷ சட்ட முறைகளும் ஒழுங்குகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சக்கரவர்த்தி அவர்கள் ஆசனத்தின் மீது அமரும்போது, சபையினர் மரியாதை செய்வர். அதாவது, சபையினர் தங்கள் வலது உள்ளங்கையை நெற்றியின்மீது வைத்துத் தலையைப் பூமியைப்பார்க்கும்படி கவிழ்த்துக் கொள்வர். இவ்விதமரியாதை செலுத்துபவர் அரசர்பால் தங்களுக்குள்ள ராஜபக்தியையும், அரசருக்குத் தாங்கள் கீழப்படிந்தவர்கள் என்பதையும் வெளியிடுவதுதான் இதை நிறைவேற்றுவதின் கருத்தாகும். "தஸ்லீம்" செய்வது தர்பார் மரியாதைச் சடங்குகளில் ஒன்றாகும். தஸ்லீம் செய்யும் வழக்கத்தை அக்பர் சக்கிரவர்த்தி உற்பத்திசெய்தார். வலது புறங்கையை பூமியின்மீது வைத்து, பின்னர் அதைக் கொஞ்சங் கொஞ்சமாய் மெதுவாக உயர்த்திக் கொண்டே சலாம் செய்பவர் எழுந்திருக்கவேண்டும். பின்னர் தனது உள்ளங்கையைத் தனது தலைப்பாகையின் மீது வைக்க வேண்டும். தர்பாருக்காகத் தன்னையே அர்ப்பணம் செய்வது என்பது இதன் பொருளாம். ஒரு உத்தியோகம், அல்லது ஜாகீர் அல்லது பதக்கம் அல்லது வெகுமதி ஏதேனும் அளிக்கும்போது அதை அடைபவர் தர்பாருக்கு மூன்று முறை சலாம் செய்யவேண்டும். மற்றைய சமயங்களில் தர்பாருக்கு ஒருமுறை சலாம் செய்வது போதுமானது.

### தீனே இலாஹியும் ஸஜ்தாவும்

அக்பர் சக்கிரவர்த்தியானவர் "தினே இலாஹி" என்று ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். இம்மதத்தை அவர் பிரகடனம் செய்தபோது, அக்பர் சக்கிரவர்த்தியின் பக்தர்களும், ஸ்தோத்திரக்காரர்களும் "மரியாதை" செய்வதற்குப் புதிய தொரு முறையை உற்பத்தி செய்தனர். இதற்கு "ஸஜ்தா" என்று பெயர் வைத்திருந்தனர். ஸஜ்தாச் செய்பவர்கள் பூமியில் படுத்து சாஷ்டாங்கம் செய்வர். தேவதைகளுக்கு இவ்வாறு சாஷ்டாங்கம் செய்வது வழக்கமாக இருந்தது. அதாவது, "அக்பர் சக்கிரவர்த்தியை நீங்கள் பார்த்தால், இறைவனையே பார்த்து விட்டீர்கள்" என்பது இந்த ஸஜ்தாவின் கருத்தாம். இம்மாதிரியான ஸஜ்தாச் செய்வதை அக்பர் சக்கிரவர்த்தி ஆதரித்தாராயினும், அதைச் செய்யும்படி எவரையும் நிர்ப்பந்தம் செய்யவில்லை. அன்றியும் மார்க்கபக்தியுள்ள முஸ்லிம்கள் இம்மாதிரியாக ஸஜ்தாச் செய்வதை வெறுத்தார்கள். ஆதலால், அரசாங்க வைபவங்களில் இந்த ஸஜ்தாவை அக்பர் தடுத்துவிட்டார். எனினும், எவரேனும் தனிமையில் அக்பர் சக்கிரவர்த்தியைச் சந்தித்தால் இம்மாதிரி ஸஜ்தா செய்வது அவசியமாக இருந்தது. அம்முறை அக்பர், ஜஹாங்கீர் ஆகியவர்களின் காலங்களில் நடை பெற்றது. பின்னர், பட்டத்துக்கு வந்த ஷாஹ்ஜஹான் சக்கிரவர்த்தி இதை நிறுத்திவிட்டார்.

### பாதுஷாவிடம் வேண்டிக் கோள்வதற்கான ஒழுங்குகள்.

சக்கிரவர்த்தியினிடம் நேருக்கு நேர் சம்பாஷணை செய்ய எவருக்கும் அனுமதி கிடையாது. அரசரின் ஆசனத்துக்குப் பக்கத்தில் இருப்பதற்காக ஒரு விசேஷ உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வுத்தியோகஸ்தரிடம் தான் எல்லோரும் தங்கள் முறைப்பாடுகளைச் சொல்லிக்கொள்ள வேண்டும். இந்த உத்தியோகஸ்தர் முதலில் மனுக்களையும் விண்ணப்பங்களையும் வாங்கிக்கொண்டு, பின்னர் அவர்கள் வாய் மொழியாகக் கூறுவதை அவர் கேட்பார். பின்னர், சக்கிரவர்த்தியவர்களிடம் அவைகளைச் சமர்ப்பிப்பார். சக்கிரவர்த்தியவர்களும் இந்த உத்தியோகஸ்தர் மூலமாகவே பதில் கூறுவார். ஏதேனும் கூறுவதாயினும் மிகவும் தாழ்ந்த குரலில் கூறுவார். அன்றியும், அரசரின் நாவிலிருந்து வெளிப்படும் வார்த்தை அர்த்த புஷ்டியுள்ளதாக இருந்தாலும் சரி அவ்வாறு இல்லா திருந்தாலும்

சரி அரசர் எதைக் கூறினாலும் சபையிலுள்ள அமீர்கள், சர்தார்கள் முதலிய யாவரும் வானத்தின் பக்கமாகக்கையை உயர்த்தி "கராமத்" "கராமத்" என்று கூறுவார்கள். மரியாதை செய்தலும், பணிவு செய்தலும் அளவுக்கு மீறிய சம்பிரதாயமாகிவிட்டது. அளவுக்கதிகமான முகஸ்துதி செய்தல் எல்லா ஜனங்களிடமும் பரவி விட்டது. பர்னீர் என்பவர் ஒரு பிராமணனைத் தன்னுடைய போஷகரான 'தானிஷ்மந்து' கானிடம் வேலைக்கமர்த்திவைத்தார். இவ்வேலை கிடைத்த கொஞ்சகாலம் சென்றபின், தனது எஜமானனைப் பற்றி அந்த பிராமணன் ஏதேனும் கூறநேர்ந்தால், தானிஷ்மந்துகானுக்கு விதம் விதமான பட்டப்பெயர்களையும் கௌரவப் பெயர்களையும் கூறுவது வழக்கம்.

### அரசாங்கத்தின் கௌரவத்தைக் காண்பித்தல்

மொகலாய சக்கிரவர்த்திகள் தங்களுடைய கௌரவத்தையும் பெருமையையும் காண்பிப்பதற்காக, அந்நிய தேசத்தார், தூதுவர்கள், தோல்வியடைந்த ராஜாக்கள், மகாராஜாக்கள் ஆகியவர்களை தர்பார் ஒழுங்குகளையும் மரியாதைகளையும் செய்யும்படி நிர்ப்பந்திப்பர். இவ்வாறு நிர்ப்பந்தம்செய்து அந்நியர்களையும் மற்றவர்களையும் பணியச் செய்வதில் அவ்வரசர்களுக்கு விசேஷமகிழ்ச்சி யுண்டாகிக் கொண்டிருந்தது.

### அக்பர் தர்பார் சம்பவம்

அக்பர் சக்கிரவர்த்தியின் தர்பாரில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி கிறிஸ்துவ ஆசிரியர் ஒருவர் பின்வருமாறு எழுதிஇருக்கிறார் :—

ஒரு ராஜா அக்பர் சக்கிரவர்த்திக்கு அடங்கி நடப்பதாக ஒப்புக்கொண்டார். அப்போது அச்சடங்கை நிறைவேற்றுவதற்காக தர்பார் கூட்டப்பட்டது. அக்பர் சக்கிரவர்த்தி தமதாசனத்தில் வீற்றிருந்தார். மேற்கண்ட ராஜா, அக்பர் தர்பார் கூடி இருக்கும் மண்டபத்தில் நுழைந்தவுடன் தனது தலையும் கையும் பூமியின் மீது படும்வரை குனிந்து பின்னர் கொஞ்சங் கொஞ்சமாக அக்பரின் ஆசனத்தின் பக்கமாக முன்நோக்கிவந்தார். இடையிடையே குனிந்து குனிந்து ஸலாம் செய்துகொண்டே வந்தார். அக்பரின் ஆசனத்துக்குக் கொஞ்சம் தூரத்தில் அந்த ராஜா வந்தபோது அவருடைய உடை முதலியவைகளில் ஆயுதங்கள் ஏதேனும் ஒளித்துவைக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசோதனை செய்யப்பட்டது. பின்னர், அந்த ராஜா, சக்கிரவர்த்தியின் ஆசனத்துக்கு வந்து அவரது கால்களைத் தொட்டார். அப்பொழுது சக்கிரவர்த்தி தம்முடைய் சந்தோஷத்தைத் தெரிவிக்கும் அறிகுறியாக ராஜாவின் பிடறியின் மீது கையைவைத்தார்.

அந்நியதேசத்து அரசாங்கப் பிரதிநிதிகள் இவ்விதமான சடங்குகளைச் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. ஆனால், அவர்களும் தர்பாருக்குள்ள பொதுவான ஒழுங்கு முறைகளை நிறைவேற்றவேண்டும். அந்நியர்கள் எவ்வளவு கண்ணியமுள்ளவராக இருந்தாலும் சக்கிரவர்த்தியை பேட்டிக்காண வேண்டுமாயின், தர்பார் கூடும் மண்டபத்திற்குப் பக்கத்தில் மர்மர் கற்களினால் அமைக்கப்பட்டுள்ள சிறிய அறையில் அப்பிரதிநிதிகள் வந்து நின்றுகொண்டிருக்கவேண்டும். தர்பார் உத்தியோகஸ்தர்கள் இவர்களின் வருகையைச் சக்கிரவர்த்திக்கு அறிவிப்பார்கள். அப்பொழுது சக்கிரவர்த்தி அவரை அழைத்து வரும்படி தமது அந்தரங்கக் காரியதரிசிக்கு உத்தரவு கொடுப்பார்.

### அரசமரியாதையும், ஈரானிய தூதுவரும்

அடிக்கடி இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த ஈரான் தேசத்துத் தூதுவர்கள் இந்தியாவிலுள்ள அரச தர்பாரின் மரியாதையை நிறைவேற்றுவது மிகக் கஷ்டமாக இருந்துகொண்டிருந்தது. ஆதலால், அவர்கள் அதை நிறைவேற்றாதிருப்பதற்கான முயற்சிகளைச்செய்து கொண்டிருந்தனர். ஆனால், சக்கிரவர்த்தி, ஈரானியர்கள் அம்மரியாதையை அவசியம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தினார். ஒருமுறை ஈரானியத்தூதுவரொருவர் இந்தியாவுக்குவந்தார். அத்தூதுவரை நன்கு உபசரிக்கவேண்டுமென்று ஔரங்கசீப் சக்கிரவர்த்தி தமது மாகாண கவர்னர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆகவே, சக்கிரவர்த்தியின் கட்டளைப்படி ஒரு உத்தியோகஸ்தர் மொகலாய அரசாங்க எல்லைப்புறத்தில் இத் தூதுவரை வரவேற்று, தர்பாரின் ஒழுங்கு முறைகள் இன்னின்ன விதமென்று அறிவித்து அதைச் சரியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் தாக்கீது செய்திருந்தார். ஆயினும், ஈரான் தூதுவர்கள் இவ்விஷயத்

தில் அனுவசியமாகப் பிடிவாதம் செய்வது ஔரங்கசீப் சக்கிரவர்த்திக்கு முன்னரே தெரிந்திருந்தது. ஆதலால், தர்பாரின் வாசலிலேயே சிலரைச் சக்கிரவர்த்தி நிறுத்தி வைத்து, தாபாரின் ஒழுங்குமுறையை நிறைவேற்றுவதில் ஈரானிய தூதுவர் தாமதம் செய்தால், அவரை நிர்பந்தமாக அம்மரியாதையைச் செய்விக்க வேண்டும் என்றும் தாக்கீது செய்திருந்தார்.

ஈரானிய தூதுவர் தர்பார் மண்டபத்தில் நுழைந்ததும், ஈரான்தேசத்து வழக்கப்படி தர்பாருக்கு மரியாதை செய்ய ஆரம்பித்தார். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த நான்கு பாலாட்டிய ஜவான்களில் இருவர், அத்தூதுவரின் கையைப் பிடித்துக் கொண்டனர். மற்றிருவர் அவரது பிடரியைப் பிடித்து எவ்விதமான அக்கிரமும் கொடுமையுமின்றி, அவருடைய கையைப் பூமியின் பக்கமாக இழுத்து அவரைக் குனியவைத்து இங்கு மரியாதை செலுத்துவதற்கு இதுதான்முறை என்று கூறினர்கள். அத்தூதுவர் விவேகியாக இருந்தாராதலின், பாக்கியுள்ள சடங்குகளை எல்லாம் தானுகவே மகிழ்ச்சியுடன் நிறைவேற்றினர். மொகலாயச் சக்கிரவர்த்தியின் தர்பாரில் இம்மாதிரியான மரியாதையைச் செய்யாதவர்களில் பிரிட்டிஷ் தூதுவரான ஸர் தாமஸ்ரோ என்பவர்தான் முதலாவது மனிதர்.

தர்பாரில் பெரும் பெரும் சம்பவங்கள் நிகழ்ந்தாலும் பயமில்லாமல் சந்தோஷமாக இருக்கவேண்டும், பீதிகொள்வதாகக் காண்பித்துக்கொள்ளக் கூடாது.

## ருசிகரமான வழக்குகள்

'ஷாஜஹான்' சக்கிரவர்த்தியின் ஆட்சி காலத்தில் ஒரு ஹிந்து லேவாதேவிக்காரரின் வேலைக்காரியை ஒரு சிப்பாய் அழைத்துச் சென்றனன். அந்த ஹிந்து வழக்குத் தொடுத்தான். வாதி, பிரதிவாதி, ஆகிய இருவரும் வேலைக்காரியை தங்களுக்குச் சொந்தம் என்றே கூறினர். இருவரிடமும் தக்க ருஜுவிருந்தது. நீதிபதியால் இவ்வழக்கை முடிவுசெய்ய முடியவில்லை. ஷாஜஹான் சக்கிரவர்த்தி அவர்களிடம் இவ்வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டது. சக்கிரவர்த்தி இருவரையும் அழைத்து விசாரணை புரிந்தார். கீழ்க்கோர்ட்டில் கூறியதுபோல் இருவரும் அவ்வடிமைப் பெண் தங்களுக்குச் சொந்தமானவள் என்றே கூறினர். உடனே, வழக்கை முடிவு செய்ய முடியவில்லை. ஆதலால், சக்கிரவர்த்தியவர்கள் தம்முடைய அந்தப்புரத்துக்கு அவ்வடிமைப் பெண்ணை அனுப்பிவிட்டு, கக்ஷிக்காரர்களிருவரையும் வீட்டுக்கனுப்பிவிட்டார். பின்னர், ஒருநாள் ஷாஜஷான் சக்கிரவர்த்தி அவ்வடிமைப்பெண்ணை அழைத்து மைக்கூட்டில் மைபோட்டுக் கொண்டு வரும்படி கூறினர். அவள் சரியாக மை போட்டுக் கொண்டு போய்க் கொடுத்தனள். உடனே, சக்கிரவர்த்தி அப்பெண் ஹிந்து முதலாளிக்குத் தான் சொந்தமானவள் என்றுகூறியதுடன், சிப்பாயினிடத்தில் இவள் இருந்து பயிற்சி பெற்றிருந்தால் இம்மாதிரி மைபோட்டுக் கொண்டு வர கற்றுக்கொண்டிருக்க மாட்டாள் என்று தீர்ப்புச்செய்து, அவளை ஹிந்துவினிடம் ஒப்புவித்தார்.

ஒரு கடையில் நான்கு பேர் கூட்டுக்காரர்களாக இருந்தார்கள். தினசரி ஒருவர் கடையிலிருந்து வியாபாரம் செய்யவேண்டும் என்பதும், அன்றையதினம் கடைக்கு ஏற்படுகிற விளக்கு எண்ணெய் செலவையும், கடையிலிருக்கிற பூனைக்கு ஆகாரங் கொடுக்கும் பொறுப்பையும், அன்று கடைவியாபாரம் செய்பவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இவர்கள் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். இவ்விதமாகக் கடை வியாபாரம் செய்துகொண்டிருந்தபோது, தற்செயலாக ஒருநாள் பூனையின் கால்ஒன்று மூறிந்துபோயிற்று. அதையும் தினசரி அவர்கள் கவனித்துமருந்து போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் பூனை கால்வலி பொறுக்க மாட்டாமல் விளக்கின் அண்டையில் வந்து அதை உரசிற்று. இதனுல், பூனையின் காலில் கட்டப்பட்டிருந்த பட்டியில் நெருப்புப் பற்றிக்கொண்டது. பூனையானது காலில் நெருப்புப் பற்றிக்கொண்டதைக் கண்டு பயந்து, பஞ்சுப்பொதி மூட்டைகளுக்குள் ஒடிற்று. இதனுல் பஞ்சுமுட்டையில் நெருப்புப் பற்றி கடைமுழுதும் எறிந்து சாம்பலாயிற்று.

மற்றக் கூட்டாளிகள் மூவரும் அன்று கடைவியாபாரம் செய்தவர்மீது நஷ்டத்துக்கு வழக்குத் தொடுத்தார்கள். நீதிஸ்தலத்தில் நஷ்ட ஈடு கொடுக்கும்படி தீர்ப்பாயிற்று. ஆனல், பிரதிவாதியானவர் ஷாஜஹான் சக்கிரவர்த்தியிடம் அப்பீல் செய்தார். சக்கிரவர்த்தி வழக்கை விசாரித்து கக்ஷிக்காரர்களை

அழைத்து அவரவரின் வாதங்களையும் கேட்டுக் கொண்டு கீழ்க் கோர்ட்டுத்தீர்ப்பை ரத்துச் செய்து, அப்பீல்தாருக்குச் சாதகமாகத் தீர்ப்புச் செய்ததுடன், சேதமில்லாத மூன்றுகால்களால்தான் பூனை அவ்விடத்தைவிட்டு ஓடிப் பஞ்சுப்பொதி மூட்டைகளுக்குள் சென்றது என்றும், சிகிச்சையில் இருந்த காலால் பூனை நடக்கமுடியாதென்றும், ஆதலால், அன்றைய தினம் பூனையைப் பரிபாலித்தவருக்குப் பூனையின் சேதப்பட்டகால் சொந்தமாக இருப்பதால் பாக்கியுள்ள மூன்று கால்களினாலேயே கடை எரிந்து நாசமாயிருப்பதாக வெளியாகுவதால், மற்றைய மூன்று பங்காளிகளும், அன்று வியாபாரம் செய்து பூனைக்குச்சிகிச்சை செய்த கூட்டாளிக்கு நஷ்டம் கொடுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டார்.

---

# தென் ஆப்ரிக்காவிலுமா காதியானிப் பிரசாரம்?

மௌலானா லால் ஹுஸைன் சாஹிப் அக்தர் அவர்களின் அரிய சேவை.

(கெனியா, நைரோபி அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம், ஹானரரி செக்ரிடரி அறிவிக்கிறார்)

அல்லாஹ்தஆலா, மௌலானா அவர்களின் தற்சுபாவத்திலேயே காதியானிகளை அபாரமுறையில் தோற்கடிக்கும் ஓர் நெகிழ்ற்ற சக்தியை அமைத்திருக்கின்றான்போலும். எனவே, அவர்கள் ஆங்காங்கு பிரசங்கமாரி பொழிவதை ஒருவாறு நோட்டமிட்டுப் பார்ப்போமாகில், பொதுவாக எல்லோருடைய மனதிலும் காதியானிக் கொள்கையின்மீது ஒரு விதமான வெறுப்பு ஏற்படுவதற்கு, அவர்களது பிரசங்கந்தான் பிரதானகாரணமாக இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்கிறோம்.

சென்ற சிலநாளைக்குமுன் மிர்ஸாயீவகுப்பார் ஓர் விளம்பரம் வெளியிட்டு, அதில் டிஸம்பர் மாதம் 30-ம் தேதி, தென் ஆப்பிரிக்காவிலுள்ள நைரோபி சினிமாக்கொட்டகையில் ஒருகூட்டம் நடைபெறுமென்றும், அதில், மௌலானா லால் ஹுஸைன் சாஹிப் அக்தர் அவர்கள் தங்களுடைய பல பிரசங்கங்களிலும் காதியானி மதத்தைப்பற்றி பலவாறு பிதற்றிக்கொண்டு வருவதற்கு, காதியானி மதப்பிரசாரகரான ஷேக் முபாரக் அஹ்மத்ஸாஹிப் தக்கவாயாப்பு அளிப்பார்களென்றும் குறிப்பிட்டிருந்தார்கள். அத்துடன் பிரசங்கமுடிவில் யாரும் கேள்விகேழ்ப்பதற்கும் அனுமதி அளிக்கப்படுமென்றும் கண்டிருந்தது. இந்த விளம்பரத்தை கண்ணுற்ற முஸ்லிம்கள், மௌலானா லால் ஹுஸைன் சாஹிப் அவர்கள்கேள்வி கேழ்ப்பதற்காக மிர்ஸாயீ கூட்டத்திற்கு விஜயம் செய்வார்களென்றும், சகலரும் அக்கூட்டத்திற்கு சமூகமளிக்க வேண்டுமென்றும், அவ்விடத்திலுள்ள சகல பள்ளிவாசல் பொதுக்கூட்டங்களில் தெரியப்படுத்தப்பட்டவுடன், கூட்டம் நடைபெறும் தினத்தன்று முன்னாடியே பலமதஸ்தர்களும் பெருந்திரளாக வந்துஅந்த ஹாலில் கூடிவிட்டனர்.

குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு சற்று முன்பு, மிர்ஸாயீ பிரசாரகரான ஷேக்முபாரக் அஹ்மத்சாஹிப், சபைக்குத் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருப்பவருடன் அங்குவந்து சேர்ந்தார். சுமார் 6½-மணிக்கு சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. பிரசங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் மௌலானா லால் ஹுஸைன் சாஹிப் அவர்கள் எழுந்து சபைத் தலைவரை நோக்கி, பிரசங்கத்துக்குப் பின் கேழ்விகள் கேள்ப்பதற்காக எவ்வளவு நேரம் அனுமதிக்கப்படும் என, கேட்டார்கள். ஆனால் பிரசங்கியாரின் சமிக்கையின்மீது, தலைவர் கூடியவரை பசப்பி, பிரசங்க முடிவில் அதைப்பற்றி யோசித்துக் கொள்ளலாமெனக் கூறியும், மௌலானா அவர்கள் அதனை அங்கீகரியாது சபைமுன்வந்து தர்க்கஞ்செய்ய முற்படவே, சபைத்தலைவர் நிற்பந்தத்தின்மீது 40 நிமிஷ நேரம் அனுமதிகொடுக்க நேர்ந்தது. ஷேக்சாஹிப் சொற்பெருக்காற்றி வருவதற்கிடையே அப்கானியரைப்பற்றி குறிப்பிட்டு, பட்டான்கள் விஷயமாய், "படான்கள் விவாகஞ்செய்து கொள்ளுவது, பெண்கேட்டு நிச்சயித்துக்கொள்வது இவ்விரண்டிற்கு மிடையே வித்தியாசம் பாராட்டுவதில்லை; நிச்சயம் ஏற்பட்டவுடனேயே பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்களுடன் சம்பந்தம் வைத்துக்

கொண்டு கெர்ப்பதியாகவுமாய் விடுகிறார்க ளென, மிர்ஸாஜீ கூறியிருக்கிறார்" எனக்குறிப் பிட்டு, இஃது துர்ப்பழக்கமல்ல; இவ்வாறே பஞ்சாபிலுள்ள சிற்சில வகுப்பினர்களுக் கிடையேயும் நடைபெற்று வருவதாகவும் ஆதா ரங் காட்டினர். (இவ்வாறு ஒருக்கால் காதியான் என்னுமூரில் நடைபெறுவதைப்பற்றி ஆச் சரியமொன்றுமில்லை.) இவ்வார்த்தைகளை செவி யுற்ற படான்கள், "இது அபாண்டப் புழுகா கும்" எனக்கூறி பெருங்கூச்சலிட்டனர். இக் கூச்சலை அமர்க்கை செய்வது பெரும் கஷ்டத்தி லாய்விட்டது. ஒருவாறு சப்தம் அடங்கிய வுடன் $11\frac{1}{2}$ மணி சுமாருக்கு சீக்கியரும் ஹிந் துக்களும் சேர்ந்து, ஷேக் சாஹிப் அவர்களது பிரசங்கம் நீண்டு கொண்டே போவதால் மௌலானா அவர்கள் பேசுவதற்கு அனுமதி யளிக்க வேண்டுமென விரும்பினர்.

சபைத் தலைவரின் அனுமதியின்மீது ஷேக் சாஹிப் கீழே உட்கார்ந்தவுடன், மௌலானா அவர்கள் எழுந்து, ஷேக்சாஹிப் மூன்று மணி நேரம் துயர்படியாக செய்து வந்த பிரசங்கம் முழுவதையும் தண்ணீர் கொண்டு அலசிவிட் டார்கள். முடிவில் மௌலானா அவர்கள் கூறிய வைகளுக்கு ஏதாகிலும் பதில் கூறுவதுபோல் மழுப்பி விடலாமென்று சபைத்தலைவர், எவ்வள வோ தூரம் முயற்சித்துப்பார்த்தும், மௌலானா அவர்கள் மிர்ஸாயீகளை நோக்கி, குறிப்பிடப் பட்டுள்ள நேரம் முடிவடைந்து விட்டதால், இனி நீங்கள் பேசுவதற்கு எவ்வித பாத்திய தையுமில்லை; கூறவேண்டியவைகளெல்லாம்கூறி முடிந்துவிட்டது; பொதுஜனங்கள் உண்மை விஷயங்கள் முழுதையும் தெரிந்துகொண்டுவிட் டார்கள், எனத் தெரிவித்துவிட்டார்கள்.

சபையின் நடவடிக்கைகள் 1-10க்கு முடி வடைந்தது. அதுபொழுது மிர்ஸாயீகளின் முகக்குறிகள், பார்ப்பதற்குத் தகுதியுடைய தாக இருந்தது. அன்னோர் வெறுப்புற்றவர்க ளாய் துக்கச்சமுத்திரத்தில் ஆழ்ந்து, கண்ணீர் விட்டவர்களாய் மழையில் நனைந்துகொண்டு பிரசங்க மண்டபத்தைவிட்டு வெளிப்புறப்பட் டுச் செல்ல ஆரம்பித்தனர். நைருபிப்பட்ட ணத்திலுள்ள அந்த சினிமாஹால் இருக்கும் வரை, இந்தத் தோல்வியின் கவலையானது, மிர்ஸாயிகளின் மனங்களை விஷம் தீண்டுவது போல் தீண்டிக் கொண்டிருக்குமெனக் சொல் லப்படுகிறது.

---

## அரிய உபன்னியாசம்

டாக்டர் காலித் ஷெல்ட்ரேக் அவர்கள், இலாஹஆபாத் அப்பாஸ் மன்ஜிலிலுள்ள லைபேரியில் ஆற்றிய சோற்பெருக்கின் சாராம்சம்.—

சகோதிரர்களே! நான் பிரிட்டனிலுள்ள ஓர் ஆங்கிலமுஸ்லிமாகும். யான் தூய்மை வாய்ந்த இஸ்லாத்தைத் தழுவி இன்றைக்கு 29 ஆண்டுகளாகின்றன. ஆரம்பத்தில் என் தந் தை என்னை ஓர் பாதிரியாக ஆக்கிவிட முயன் றார். யான் அதற்குச் சம்மதியாது சிலகாலம் வரை யாதொரு மார்க்கமு மில்லாதநாஸ்திகனாக இருந்தேன். அதுபொழுது இஸ்லாத்தின்மீது எனக்கு சற்றும் கவனம் ஏற்படவே இல்லை.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், பைபிள், யூதர்களின் வேதம் இவைகளிலிருந்து அநேக விஷயங்களை எடுத்து குர்ஆன் ஷரீபில் கையாண் டிருக்கிறார்க ளென்பது பொதுவாக ஐரோப் பியருடைய நோக்கமாக இருந்துவருகிறது. யான் இதை அபாண்டமான கட்டுக்கதை என்றே கருதுகிறேன். பெருமானார் (ஸல்.) அவர்கள் குர்ஆன்ஷரீபை போதித்தகாலை தற் போதுள்ள பைபிள் புத்தக ரூபமாக இருக்க வில்லை. காத்தலிக் பைபிள் கி.பி. 1845ம் ஆண்டி லும், புரொடஸ்டு பைபிள் 1552-ம் ஆண்டி லும் ஒழுங்குபடுத்தப்பட் டிருப்பதாகத் தெரி கிறது. மஸீஹ் (அலை.) அவர்களுக்குமுன்னுள்ள நபிமார்கள் மீது இறக்கிவைக்கப்பட்ட வேதங் களிலும், அதற்கு முன்னுள்ள நபிமார்களின் சரித்திரங்களைப்பற்றிக் கூறப்பட்டு வந் திருப்பதுபோல, குர்ஆன் ஷரீபிலும் பற்பல நபிமார்களைப்பற்றிக் கூறப்பட்டிருப்பது, இஃது உண்மையான வேதமென்பதை நன்கு அறி விக்கிறது.

யான் புத்தர்களுடையவும், ஹிந்துக்களுடை யவும், இதர மதஸ்தர்களுடையவும் வேதங்களை யும் நோட்டமிட்டிருக்கிறேன். கிறிஸ்தவர்க

ளில் மார்க்கசம்பந்தமாக 490 பிரிவுகள் இருப்ப தால், அவைகளில் பிரதானமான ஓர் பிரிவை எடுத்துக் கொண்டு அவைகளின் ஒற்றுமைக்கான அநேககட்டுரைகள் எழுதி பத்திரிகையில்வெளியிட்டு வந்தேன். அது பொழுது யான் புத்தமத கிரந்தங்களைப் படித்து ஒருவாறு அதன்மீது பற்றுக் கொண் டிருந்தேனுயினும், அநேக பிரமதஸ்தர் இஸ் லாத்துக்கு விரோதமாக பற்பல நூல்கள் எழுதி வருவதைப் பார்த்தவுடன், உண்மை யில் இஸ்லாம் உலகில் ஓர் சத்தியமதமாக இல் லாதுபோனுல், இஸ்லாத்துக்கு விரோதமாக, இவ்வாறு நூல்கள் எழுத மனம் துணிவு கொள்ள மாட்டாது ஆகவே இஸ்லாம் ஓர் உண்மையான சத்திய மதமாகத்தானிருக்க வேண்டுமென்று கருதினேன். இந்த எண்ணமா னது என்னை இஸ்லாமிய கிரந்தங்களை நோட்ட மிடுவதளவில் தூண்டிவிட்டது. அதற்குப்பின் யான் முஸ்லிமாய்விட்டேன். அதுகாலை என் பார்வைக்கு வந்தது (1) குர்ஆன்ஷரீபுக்கு சேல் துரையால் எழுதப்பட்ட தர்ஜுமா. (2) ஸர் வில்லியம் முயூர் என்பவரால் எழுதப் பட்ட நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் வாழுள் சரிதை இவ்விரண்டும்தான்.

ஈ. பி. கோ. 1903, ஜுலை மாதம் 14-ந்தேதி யாகிய எனது 16-ம் பிராயத்தில், யான் இஸ் லாம் மதத்தைத் தழுவிக்கொண்டதாக வெளி ரங்கப்படுத்தி குஸ் து ந் துனியாவிலுள்ள "அபாஸுபியா"வுக்குத்தெரியப்படுத்தினேன். இஸ்லாத்தைத் தழுவிய ஆரத்தில் யான் பற் பலவாறுன கஷ்ட சங்கடங்களை அனுபவிக்க வும் நேர்ந்தது.

அதிலொரு சம்பவமாவது:—யான் ஓர் பாதிரியாரிடம், உங்களுடைய பைபிளில் பல வாறுன திருத்தங்கள் ஏற்பட்டுப்போயிருக் கிறது எனக் கூறியபோது, அவர் என் வலது கன்னத்தில் ஓர் அடிகொடுத்தார். உடனே யான் இடது கன்னத்தை அவர் பக்கல் திருப் பிக் காண்பித்து, இது உங்கள் பைபிளின் போதனையாகுமென்று கூறினேன்.

நண்பீர்! உலகின்கண் பற்பல நபிமார்கள் தோன்றினர்கள். முகம்மது நபி (ஸல்.) அவர் கள், அவர்கள் யாவரினும் கடைசியானவர்க ளாகும். முஸ்லிம்கள் இஸ்லாத்தின் போதனை யின்மீதும், குர்ஆன் ஷரீபின்கட்டளையின்மீதும் பற்றுக்கொண்டு அவைகளைப் பின்பற்றி யொழுகி வரும்வரை அல்லாஹ்வின் கிருபை யும் ஜெயமும் அவர்களைப்பற்றிக் கொண்டே இருக்கும். அவர்களிடமிருந்து இஸ்லாமிய வாஞ்சை, ஈமானின் பலம் இவைகள் அகன்று விடுமாயின், அதுபொழுது பற்பலவாறுன கஷ்ட சங்கடத்தில் அன்னேர் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும்படி நேரிடும். எனவே, முஸ் லிம் நேயர்காள்! கட்சிப்பிரிவினையையும் சமூ கச்சச்சரவுகளையும் விட்டொழியுங்கள்! வெள்ளை யன் கருப்பன், ஏழை சீமான், ஐரோப்பியன் ஹபஷி என்னும் பாகுபாடில்லாது, ஒவ்வொரு தேசத்திலுள்ள ஆண்பெண் இருபாலார்மீதும் இஸ்லாத்தின் போதனை கடமையாக்கப்பட் டிருக்கிறது. எனவே, இஸ்லாம் வெளிரங்க மான அழகை கவனியாது, குணம் அழகாக இருப்பதைத்தான் விரும்புகிறது. ஆகவே, ஓர் வெள்ளை நிறத்தையுடைய இஸ்லாத்தைத் தழுவாத ஐரோப்பியனைவிட, இஸ்லாத்தின் ஒளி வீசிக்கொண்டிருக்கும் கருத்த மேனியை யுடைய ஓர் ஹபஷீ மேலானவனுகும். நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் வருகை யைப்பற்றி தவ்ருத், இன்ஜீல் முதலிய கிரந்தங் களில் பல முன்னறிக்கைகள் செய்யப்பட்டிருக் கின்றன. துர் அதிர்ஷ்டவசமாக ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்களது போதனைகள் இதுகாலை உலகிற்கிடையா. "உம்முடைய சகோதரரில் உம்மைப்போல் ஓர் நபியை உண்டுபண்ணு வேன்" என, ஹஸ்ரத் மூஸா (அலை.) அவர் களுக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறே ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை.) அவர்களின் சந்ததியில் பெருமானுர் (ஸல்.) தோன்றினர் கள். அவர்கள் அல்லாஹ்த ஆலாவினுல் உவக் கப்பட்ட உண்மை நபியாக இருந்தார்களென் பது அவர்களது வாழ்க்கைமுறையைக் கொண்டே நன்கு புலனுகிறது.

உலகினில் இதுகாலம்வரை 13 நூற்றுண்டுக ளாய் ஓர் அச்சரமென்ன, சிறு புள்ளியுங்கூட மாற்றப்படாது அப்படியே பத்திரப்படுத்தப் பட்டு கியாதிவாய்ந்ததாக இருப்பது குர்ஆன் ஷரீப் ஒன்றேயாகும். இது அத்திருமறையின் அபார சக்திவாய்ந்த அற்புதமாகக் காணப்படு கிறது. முஸ்லிம்கள் யாவரும் ஏக சகோதரர்க ளாகும். இஸ்லாத்தில் தேசம் நிறம் ஜாதி முதலிய எவ்விதமான வித்தியாயமுங் கிடையா தென, அத்திருமறை பஹிரங்கப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனுல், இதுகாலை முஸ் லிம்கள் குர்ஆன் போதனையை மறந்து, இஸ்லா மிய சகோதர வாஞ்சையை இழந்துவிட்டதால்

உலகினுள் ரொம்ப கேவலமாக மதிக்கப்படுகின்றனர். நாம் குர்ஆன்ஷரீபின் கருத்துகளை ஆழ்ந்து கவனிப்போமாகில், நம்மில் ஓர் புதிய ஆத்மசக்தி உண்டாய்விடுகிறது. ஆகவே, அக்காலம் நமக்குக் கிட்டுவதற்குள்ள சமீப அறிகுறிகள் தோன்றிக்கொண்டிருக்கிறது. எனவே, ஒரு காலத்தில் ஐரோப்பாவும் இஸ்லாத்தை தழுவ முற்பட்டுவிடும்.

குர்ஆன் ஷரீப் சமத்துவத்தை போதிக்கிறது. தொழுகையானது அச்சமத்துவத்தை வெளியாக்குவதற்குள்ள பிரதான அடையாளமாக இருந்துவருகிறது. கஃபத்துல்லாஷரீப் உலகத்திற்கு மத்தியில்தொப்புள்போல் அமைந்திருக்கிறது. இஸ்லாம் மார்க்கத்தின் இந்த மத்திய இடமானது இஸ்லாமிய சமூக மொன்றுக்குத்தான் பிரத்தியேகமாக அமைந்திருக்கிறது. ஆகவே, முஸ்லிம்கள் யாவரும் அதன் பக்கல் முன்னோக்கி தொழுகையை நிறைவேற்றி வருகின்றனர். எனவே, தொழுகைக்குள் இரண்டு பிரதான முக்கிய விஷயங்கள் அமைந்திருக்கின்றன. (1) தேசத்தின் நாலு பாகங்களிலுமுள்ளவர்கள் ஒரே இடத்தை நோக்கித் தொழுவது (2)ஏழை பணக்காரரென்னும்வித்தியாசம் பாராது யாவரும் காலோடு கால், தோளோடுதோள் சேர்த்து நிற்பது. முதலாவது, இஸ்லாத்தின் ஏகத்துவ ஒற்றுமையையும், இரண்டாவது முஸ்லிம்கள் யாவரும் சகோதரத்துவம் என்னும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, கால்களில் இஸ்லாத்தின் ஐக்கியமென்னும் ஒரே வளையம் அணிந்துகொண்டு ஐக்கியமாக வாழுகிறார்களென்பதையும் காட்டுகிறது.

சமூகச்சோதரீர்! நீங்கள் பரிபூர்ணமான ஈமானுடையவர்களாக இருந்துகொண்டு உடுப்பிலும் ஐசுவரியத்திலும் கேவலமாக இருப்பீர்களாயினும், இதர சமூகத்தார் உங்களை கௌரவமாகவே நோக்கி, உங்களுக்கு மரியாதை செய்வர். ஆனால் உங்களில் சற்றேனும் மாற்றந் தோன்றுமாகில் அதுகாலை இதரர் உங்களைக் கேவலமாக மதித்துவிடுவர். ஆகவே, பாவஞ் செய்வதைவிட்டுத் தப்பித்துக்கொள்ளுங்கள்! பாவங்கள் செய்துகொண்டே அடிக்கடி ‘தௌபா’ச்செய்வது, பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குத் தகுதியற்றனவாக இருப்பதுடன் அல்லாஹ், ரசூலை பரிகசிக்கும் காரியமுமாக இருக்கிறது. எவன் பாவமான காரியங்களில் ஈடுபடாது, மானிடர்களுக்கு உதவிபுரிகின்றானோ, அவனே சிறந்த புருடனாகும். இஸ்லாம் மானிடத் தன்மைக்குள்ள மார்க்கமாக இருப்பதால், அது ஒரு தேசம் ஒரு சமூகத்தாருக்குச் சொந்தமானதாக இருக்கவில்லை.

இஸ்லாம் வாள் பலத்தைக் கொண்டுதான் பரத்தப்பட்டதென்பது சிலருடைய அபிப்பிராயமாக இருந்து வருகிறது. இது தவறானதும் அஸ்திவாரமற்றதுமாகும். எத்தனையோ தேசங்களிருக்கின்றன, யாதொரு வாளாயுதம் பூண்டவீரரும் செல்லாத நிலைமையில் அங்கு ஆயிரக்கணக்கான முஸ்லிம்களிருக்கின்றனர். சைனாவைப் பாருங்கள்! அங்கு ஐந்து கோடி முஸ்லிம்களிருக்கின்றனர். ஐரோப்பாவில் ஏழு மில்லியன் முஸ்லிம்களும், இவ்வாறே ஜாவா, சுமாட்ராவில் லக்ஷக்கணக்கான முஸ்லிம்களும் வதிந்து வருகின்றனர். ஆனால் அவ்விடங்களில் எவ்வாறான வாளாயுதமும் உபயோகப்படுத்தப்படவில்லை. இதோ உங்கள் முன் நிற்கும் என்னை, எந்தவாள் பலத்தைக்கொண்டு இஸ்லாமாக்கினார்களென்று யாராலும் கூறமுடியுமா?

208340

## அறிவிப்பு.

தஞ்சை ஜில்லா பொதக்குடி மதரஸா சம்பந்தமாக நடந்த வியாஜ்யம் (தஞ்சாவூர் சப்கோர்ட்டு, O. S. No, 5/29) சென்ற ஜூன் மாதம் ராஜி ஆனது முதல், "நூர்முகம்மது மதரஸா" என்கிற "அந்நூர் முகம்மதியு மதரஸா" என்னும் புதுப்பெயருடன், பொதக்குடி பொ. செ. நா. முகம்மது காசிம் முதல் டிரஸ்டியாகவும், ஹாஜி சி. அ. முகம்மது ஷரீபு இரண்டாவது டிரஷ்டியாகவும் ஜாயிண்டாக, மதரஸாவுக்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் வகித்து தர்மகாரியங்களை நடத்திவருகிறோம். ஆகவே, இனி இந்த மதரஸா எஸ்டேட் சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் மேற்படி ஜாயிண்டு டிரஸ்டிகளாகிய எங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம் என்று, முதல் டிரஸ்டி, பொ. செ. நா. முகம்மது காசிம் அறிவிக்கிறார்.

# காலண்டர்கள் வரவு.

கமால் நைனர் அண்டு கம்பெனி:—கண்டி பிரபல்ய இரும்பு வியாபாரிகளாகிய மெஸ்ஸர்ஸ் கமால் நைனர் கம்பெனியின், எஸ்டேட்ஸ் சப்ளை ஹௌஸிலிருந்து காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், ஒவ்வொரு ஷீட்டிலும் அரும் மொழிகள் அமைந்த வாக்கியங்கள் அமைந்தனவாகவுமிருக்கிறது. அதன் அட்டையில் அக் கம்பெனியில் கிடைக்கும் பலவாறான சாமான்களில் முக்கியமானவைகளை விவரிக்கப்பட்டதாகவுமிருக்கிறது.

உதுமான் அண்டு ஸன்:—கம்பளை ஸ்டேட் சப்ளை ஏஜெண்டும் பிரபல்யவர்த்தகருமான மெஸ்ஸர்ஸ் உதுமான் அண்டு ஸன் அவர்களிடமிருந்து தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதும், அதன் அட்டையில் பிரதான வியாபாரச் சரக்குகள் பொறிக்கப்பட்டிருப்பதாகவுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மிக அழகானதாயும் மனதைக் கவரகூடியதாகவுமிருக்கிறது.

A. M. அப்துல்லா சாஹிப் அண்டு கம்பெனி:— சிங்கப்பூர் பிரபல்ய வர்த்தகரும், கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் அண்டு கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று, சென்னையிலுள்ள அவர்களது பிராஞ்சு ஆபீஸாகிய மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிப் ஸன்ஸ் மூலம் வரப்பெற்றோம். அது 12 ஷீட்களையுடையதாகவும், அரபி, தமிழ், இங்கிலீஷ் ஆகிய இம்மூன்று தேதிகளையும் ஒருங்கே காட்டக்கூடியதாயும், முக்கிய விசேஷ தினங்களுக்கு பிரத்தியேக அடையாளங்களிடப்பட்டதாயும் மிக்க நேர்த்தியானதாயுமிருக்கிறது.

ஜெயரசம் டிப்போ:—அய்யம்பேட்டை பிரபல்ய ஔஷதாலயமாகிய ஜெயரசம் டிப்போவின் புரொப்ரெய்ட்டர் A. K. முகம்மது சுல்த்தான் சாஹிப் அவர்களிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது மூன்று தேதிகளையும் ஒருங்கே காண்பிக்கக்கூடியதாகவும், தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், அதன் அட்டையில் சுல்தானியா படை மருந்தின் திவ்விய குணங்கள் தீட்டப்பட்டு தக்க முறையில் விளம்பரஞ் செய்யப்பட்டதாயுமிருக்கிறது. அந்த அட்டையில் மிளிர்ந்துகொண்டிருக்கும் மகாமக எக்ஸிபிஷன் நற்சாக்ஷிப்பத்திரம் கண்களைக் கவரக்கூடியதாயும், மனக்கவர்ச்சியை உண்டுபண்ணக் கூடியதாகவுமிருக்கிறது.

S. M. அப்துல் காதிர் அண்டு கம்பெனி, F.M.S., கிள்ளான் ரம்பாஸ்டீட் 29-ம் நெம்பர் பிரபல்ய வியாபாரியும், கவர்ன்மெண்டு கண்டிராக்டரும், கேம் கோரண்டீன் கண்டிராக்டருமாகிய மெஸ்ஸர்ஸ் S. M. அப்துல் காதிர் அண்டு கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் மிக்க அழகானதாயுமிருக்கிறது. அதன் அட்டையில் வளர்பிறைச் சந்திரன் ஜொலிக்கக்கூடியதாயும் நடுவில் அழகிய மஸ்ஜிதின் தோற்றம் பொறிக்கப்பட்டதாயுமிருக்கிறது. அம் மஸ்ஜிது பார்ப்பவர்களின் மனங்களைக் கவர்ந்துகொள்ளும் தோற்றமுடையதாயிருக்கிறது.

K. M. முகம்மது கவ்ஸ் அண்டு கம்பெனி:—சென்னை, நாகை, பினங், சிங்கப்பூர், ரெங்கூன் முதலிய இடங்களில் பிரபல்ய வியாபாரஞ் செய்பவர்களும் கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸ்ஸர்ஸ் K. M. முகம்மது கவ்ஸ் கம்பெனியாரிடமிருந்து அழகிய காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அது தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், அதன் மத்தியில் மதீனா முனவ்வராவின் அழகிய தோற்றம் அமைக்கப்பட்டதாகவும், பிராஞ்சு ஆபீஸ்களின் நாமங்கள் வரையப்பெற்றதாகவும், தேதிகாட்டும் ஷீட்டுகளுக்குப் பக்கத்தில் இருபுறமும் ரெங்கூன், மதராஸ் பிராஞ்சுகளின் பெயர்களாகிற மெஸ்ஸர்ஸ் M. முகம்மது ஹுசைன், K. M. முகம்மது கௌஸ் அண்டு கம்பெனி என்று வரையப்பட்டதாகவுமிருக்கிறது.

K. நாகூர் மீரா அண்டு ஸன்ஸ்:—ரங்கூன் சூரத்தி "பீ" பஜாரிலுள்ள பிரபல்ய பிரசித்திபெற்ற புஸ்தக வியாபாரி மெஸ்ஸர்ஸ் K. நாகூர்மீரா அண்டு சன்ஸ் அவர்களிடமிருந்து அழகிய மூன்று காலண்டர்கள் வரப்பெற்றோம். ஒன்று அட்டையில் இணைக்கப்பட்டு ஆங்கிலத் தேதியைக் காட்டக்கூடியதாயும் தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், மற்றொன்று ஆங்கில மாதம் தேதிகளையும், பர்மிய மாதம் தேதிகளையும் காட்டக்கூடியதாகவும், மற்றொன்று ஆங்கில மாதம் தேதிகளோடு தமிழ்மாதம் தேதிகளையும் காட்டக்கூடியதாகவுமிருக்கிறது.

# சித்தர் மருந்துசாலை

இடமண்—புனலூர் போஸ்டு.

சித்த மருந்துகளும், யூனானி மருந்துகளும் முறைப்படி சுத்திக்கிரமத்துடன் செய்யப்படுகின்றன.

## சித்தர் சஞ்சீவி செந்தூரம்

ஜுரம், ஜன்னி, காசம், பலவீனம், ஜலதோஷம், அசதி முதலிய பல வியாதிகளுக்கும், பிறந்த சிசு முதல், விருத்தாப்பியர், பிரசவித்த ஸ்திரீகள் முதலிய யாவரும் எவ்வித பயமுமின்றி உபயோகிக்கலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சீசா 1-க்கு | ரூ. | 1 | 4 | 0 |
| அயச் செந்தூரம் | 40 வேளை | ரூ. | 2 | 0 | 0 |
| உருக்கு செந்தூரம் | ஷை | ரூ. | 3 | 0 | 0 |
| காந்த செந்தூரம் | ஷை | ரூ. | 5 | 0 | 0 |
| தங்க செந்தூரம் | ஷை | ரூ. | 13 | 0 | 0 |

## சொர்ண சஞ்சீவி சுன்னம்

க்ஷயத்திற்கு தக்க ஔஷதம் 21 வேளை ரூ. 7 0 0

## சித்தர் ரசாயனம்

மேக சம்பந்தமான வியாதிகளுக்கும், இரத்த சுத்திக்கும் மிகப் பிரயோஜனமுள்ளது. 40 நாள் மருந்து ரூ. 7 0 0

## வீரிய விர்த்தி லேகியம்

40 வேளை மருந்து ரூ. 5 0 0

## திரு நபி சரித்திரம்

காலிகோ பைண்டு ரூ. 2 0 0

இதுவன்றி இதர மருந்துகளும் கிடைக்கும். விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

இங்ஙனம்:

மு. ந. முஹம்மது சாஹிப்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim S[illegible]b, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.

சென்னை-600 008